# வடகோவை சபாபதி நாவலரின் நான்மணிகள்

உலகளந்த மாயனவ தார மாகி
யுற்பவித்த வியாதமுனி பாண்டு மைந்தர்
பலமுறுகற் கதைதெரிக்கும் வியாச வாற்றாற்
பங்கயக்கண் மாலையதி கரித்துச் செய்த
அலகில்வா னுறுபார தத்தினாண்டாண்
டவனித்த மருச்சிக்கப்படுதி யென்று
நிலவுவளர் சடைப்பகவ கூறுமுகத் தானீ
நித்தியதத்துவமென்று விளங்கினானால்

श्रीबादरायणमुनिः स्वयमेव विष्णुः
पार्थच्छलात्तमधिकृत्य कृते प्रबन्धे ।
तस्यापि नित्यमहितं शशिभूषणत्वा-
म्रेडयन्गुरुरदर्शयदादि तत्त्वम् ॥

யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

L15039

L
294.5

# வடகோவை சபாபதி நாவலரின் நான் மணிகள்

*தொகுப்பாசிரியர்*

யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

ஜீவநதி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடகோவை சபாபதி நாவலரின் நான்மணிகள்

தொகுப்பாசிரியர் : யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

முதற்பதிப்பு: 2016 ஆடி

©யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

அட்டைப்பட வடிவமைப்பு: க.பரணீதரன்

வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய்

பக்கம்: 164

விலை: 400.00

அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி.

**ஜீவநதி வெளியீடு – 61**

ISBN: 978-955-4676-47-3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி வாழிய நிலனே"

என்பது தமிழ்ப்பாட்டி ஔவையாரின் திருமொழி. நல்லவர்களால் தான் அவர்கள் வாழும் நாடு ஊர் பெருமை பெறும் பண்பு உடைய நல்லறிஞர்களே நல்லவர் எனக்கொள்ளத் தக்கவர். அவர்களே நாட்டுக்கும் வீட்டுக்கும் பெருமை தரத் தக்கவர்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானால் நல்லூர் பெருமை பெற்றது. அதனால் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் என ஊர்ப்பெயர் அவரின் முதற்பெயராயிற்று. அதே போல சபாபதி நாவலர் அவர்களால் பெருமை பெற்றது வடகோவை. அவர் வடகோவை சபாபதி நாவலர் என அவரது ஊர்ப்பெயரே முதற்பெயராயிற்று. இருவருமே திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதினத்தால் நாவலர் எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட ஈழத்து நல்லறிஞர்களாவர்.

நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் *1822 - 1879* காலப்பகுதியில் வாழ்ந்தவர். வடகோவை சபாபதி நாவலர் வாழ்ந்த காலத்தை ஒட்டிய *1844 - 1923* காலப்பகுதியில் வாழ்ந்தவர். நாவலர் வழியைத் தொடர்ந்தவர்.

நாவலர் பெருமானின் நூல்கள் தமிழ் மக்கள் மத்தியில் அறிமுகமான அளவுக்குச் சபாபதி நாவலரின் நூல்கள் அறிமுக மாகவில்லை. சபாபதி நாவலர் இருபதிற்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் திராவிடப் பிரகாசிகை தவிர ஏனைய நூல்களைப் பெறுவது சிரமமாக உள்ளது.

இக்குறைபாட்டை நீக்குவதற்கு, பிறந்த மண்பற்று மிக்கவரும், பயனுள்ள பல நூல்களைத் தந்தவருமாகிய மூத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளர் திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் இவரது நூல்களில் கிடைக்கப்பெற்றவற்றையாவது மீள்பதிப்புச் செய்ய வேண்டும் எனும் நல்லெண்ணத்தேடலின் பயனாகக் கிடைத்த நான்கு நூல்களை மீள்பதிப்புச் செய்துள்ளார்.

சபாபதி நாவலரின் வரலாற்றுடன் கூடிய "வடகோவை சபாபதி நாவலரின் நான்மணிகள்" எனும் இந்நூலை வெளியிடும் பணி தமிழ் கூறும் நல்லுலகத்தின் போற்றுதற்குரியது.

மூல நூல்களைக் கற்காமல், நூல்களைப் பற்றிக் கற்கின்ற இக்காலத்தில்

"முன்னோர் மொழி பொருளே அன்றி அவர் மொழியும்
பொன்னே போல் போற்றல் வேண்டும்..."

எனும் இலக்கணத்துக்கு ஏற்பச் சபாபதி நாவலரின் கருத்துக்களை மட்டுமன்றி அவரின் செந்தமிழ் மொழி வழக்குகளையும் படித்துப் பயன் பெறுவதற்கு இந்நூல் சிறந்த வாய்ப்பாகும்.

இந்நூலில் இடம்பெறும் நான்மணிகளில் முதன்மணி யாகிய சமயம் இவரால் வசன ரூபத்தில் செய்யப்பட்டதாகும்.

இரண்டாவது மணியாகிய சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் அரத்தாசாரியார் இயற்றிய சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் எனும் வடமொழி நூலை இவர் தமிழில் மொழி பெயர்த்து வசன நடையில் எழுதிய நூல் ஆகும்.

மூன்றாவது மணியாகிய பாரத தாற்பரிய சங்கிரகம் அப்பய தீட்சித யோகிகளால் எழுதப்பட்ட வழி மொழி நூலின் தமிழ் மொழி பெயர்ப்பாகும்.

நான்காவது மணியாகிய சிவகர்ணாமிர்தம் அப்பய தீட்ச யோகிகளால் வடமொழியில் எழுதப்பட்ட நூலின் தமிழ் மொழி பெயர்ப்பாகும். வசன வடிவிலானது

இவற்றுடன் சபாபதி நாவலர் ஆக்கிய நூல்களில் இருந்து ஆங்காங்கே கிடைத்த சில பகுதிகளும் தரப்பட்டுள்ளன. அவை சிதம்பர சபா நாதபுராணம், யேசுமதகால்கற்ப நிராகரணம் இராமணய தாற்பரிய சங்கிரகம், திருச்சிற்றம்பல யமக அந்தாதி திருவிடை மருதூர்ப் பதிற்றுப் பத்தந்தாதி, சிவஞான யோகிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருபூசை மகோற்சவம் முதலியவாகும்.

தமிழர்களாகிய, சிறப்பாகச் சைவர்களாகிய நாம், எமது இருப்புகளைப்பேணிகாக்கும் இயல்பு இல்லாமை காரணமாக எமது அடையாளங்களைத் தொலைத்து வருகின்றோம். இந்த வேளையில் நம் முன்னோர்கள். எழுதி வைத்த அரும்பெரும் சொத்துக்களாகிய நூல்களைத் தேடி எடுத்து மீள் பதிப்புச் செய்யும் பணி மிகமேலானது.

இதனால் நம்முன்னோர்களின் பெருமைகளையும் அவர்களால் நம்மூர்கள் பெற்ற சிறப்புக்களையும் நம் இளந் தலைமுறையினர் அறிந்து தன்னம்பிக்கையுடன் தலை நிமிர்ந்து வாழ்வதற்கு வழி பிறக்கும் என நம்புவோம்.

இம்மேலான பணியில் முன்னிற்கும் மூத்த எழுத்தாளர் திருமதி.யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்களின் இம்முயற்சி பூரண பயன்தர வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டித் தொழுகின்றோம்.

கலாபூஷணம் சைவப்புலவர்
சு.செல்லத்துரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்ல நினைத்தவை

எமது ஊரில் வாழ்ந்து தமிழ் வளர்த்த சான்றோர்களின் ஆக்கங்கள் அழிந்து விடாது காத்து எதிர்காலச் சந்ததிக்குச் கையளிக்கும் எனது முயற்சியில் "வடகோவை சபாபதி நாவலரின் நான் மணிகள்" இரண்டாவது நூல் "இரு பாலைச் சேனாதிராய முதலியார் ஆக்கிய ஆக்கங்களின் தொகுப்பு" என்னும் எனது முதலாவது நூலில் பகிர்ந்து கொண்ட விடயங்களை மீளவும் இங்கு எழுதுவது தேவையற்றது எனக் கருதுகின்றேன்.

முதலியாரின் ஆக்கங்களை தேடித்திரிந்தது போல் வட கோவை சபாபதி நாவலரின் நூல்களைத் தேட வேண்டிய அவசிய மில்லை என்றோர் எண்ணத்தை அவர் பற்றிய கட்டுரைகள் எழுதியோர் என் மனதில் ஏற்படுத்தியிருந்தனர். ஆனால் சேகரிக்க முற்பட்ட வேளையில் எமது நம்பிக்கைகளும் கற்பனைகளும் தவறானவையோ என்ற ஐயக்குறி என் மனத்தினுள் எழுந்து நிலைத்துவிட்டது. எதையும் தீர விசாரிக்காது ஒரு முடிவுக்கு வரக்கூடாது. என் தேடல் போதாதாக இருந்திருக்கலாம் என எண்ணி என் ஏமாற்றத்தை வெளிப்படை யாக இங்கு பதிவு செய்யாது விடுகின்றேன்.

சபாபதி நாவலர் அவர்கள் எழுதியனவாக இருபது நூல்கள் பெயரிடப்பட்டுள்ளன. அவற்றுள் ஐந்து நூல்கள் என் கைக்குக் கிடைத்தன. கிடைத்தவற்றுள் "திராவிடப் பிரகாகிசை" என்னும் நூல் மீள் பதிப்புச் செய்யப்பட்டதால் பொதுவாக நான் சென்று நூல்களைத் தேடிய எல்லா நூலகங்களிலும் இருந்ததால் அதனைத் தவிர்த்து சமயம் அல்லது ஞானாமிர்தம், சதுர்வேத தாற்பரிய சங்கிரகம், பாரத தாற்பரிய சங்கிரகம், ஞானாமிர்தம் ஆகிய நான்கு நூல்களை வெளியிட இறைவன் துணை செய்துள்ளான்.

பல நூல் நிலையங்களுக்கும் சென்று நூல்களைத் தேடிய வேளையில் நூலகர்கள் உதவி செய்தார்கள். அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். யாழ்.பல்கலைக்கழக நூலகத்தில் உட்சென்று நூல்களைத் தேடி நிழற்பிரதி செய்து பெற்றுக்கொள்ளத் தேவையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதியளித்து உதவிய நூலகர் திருமதி.விசாகரூபன் அவர்களுக்கு இங்கு நன்றி கூற வேண்டியது முக்கியமாகும். யாழ்ப்பாணக்கல்லூரி நூலகத்தில் நூல்களைத் தேட அனுமதி தந்த கல்லூரி அதிபருக்கும் வேண்டிய உதவிகள் நல்கிய நூலகர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்க வேண்டும். இங்கு தான் சிவசர்ணாமிர்தத்தைக் கண்டு பிடிக்கக் கூடியதாக இருந்தது. அந்த நூலில் 13.02.1939 என ஒரு திகதி குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்வளவு நீண்ட காலம் பல இடையூறுகள், போர், இடப்பெயர்வு அனைத்திடையேயும் அதனைப் பாதுகாத்து வைத்திருந்த யாழ்ப்பாணக் கல்லூரிக்கு நாம் நன்றிக் கடன் பட்டுள்ளோம்.

இங்கு மற்றொரு தடையையும் தாண்ட நேர்ந்தது. சிவகர்ணாமிர்தத்தை வெளியே எடுத்து வரவோ நிழற்பிரதி எடுக்கவோ அனுமதி மறுக்கப்பட்டது. எனது நோய் காரணமாக யாழ்ப்பாணக் கல்லூரியில் நூல்களைத் தேடி பிரதி செய்ய எனது மருமகள் திருமதி.கோமதி பிரணவரூபனின் (இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்) உதவியை நாடினேன். அவர் தனது தோழி திருமதி.ரூபினி கிருஷ்ண பிரசாத் (இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்) அவர்களின் உதவியுடன் அதனைப் பிரதி செய்து தந்தார். இதற்கு உதவிய நூலகர்களுக்கும் அனுமதித்த கல்லூரி அதிபருக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

நீண்ட காலத்திற்கு முன் வெளியிடப்பட்டு விரிக்கவோ தாள்களை புரட்டவோ இயலாத நிலையில் நிறம் மங்கி விட்ட அரிய நூல்களைப் பாதுகாக்கும் பொறுப்பு நூலகங்களுக்கிருக்கிறது. அவற்றைப் பிரதி செய்வதிலும் பல இடர்பாடுகள் உள்ளன. அன்றைய அச்சுப்பதிப்பிலும் தவறுகள் இருந்திருக்கலாம். உதாரணமாக சிவகர்ணாமிர்தத்தின் செய்யுட்களும் தொடர்ந்து அச்சடிக்கப் பட்டுள்ளது. இவற்றைச் சீர் செய்யும் அறிவுத்திறனோ அதிகாரமோ எம்மிடமில்லை. எனவே ஏற்கனவே இருந்தவாறே நான்கு நூல்களையும் தந்துள்ளோம்.

அரிய நூல்கள் பலவற்றையும் பாதுகாத்து வைத்திருக்கும் பணியை கொழும்பு தமிழ்ச்சங்க நூலகம் அர்ப்பணிப்புடன் செய்து வருகின்றது. சபாபதி நாவலரின் நூல்களையும் இங்கு பெற்றுக்கொள்ள முடிந்தது. காலபூஷணம் சைவப்புலவர் திரு.சு.செல்லத்துரை அவர்களும் திருமதி வசந்தி தயாபரன் அவர்களும் இங்கு நூல்களைத் தேடிப் பெற்றுக்கொள்ள உதவினர். அவர்களுக்கு இதயம் நிறைந்த நன்றிகள். சைவப்புலவர் அவர்கள் நூல்களை நிழற்பிரதியெடுத்து அனுப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியதுடன் நூலுக்கு முன்னுரை எழுதவும் பெருமனதுடன் ஒப்புக் கொண்டார். அவருக்கு மிகமிக நன்றி தெரிவிக்க வேண்டிய கடப்பாடுடையேன். இந்நூலை வெளியிடவென முயற்சிக்க ஆரம்பித்த நாள் முதலாக அவ்வப்போது பல்வேறு உதவிகள் செய்து உற்சாக மூட்டிய கலாநிதி திருமதி.சுகந்தினி ஸ்ரீமுரளிதரன் அவர்களுக்கும் நன்றி உரித்தாகுக. நூலைத் தொகுத்ததுடன் நான் நின்றுவிட, வழமைபோல் அதனை வெளியிடத் தேவையான அனைத்தையும் செய்து ஜீவநதி வெளியீடாக வெளியிடும் மகன் பரணீதரனுக்கு நன்றிகூறத் தேவையில்லையெனக் கருதுகின்றேன். நான் இங்கு குறிப்பிட்டுக்கூறத் தவறிய அனைவருக்கும் என் மனம் நன்றி கூறிக்கொண்டிருக்கும்.

இவ்விடத்தில் மற்றொன்றையும் குறிப்பிட வேண்டியது அவசியமென என் மனம் கூறுகின்றது. சபாபதி நாவலர் சரித்திரச் சுருக்கம் என்னும் நூலை அவரது மருகர் வடகோவை அ.சிவகுருநாதன் பதிப்பித்து சபாபதி நாவலர் ஞாபக நிலையத்தின் முதலாவது வெளியீடாக **1955** இல் வெளிவந்துள்ளது.

அச்சரித்திரச் சுருக்கத்தின் இறுதிப் பகுதியிலுள்ள "நாவலரவர்கள் ஞாபகச் சின்னங்கள்" எனும் தலைப்பிடப்பட்டு எழுதப் பட்டுள்ளவை நாம் கவனத்திற்கொண்டு செயற்படுத்த வேண்டியவை. கோப்பாய் நொத்தாரிஸ் சி.கங்காதர ஐயரால் எழுதப்பெற்ற **02.01.1938** திகதியிடப்பட்ட தருமசாதன இலக்கம் **10967** பற்றியும் நீர்வேலி நொத்தாரிஸ் ஆறுமுகம் எழுதிய **21.01.1948** திகதியில் நிறைவேறிய தருமநன் கொடைச் சாதன இலக்கம் **17160** பற்றியும் சபாபதி நாவலர் அவர்கள் தன் மைத்துனர் சுழிபுரம் ச.சிவப்பிரகாச பண்டிதருக்கு எழுதிய மரணச்சாதனம் பற்றியும் இதில் ஓரளவு விபரங்கள் தரப்பட்டுள்ளன. ஒரு சிறு பகுதியை மட்டும் கீழே தரப்பட்டுகின்றது.

"...நாவலரவர்கள் ஞாபகச்சின்னமான மண்டபம் ஒன்றமைத்து அம்மண்டபம் அவர்களியற்றிய நூல்களுக்கு நிலையமாக என்றும் நிலைபெறும் வண்ணம் அதன் நயத்துக்கும் உபயோகத்துக்குமாக எனது சொந்தமும் இதனடியிற் காணும் அட்டவணையில் விபரித்திருப்பது மான ஆதனத்தையும் மூலதமாக ரூபாய் ஆயிரம் (1000) தரும நன் கொடையாகக் கொடுக்க நான் விரும்புவதாலும்..."

**1948** ஆம் ஆண்டு ரூபா **1000/=** இன்று ரூபா **1,000,000/=** ற்கு சமன் இவர்களது நம்பிக்கைகளும் எதிர்ப்பார்ப்புகளும்....?

யோகேஸ்வரி சிவப்பிரகாசம்
மயூரம்
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடகோவை சபாபதி நாவலர்

## (வரலாறு)

கோப்பாய் என்ற ஊரின் பெயரைக் கூறியதுமே கோப்பாய் சபாபதி நாவலரின் ஊரா? என்று தமிழ்பேசும் நல்லுலகமே கேட்டு நிற்கச்செய்து கோப்பாயின் புகழுக்கும் பெருமைக்கும் காரணராக விளங்கியவர் சபாபதி நாவலர் அவர்கள்.

கோப்பாயில் வாழ்ந்து வந்த சுயம்புநாத பிள்ளைக்கும் தெய்வானை அம்மையாருக்கும் அருந்தவப் புதல்வனாக சபாபதி வந்துதித்தார். இவர் பிறந்த ஆண்டாக *1844, 1845, 1846, 1848* என்பன இவரது வரலாறு கூறவந்த வெவ்வேறு அறிஞர்களால் கூறப்படுகின்றன. சரியான ஆண்டு எதுவெனக்கூற இயலவில்லை.

ஆரம்பக்கல்வியை பிரம்மஸ்ரீ ஜெகந்நாத ஐயரிடமும் தென்கோவை குமாரசூரியரிடமும் கற்றார். பின்னர் நீர்வேலி சிவசங்கரபண்டிதரிடம் சமஸ்கிருதம், தமிழ் ஆகிய இருமொழி களையும் கற்று பாண்டித்தியம் பெற்றார். மிஷனறிப்பாட சாலையில் சேர்ந்து ஆங்கிலம் கற்கக்கூடாது என்ற கொள்கை யுடன் அதனைப் பரப்புரை செய்த அவர் அப்பாடசாலைகளில் சேர்ந்து பயிலாமல் ஆங்கிலத்தையும் கற்றுத்தேர்ந்தார். "இந்து மாணாக்கர்களுக்குக் கிறிஸ்தவர் பாடசாலைக் கல்வி ஏதமாம்" என்று தமது ஞானாமிர்தம் பத்திரிகையில் இவர் வரைந்த கட்டுரை இங்கு நினைவுகூரத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகநாவலர் அவர்களால் சிதம்பரத்தில் ஸ்தாபிக்கப் பட்டிருந்த சைவப்பிரகாச வித்தியாசாலையில் அவரது விருப்பத் திற்கிசைய சபாபதி நாவலர் தமிழ் போதித்து அதனை நடத்தினார். இது அவரது கல்வித்திறனைப் பறைசாற்றுகிறது.

பின்னர் திருவாவடுதுறைக்குச் சென்று திருவாவடுதுறை ஆதீனத்து பதினாறாவது மகாசந்நிதானம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகளிடம் அருளுபதேசம் பெற்று அவர்கள் முன்னிலையில் பன்னிரு ஆண்டுகள் ஞானநூல்களையெல்லாம் முறைப்படி கற்றுத்தேர்ச்சி பெற்றார். இலக்கணம், இலக்கியம், தர்க்கம், வேதாந்தம், சித்தாந்தம் முதலிய துறைகளில் விற்பனராகி ஆதீன வித்துவான் ஆனார்.

இவர் இலங்கையில் இருந்த காலத்தில் குன்ம நோய் பீடித்து பெரும் வேதனைப்பட்டார். அந்நோயைத் தீர்க்குமாறு நல்லைக்கந்தனிடம் வேண்டி விரதமிருந்து திருப்புகழ், கந்தரலங் காரம், கந்தரநுபூதி, கந்தர் கலிவெண்பா முதலிய முருகனைப் போற்றும் தோத்திரப்பாக்களைப் பாடித்துதித்ததன் பயனாக நோய் நீங்கிற்று. சபாபதி நாவலர்,சுப்பிரமணியப்பெருமானையே வழிபடுதெய்வமாகக்கொண்டிருந்தார். இவருக்கு உபதேசம் செய்த திருவாவடுதுறை ஆதீன குருமகா சந்நிதானமும் அதே பெயர் கொண்டவராக அமைந்தது நோக்கற்பாலது.

இவர் மீண்டும் யாழ்ப்பாணம் வந்த போது தனது மாமனார் சுழிபுரம் க.சரவணமுத்து வேண்டித்தவமிருந்து பெற்றெடுத்த மகளை விவாகம் புரிந்து சிலகாலம் இல்லறம் நடத்தினார்.

இலங்கையிலிருந்து மீண்டும் இந்தியா சென்று தனது தமிழ்ப்பணியைத் தொடர்ந்தார். சபையோரைத்தன் சொற் பெருக்கால் ஈர்த்துப் பிணித்து வைத்திருக்கும் ஆற்றலும் வாதப் பிரதிவாதங்களின் போது எதிர்ப்போரின் நாவடங்கச்செய்யும் திறனும் கொண்ட இவரைப் பாராட்டி “நாவலர்” என்ற பட்டத்தைத் திருவாவடுதுறை ஆதீனம் வழங்கி கௌரவித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபாபதி, சபாபதிநாவலர் ஆகிய கதை இதுதான். சபாபதி நாவலர் பாரதத்தின் பல்வேறு பாகங்களுக்கும் சென்று சொற்பெருக் காற்றிவந்தார்.

துறைசை ஆதீனத்தவர் மிகுந்த பக்குவமுடையோர் களுக்கே திராவிட மாபாடியத்தை வாசிக்கக் கொடுப்பார்கள். மகாசந்நிதானம் சபாபதி நாவலருக்கு அதனைக் கொடுத்தது அவரது பரிபக்குவ நிலையைக்காட்டுகிறது.

இவர் சிவஸ்தலயாத்திரை செய்த காலத்தில் ஆங்காங்கே ஆற்றிய சொற்பொழிவுகளை சேதுபதிமகாராசாவும் கேட்க நேர்ந்ததால் அவரது நாவன்மையால் கவரப்பட்டு இராமநாத புரத்துக்கு அழைத்துத்தன் அரசவையில் வீற்றிருக்கச் செய்து பாராட்டிப் பரிசில் வழங்கினார்.

சபாபதி நாவலரின் மாணாக்கர்கள் பலர். சிலரது பெயர் கள் வருமாறு: சிதம்பரம் அ.சோமசுந்தர முதலியார், விழுப்புரம் இராமசாமிப்பிள்ளை, மாதகல் கார்த்திகேய முதலியார், மயிலை க.சிங்கார வேலு முதலியார், மாவை வே.விசுவநாதபிள்ளை, சிதம்பரம் சிவராமச்செட்டியார், திருமயிலை பாலசுந்தர முதலி யார், சுழிபுரம் சிவப்பிரகாசபண்டிதர், வதிரி சி.தாமோதரம் பிள்ளை, சிதம்பரம் முத்து வேலாயுதபிள்ளை. சபாபதி நாவலர் "ஞானாமிர்தம்" என்ற பத்திரிகையை நடத்தி வந்தார். சேதுபதி மகாராசா இப்பத்திரிகை சீராக வரும் பொருட்டு தமது சமஸ் தானத்திலிருந்து நிதியுதவி செய்தார்.

சென்னையில் சித்தாந்த வித்தியாநுபாலன அச்சியந்திர சாலையை நிறுவி நடத்திவந்த சபாபதி நாவலர் பின்னர் அதனை சிதம்பரத்தில் நிறுவி ஞானாமிர்தம் பத்திரிகையையும் நடத்தினார். பிரமவித்தியா 2-12 ஆம் இதழ் பத்திரிகையில் அதன் ஆசிரியர் "ஞானாமிர்தம்" என்னுமோர் அமிர்தம், புத்தி என்னும் மந்திரத் தாற் கடைய ஓர் நாவலர் என்னும் திருப்பாற்கடலில் பிறந்து உலாவுகிறது என ஞானாமிர்தத்தை பாராட்டியுள்ளதை இங்கு பதிவு செய்தல் அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1901 ல் (பிலவ வருடம்) சுதேச வர்த்தமானி என்னும் பத்திரிகையையும் ஆரம்பித்து சிலகாலம் நடத்தினார்.

அச்சியந்திரசாலை சென்னையில் இருந்தபோது 1889 சித்திரை மாதம் பறாளை விநாயகர் பள்ளுப்பிரபந்தம் வெளியிடப்பட்டது.1893 கார்த்திகை மாதம் மாதவச்சிவஞான யோகிகள் இயற்றிய "சிவசமவாத உரை மறுப்பு" இதில் வெளியிடப்பட்டது. இவ்வாறு பதிப்பு முயற்சியிலும் இவர் பெரும் தொண்டாற்றினார்.

சபாபதி நாவலர் இருபதிற்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார் அவற்றுள் திராவிடப்பிரகாசிகை தவிர்ந்த ஏனைய நூல்களைப் பெறுவது பெரும் சிரமமாக உள்ளது. பின்வரும் நூல்கள் அவரால் எழுதப்பட்டவையாகும்

01. சிதம்பர சபாநாதபுராணம்
02. சிவகர்ணாமிர்தம்
03. சதுர் வேத தாத்பரிய சங்கிரகம்
04. பாரத தாத்பரிய சங்கிரகம்
05. இராமாயண தாத்பரிய சங்கிரகம்
06. யேசுமத சங்கற்ப நிராகரணம்
07. இலக்கண விளக்கப் பதிப்புரை மறுப்பு
08. வைதிக காவிய தூஷண மறுப்பு
09. ஞான சூடாமணி
10. ஞானாமிர்தம்
11. திருச்சிற்றம்பல யமகவந்தாதி
12. திருவிடை மருதூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி
13. மாவையந்தாதி
14. சிதம்பர பாண்டிய நாயக மும்மணிக்கோவை
15. வடகோவைச் செல்வ விநாயகர் இரட்டைமணிமாலை
16. நல்லைச் சுப்பிரமணியக்கடவுள் பதிகம்
17. வதிரிநகர்த் தண்டபாணிக்கடவுள் பதிகம்
18. புறவார்பனங்காட்டூர்ப் புறவம்மைப் பதிகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. சிவஞான யோகிகள் குருபூசை மகோற்சவம்
20. திராவிடப்பிரகாசிகை

இவற்றுள் சில நூல்கள் பற்றிக்கிடைத்த குறிப்புகளையும் இங்கே தருவது பயனுள்ளதாக அமையும். இக்குறிப்புகள் அந்த நூல்களை நாமே வாசித்து எழுதியவையல்ல.

சபாபதி நாவலர் சிதம்பரத்தில் வாழ்ந்த காலத்தில் பலதல புராணங்களை ஆராய்ந்ததன் பயனாக சிதம்பர சபாநாதபுராணம் பாடினார். இது சிதம்பர மான்மியம் ஐந்தினுள் ஒன்றான ஏமசபா நாத மான்மியத்தின் மொழிபெயர்ப்பாயுள்ளது என்பர். 893 செய்யுட்கள் கொண்ட இந்த நூல் பார்த்திபவருடம் (1885) வைகாசித் திங்களில் வெளியிட்டதாகக் கூறப்படுகிறது. இப்புராணத்தில் திருநாட்டுப்படலம், திருநகரப்படலம், நைமிசைப்படலம், புராண வரலாற்றுப்படலம், பிச்சாடனப் படலம், தேவதாருவனப்படலம், அனந்தப்படலம், புண்டரீகப் படலம், வியாக்கிரபாதப்படலம், திருநடனப்படலம், ஏமவன்மப் படலம், தீர்த்த விசேடப்படலம், யாத்திரோற்சவப்படலம் ஆகிய படலங்கள் உள்ளன.

காப்புச்செய்யுள் தொடங்கி சபாநாயகர், சிவகாமியம்மை, தஷிணாமூர்த்தி, கற்பகவிநாயகர், வயிரவக்கடவுள், ஆறுமுகக் கடவுள், அகத்திய முனிவர், சமயகுரவர், தில்லைவாழந்தணர், அறுபத்துமூவர், சேக்கிழார் நாயனார், சந்தானகுரவர், நமச்சிவாய தேசிகர், திராவிடமாபாடியக்காரர், முதலியோருக்கான வணக்கச் செய்யுட்கள் மனங்கவருவனவாக இதில் அமைந்துள்ளன.

அப்பய தீக்ஷித யோகிகள் வடமொழியில் “சிவகர்ணா மிர்தம்” என்னும் நூலை இயற்றியுள்ளார். அதனை மொழி பெயர்த்து வசனநூலாக சபாபதி நாவலரால் எழுதப்பட்டதே சிவகர்ணாமிர்தம் என்னும் நூல். இது பூர்வபக்கம். சித்தாந்தம் என்னும் இரு பகுதிகள் கொண்டது. சிவபரத்துவத்தைக் கூறுவது திருப்பனந்தாட் காசிமடாதிபதி. ஸ்ரீமத் குமாரசுவாமிச் சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளையிட்டருளியபடி இவர் இந்த நூலை ஆக்கி பார்த்திப வருடம் ஆவணி மாதம் (1885) வெளியிட்டார்.

அரதத்தாசாரியார் இயற்றிய சதுர்வேததாற்பரிய சங்கிரகம் என்னும் வடமொழி நூலை இவர் மொழிபெயர்த்து வசனவடிவில் எழுதிய நூலே சதுர்வேததாற்பரிய சங்கிரகம். இது "நான்கு வேதங்களாலும் எடுத்தோதப்படும் பரம்பொருள் பரமசிவமே" என வலியுறுத்துகிறது் இதன் முதற்பதிப்பு தாது வருடம் சித்திரை மாதத்திலும் இரண்டாம் பதிப்பு சர்வசித்து வருடம் வைகாசி மாதத்திலும்(1887) வெளிவந்ததாகக் குறிப்புகள் உள்ளன.

பாரததாற்பரிய சங்கிரகமும், இராமாயண தாற்பரிய சங்கிரகமும் சிவகர்ணாமிர்தம் போன்றே அப்பய தீஷித யோகிகளால் எழுதப்பட்ட நூல்களின் தமிழ் மொழிபெயர்ப்பு நூல்களாகும்.

யேசுமத சங்கற்ப நிராகரணம் 168 செய்யுட்கள் கொண்டதென்றும் பிரமாதி வருடம் இயற்றப்பட்டதென்றும் யேசுமதக் கொள்கைகளைத் தருக்கரீதியில் மறுப்பது என்றும் கூறியுள்ளனர்.

பெரியபுராணம் முதலிய வைதீக காவியங்களை விடுத்து சிந்தாமணி என்னும் காவியத்தைப் போற்றுவோரை மறுத்து எழுதியது வைதிக காவிக தூஷண மறுப்பு.

தமிழின் தெய்வப்பழமை மரபியல், இலக்கண மரபியல், இலக்கிய மரபியல், சாத்திர மரபியல், ஒழிபியல் ஆகியவற்றைத் தன்னுட்கொண்ட திராவிடப்பிரகாசிகை இவரால் எழுதப்பட்ட சிறந்த நூல். இன்றும் நூலகங்களில் பெறக்கூடிய நூலாக இது உள்ளது.

சைவமும் தமிழும் வளமுறச் செய்து நம் நாட்டிற்குப் பெருமை சேர்த்த சபாபதி நாவலர் சிதம்பரத்தில் இருந்த காலத்தில் 1903ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சமயம்

(ஞானாமிர்தம்)

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
எம்மை யுடைமை யெமையிகழார் - தம்மை
யுணரா ருணரா ருடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்.

சமயமாவது மனிதர்கள் அறிவுவிளக்கம் பெற்று உறுதி யெய்தி இன்பவாழ்வு அடைதற்குச் சாதகமாயுள்ள ஞானாலயமாம்.

சமயம் காணப்படும் அசேதனப் பிரபஞ்சமாகிய உலகத்தின் சொருபத்தினையும், அதுபோலக் காட்சியினால் எளிதில் அறியவராது அநுமானப் பிரமாணத்தினால் ஊகித்து இனிது அறிய நிற்கும் சேதனப்பிரபஞ்சமாகிய ஆன்மாக்களின் சொருபத்தினையும், முழுமுதற் கடவுளாகிய பரமான்மாவின் சொருபத்தினையும், ஐய விபரீதமில்லாமல் தெளிவாகக் காட்டும் ஞான தீபமாம். சமயம் மனிதர் சரீர சுகத்திற்கும் ஆன்ம சுகத்திற்கும் அநுகூலமாகும் நன்மைகளை விதித்து அவ்விரண்டு சுகத்திற்கும் பிரதிகூலமாகும் தீமைகளை விலக்கி அவரைக் காக்கும் ஞான அரணுமாம். சமயம் மனிதர் தாம் பெறுங் கல்வி, செல்வம், அதிகாரம் முதலிய பேறுகளுக்கு ஏற்கும்படி தாரதம்மியம் பெற்று அன்புசெய்து அளவளாவி வாழுவதற்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லௌகிக வைதீக ஒழுக்கங்களைப் போதிக்கும் நீதி நிலயமாம். சமயம் மனிதர்களுக்குக் கரும சாதனங்களை அறிவிக்கும் தந்திர கலாரூபமாம். சமயம் மனிதர்களுக்கு நித்தியா நித்திய வஸ்து விவேகத்தினை உணர்த்தும் உபதேச கலாரூபமாம். சுருங்கச் சொல்லின் சமயம் மனிதர்களுடைய இகபர சுகங்களுக்கு இன்றியமையாத சாதகங்க ளெல்லாவற்றினையும் அவர்களுக்குக் குறைவறக் கொடுக்குஞ் சர்வ சத்தப் பிரமரூபமான ஒரு கற்பகதரு வெனப்படும்.

சமயம் முதற்கடவுள் நிறுத்தியதும், முதற்கடவுள் ஆணையினால் தத்துவஞான சித்தியுடையோர் நிறுத்தியனவும், கலைஞான சித்தியுடையோர் நிறுத்தியனவும், பிராகிருத விசேட புத்திமான்கள் நிறுத்தியனவும், பிராகிருத சாமானிய புத்திமான்கள் நிறுத்தியனவுமெனப் பலவகைப்படும். முதற் கடவுள் நிறுத்திய சமயம் மேற்சொல்லிய இலக்கணங்களும் அவை போல்வனவுமாகும். நலங்கள் பிறவும் ஒருங்குடையதாய்த் திரிபின்றி மற்றைச் சமயங்கள் சொல்லும் பொருள்களெல்லாம் தன்னிடத் தடங்கக்கொண்டு விளங்கும் பூரண மார்க்கமாம். மற்றைத் தத்துவஞான சித்தியுடையார் முதலியோர் நிறுத்திய சமயங்களெல்லாம் ஒவ்வோர் வகுப்பினராயுள்ள அதிகாரிகளுக்கே உரியனவாய்க் காலந்தோறும் தன்மை வேறுபட்டுவரும் ஏகதேச மார்க்கங்களாம்.

இனிப் பிராகிருத சாமானிய புத்திமான்கள் நிறுத்திய சமயங்களை நோக்கப் பிராகிருத விசேட புத்திமான்கள் நிறுத்திய சமயங்கள் வியாபகமாம். பிராகிருத விசேட புத்திமான்கள் நிறுத்திய சமயங்களை நோக்கக்கலைஞான சித்தியுடையார் நிறுத்திய சமயங்கள் வியாபகமாம். கலைஞான சித்தியுடையார் நிறுத்திய சமயங்களை நோக்கமாகத் தத்துவஞான சித்தியுடையோர் நிறுத்திய சமயங்கள் வியாபகமாம். தத்துவஞான சித்தி யுடையோர் நிறுத்திய சமயங்களை நோக்க முதற் கடவுள் நிறுத்திய சமயம் வியாபகமாம்.

இனி முதற் கடவுள் நிறுத்திய சமயம் சமய அரசான அதீத சமயமெனவும், தத்துவஞான சித்தியுடையார் நிறுத்திய சமயங்கள் அகச் சமயங்களெனவும், கலைஞான சித்தியுடையார் நிறுத்திய சமயங்கள் அகப்புறச்சமயங்கள், பிராகிருத விசேட புத்திமான்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்திய சமயங்கள் புறச் சமயங்களெனவும் அறிஞரால் வழங்கப் படும்.

இனி, முதற் கடவுள் நிறுத்திய சமயம் ஒன்றேயாம். ஏனையோர் நிறுத்திய சமய வகைகள் நான்கும் ஒவ்வொரு வகையிற் பற்பலபகுதியுடையனவாய் அப்பகுதியுள்ளும் ஒவ்வொரு பகுதியிற் பற்பல பேதமுடையனவாய் விரிந்து நடக்கும். இன்னும் மேன்மேற் சமயங்களை நோக்கக் கீழ்க் கீழ்ச் சமயங்கள் பொய்யாக காணப்படும். அங்ஙனமாயினும், ஒவ்வொரு சமயங்களும் ஒவ்வோர் வகுப்பினராகிய அதிகாரி களின் பொருட்டு வேண்டப்பட்டுப் பயன்படுவனவாகிச் சத்தியமாகவே போற்றிக் கோடற் பாலனவாம். உண்மையாகப் பார்க்குமிடத்து இறைவன் நிறுத்திய சமயமே எல்லாப் படியிலுஞ் சத்தியமாம்,ஏனையோர் நிறுத்திய சமயங்கள் மேன்மேல் நோக்கச் சத்தியமிருந்துங் கீழ்க்கீழ் நோக்கச் சத்தியங் குறைந்துங் காணப்படும், அதுவன்றி முழுதும் அசத்திய மாய்க் காணப்படுஞ் சமயம் ஒன்றும் இல்லையென்க.

கீழ்ச் சமயங்களில் நிற்பவர் அவைகள் சொல்லும் அறங்களை வழுவாது அநுட்டிப்பின்,அந்த அநுட்டான பலத்தினால் மேற்சமயஞ் சார்ந்து, இப்படியே இறுதியில் முதற் கடவுள் நிறுத்திய அதீத சன்மார்க்கம் எய்தப்பெற்று அது சொல்லும் ஞான சாதனங்கடைப்பிடித்து அநுட்டித்துத், தத்துவ ஞான சித்தி கைகூடிப் பரமுத்தி எய்துவர். இந்த நியாயத்தினால் மற்றைய சமயகோடிகளெல்லாம் பரம்பரையில் முத்திக்கு வாயில் களாமென்றும் முதற் கடவுள் நிறுத்திய அதீத வருள்மார்க்கம் சாக்ஷாத்தாகவே முத்திக்கு வாயிலாமென்றும் அறிக. இன்னும், மற்றைச் சமயகோடிகளெல்லாம் இறைவன் அருட்சன்மார்க் கத்தினை அடைவித்தலாகிய முக்கியப் பிரயோசனத்தினைத் தருதலேயன்றி ஒவ்வோர் புண்ணிய லோகப் பிராப்தியாகிய அவாந்தரப் பிரயோசனங்களையும் தனித்தனி தரவல்லனவாம்.

புறப்புறச் சமயபேதங்களும் புறச்சமயபேதங்களும், முதற் கடவுள் அதிஷ்டிக்கும் தூல மாயாகத்துவங்களுள் ஒவ்வொன் றினையும், சூக்கும மாயா தத்துவங்களுள் ஒவ்வொன்றினையும், அதி சூக்கும மாயா தத்துவங்களுள் ஒவ்வொன்றினையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையே தெய்வஸ்தானமாகவும் முத்தி ஸ்தானமாகவுங் கொண்டு நிற்கும். அகச்சமய பேதங்கள் முதற்கடவுள் அதிஷ்டிக்கும் ஸ்தடத்த வடிவங்களாகிற மாயா சுத்த தத்துவங்களுள் ஒவ்வொன் றினைத் தெய்வ ஸ்தானமாகவும் முத்தி ஸ்தானமாகவுங் கொண்டு நிற்கும், அதீத சன்மார்க்கமோ தத்துவாதீதமாயுள்ள முதற் கடவுளின் சொருப சின்மய வெளியினையே தெய்வ சந்நிதி யாகவும் முத்தி முடிபாகவுங்கொண்டு நிற்கும்.

இனி, இது முதற்கடவுள் நிறுத்திய பூரண சமயமென்றும் இவை தத்துவஞான சித்தியுடையார் முதலியோர் நிறுத்திய சமய பேதங்களென்றும், இப்பொதுவுரையில் வரைந்து சொல்வோம் இலக்கணங்கொண்டு இலக்கியம் வரையறுத்து உணர்வார் போலச் சமயங்கள் சொல்லும் பொருட் பலாபலன்கொண்டு இது முதற்கடவுள் நிறுத்திய ஆதிப் பெருஞ்சமயம். இவை ஏனையோர் நிறுத்திய சோபான சமயங்கள் என்றும், இவற்றுள்ளும் இப்பிரபலத்தினால் இது உயர்ந்தது. இத்துர்ப்பலத்தினால் இது அதனிற்றாழ்ந்தது என்றும், சமய வரையறை எய்தக் தாரதம்மிய விவேகஞ் செய்தல் விவேகிகள் கடனாம்.

இனிச் சமயங்களின் வன்மையும் மென்மையும் பகுத்தறி தற்கு அநுகூலமாகுங் கருவிகள் பல உண்டு. அவற்றுள் அவ்வன்மை மென்மை வேறுபாடுகள் இலகுவாக அறிய நிற்கும் பொதுக்கருவிகள் சில சொல்வாம். எந்தச் சமயம் தான் பரம் பொரு ளெனக் கூறுந் தெய்வத்திற்கு நால்வகை யோனி வாய்ப் பட்டுப் பிறந்து இறந்து வருங்கர்மகதி கூறிற்றில்லையோ அது வலியுடைய சற்சமயம். எந்தச் சமயம் தான் பரம்பொருளெனக் கூறுந் தெய்வத்திற்கு நால்வகை யோனி வாய்ப்பட்டுப் பிறந்து இறந்து செல்லுங் கர்மகதி கூறிற்றோ அந்தச் சமயம் மென்மை யுடைய அசற்சமயம். எந்தச் சமயம் பிற சமயங்களும் சாஸ்திரங் களும் சொல்லும் பொருளெல்லாம் தன்கண் அடங்கக் கொண்டு அவை சொல்லாத பல நுண்பொருள் சொல்லி மேம்படுமோ அந்தச் சமயம் வலியுடைய சற்சமயம் எந்தச் சமயம் அவ்வாறின்றி ஏகதேசப்பொருள் மாத்திரமே சொல்லிக் கீழ்ப்படுமோ அந்தச் சமயம் மென்மையுடைய அசற்சமயம். எந்தச் சமயம் சமயங்க ளெல்லாஞ் சீவர்கள் கன்ம பேதத்திற்கேற்க முதற்கடவுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்தியனவென்னுமோ அந்தச் சமயம் வலியுடைய சற்சமயம். எந்தச் சமயம் தன்னைச்சுட்டி இவ்வொரு சமயமே கடவுள் நிறுத்தியது, ஏனைச்சமயங்கள் எல்லாம் மனிதர் தாமே கட்டி நடத்தின வென்னுமோ அந்தச் சமயம் மெலிவுடைய அசற்சமயம். எந்தச் சமயம் யாதொரு தெய்வங்கொண்டு வழிபாடு செய்யினும் முதற் கடவுள் அவ்வத் தெய்வங்களிடமாக நின்று அவ்வழிபாடு கொண்டருளி அருள் வழங்குவ ரென்னுமோ அந்தச்சமயம் வலியுடைய சற்சமயம். எந்த்ச்சமயம் தான் கூறும் சமய வழி பாடொன்றினையே கடவுள் கொண்டு அருள் செய்வர் அல்லாச் சமய வழிபாடெல்லாம் கடவுள் கொண்டு அருள் வழங்கார் அவ்வழிபாடெல்லாம் வீண் செயல்களென்னுமோ அந்தச் சமயம் மெலிவுடைய அசற்சமயம். இவையும் இவை போல்வன அளவைகள் பிறவுஞ் சமய வன்மை மென்மை வரையறுத்தற் அநுகூலமாகும் பொது இலகு கருவிகளென்றறிக. நால்வகை யோனியுள் ஒன்றிற்பட்டுப் பிறந்திறவாமை கடவுட்டன்மை யாதலாலும், அப்படிப் பிறந்திறத்தல் ஜீவகதியாதலாலும், எல்லாச்சமயப் பொருளும் அடங்கக்கூறி அவை கூறாத நுண் பொருளுங் கூறிவைத்தல் வியாபக அறிவுத்தன்மை யாதலாலும், சில பகுதிப்பொருளே அடங்க உரைத்து வைத்தல் சிற்றறிவுத் தன்மையாதலாலும் அறிவின் தார தம்மியத்தினாற் பல பகுப்புடைய மாணாக்கர் பலர்க்கும் அவரவர்க்கேற்குமாறு கலைகளைத் தூல வருந்ததி நியாயம் பற்றிப் பருப்பொருளாகவும் நுண்பொருளாகவும் வகுத்துக்கொண்டு நல்லறிவுச்சுடர் கொழுத்துதல் போலப் பக்குவ பேதத்தினாற் பல வகைப்பட்டு நிற்கும் புருஷகோடிகள் அனைவர்க்கும் அவர் அவர்க்கு ஏற்கும் வண்ணம் உண்மை ஞானத்தினைத் தூல சூக்கும மாகப் பலவகைப் படுத்திக்கொண்டு கிரமத்தில் ஞானம் விளங்கப் பெரிதருள் செய்தல் பேரருளும் பெருநாயகத் தன்மையுமாய் முடிதலாலும் அப்படியன்றி ஒரு வகுப்பார்க்கு ஓர் வகைக் கலை அறிவு கொளுத்துதல் போல ஒருவகைப் புருஷர்கள் மாத்திரைக்கே ஒரு ஏகதேச சமயம் வகுத்து அற்ப ஞானம் அருளுதல் ஏகதேச அருளும் ஏகதேச நாயகத் தன்மையுமாய் முடிதலாலும் எல்லாத் தெய்வங்கள் இடமாக நின்று வழிபாடுகள் கொண்டு அருளுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபகவருட்பெருங்குணமாய் முடிதலாலும் ஓரிடத்து நின்று வழிபாடு கொண்டு அருள் செய்து அல்லா விடத்து நின்று வழி பாடு கொண்டு அருள் செய்யமாட்டாமை வியாப்பியவருட் சிறு குணமாய் முடிதலாலும், இவை சமய வன்மை மென்மைகளை உள்ளபடி இலகுவாக அளந்தறிதற்கேற்ற அளவைக் கருவிகளாதல் காண்க.

முதற் கடவுள் புருஷர்கள் தத்துவ ஞானமெய்தி உய்யச் சமயம் வகுத்த அநாதிக் காலத்தில் அதனை ஒன்றாக நிறுத்தாமல் பல பேதப்பட இங்ஙனம் நிறுத்திய தென்னையோ வெனின், ஒரு கலாசாலையிற் கற்கும் மாணாக்கர்கள் பிறப்பினால் ஒரு தன்மை யுடையவராயினும் அறிவின் தீவிர மந்த விளக்க பேதத்தினால் பல வேறுபாடுடையரா யிருத்தல்பற்றி அவரைப் பல வகுப்பினராகப் பிரித்து அவ்வகைகளுக்கேற்ப நுட்பமாகவும் பெரிதாகவும் கல்விகளைப் பலவகைப்படுத்திக் கற்பித்தல் போல, புருஷர்கள் பிறப்பினால் ஒரு தன்மையராயினும், பக்குவபேதங்கள் காரணமாகத் தீவிரமாகவும் மந்தமாகவும் விளங்கும் அறிவின் தராதம்மிய விளக்க முடையராயிருத்தலினால், கருணாநிதியாகிய கடவுள் அவர் அவர்க்கு ஏற்கும்படி நுண்பொருளுடையனவாக வும் பருப்பொருளுடையனவாகவும் சமயங்கள் பல நிறுத்தினர். அதனால் அது நீதியேயாமன்றிக் குற்றமாக மாட்டாதென்க. சிலர் இம்முறை தெரியாமல், கடவுள் ஆதியில் நிறுத்திய சமயம் ஒன்றே மற்றைச் சமயங்களெல்லாம் காலந் தோறும் மனிதர் கடவுள் கருத்துக்கு மாறகக்கட்டி நடத்தின என்பர். அது பொருந்தாது என்னை? கடவுள் சர்வ சத்தியை யுடைய சுதந்திர ராதலினால், சத்தி சிறிதுடைய சுதந்திரமில்லாத மனிதர் சுதந்திர சங்கற்ப சத்தியைக்கடந்து அங்ஙனம் சமயங்கள் கட்டி நடத்தக் கருவியும் இடமும் காலமும் முயற்சியும் பெறுதல் கூடாமையாலென்க. அதுவேயுமன்றிப் பக்குவ பேதமுடைய புருஷர்களை படிவரிசை யினாலன்றி ஒரு படியில் வைத்து ஒப்ப அறிவு விளக்குதல் கடவுளின் பெரிய அருளொப்புரவுக்குக் குற்றமாயு முடியும்.

இனிச், சமயங்கள் தத்துவ ஆசார விசேட நுட்பகதிகள் பற்றிப் பேதப்படினும், தர்க்க நூல்களுக்கெல்லாம் இணங்கும் லௌகிக சித்தாந்தங்கள் பற்றியும் நீதி நூல்களுக் கெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணங்குங் கொல்லாமை புலாலுண்ணாமை களவு செய்யாமை, கள்ளுண்ணாமை, பிறர்மனை விரும்பாமை முதலிய நீதிகள் பற்றியும் பேதப்படாவாம். சில மிலேச்ச சமயங்கள் முற்சொல்லிய தர்க்க சித்தாந்த விரோதமாகும் அவசித்தாந்தங்களும் நீதிவிரோத மாகும். கொலை, புலாலுணல், கள்ளுணல் முதலிய அநாசாரங் களும் சமயப் பொருளாகக் கொண்டுரைக்கும். ஆரிய கலையான சித்தாந்த அறிவுக்கும், நீதிக்கும் வெகு தூரமாய் ஒதுங்கின காரணத்தினால், அந்த அநாரிய சமயங்கள் அவ சித்தாந்தங் களையும், சிவகாருண்ணிய தருமவிரோதமாகும் அதர்மங்களை யும் அங்ஙனம் சமயப் பொருளாகக் கொண்டுரைத்துத் தோஷப் படுவனவாயின.

சமய வேறுபாடுடைய மனிதர்களுள்ளே மேற்சமயிகள் கீழ்ச் சமயிகளை இளைய சகோதரர்களாகவும் கீழ்ச்சமயிகள் மேற் சமயிகளை மூத்த சகோதரர்களாகவும் மதித்து ஒருவருக்கொருவர் அன்பு செய்தொழுகலே விவேக நெறியாம். சமய தார தம்மிய வகை சமயிகளுக்கு அறிவொற்றுமைக்குக் காரணமாவதன்றிக் கலக காரணமாகமாட்டாது. ஒரு பெரிய கலாசாலையில் கற்கும் மாணாக்கர்கள் அறிவு விளக்கத்தின் தார தம்மியத்தினால் மேல் கீழாகப் பேதப்பட்டிருக்கக் காண்கிறோம். அப்படிப் பேதப் பட்டிருக்கும் மாணாக்கர்களுள் மேல் வகுப்பு மாணாக்கர்கள் தங் கீழ் வகுப்பு மாணாக்கர்களைக் குறித்து இவர்கள் மேல் வகுப்பில் வந்து நுட்பக்கலை கற்குஞ் செவ்வி என்று கூடுமோவென்று அவர் ஆக்கங்கருதி அநுகூலங்கள் செய்தலை ஒழுக்க நெறியாக கொள் வர். கீழ் வகுப்பு மாணாக்கர்கள் மேல் வகுப்பு மாணாக்கர்களைக் குறித்து இவர் விசேட அறிவு விளக்கம் பெற்ற பெருமையினா லன்றோ மேல் வகுப்பிற் பிரவேசிக்கப்பெற்று நுட்ப வித்தை களைக் கற்றற்கு அதிகாரிகளாயினர். நாங்களும் அறிவு விளக்கம் விரைவிற் பெற்று மேல் வகுப்பினையடைந்து அந்த வியாபக நுட்பவித்தைகளைக் கற்கும் அதிகாரத்தினை இவர் போல் எய்தல் வேண்டு மென்று கருதி முயலுதலை ஒழுக்க நெறியாகக் கொள்வர். அம் மேல் கீழ் என்னும் தாரதம்மிய வகை அவர்கள் அறிவொற்று மைக்கே காரணம் ஆதலல்லது கலக காரணம் ஆகுதல் இல்லை. இந்த முறையினால் மேற்சமயிகள் கீழ்ச்சமயி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைக் குறித்து இவர்கள் ஞான விளக்கம் உண்டாகி எம்மைப் போல மேற்சமயப் படி ஏறி உய்யுங்காலம் என்று சிந்திக்குமோ வென்று இரங்கி அவர்கள் ஆக்கங்கருதி வேண்டும் அநுகூலங்கள் செய்து வருதலும், கீழ்ச்சமயிகள் மேற்சமயிகளைக் குறித்து இவர் தவத்தின் வலியினாலன்றோ மேலான சன்மார்க்கம் எய்திக் கரும ஞான சித்திகளில் எம்மினும் மேம்பாடுடையரா யினர். நாங்களும் தவ முயற்சியினால் அம்மேற்சமயஞ் சார்ந்து கரும ஞான சித்திகள் அவர்போலப் பெரியதாக எய்தல் வேண்டுமென்று ஏக்கற்று முயலுதலுமே அறநெறியாம். இப்படிச் செய்தலை விட்டு மேற்சமயிகள் கீழ்ச்சமயப் பொய்ம்மைகளை அச்சமயிகளுக்கு முன் எடுத்துப்பேசி இகழ்ச்சி செய்து அவர் களுக்குக் கோப மூட்டிக் கலகம் விளைத்தலும்; கீழ்ச்சமயிகள் மேற்சமயப் பொருள்கள் தாங்கிரகிக்கக்கூடாத நுட்பமும், தஞ் சமயங்களில் லாத நூதனங்களுமாயிருத்தல் காரணமாக அம்மேற் சமயங்களை மனம்போனபடி தூஷித்து அம்மேற்சமயிகளுக்கு மனவருத்தம் உண்டாக்கிக் கலகம் விளைத்தலும் ஒழுக்க நெறியாக மாட்டா வாம். இன்னும் மேற்சமயிகள் கீழ்ச்சமயிகளுக்கு அவர் சார்ந்து நிற்குஞ் சமயப் பொய்ம்மை காட்டி அவரை மேலாயுள்ள தஞ்சமயங்களில் வழிப்படுத்தி உய்யச்செய்யுங் கருத்துடையராங் கால், அவரோடு உலகியல் ஒழுக்க வழியால் அன்புசெய்து கலந்து நட்புடையராய்ப் பொதுநிலை நின்று நியாய நெறியால் சமய சம்பாஷணம் மெல்ல மெல்லச் செய்து சமயப் பொய்மெய்களை உள்ளபடி அவர் தெளிய விவேகச்சுடரை அவர்க்குக் கொளுத்தி அப்படிச் செய்தலே புத்தியாம். கீழ்ச்சமயிகள் அங்ஙனஞ் சமய சம்பாஷணத்தினால் தங்களிடத்து உதித்துப் பிரகாசிக்கும் விவேகக் கண்களால் தங்கள் சமயப் பொய்ம்மையும், மேற்சமய மெய்ம்மையும் உள்ளபடி காணப்பெறுங்கால் தஞ்சமயப் பற்று விடுத்து, தாம் மெய்யெனக்கண்ட மேற்சமயஞ் சார்ந்து உய்ய முயலுதலே அறிவாம்.

இனி, அப்படி உண்மை கண்ட பின்னும் துரபிமானத் தினால் மேற்சமயம் பற்றி உய்ய முயலாமல் தாஞ்சார்ந்து நிற்கும் சமயங்களே சன்மார்க்கங்களென்று மனச்சான்றுக்கு விரோத மாகப் பொய்ப்பாராட்டுச் செய்து மேற்சமயங்களை அவமதித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கபட வொழுக்கம் பூணுதல் பாவமாம்.

இது இங்ஙனம் நிற்க சத்தியமிக்க மேற்சமயிகள் சத்தியங் குறைந்த கீழ்ச்சமயங்களைப்பற்ற ஒருக்காலும் சம்மதியார். ஆரியர்களாகிய வைதிக மேற்சமயிகள், இக்கலியுகத்திற் சிலர் கொண்டு அனுஷ்டிக்கும் அநாரியமாகிய விவிலிய சம்பந்தமான கீழ்ச்சமயங்களிற் பிரவேசித்துக் கெடக்காண்கிறோம். பிருகிருத சம்பந்தம் பற்றி அக்கெடுதியைச் சுட்டிச் சில சொல்வாம். ஆரியர்கள் சமய நூல்களாகக் கொண்ட வேதாகம முதலிய சாஸ்திரங்கள் சித்த சுத்தியைத் தரும் விதி விலக்கு நிறைவும், தர்க்க முதலிய கலைஞான சம்மதமும், பதி,பசு,பாச பதார்த்த விசாரணை பூரணமும், தத்துவ ஞானசித்தி சாதன பூரணமும், சகல புருஷபக்குவாநுகூல கருமஞான சித்தி முத்தி சாதனோபாய பூரணமும், சமஸ்த ஜீவகாருண்ணிய நீதிமார்க்க பூரணமும் உடையன. அநாரியர் சமய நூலாகக்கொண்ட விவிலிய முதலிய நூல்கள் சித்த சுத்தியைத் தரும் விதி விலக்குக் குறைவும், தர்க்க முதலிய கலைஞான விரோதமும் ஜீவேசுவர ஜகத்பதார்த்த விசாரக் குறைவும், தத்துவஞான சித்தி சாதனக்குறைவும் ஏகதேச புருஷானுகூல கரும சாதனோபாயமும் மனித ஜாதி மாத்திரமான ஜீவகாருண்ணிய நீதி மார்க்கமும் உடையன. இந்த முறைமை களால் ஆரிய சமயங்களும் அநாரிய சமயங்களும் தம்முள்ளே வித்தியாசம் அதிகம் உடையவைகள் என்பது பிரசித்தம்.

வைதிக சமயிகள் தங்கள் சமயக் கொள்கைகளோடு இங்ஙனம் வித்தியாசம் பெரிதுடையனவாய் மிகவும் கீழ்ப் பட்டிருக்கும் விவிலிய சமயங்களை நல்லனவென்று பற்றுதற்கு நியாயம் சிறிதும் சித்திக்காது இனி,ஆரிய சமயிகளிற் சிற்சிலர் இக்காலத்தில் கீழான விவிலிய சமயங்களிற் பிரவேசித்தற்குக் காரணம் வைதிக சமய விதிவிலக்குக்களாகிய தருமங்கள் அநுஷ்டித்தற்கு அரிய பண்டிதக் கொள்கையாதலும், விவிலிய சமயக்கொள்கைகள் அநுஷ்டித்தற்கு எளிய பாமரக்கொள்கை களாதலும் மனம் போகுமாறு போய் இச்சா போகங்களை அனுபவித்தற்கு அநுகூல மாய் இருத்தலுமேயாம். அநித்தியமும், துக்கம், இழிவும், பழியுமுள்ள பொய்ப்போகங்களை அநுபவித்தற் பொருட்டு நித்தியமும், சுகமும், உயர்வும், புகழுமுள்ள வைதிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயங்களைக் கைவிட எண்ணுதல் அந்தோ! மேன்மக்களாகிய ஆரியர்களுக்கு எவ்வளவு மதிகேடு! எவ்வளவு அவமதிப்பு!! எவ்வளவு பழி!! எவ்வளவு பாவமாம்!!

வைதிக சமயிகளுள்ளே வேறுசிலர் தரித்திரக் கொடுமையினால் அன்ன வஸ்திரம் பெற்று உடல் ஓம்பும் பொருட்டும் விவிலிய சமயங்களிற் பிரவேசிக்கின்றார். தொழின்முயற்சிக் குறைவினால் தரித்திரம் உண்டாகும். தொழின் முயற்சி செய்து பொருளை ஈட்டின் அதுகெடும். செல்வ வாழ்வு உண்டாம். இதற்குப் பயந்து சாதியாசாரம் சமயாசாரம் விட்டுக் கீழான புன்சமயங்களிற் பிரவேசித்துப் பழிபூணல் பெரியதோர் மதிகேடு! இப்படி மதிகெட்டு விவிலிய சமயங்களிற் பிரவேசித்துப் பதிதத்தன்மை யெய்தினவர்களுள்ளே ஒரு சிலர், போக ஆசையும் பொருளாசையும் அநுபவத்தினாலும் பொருட்பேற்றினாலும் நீங்க மோகந்தெளிந்து அறிவு வரப்பெற்றபின், ஆரிய மேன்மக்கட் பேற்றினையும், வைதிக சற்சமயப் பேற்றினையும் நல்வினையாற் பெற்றிருந்த நாம் ஐயோ! அற்பதுராசை தரித்திரங்காரணமாக மயங்கி அறிவு கெட்டு அப்பேறுகளைக் கைவிட்டு, இந்த இழிந்த சமயங்களில் வீழ்ந்து குலங்கெட்டோம்! குணங்கெட்டோம்! நலங் கெட்டோம்! நற்சமயங்கெட்டோம்! என்று பச்சாத்தாபப் படுகின்றனர். இவர்களுள்ளே சிலர் தங்கள் முன்னைச்சமயங் களைச் சாரக்கருதி முயன்ற வழியும், வைதிக சமயிகள் சாதி கெட்டுச் சமயங்கெட்டு நீதிகெட்டு நிலைகுலைந்து பதிதரான நீங்கள் எங்களோடு சேரவொட்டோம் என்று ஒதுக்க என் செய்வோம்! தெய்வமே இதுவும் படக்கடவமோ! என்று கவலைக்கடலுள் மூழ்குகின்றார்.

இவருள்ளே சிலர் உலகறிய விவிலிய சமய கண்டனஞ் செய்து ஆரியர் அயிர்க்காமல் விவிலிய சமய வேடம் பெயர் மாற்றி ஆரிய சமயம் வேடம் பெயர் தரித்து ஆரியநடை மேற் கொண்டு ஒழுகுகின்றார்கள். அப்படித்துணிந்து முற்சமயப் படியேறி வாழ்பவரை ஆரியசமயிகள் அவர் இடைவழுக்குற் றெய்திய இழிவையெண்ணிச் சமயகருமங்களில் ஒருபுறமாகக் கொள் கின்றனர். அறியாமையினால் ஆரிய சமய தரும நஷ்ட முற்றோர் அந்நஷ்டத்தினை நினைந்து பச்சாத்தாபப்படுவரேல் பிராயச்சித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்கருமத்தினால் அவர் பாவங்கழுவி உய்திகூட, விதி விலக்கு வாக்கியஞ் செய்த தரும சாஸ்திரகாரராகிய வைதிகா சாரியர்கள் ஒரு வழி விட்டார்களில்லை போலும்! காலத்துக் கேற்பச் சீலம் போற்றல் அறிந்தார் கடனாதலால் இக்காலத்து நமது வைதிகாசாரியர்கள் அத்தன்மையோர் சுத்திபெற்று ஆரியராய் வேறிருந்து சமயம்பேணி உய்தற்கோர் நல்வழியைத் தருமசாஸ்திர சம்மதமாக இக்காலத்துக்கேற்க உலகறிய விதித்தல் நலமாம். தம் பந்துக்களாகிய ஆரிய மாதராடவர்கள் தருமநெறியில் பிழைத்தல், ரகசியமாக அவர் பாவம் நீங்கிச் சாதியிலிருந்துவாழப், பிராயச் சித்த உபாயத்தால் சுத்தி செய்யும் ஒழுகலாறுகள், அங்கங்கே வைதிகாசாரியர்களால் வர்த்த மானத்திலும் அனுஷ்டிக்கப்படக் காண்கின்றோம். அவ்வாறே, இச்சமய தரும நஷ்டமடைந் தார்க்கும் ஓர் உபாய சுத்தியை விதித்தல் அவர்க்குக் கடப்பாடாம். அச்செய்தி அவர்க்குப் புகழ்ச்சியாமேயன்றி, இகழ்ச்சியாக மாட்டாது.

முற்காலத்தும் ஆரிய சமய உண்மை தேறாமல் ஆருகத முதலிய அவைதிக சமயங்களைச் சற்சமயங்களென்று விபரீத மாகக்கொண்டு இழவூழ் வலியால் அவற்றில் புகுந்த ஆரியோத்தமர்கள் சிலர், பின்னர் ஆகூழ் உற்றுழிஉதவ அச்சமயங் களின் பொய்ம்மை கண்டு தம் முன்னைச் சமயத்துண்மை தேறிக், கடவுள் அருளாலும் கடவுள் அருள்பெற்ற ஆசாரியர்கள் அருளாலும் அவை பற்றி உயர்ந்து, வைதிகர்களாய் மேம்பாடு பெரிதும் எய்தினார்களென்று புராணங்களும் வலியுறுத்தும்.

இனித் தஞ்சமய வுண்மை தேறப்பெறாது தீயூழ்வசத்தி னால் ஆருகத முதலிய அவைதிக சமயங்களிற் பிரவேசித்த நல்லோர்க்கும் துராசை தரித்திரங்காரணமாக அநாரியமான விவிலிய சமயங்களிற் பிரவேசிக்கின்றவர்க்கும் வேற்றுமை பெரிது. அவர் தஞ்சமய உண்மை தேறாது நன்நெறி கடைப் பிடித்துய்யல்வேண்டு மென்னுங் கருத்துடையராய்க் கொல் லாமை புலால் உண்ணாமையென்னும் கபடசீலம் பெரி துடைமையே பற்றி அந்த அவைதிக சமயங்களை நன்னெறி களென்று மயங்கிக் கைக்கொண்டவர். இவர்கள் நிலையாத பழி படு போகத்தினையும் இழியுட லோம்பு தலையும் பொருளாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதி நிலையுள்ள புகழ் இன்பம் பயக்குஞ் சற்சமயத்தினைக் கைவிடுகின்றவர்கள். அவர் புகுந்த சமயங்கள் கொலை புலாலுண்ணல் கள்ளுணல் என்னும் பெரும்பாவங்களை விலக்குவன வாதலால், சமயநலங் கெட்டாரன்றிக் குலநலங் கெட்டிலர். இவர்கள் புகுஞ்சமயங்கள் கொலை புலாலுணல் கள்ளருந்தல்ளென்னும் பெரும்பாவங்களைத் தருமமாக விதிப்பனவாதலால் சமயநலக்கேட்டுடன் குலநலக்கேடும் எய்துகின்றார்கள். அன்றியும் அவர் தெய்வத்திருவருள் கைவந்து கிடைக்கப்பெற்று மேம்பட்டவர். இவர்கள் சிறிது விவேகம் உதிக்கப்பெற்று மேலேவரக் கருதுகின்றவர். ஆதலால் இருவர்க்கும் வேற்றுமை பெரிதுண்டென்றறிக. கீழ்ச்சமயத்தில் இறங்கி முன்னை மேற்சமயத்தில் வருதல் மாத்திரைக்கே அப்பெரியாரை இவர்க்குத் திருஷ்டாந்தமாக உரைத்தோம்.

இனி, வைதிகர்களாகிய ஆரியசமயிகள் சமயக்கொள்கை பற்றிப் பல பேதப்படினும், வருணாச்சிரம ஒழுங்குமுறையில் வேறுபாடு இன்றி ஒத்தநடையுள்ளவர்களாயே இருத்தலினால் அவர்களுள் தம் மேற்சமயத்தினின்றும் இழுக்கிக் கீழ்ச்சமயம் புகுந்து மேற்சமயமேற விரும்புவோர்களும், கீழ்ச்சமயிகளாய் வைகி மேற்சமயமேற விரும்புவோர்களும் விரும்பும்பொழுதே தாங்கள் மேற்புக விரும்புஞ் சமயாசாரியர்கள் பால் அச்சமய சம்ஸ் காரம் பெற்றுச், சமயப் பிரவேசஞ்செய்து, வேறுபாடு இன்றி, அம்மேற்சமயிகளோடு கலந்து, அச்சமயிகளாய் ஒழுகதற்குரிய வர்களாவர். அவர்களுக்கு மேற் சொல்லிய சங்கடங்கள் உண்டா மாறில்லை. ஆரிய சம்பந்தமுற்றுக் கொல்லாமை புலா லுண்ணாமை முதலிய சீலம்பேணி ஆரிய தேசத்தவர்களாய் வாழும் ஆருகதர்பௌத்தர் என்னும் அவைதிக சமயத்தார்களுக்கு இம்முறை ஒருவாறு ஒப்பற்பாலதன்றி, எல்லாவாற்றினாலும் ஒப்பற்றபாலதன்றி, எல்லாவற்றினாலும் ஒப்பற்பாலதன்று.

அற்றாக, ஆரியநடையோடு மாறுபட்டு அப்புறத் தேசத்தவர்களாய் வாழும் அநாரிய சமயபேதிகள் தம் விவிலியக் கொள்கைப் பொய்மைகண்டு கொலை ஊன் உணவு மதுஉணவு முதலிய துராசார மறுத்து ஆரியசமய மெய்ம்மை தேறி அவற்றுள் ஒரு சமயஞ்சாராவிரும்பின் அவ்வழி அவர்க்குச் செய்யற்பாலது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாதெனில் உண்மையில் பாஷை, சாதிபற்றிப் பேசும் விகற்பம் அசுரன் சந்நிதிக்கு மிக்கதூரமென்று உண்மைநூல் கூறுதலால், பக்குவமுடையராகும் அவர்க்கும் ஒருவகை சம்ஸ்காரஞ்செய்து ஆரிய சமயத்தராக்கி உய்யக் கோடலே கிருபைமிக்க ஆரிய வைதிக சமயாசாரியர்களுக்குக் கடப்பாடாம் அங்ஙனம் சமய சம்ஸ்காரம் பெற்று ஆரியசமயத்தினராய் உயரும் அந்த விவேக புருஷர்கள் ஆரியசமயம் வழுக்கி விவிலிய சமயம் வீழ்ந்து அவற்றின் பொய்ம்மைகண்டு முன்னைத்தங்கள் ஆரிய சமயஞ்சார விரும்புவார் போல ஒருபுறமாக வைகிச் சமயவொழுக்கம் பேணுதற்குரியராவர்.

இனிச் சமயங்கள் கால பேதத்தினால் விருத்தியெய்தியும் குன்றியும் வரும். சமயிகள் செய்து போதரும் தருமவிருத்தியும் அதர்மவிருத்தியும் முறையே அவ்விரண்டுக்குங் காரணமாம். அங்ஙனம் ஆக்கக்கேடுகள் எய்தினும் மேற்சமயம் மேற்சமயமே. கீழ்ச்சமயம் கீழ்ச்சமயமே. அசற்சமயங்கள் அச்சமாயிகளுக்கு அரச சொல்லுங்கால் விருத்தியெய்தியும் அரசு செல்வாக்கால் குன்றியும் வரும். சற்சமயங்கள் இரண்டு காலத்தும் தன்மை சிறிதும் குன்றாது ஒரு பெற்றியாகவே நின்று விளங்கும். நல்லறிவில்லாத மக்கள், அரசசோடுகூடி ஆக்கமடையுஞ் சமயங்கள் நியாய பலமில்லா தவைகளாயினும் நியாய பலமில்லாதவைகளாயினும் நியாய பல முடையனவென்று அவைகளைப் பாராட்டா நிற்பர். விவேகிகள் அதுபற்றி அங்ஙனம் பாராட்டால் செய்ய இசையார். என்னை?

"இருவேறு உலகத்தியற்கை. திருவேறு,
தெள்ளிய ராதலும் வேறு."

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருண்
மெய்ப்பொருள் காண்பதறிவு"

என்னும் உண்மைபற்றித், தீயோர் ஆக்கமும் நல்லோர் நல்குரவுங் கண்டுழி செல்வஏது வேறு ஞானஏது வேறு என்று வேறுபாடு செய்தும், ஒரு பொருளினை அதன் ஸ்தடத்தப் பொலிவுபற்றி மயங்கி வேறுபட வுணராமல் மெய்யாய் நின்ற சொரூபம் பற்றி ஆராய்ந்தும் உண்மை தேறவல்லராதலா லென்க.

இனி, வேதாகம புராண இதிகாச முதலிய சமய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாஸ்திரங்களாலும் தர்க்க முதலிய பல கலை நூல்களாலும் நிறுத்தப்பட்டு மிக மேலாகி விளக்கமுற்றுவரும் எமது வைதிக சமயங்கள், ஆரியராகிய நம்மனோர் வேதாகம புராண இதிகாச முதலிய சமய சாஸ்திரங்களையும் தருக்க முதலிய கலை நூல்களையும் பிரீதியோடு கல்லாமையினாலும், எங்கேனும் சிலர் கற்றலும் பிறர்க்குக் கற்பித்தலும் எல்லாரும் எளிதில் அறிந்துய்யத் தெளிவாகப் பிரசங்கித்தலும் செய்யாமையினாலும் இக்காலத்தில் வாவரக் குன்றுகின்றன. பகற் பொழுதெல்லாம் பாநுவின் கிரணப்பரப்புள் அடங்கி ஒளிகுன்றி யொடுங்குந் தாரா கணங்கள், அப்பாநுவின் கிரண விளக்கங்குறையும் இராப்பொழுதில் வெளி வந்து விளங்கி வீக்கம் பெரிது காட்டுதல் போல, முன்னெல்லாம் வைதிக பானுவின் பெரிய ஞானபிரகாசத்துள் அடங்கி வலி கெட்டு ஒடுங்கிக்கிடந்த பரசமய கணங்கள் வைதிக சமயங்கள் விளக்கங்குறையும் அற்ற நோக்கி அக்காலத்து வெளிவந்து தலையெடுப்புற்று வீக்கங் காட்டுகின்றன. அதுமட்டோ பெருவலியுடைய மிருக வேந்தாகிய சிங்கம் அருவரை முழையில் அடங்கியொடுங்கியிருக்கும் வலிமிக்க ஒடுக்கத்தினைக் கண்ட மரையும் மானும் கேழலும் வேழமும் வலியில்லாத ஒடுக்க மென்று விபரீதசிந்தனை செய்து, இதனோடு பொருதுவென்றி யெய்துவம் என்று குறித்துப் பகைத்து எதிரேறுதல் போலக் காலங்கருதிமிருக்கும் வைதிக சமயங்களில் சூழ்ச்சி பொருந்திய மாட்சிமையொடுக்கத்தைக் கண்ட பரசமய கணங்கள் வலியில் ஒடுக்கமென்று விபரீத சிந்தனை செய்து இவற்றோடு பகைத்துப் பொருது வென்றியெய்துவம்" என்று குறித்துத் தருக்கிச் சொற்போர் புரிய முற்படுகின்றன. இனி, அரண்வலி மிகவுடைதேனும் அதன் அகத்திருக்கும் வீரர் மனவலி குன்றிச்சாம்பின் அது வலி அழிவெய்தும் அரண்வலி மிகவுடைத் தன்றேனும், அதன் அகத்து இருக்கும் வீரர் மனவலி குன்றிச்சாம்பின், அதுவலி அழிவெய்தும் அரண்வலி மிகவுடைத் தன்றேனும் அதன் அகத்து இருக்கும் வீரர் மனவலியுற்று முயலின், அது வலிமிகவுற்று நிலைபெறும். அதுபோல, நமது வைதிக சமயங்கள் எல்லா நலனும் எல்லா வலியுமுடையன வேனும், வைதிகர்களாகிய நம்மனோர், வைதிக சமய சாஸ்திரங்களையும் தருக்க முதலிய கலை நூல்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரீதியோடு கற்றும், பிறர்க்குக் கற்பித்தும், எல்லாரும் எளிதில் அறிந்துய்யப் பிரசங்கித்தும் சமயவிருத்தி செய்யாமல் சோம் புற்றிருப்பின், மெய்விளக்கங்குன்றுலனவாம். அசற்சமயங்கள் நலமும் வலியும் இல்லனவேனும், அச்சமயிகள் அச்சமய நூல் களைப் பிரீதியோடு கற்றும் கற்பித்தும் பிரசங்கித்தும் ஊக்கத் தோடு சமயாபிவிருத்தி செய்துவரின் மெய்ம்மை யுடையனபோல விளக்கமுறுவனவாம். இங்ஙனமாகலின் வைதிக சமயங்களின் விளக்கக்குறைவு அவற்றின் வலிக்குறைவால் நேர்வதன்று, சமயிகள் முயற்சிக்குறைவாற்றானே நேர்வதா மென்றும், அசற் சமயங்களின் விளக்கம் அவற்றின் பொருள் வலி யால் நேர்லதன்று, சமயிகள் முயற்சியினால் நேர்வதேயாமென்று முணர்க.

இனி, நம்முயிர்க்கு உறுதிதரும்பொருட்டுப் பெருங் கருணைத் தடங்கடலாகிய முதற்கடவுள் நிறுத்திய வைதிக வருட்பெருஞ்சமயங்கள் விளக்கம் குன்றாமல் அவைகளைப் பிரதிஷ்டை செய்தல் நாமெல்லாம் அத்தியாவசியம் செயற்பாலதாம் பரமபுண்ணியமாம், இனி, வைதிகர்களாகிய நாம் அத்தியாவசியகம் செயற்பாலனவாகும் சமயஸ்தாபன கருமங் களாவன, வைதிகசமய நூல்களையுந் தருக்க முதலிய கலை நூல்களையும் நன்றாக கற்றல் கற்பித்தல் பிரசங்கித்தல் இலக்கண அமைவும் நியாயபலமும் பொருந்த வைதிக ஸ்தாபன கிரந்தங்கள் பரசமய கண்டன கிரந்தங்கள் இக்காலத்துக் கேற்பச்செய்தல், பழைய வைதிக சமயஸ்தாபன கிரந்தங்களும் பிறவும் இறந்து போகாமல் பாதுகாத்தல் முதலியனவேயாம்.

மிடிகாரணமாக அல்லது பகை காரணமாகத் தங்குடி கெட வந்தவிடத்து, அம்மிடி பகைகளைத் தீர்த்துக் குடியை யோம்புதல், அக்குடிப்பிறந்த நன்மக்களுக்குக்கடனாம். அது போலவே சமயநூல் அறிவு பேணாமை காரணமாக அல்லது பரசமயவாதிகள் வாதப்போர் காரணமாகத் தஞ்சமயங்குன்றவந்த விடத்து, சமய நூல் அறிவை அபிவிருத்தி செய்தும் பரசமய கண்டனஞ்செய்தும் தஞ்சமயத்தை யோம்புதல் அச்சமயத்துப் பிறந்த விவேக புருஷர்களுக்குக் கடனாமன்றோ.

இனிக்,குலத்தைக் காப்பாரைக் குலத்தாரே தெய்வமாகக் கொண்டு வழிபடுவர்; சமயத்தைக் காப்பாரைச் சமயத்தவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெல்லாரும் தெய்வமாகக்கொண்டு வழிபடா நிற்பர். குலங்காப்பவர் புகழ் குலமுள்ளவரையும் நிற்கும். சமயங்காப்பவர் புகழ் உலகமுள்ளவரையும் நிற்கும். இவர்க்கு உண்டாகும் இம்மைப்பயன் அளவு இவ்வளவாயின் மறுமைப்பயன் அளவு சொல்லிமுடியுமோ!

இன்னும் இவ்வுலகத்திலே மாநுடர் ஒவ்வோர் தொடர்ச்சி பற்றிச் செய்துபோதரும் அபிமானங்கள் சாதியபிமானம், தேசாபிமானம், பாஷாபிமானம், சமயாபிமானமெனப் பல வகைப்படும். அவற்றுள் சாதியபிமானத்தினை நோக்கத் தேசாபிமானமே உயர்ந்தது. சாதியபிமானம், தேசாபிமானம், பாஷாபிமானங்கள் உயிர்க்குப்புறம்பாயுள்ள ஒவ்வோர் பொருள் பற்றி உயிர்களிடத்து நிகழும் குணங்களாம். சமயாபிமானம் உயிர்க்கயிராகிய கடவுள் சம்பந்தங் காரணமாக உயிர்களிடத்து விளங்கும் ஞான குணமாம். ஆதலால், மனிதர் மற்றை அபிமானங்களினும் சமயபிமானத்தினையே அதிக சிரத்தை யோடும் பெரிதும்போற்றி ஒழுகுதல் வேண்டும். இனித், தஞ்சமயங்குன்றவருமிடத்து அது அபிவிருத்தி யெய்துதற்கு வேண்டும் முயற்சிகள் செய்யாது சும்மாவிருந்து கொண்டு நாம் சமயாபிமானம் பெரிதுடையோமென்று வாயால் வெறுஞ்சொற் பிதற்றித் தம்மைத்தாமே மதித்து இறுமாப்படையும் வெறுஞ் செம்மாப்பு நாடகமாமன்றிச் சமயாபிமான மாகாது. சமயப் பிரதிஷ்டை ஏனைப் பிரதிஷ்டை களின் மேம்பாடுடைய தென்பது சாதிப்பிரதிஷ்டை, தேசப் பிரதிஷ்டை, பாஷைப்பிரதிஷ்டை செய்த மேலலோர்களை நோக்கச் சமயப் பிரதிஷ்டை செய்த மேலோர்களைப் பிரித்து மிக மேலோர்களாக வைத்து வழிபடும் உலக அனுஷ்டானத்தினாலும் இனிது விளங்கும்.

இன்னும், சமயவழி நின்று தம்மை வழிபட்டு உய்தற்கே பக்குவ மிக்க உயிர்களுக்கு அருமையான மாநுடப்பிறவி கடவுளாற் கொடுக்கப்படுவதாம். அவ்வருமையான மாநுடப் பிறப்பினை எய்திய மனிதர் சமய வழிநின்று தெய்வம் வழிபட்டு இருமை இன்பமும் பெற்றுய்தற்கு வாய்ப்புடைய கருவியாகும். அதனை துர்வினையோகம் செய்வாராயின், அப்பிறப்பு அவர் தமக்குப் பயன்படாமல் கொன்னே கழிந்து அழிவெய்துவதாகும். இனி அப்பிறப்புப் பின்னர் எய்தலோ மிக அரிது, ஆதலால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் அருளால அரிய மக்கட் பிறப்பெய்திய புருஷர் அப்பிறப்புத் தமக்குப்பயன்படும் பொருட்டுக் கடவுள் தமக்கு அருளிய சமயங்குன்றாமல் அதனைப் பெரிது போற்றி நின்று அதன் வழிநடந்து அவர் அருளால் இருமை இன்பம் எய்த முயலுதலே விவேகமாம். இனிச் சமயநடை விரும்பாது பிராகிருத நடை மேற்கொண்டு ஜீவிக்கும் மனிதர் பிறப்பான் மக்கள் போலக் காணப்படினும், தம்முயிர்க்குறுதி பேணாமையால், தம்முயிர்க் குறுதி பேணும் விவேக முயற்சியில்லா மிருகங்களோடு ஒப்ப மதிக்கப்படுவரன்றிப் புகழுடைய மக்களாக மதிக்கப்பட மாட்டார்.

இனிச்சமயநெறி சாராது நாஸ்திகம் பேசி உலகவாழ் வினையே பொருளாகக்கொண்டு ஒழுகும் மக்களும் சிற்சிலர் உலகத்துளராகலின் மக்கட் பிறப்புச்சமயஞ்சார்ந்து அனுஷ் டித்துத் தத்துவ ஞானமெய்தி வீட்டின்பம் அடைதற்குச் சாதன மாகக் கடவுளாற் கொடுக்கப்படுவ தென்பது பொருந்துமாறு எப்படியெனின் அது பொருந்துமாறு சொல்லுதும் நாஸ்திகம் பேசி உலகமேபொருளாகக் கொண்டு வாழும் மக்களும் சமயஞ் சார்ந்து நிற்கும் மக்களென்றே கொள்ளப்படுவர். பதி,பசு,பாச பதார்த்த சொரூபம் தெரியமாட்டாது. நாஸ்திகம் பேசுதல் மாத்திரையால் அவரைச் சமயஞ் சார்ந்து நிற்கும் மாந்தரல்ல ரென்று கொள்ளுதல் அடாது. என்னை? அவர் காட்சி என்னும் பிரமாணமும் ஸ்தூலபூதக் கடவுட் பதார்த்தமும் அப்பூதக்கூட்ட விகாரமாகிய ஜீவான்ம பதார்த்தமும் பூத காரியமாகிய பல தாத்துவிக பதார்த்தங்களும் ஜீவாத்ம இம்மைப்பந்தமுத்திச் சிறுகொள்கையும் இவ்வுலக வின்ப சாதனமாகும் லௌகிக தர்ம அநுஷ்டானங்களும் மெய்யென்று சமயங்கொண்டு அனுஷ்டிப்பர். அவர்கொள்கை உலகாயத சமய மெனப்படும். உலகாயதம் இகபோகங்களிற் கழிபெரும் பற்றுடைய பிராகிருதர் பொருட்டுவேண்டப்பட்டுச் சமய சோபன வரிசையில் முதற்சிறு சோபானமாக நிறுத்தப்பட்ட தொரு சமயம்.

இனி, மனிதர்கள் இகபோக வாசைமிகவுடையராங்கால் உலகாய்த சமய நிலையுடையராயும், இகபோகவைராக்கிய முதிக்கப்பெற்றுப் பரமார்த்திக ஒழுக்க விருப்பமிக வுடையராங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால் உலகாயத சமயத்தரல்லராய் மேற்சொல்லிய சமய வேறு பாடுகளுள் ஏற்பதொரு சமயநிலையுடையராயும் இருப்பர்கள். ஆதலால் மக்களுக்கு உலகாயத சமயவொழுக்கம் மற்றைச்சமய வொழுக்கம்போல ஒரு நிலையுள்ள சமய வொழுக்கமாக மாட்டாது. இச்சமய வொழுக்கம் பெரும் பான்மையாகப் புறப் புறச் சமய வகுப்பார்களிடத்துப் புத்தி சலனங் காரணமாக நிகழ்வதொரு ஞானாபாச குண வியாபார மாதலால் அது அந்த பிராகிருத சாமானிய சமயங்களின் ஆபாசமாய் அவற்றின் இறுதிக்கண் வைத்து எண்ணப்படும். இந்த நியாயங்களால் அந்த நாஸ்திகவாதிகளும் சமயச் சார்புடையவர்களேயென்றும், அதனால் மனிதப்பிறப்புச் சமய அநுஷ்டானம் பேணி உய்தற் பொருட்டே அறிவு விசேடமுடைய உயிர்களுக்குக் கடவுளாற் கொடுக்கப்படுவதொரு உயர் பிறப்பென்பது பொருத்தமுடைத் தென்றும் சமயச் சார்பில்லா மாந்தர் உலகத்தில் அரியரென்றும் ஒருதலையாக அறிக.

இனிப்புத்தர், ஆருகதர், சாங்கியர், மீமாஞ்சகரும் பிறரும், நித்தியா நித்திய பதார்த்த இலக்கணங்களும் பந்தமுத்தி இலக்கணங் களும், உண்மையாக அறியமாட்டாத நாஸ்திகர்களே யாயினும், அவரெல்லாம் நான்கு பூதங்களுக்கு மேலாகச் சூக்கும பதார்த்தங்களுமுண்டென்று நிச்சயிக்க வல்லராதலாலும், உலகாயதர் நான்கு பூதங்களுக்கு மேலாகச் சூக்கும பதார்த்த முண்டென்று நிச்சயிக்க வல்லரல்லராதலாலும் அறிவுடையோர் உலகாயதரையே நாஸ்திகரென்று பெரும் பான்மைபட வழங்கு வாராயினரென்றுணர்க.

இனி, இக்காலத்தில் வேதசமாசத்தார், பிரமசமாசத்தார் என ஆரியர் சிற்சிலர் தோன்றித் தாம் தாம் யுத்தியிற் புதிதாகச் சில கொள்கைகள் கற்பித்து, வைதிக சமயக்கொள்கை களோடு அவைகளைக் கலந்து புதிய சமயங்கள் சில உண்டாக்கி,அவைகள் வைதிக சித்தாந்தங்களாகுமென்று அங்கங்கே நாட்டமுயல் கின்றார். அப்புதுச்சமயங்கள் யுத்திகளென்று கற்பித்துக்கூறும் கொள்கைகள், அங்காங்கி பாவமும் ஐக்கிய பாவமும் உடைய வைதிக கருமகாண்ட ஞானகாண்ட அநுஷ்டானங்கள் தம்முள் ஒன்றற்கொன்று ஐக்கியம் இல்லாதன வென்று மாறுபட அந்தச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரம் விளைத்தலாலும் ஞானாங்கமான கர்ம நஷ்ட முண்டாக்கலாலும் ஞானப்போலியைத் தத்துவ ஞானமென்று சொல்லுதலாலும் புறப் புறச் சமயச்சார்பாயுள்ள அநாரிய விவிலிய சமயக் கலப்புடையவைகளாய் இருத்தலாலும் அச்சமய ஸ்தாபனங்கள் ஆரிய வைதிக ஸ்தாபனங்கள் ஆகமாட்டா. ஆதலால் வைதிக மேன்மக்கள் ஆராச்சியின்றித் தஞ்சமய நிலைவிட்டுச் சடுதியில் அவற்றிற்பிரவேசித்தல் புத்தி யாகாது. இன்னும், இக்காலத்துப்பரதகண்டத் தப்புறத்தநாரியர் சிலர் தமது விவிலிய சமயங்களின் பொய்ம்மை தேறி அவைகளை மறுத்து நீக்கிவிட்டு அவைதிக புத்தசமயக் கொள்ளைகளை வைதிக பாதஞ்சல வியாச சித்தாந்தங்களோடு கலந்து புதுச்சமயம் ஒன்று கட்டி அங்கங்கே போதிக்கின்றனர். அநாரிய ராகிய அவர் தம் விவிலிய சமயப் பொய்ம்மை தெளிந்து ஆரிய சமயங்களை கடைப்பிடித்து அவை நல்லனவென்று போதிக்கதலைப்பட்டது வியக்கற்பாலதொரு விவேக முயற்சியேயாம். ஆயினும் அந்த அநாரிய விவேக புருஷர்கள் அறியாமையினால் அவைதிக சமயமான புத்தசமய சித்தாந்தங்களையும் வைதிக பாதஞ்சல வியாச சித்தாந்தங்களையும் ஒன்றெனக்கொண்டு போதிக் கின்றனர் அதனால் அவைதிக சமய காங்கரியமுற்றுத் தோஷப் படும் அவர் வைதிக போதனையை நம்மனோர் அங்கீகாரஞ்செய்து பாராட்டுதல் தக்கதன்று, வைதிக சமய நஷ்டத்தினைத் தமக்கு விளைவிக்கும் இந்த நூதன சமயங்களை வைதிக சமயங்களென்று நம்மனோர் அங்கீகாரம்செய்தற்குக் காரணம் தங்கள் வைதிக சமய சாஸ்திரங்களைக் குருமுகமாக நன்கு கற்று அவற்றின் உண்மை காணப்பெறாமையேயாம் அது நிற்க.

இனி, வைதிகசமயிகள் தம்முள் முரணிச் சமயவாதப்போர் செய்தல் தகுதியாகாது. வைதிகசமயிகள் ஈசுரன் ஆத்மா ஜகம் பந்தம் முத்தி என்பனவற்றின் ஸ்தடத்த சொரூபஇலக்கண விவகார வேறுபாடுகள் பற்றிப் பல்வேறு சமயப் பகுப்பினராயிருப்பினும், சைவம் ஸ்மார்த்தம் வைஷ்ணவம் மாத்துவ மென்னும் நான்கு பெருஞ்சமய வரம்புட்பட்டு நடப்பர். இந்நான்கு சமயங்களும் அநாதி வைதிக சித்தாந்த வித்தைகளையும் அவற்றின் வழிவந்த கலைகளையும் மூலமாகக் கொண்டு போதருவனவாம் ஆதலால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் தாந்தாந்தழுவிய சமயங்களின் தாரதம்மியங்களை விசாரஞ் செய்ய விரும்புங்கால் பகைவர்போல் மாறுபட்டுக் கலாய்த் தலை யொழிந்து நட்டார் போல அறிவொற்றுமை யுற்றுக் கலந்து பிரமாணவரை நின்று, தங்கள் சமய தாரதம்மிய விசாரஞ் செய்தலே விவேகமாம். இவ்வாறு செய்தலை யொழிந்து ஒருவரோடு மற்றொருவர் சமயாபிமானப் பகைமேற்கொண்டு தெய்வ நிந்தை பெரியோர் நிந்தை சாஸ்திரநிந்தை பெரிதுஞ் செய்து பிளவுபட்டு வலியழிந்து அவைதிக அநாரிய சமயப் பகைவர்கள் தம்முட் புகுந்து தம்முரிமைப் பெருநிதிகளை வெளவிக்கேடுகள் உண்டாக்குதற்கேதுவாகும் உட்சமயகலாம் விளைத்தல் விவேகமன்று. ஒரு குடிப்பிறந்த மேன்மக்கள் தம்முள்ளே நேர்ந்த ஒரு விவகாரங் காரணமாக வாதிபிரதிவாதி யென இரு பகுதிப்பட்டு நியாய வாதந்தொடுப்பரேனும், விவகாரம் தமக்கு அநுகூலமாதற்கு ஏதுவாகும் மரியாதையுடைய நியாய கதியினையே தமக்குப்பற்றாக நாடிக்கொள்வர். அது வன்றி, விவகாரப் பிரதிகூலமும் உரிமை நஷ்டமுமுண்டாதலோடு பகைவர்கள் உட்புகுந்து தம்மை அடிமை கோடற்குக் காரண மாகும் மரியாதையில்லாத அநியாய வாதத்தினைத் தமக்குப் பற்றாகக் கொள்ள மாட்டார்.

இனி, வைதிக சமய பரிபாலன விரதம் வைதிக நாற் பெருஞ்சமயத்தாரெல்லாரும் பொதுவாக அனுஷ்டிக்கற் பால தொரு பரம தருமமேயாம், ஆயினும் வைதிகசாஸ்திரங்களில் வல்ல ராய் வைதிகசமய நாயகத்தன்மை பூண்டு வாழும் வைதிகாச் சாரியர்களும் வித்துவான்களும் இந்த வைதிக சமய பரிபாலன விரதத்தினை மற்றையோரினுந் தமக்குப் பெருங் கடப்பாடாகவும் சிறப்பாகவும் கொண்டு அநுஷ்டித்தல் முறையாம். வைதிக சமயபரி பாலனத்தினை இவ்வாறு கொண்டு அநுஷ்டிக்கும் வைதிகாச்சாரி யர்களும் வித்துவான்களுமே வைதிக மகாஜனங்களால் கருணை வள்ளல்களென்று போற்றி வழி படத்தக்கவராவர்.

சமயவியற்கை பலவும் தெளிவாகத் தொகுத்து எடுத்து இங்ஙனம் உரைத்தோம். சமயங்களின் சிறப்பியல்களை இதன் கண் விதத்தெடுத் துரைத்திலேம். அவைகளை விரிந்த சைவ சித்தாந்த நூல் உரைகள் பற்றித் தெரிந்து கொள்க.

சமயம் முற்றிற்று

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சதுர்வேத தாற்பரிய சங்கிரகம்**

சுருதி சூக்தி மாலை என்னும் வடமொழி நூல் ஸ்ரீஹரதத்த சிவாச்சாரிய சுவாமிகளால் அருளிச் செய்யப்பட்டது. வடகோவை சபாபதி நாவலரவர்கள் அதனைத் தமிழ் வடிவிற் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சுருதிசூக்திமாலையாகிய

# சதுர்வேத தாற்பரிய சங்கிரகம்

## நற்சிறப்புப்பாயிரம்

மதியணி சடைமுடி வானவன் அளித்த
கதிதரு களிற்றின் கண்ணருள் உறீஇச்
சற்குரு நாதன் பொற்கழல் வணங்கி
வரம்பெறு கலையெலாம் ஒருங்குமுழு துணர்ந்த
விரதத் தாரடி புனைந்த மேலோன்
அரதத் தாசா ரியசூ ளாமணி
சிவனே பரனெனத் தேறிய யாவரும்
வடமொழி யதனில் திடமுற அருளிய

முதிர்போதங் காட்டு முதனூலான
சதுர்வேத தாற்பரிய சங்கிர கத்தினை
அம்முறை மொழிபெயர்த் தரும்பொருள் தோன்றச்
செம்மைசேர் கடாவிடை சேர்கத் தியமாத்
திருந்த நுனித்தெணிச் செய்குவன்
அருந்தமிழ் நாவலோர் அறிதரற் பொருட்டே.

## சிவவணக்கம்

1. எவன் வணக்கத் தினுக்குரியன்
எவன்குணங்க ளான் நிறைந்தோன்
எவன்வழிபா டியம்புநா
ராயணமென் னுபநிடதம்
எவனமுயிர்ப் பிரேரகன்மற்(று)
எவன்வேள்விக் கெலாம் இறைவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனாகும் ஈசவுனைக்
கதியிலியான் சரணடைந்தேன்.

2. வேதத்தும் மற்றதனுக் கவிரோத
தந்திரத்தும் விமல வுன்னைப்
போதிக்கும் வாக்கியங்க ளெவற்றினையும்
அறிந்தவற்றாற் போந்த மூட
வாதத்துக் கிடமாகாத் தாற்பரியத்
தினைச்சுருக்கி வகுப்பானுற்ற
பேதைக்குட் பேதையாம் எனக்கருளி
மெய்ந்நெறியிற் பிரேரி எந்தாய்.

## நூல்

வேதமாவது, மந்திரம் அருத்தவாதம் விதிவாக்கியம் என மூவகைப்பட்டுப் பிற வாக்கியங்களைப்பற்றாது, தானே பிரமாண மாகி, விமற்சரர்க்கன்றிப் பிறர்க்கு அறியப்படாத மெய்ப் பொருளினை உடைத்தாய், ஈசுரனையே அறிவிப்பதாம். இனி, ஈசுர சத்தம் யோகத்தால் பிற கடவுளரையும் உணர்த்துமேனும் யோக ரூடியினால் சிவபிரானையே உணர்த்தலின், அஃது அவர்க்கே உரிய பெயராம். யோகத்தினும் ரூடி வலியுடைத்து என்பது மீமாஞ்சை வழக்கு என அறிக.

இதுபற்றியன்றே நிகண்டு. நூலுடையார் சிவாதி, நாமங் கள் போல இதனைச் சிவநாமமாகக் கொண்டு , ஓதுவாராயிற்று என்க. அற்றேல், மகேச்சுரன் பரமேசுரன் என ஒரோவழிப் பிறிதினியைபுநீக்கி விசேடிப்பது எற்றிற்கு எனின், மகத் பரம என்னும் விசேடணங்கள் செஞ்ஞாயிறு என்றாற்போலச் சிவபிரானது இயற்கையாகிய உயர்பினையே குறித்து, இயை பின்மை நீக்குதன் மாத்திரையின் விசேடிக்க வந்தன. அன்று என்க. அற்றேல், அங்ஙனம் விசேடித்துப் பயப்பதின்றெனின், அற்றன்று. பொருளின் கண் உயர்பு இயற்கையாக உள்ளதேனும், விசேடண பதத்தான் விளங்கும் என்பது சத்தநூலார் மதமாகலின், மகத் பரம என்பனவற்றால் ஈசுர சத்தத்தினது இயற்கையான உயர்பு விளங்கலின் பயன் உண்டு என்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிக் காணப்படும் இந்தப் பிரபஞ்சம் ஓர் ஈசுரனாலன்றி நிலையுதலுடைத்து அன்று. அவ்வீசுரனும் ஏகனாதலன்றி அநேகனாதலும் பொருத்தம் இன்று. ஈசுர சத்த வாச்சியத்துவம் சிவபிராற்கன்றி ஏனைத் தேவர்க்கு இன்மையின், லோக வேதாதி கரண நியாயத்தினாலே பிரபஞ்சம் அவரானே நிலையுதலுடைத்து என்றலே பொருத்தமுடைத்து என்க. சாங்கியரில் ஒரு சாராரும் அவரை அனுவதிக்கும் பிறரும் பிரபஞ்சம் ஈசுரனை உடைத்து என்றும், யோக நூலாரும் அவரை அநுவதிக்கும்பிறரும் அஃது ஈசுரனையுடைத்து என்றும் கூறுப. இஃது என்சொல்லியவாறோ எனின், பன்மதத்தரும் முதல்வன் உண்மை இன்மைகளை ஈசுர சத்தங்கொண்டே விவகரிப்ப என அதன் வழக்குமிகுதி உலகின் கண் காட்டி ஏதுவை விளக்குமுகத்தான், உலகிற்கு முதலாந்தன்மை சிவபிராற்கே பொருந்தும் என்ற மேற்கோளை வலியுறுத்தவாறு என்க.

இவ்வாற்றால் தலைமையான அபரிச்சின்ன ஐசுவரியம் உண்மை சிவபிரானுக்கே சித்தித்தலின், வணங்கப்படும் தன்மை அவருக்கே உரித்தாம் என்க. இதுபற்றியன்றே வேதங்கள் சிவபிரானுக்கே பெரும்பான்மையாக வணக்கவாக்கியங்கள் கூறியதூஉம் என்க. அது சிவபிரானைக் குறித்துப் பசு நியோசனம் கூறிய "யாவனுக்கு வணக்கம் உரித்தாமோ அவன் பொருட்டு உன்னை நியோசிப்பேன்" என்னும் சுருதியானும், சிவபிரானைத் திப்பியமாகிய சிஞ்சுமாரத்தின் சிரசு என்று கூறிய "எது வணங்கற்பாற்று அது சிரசாம்" என்னும் சுருதியானும் அறிக. அஃதேல் சிவபிரான ஒழித்து ஒழிந்த ஏனைத் தேவருக்கும் வேதத்தில் ஆண்டாண்டு வணக்கங்கூறியது என்னையெனின், ஆற்றுநீர் கடலை. அடையுமாறுபோல ஏனைத்தேவர்மாட்டுக் கூறப்பட்ட வணக்கங்கள் சிவபிரானையே சென்றடைதலின், அங்ஙனம் கூறப்பட்டது என்க. இவ்விரண்டு சுருதியானும் சிவபிரானே வணக்கத்துக்கு உரியர் என்பது மந்தபுத்தியுடையார்க்கும் இனிது விளங்கும்.

அற்றேல், ஆண்டுப் பசு நியோசனம் சிவபிராற்கு உரியதென எடுத்தோதாமையானும், "எது வணங்கற் பாற்று அது சிரசாம்" எனப் பொதுவாற்றாற் கூறியொழிதலானும், இவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரண்டு சுருதிகளானும் கூறப்பட்ட வணக்கங்கள் சிவ பிரானுடையன என்றால், அமையாதாம் பிறவெனின், அற்றன்று. ஆண்டுக் கூறப்பட்ட சூலகவம் என்னும் கிரியை சிவபிரானுக்கே உரியதென மந்திரங்களெல்லாம் முறையிடுதலானும், ஏனைத் தேவரெல்லாம் சிஞ்சுமாரத்தின் அவயவங்களாகக் கற்பித்து ஒழிக்கப்பட்டமையின் எஞ்சி நின்ற சிவபிரானே ஆண்டுச் சிரசாக வேண்டப்படுவர் என்பது பாரிசேட அளவைபற்றித் துணியப் படுதலானும் அஃது அமைவுடைத்து என்க. இதுபற்றியன்றே பரதநூலார் இந்திரன் பிரமன் விண்டு என்னும் தேவருக்கு முறையே வச்சிரம், கமலம், சங்கம் என்னும் முத்திரைகளானும், சிவபிரானுக்குச் சிரசில் அஞ்சலி முத்திரையானும் அவிநயம் கூறியதூம் என்க.

இனிப் பிரமன்முதலிய தேவர் தம்மைக்குறித்துச் செய்யப் படும் வணக்கங்களைத் தமக்கென ஏற்று கொள்ளக் கருதார்; என்னை? சோரனால் வெளவிக் கொணரப்படினும் முடியணி அரசர்க்கே உரியதாகலின், அதனை எவனும் என்றுகொள்ளக் கருதான்; கருதுமாயின் அப்பெற்றியான் அரசனால் ஒறுக்கப் படுதல் ஒருதலையாதல்போல அவரும் சிவபிரானால் ஒறுக்கப் படுதல் ஒருதலை ஆகலின் அற்றேல், அவர் என்று கொள்ளுமாறு தான் என்னை எனின், அவ்வணக்கத்தைச் சிவார்ப்பணம் செய்தலே ஏன்றுகொள்ளுமாறு என்க.

அற்றேல் சிவபிரானுக்கு நேராக வணக்கம் கூறல் அமையும், அவர்மாட்டுக் கூறல் வேண்டா எனின், அஃது ஒக்கு மன்னாயினும், உடம்பை உயிர் அதிட்டித்து நிற்றல்போல எல்லாப்பொருளையும் சிவபிரான் அதிட்டித்துநிற்றலின், அவ்வியைபுபற்றி அதிட்டிக்கப்படும் பொருள்கண்மாட்டும் அவர் வணக்கம் கூறப்பட்டது என்பது. இக்கருத்துப்பற்றியன்றே திருவுருத்திரத்தில் செடிகளுக்கும் ஞமலிகளுக்கும் ஞமலிகளின் பதிகளுக்கும் வணக்கம் கூறியதூஉம், உலகத்தில் சிவபத்திக் கிழமைபற்றி நரராகிய சிவனடியார் வணங்கப்படுவதூஉம் என்க. இவ்வாற்றால் சிவபிரானைக் குறித்துச் செய்யப்படும் வணக்கம் ஈசுரத்தன்மை குறிப்பதூஉம், அதனியைபு குறிப்பது உம் என இருவகைத்து என்பதூஉம், அவற்றுள் முன்னையது நேராகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னையது அதிட்டிக்கப்படும் பொருள்வாயிலாகவும் சிவ பிரானை அடைப என்பது உம் போந்தவாறு உணர்க.

இனிப் பின்னையதைச் சிரேட்டம் பற்றியது என் பாரும் உளர். சிரேட்டமில்லாதனவற்றின்கண் அதி வியாத்தி வருதலின், அஃது அதற்கு இலக்கணமாதல் யாங்ஙனம் என மறுக்க. அல்லதூஉம் பசுக்களாகிய தேவருக்குப் பதியாகுந்தன்மைபற்றிச் சிவபிரானுக்குச் சிரேட்டப் பெயர் வழக்குச் சாமவேதத்தில் கிருச்சிர மந்திரத்துள் பொதுவாகவும், வேதத்துள் யாண்டும் சிறப்பாகவும் கூறப்படுதலின், அதுவும் அவர்க்கே அன்றி ஏனைய தேவர்க்குச் செல்லாமை அறிக.

சிவபிரானை ஏனைத் தேவரோடு ஒப்ப வைத்து வணங்கலும், வாழ்த்தலும், வேள்விக்கண் விளித்தலும் நன்றாகா என்க. புத்திரகாமேட்டிக்கண் அவிசமைப்பில் சோமதேவதை யோடு உருத்திரன் ஒருங்கு விளிக்கப்பட்டமை வேதத்தில் கேட்கப்படுதலின் அது பொருந்தாது எனின், அறியாது கடாயி னாய். ஆண்டுச் சோம தேவதையோடு விளிக்கப்பட்ட உருத்திரன் சிவபிரான் அல்லர்; அக்கினியே. அது ஆண்டைப் "ப்ரா தரக் நிம்" என்னும் சூக்தத்திற்றானே சிவபிரானுக்கு விளிவேறாகக் காணப் படுதலினால் இனிது விளங்குதலின் என்க. அச்சூக்தத்தில் சிவ பிரானுக்கு விளி வேருகக் காணப்படுதல் எற்றாற் பெறுதும் எனின், அம்மந்திர சம்பந்தத் தகுதியுடைத்தாய் நிகழ்த்தாநின்ற கிரியா பதத்தை ஒழித்துச் சிவபிரானது விளிக்கண் வேறு கிரியா பதம் பிரயோகித்தமையால் பெறுதும் என்பது. இவ்வாசங்கை ஒழித்தற்கு அன்றே ஏனைத் தேவரை விளித்த மந்திரங்கட்கும் சிவபிரானை விளித்த மந்திரங் கட்கும் இடையே "உத" என்னும் பதம் தலைப்பெய்ததூ உம் என உணர்க.

அற்றேல் அஃது அங்ஙனமாக; உருத்திர பதம் அக்கினியை உணர்த்தற்குப் பிரமாணம் என்னை யெனின், கூறுதும். முன் ஓர் காலத்தில் தேவர்கட்கும் அசுரர்கட்கும் பூசல் நிகழ்ந்தது. அப்போது தேவர் தம்தனத்தைப் பாதுகாக்க அக்கினிமாட்டு வைத்தனர். வைக்கப்பட்ட அத்தனத்தை அக்கினி அபகரித்துக் கொண்டனன். அதுபற்றி அவர் அவனை வலிசெய்யலுற்றுழி அவன் ரோதனம் செய்தனன். அதனான் அக்கினிக்கு உருத்திரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் வழக்கு உண்டாயிற்று என்று அறிக.

அஃதேல், மருத்துக்களுக்கும் சிவகணங்கட்கும் உருத்திரப் பெயர் வழங்குமாறு என்னையெனின், உருத்திரனினின்றும் தோன்றின்மையின் அவர்க்கும் அப்பெயர் வழக்குண்டாயிற்று என்க. சிவபிரானுக்கோ எனின், உயிர்களுக்கு ஸ்ம்ஸார ரோகத்தை ஒழித்தற் காரணத்தால் அப்பெயர் உடைமையாயிற்று என்க. யசுர்வேதத்தில் ஆருணம் என்னும் சாகையில் யாகத்திற்கும் உருத்திரப்பெயர் கேட்கப்படுமெனின், ஒரு பொருட்பெயர் அதனோடு இயைபு உடைய பிறிது பொருட்கும் ஆகுநெறி உண்மையின் உருத்திரனோடு இயைபுடைத்தாய யாகத்திற்கு அஃது ஆகுபெயராயிற்று என்க. தாபத்தை உயிர்க்கு விளைத்து அவை இரங்கச்செய்தலின், சுரத்திற்கும் அப்பெயர் வழக்கு உண்டு. ரௌத்திரமோ எனின் அஃதும் அதனைப்பகுதியாக வுடைய தத்திதம் என்க. அல்லதூஉம் வாயசம்,! பாகவதன், சாத்துவதன் என்றற்றொடக்கத்தனபோல் ை தத்திதபதப் பிரதிரூபம் எனினும் அமையும்.

ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்னும் ஆறும் பகம் எனப்படுதலின் இவை சிவபிரானுக்கே உண்மையின், அவரே பகவன் எனப்படுவர். அற்றேல், இவை ஆறும் சிவபிரானுக்கு உள்ளன என்பதற்குப் பிரமாணம் என்னை எனின்; அவர்க்கு ஐசுவரியம் உண்மைக்கு ஈசுரபதச் சுருதியும், வீரியம் உண்மைக்கு உக்கிரபதச் சுருதியும், புகழுண்மைக்குச் சிவபதச் சுருதியும், திருவுண்மைக்கு இருக்கு வேதமும், ஞான முண்மைக்குச் சர்வஞ்ஞ சுருதியும், வைராக்கியம் உண்மைக்குக் காமரிபு பதச் சுருதியும் பிரமாணமாம் என்க. "திருவினால் சிரேட்டர்" என்றும், "திருவை எய்தும்பொருட்டுச் சிவபிரானது விசித்திர ரூபமாகிய லிங்கதேவரால் பூசிக்கப்பட்டது" என்றும் இருக்குவேதம் கூறலின், ஈண்டுத் திரு எனப்பட்டது பொருட்டிரு அன்று என்க. வாய்மை, பொறை, தைரியம், அதிட்டித்தல், ஆன்ம போதம், சிருட்டித்தல், ஆசையின்மை, தவம், புத்தி, ஈசுரத்துவம் என்னும் தசகுணங்களும், தருமமும் சிவபிரானுக்கே இயைவன. இனி ஐசுவரியமுடையார், பெரும் புகழுடையார், வீரர், செல்வர், அரசர், சக்கரவர்த்திகள் என்னும் இவரையும் இன்னோரன்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்புடைய பிறரையும் பகவப் பெயரான் வழங்கார். மெய்யுணர்ந்து அவா அறுத்தார் கண் சிவம் பிரகாசித்தல் உண்மை யின், அவரைப் பகவப்பெயரான் வழங்குப,

அற்றேல் அஃதாக பகவப்பெயர் சிவபிரானுக்கு உரியது என்பதற்கு எடுத்தோத்து உண்டோ எனின்; அதர்வண வேத முடையார் சிவநாமங்களுள் பகவன் நாமம் கூறுதலானும், சுவேதாச்சுவதர உபநிடதம் சிவபிரானையே "பகேசன்" எனக் கூறுதலானும் எடுத்தோத்து உண்டு என்க. நிகண்டு நூலுடையார், பூசிக்கப்படும் குணமுடையானையே பகவன் என்ப.

இனி, மனாதித்திரயத்தானும் செய்யப்படும் பூசை சிவபிரானுடையதே, திரு உருத்திரத்தோடு ஓதப்படும். "அவனைத் துதி" என்னும் மந்திரத்தான் விதிக்கப்பட்டமையின். அன்றியும், உபநிடதங்கள் எல்லாம் சிவோபாசனை செயற்பாற்று என முறையிடுகின்றன.

அவற்றுள், நாராயணோபநிடதம் பற்றிச் சிவோ பாசனையை ஆராய்குதும். நாராயணோபநிடதத்தில் கூறிய உபாசனை சிவோபாசனை என்பதூஉம் அதன்கட் கூறிய உபாசிக்கப்படும் பொருளினது உருவம் சிவரூபம் என்பதூஉம் மீமாஞ்சகர் கூறும் உபக்கிரமோபசங்கார நியாயம்பற்றித் துணியப்படும். அதன்கண் உபாசனையைக் கூறிய தொடங்கிய உபக்கிரமத்தின் கண் உள்ள வாக்கியம் சிவரூபம் கூறி முடிந்த உபசங்கார வாக்கியத்தோடு இயைந்து ஒருபொருள்படுதலின். இங்ஙனம் துணியப்படவே, ஆண்டு நாராயணனுக்கு உபாசிக்கப் படும் தன்மையும் ஒராற்றானும் பொருந்தாமையின் அவன் அவ்விரண்டுமல்லன் என்பது உம், பாரிசேடத்தால் உபாசகன் என்பது உம் போதரும். அல்லதூஉம் ஆண்டு "நாராயணனுடைய இருதயாக்கினியின் சிகா மத்தியில் பரமான்மா உளன்" என்ற வாக்கியமே வேறு பிரமாணம் வேண்டாது, அவன் உபாசகன் என்பதை வலியுறுத்தும். அது வலியுறுத்துமாறு என்னையெனின் "நாராயணனுடைய இருதயத்தில் பரமான்மா உளன்" என்று கூறினமையின், அவனைப் பரமான்மா என்றல் பொருந்தாமை யின் என்க. நாராயணன் தனது இருத யாக்கினிக்கண் இருந்து கொண்டு தானே தன்னை உபாசிப்பன் எனின், அக்கூற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவர்க்கும் நகைவிளைக்கும் என்று ஒழிக.

அற்றேல் அஃதாக; நாராயணன்மேல் வைத்து உபாசனையை வருணித்தவாறு என்னையெனின்; நாராயணனுடைய இருதயமும், அதன் கண் தகரமும், அதன் கண் பெரிய அக்கினியும், அதன் சிகாமத்தியில் பரமான்மாவும் உண்டு என்று அங்ஙனம் அருத்த வாதம்படக் கூறும்முகத்தானே ஆசரிப்பவருக்குச் சிரத்தை போதர, விசிட்டபுருடன்மேல்வைத்து உபசனையை விதித்தவாறு என்க.

அற்றேல், ஆண்டு இருதயம் வேறோதப்பட்டதனால் அது நாராயணனுடையது என்றல் பொருந்தாதாம் பிற எனின்; அற்றன்று. நாராயணப் பிரகரணத்தில் கூறப்பட்ட இருதயம் பிறரைச்சார்தற்கு இயைபு இன்மையின் அஃது அவனுடையது என்றல் பொருந்தும் என்க.

அற்றேல் அஃது அங்ஙனமாக; பதிப்பிரகரணத்தில் பூர்வ அநுவாகத்தான் விதிக்கப்பட்ட உபாசனை யாவர்கண்ணது எனின், ஆண்டை இயைபுபற்றி. ஆராய்வார்க்கு அதுவும் சிவபிரான் கண்ணது என்பது தெற்றெனப் புலப்படும் என்க. அஃதேல் ஆண்டு நாராயணனைப் "பரப்பிரமம்" என்றும், "பரஞ்சோதி" என்றும், "பரதத்துவம்" என்றும் கூறுதல் மலைவாம் பிறஎனின்; அற்றன்று. மாந்திரிகன் கருடபாவனையால் கருடனோடு அத்துவிதமாய் நின்றவழி அந்தக் கருடன் என்றே கருதப்படுதல்போல, நாராயணன் சிவபாவனையால் சிவபிரானோடு அத்துவிதமாய் நின்றவழி, அங்ஙனம் உபசரிக்கப்பட்டான் ஆகலின், மலைவு யாண்டையது என்க. இவ்வொற்றுமை பற்றியன்றே அருச்சுனற்குக் கீதைநூல் செவியறிவுறுத்த கண்ணன் "யானே உலகெல்லாம் ஆயினேன்" என்றதூஉம், சிவபிரானது விசுவரூபத்தைத் தான் காட்டியதூஉம், "ஏனையவற்றைக் கைவிட்டு என்னையே வழிபடுக என்றதூஉம், அதனை உறுதியாகக் கொண்ட அருச்சுனன் அவன் கூறிய கருத்துநோக்கிச் சாங்காறும் சிவ பூசை செய்ததூஉம், கண்ணன்மேலிட்ட போதுகள் சிவபிரான் திருமுடிமேல் கண்டதூஉம் என்க.

அற்றேல், ஆண்டுப் பரமான்மாவின் விபூதியில் வைத்துப் பிரமன் முதலிய தேவரோடு சிவபிரான் படிக்கப்படுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைவாம் பிற எனின்; அற்றன்று. ஆண்டுப் பரமான்மாவின் விபூதியில் வைத்துப் பிரமன் முதலிய தேவரோடு படிக்கப் பட்டமையின் சிவசத்தத்தால் உணர்த்தப்படுபவன் சங்காரத் தொழிலைச்செய்யும் அரன் என்பது தெள்ளிதின் பெறப்படு தலினானும், ஆண்டுப் பரமான் மா எனப்பட்டவர் அயன் அரி அரன் என்னும் திரிமூர்த்திகளையும் நியமிக்கும் துரிய மூர்த்தி யாகிய சிவபிரான் ஆகலானும், சிருட்டித் தொழில் திதித் தொழில்களைச் செய்யும் அயன் அரி போல் சங்காரத்தொழிலைச் செய்யும் அரனும் அவரது விபூதியே ஆகலானும் மலைவு யாண்டையது என்பது.

அற்றேல், ஆண்டுப் பரமான்மாவின் விபூதியில் நாரா யணனைப் படியாதது என்ன எனின்; கைவல்லியோபநிடதத்தில் கூறிய தகரவித்தையில் அவனும் விபூதியில் படிக்கப்பட்டான் ஆகலின் இவ்வுபநிடதத்தில் படியாது உய்த்துணரவைத்தது என்பது.

சிவபிரான் விச்சுவாதிகர்; நாராயணன் விசுவம். அவர் யாகத்துக்கு அதிபர்; அவன் யாகம். அவர் மூலப்பிரகிருதிக்கு நிமித்தகாரணர்; அவன் மூலப்பிர கிருதி. இங்ஙனமாகலின், இருவர்க்கும் வேற்றுமை பெரிது என்க.

அற்றேல், நாராயணனை விசுவபதி என்றது என்னை எனின் அது துதிவாதம் என்க. வேதத்தின் ஒரோவழிச் சிவபிரானை "விசுவம்" என்றது, அவர் அதனை அதிட்டித்திருத்தல்பற்றி ஆகலின், அஃது உபசாரமாத்திரையே என்க, இவ்வுண்மை வேத ரகசியத்தை உணர்ந்த பண்டிதர்க்கே விளங்கும். அது முற்றுணர்வு எய்திய சூாத்தியாயனமுனிவர் கிருகிய சூத்திரத்தில் எல்லாப் பொருளும் சிவபிரானால் அதிட்டிக்கப்படுதல்பற்றி எல்லாக் கிரியையினும் அவர்க்கு வணக்கம் கூறியதனானும், அதனை வலியுறுத்தற் பொருட்டு "எல்லாப் பொருளும் உருத்திரன்" என்னும் அனுவாகத்தை உதாகரித்தமையானும் விளங்கும். சிவ பிரானை "விசுவம்" என்றதை உபசாரம் என்று அறியமாட்டாது உண்மை என்று மயங்குவாருமுளர்.

இங்ஙனம் உபாசனையும் உபாசகனும் உபாசிக்கப்படும் பொருளாகிய விரூபாக்கரும் அவருடைய நானா வித விபூதியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாராயணோபநிடதத்தில் போந்தவாறு காண்க.

அற்றேல் அஃதாக; சிவபிரானைப் பிரதிபாதிக்கும் இது நாராயணோபநிடதம் என்று ஆயவாறு என்ன எனின்; புருடசூக்தம் நாராயணனை இருடியாக உடைத்தாயவாறுபோல, சிவ பிரானைப் பிரதிபாதிக்கும் இது எச்சரூபனாகிய நாராயண இருடியினான் உப தேசிக்கப்பட்டமையின், நாராயணோப நிடதம் என்று ஆயது என்க.

இவ்வுபநிடதம் "சிவபிரானிடத்தினின்றும் இரணிய கருப்பன் தேவர் யாவர்க்கும் முதற்கண் தோன்றினன்" என்று கூறுகின்றது. இங்ஙனமாகவும் "நாராயணனிடத்தினின்றும் இரணியகருப்பன் தோன்றினன்" என்றும், "அவனிடத்தினின்றும் சிவபிரான் தோன்றினர்" என்றும் அறிவில்லார் பிதற்றுப. சிவ யோகிகளுடைய இருதயம் முதலிய ஐந்திடத்தினும் சிவ பிரானுக்குத் தோற்றரவு உண்மையின், இரணியகருப்பனுடைய இலாடமத்தியில் சிவபிரான் தோன்றியருளினர் என்னும் வழக்கால் போதரும் இழுக்கு என்னோ என்பது.

திருவுருத்திரத்துள் திருவைந்தெழுத்து இருத்தல் போலச் சிவமந்திரங்கட்கு உயிராய்ச் சிவபிரானுக்கு மந்திரத்திருமேனியா யுள்ள பஞ்சப்பிரமம் இதனகத்து உண்மையின், இது மகோப நிடதம் எனவும் பெயர் பெறும் என்க.

இனிப் பஞ்சப்பிரம மந்திரத்துள் ஒன்றாகிய ஈசான மந்திரம் சிவபிரான் "வித்தை எல்லாவற்றிற்கும் ஈசர்" என்றும், "பூதங்களெல்லாவற்றிற்கும் பதி" என்றும், "பிரமாவுக்கு அதிபதி" என்றும், "பிராமணருக்கு அதிபர்" என்றும் கூறுகின்றது. இதன்கண் "பிரமாதி பதி" என்றதற்கு வேதத்திற்கு அதிபதி என்று உரைப் பாரும் உளர். மேல் "வித்தை எல்லாவற்றிற்கும் ஈசர்" என்றதனால்தானே வேதமும் அதன் வழித் தோன்றிய பிற வித்தைகளும் அடங்குதலின் அது போலி உரை என மறுக்க.

இருக்கு முதலிய வேதத்திரய நிதிக்குக் கோசமாகிய மண்டலத்திலிருக்கும் ஆதித்தனை அதிட்டித்திருக்கும் புருட ராகிய சிவபிரானை ஆதித்தியோபநிடதம் "இவனே பூதாதிபதி" என்று சுட்டிக் கூறாநின்றது. "இவனே பூதாதிபதி" என்றன் மாத்திரையானே ஆதித்தியாந்தரியாமி சிவபிரான் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணியப்படாதாம் பிற எனின்; அற்றன்று, "இரணியமயன்" என்றும், "இரணியவாகு" என்றும், "அம்பிகாபதி" என்றும், "உமா பதி" என்றும் அவ்வுபநிடதம் கூறுதலின் ஆதித்தியாந் தரியாமி சிவபிரானே என்பது தெற்றெனத் துணியப்படும் என்க. மண்டலமும், அதில் ஆதித்தனும், அவற்கு அதிட்டாதாவாகிய சிவபிரானும், அவர் விபூதியும், அவற்றினை உணர்ந்தார் எய்தும் பயனும்: என்னும் இவை ஆதித்தியோபநிடதத்தால் போதரும் பொருள்களாம். இதனை உணர்ந்தார் காயத்திரியையும் உணர்ந் தாரே ஆவர்.

இனிக் காயத்திரிக்கு உரிய பொருள் சிவபிரானே எனத் துணிதற்கு ஆதித்தியோபநிடதமே அமையும் சான்றாம். காயத்திரி மந்திரப்பொருள் சிவபிரானே; சவிதா அன்று. என்னை? அதனகத்துள்ள பர்க்க சத்தம் சிவபிரானுக்கே இடுகுறி ஆகலானும், அவரே அறிவைப் பிரேரிப்பவர் ஆகலானும் என்பது. அப்பர்க்க சத்தம் அகாராந்தமன்று, ஸகாராந்தம் எனின்; அதனகத்துள்ள யத்சத்தமும் முறையே புல்லிங்கமும் நபுஞ்சக லிங்கமும் ஆகலின் தம்முள் அந்வயமுறா. ஆகவே, அந்வயமாதற்கு உரிய அபின்ன லிங்கத்தை அவாய்நிற்கும். அதனால் ஸகாராந்தம் என்றல் பொருந்தாது என மறுக்க. வியாகரண நூலார் அகன் பிரத்தியயமாக கஞ்நுப்பிரத்தியயமாக ஈற்றில்வந்த பதங்களுக்கு ஆதியில் உதாத்தசுரம் வரும் என்றலின் மைத்திராயணச் சுருதியில் அகாராந்தமாகக் காணப்படுதலின் திரிந்த காரகமாகிய கஞந்தமே என்க. இந்த மைத்திராயணச் சுருதி "பர்க்கர் தியானிக்கற்பாலர்" என்றும், "பர்க்கப்பெயருடையான் உருத்திரன்" என்றும் கூறுமுகத் தானே அது ஸகாராந்தம் என்றலை நிராகரித்தது. காயத்திரியின் முதற்பாதத்தைக் கடா விடைகளால் கூறி, "இரண்டாம் பாதம் பர்க்கமயம்" என்ற தலவகாரப்பிராமணமும் ஸகாராந்தம் என்றற்கு இயையாது.

அற்றேல் "எந்தப் பர்க்கன் எமது புத்தியைப் பிரேரிக் கின்றான் அதனைத் தியானிக்கிறோம்" என்று லிங்க பேதம்போதர அந்வயித்தல் நுமக்கும் சரலாது எனின்; காயத்திரிக்குரிய பொருளாகிய சிவபிரானது பெயராகிய பர்க்கசத்தம் அவரின் வேறாகாத ஒளிக்கும் உண்மையின், "அதனைத் தியானிக்கிறோம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது அந்தப் பர்க்கனோடு இயைபுடைத்தாய ஒளியைத் தியானிக்கிறோம் என்று பொருள்படுதலின், எமக்கு அது சாலாமையாண்டையது என்க. இது சாம்பமிருதி நூற்றுணிபு என்க. "அதுவே அக்கரம்" என்றும், "அது சவிதாவினான் வரிக்கப் படும் பொருள்" என்றும், "அதனினின்றும் அறிவு அங்குரித்தது" என்றும் சுவே தாச்சுவதரோபநிடதம் கூறுதலினானும் காயத்திரிக்கு உரிய பொருள் சிவபெருமானே என்பது தெற்றென உணர்க. இக்காயத்திரி மந்திரம் பர்க்கராகிய சிவ பிரானையே உணர்த்துவதாயினும், "சவிதா" என்னும் சத்தமாத்திரைபற்றி ஆதித்தன் மேலும் செல்லும். பிறாண்டும் ஒரு கடவுளை உணர்த்தும் மந்திரம் சத்த ஒப்புமையால் பிற கடவுள்மேலும் செல்லும் என முனிவர் கூறுப. அது அருக்கனைத் தெய்வமாக வுடைய இருக்கு "விசுவதேவ" சத்த ஒப்புமையால் பிதிரர்மேலும், "புஷ்ய" சத்தஒப்புமையால் பூடணதேவர்மேலும் செல்லு மாற்றான் உணர்க. பிறவும் அன்ன.

இனி இவ்வாறன்றிக் கிரக பூசாவிதியில் "சம்" என்று தொடங்கிய மந்திரத்தால் சனி பூசையும் "உத் புத்தியசுவ" என்றதனால் புத பூசையும் கூறுதலும் காண்க. "இருக்கு யசுர் சாமம் என்னும் வேதமூன்றனையும் நன்கு உணர்ந்த பிரமன் அவற்றின் சாரமாகிய மூன்று பாதத்தை உடைத்தாய இக்காயத்திரியைக் கண்டான்" என்று மநுவால் கூறப்பட்டது.

அரசர்க்குரிய இறைப்பொருளை அவன் வினை செய்வார் குடிகளிடத்தில் கொண்டு அவன் மாட்டுச் செலுத்தல் போலச் சிவபிரானுக்குரிய அவிசை அக்கினியாகத்திற்கொண்டு அவர் மாட்டு அடைவிப்பன் என்பது, அர்ச்சுனன் கண்ணன் மாட்டுச் சமர்ப்பித்த ஈச சம்பந்தமான திரவியங்கள் சிவபிரான்மாட்டுச் சென்றடைந்தமையால் இனிது உணரப்படும். "யாகங்களிற் செய்யப்படும் சோமவிளியும் பசுநியோசனமும் சிவபிரான் பொருட்டுச் செயற்பால" என்றும், "பால் தயிர் முதலிய அவிசும் அவருடையன" என்றும் வேதம் கூறும். சோமமும் பசுவும் கவ்வியமும் சிவ பிரானுடையவாதல்பற்றியன்றே பசுவின் அவிசில் தத்தமக்குரிய கூற்றை அவராணையால் தேவர் பெறுவாராயிற்று என்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுவின் அவிசு ஒழிந்தவற்றிற்குச் சிவபிரானது ஆணை பெறப்பட்டதின்றால் எனின்; தலைமைப்பொருளாகிய பசுவின் அவிசுக்கு அது பெறப்படவே உபலக்கணத்தால் பசுவின் அவிசொழிந்தவற்றிற்கும் அது தானே போதரும் என்க. பசு பந்தனக் கிரியைமாத்திரையே சிவபிரானது ஆணையால் செயற்பாற்று என்பதும் பொருந்தாது, "எல்லாக் கிரியையும் சிவபிரானது ஆணையால் செயற்பால" எனச் சாமவேதமுடையார் கூறுதலின். "அக்கினியில் செயப்படும் சோமாகுதியும் சிவ பிரானுக்கே உரியது" என யசுர்வேதமுடையார் கூறுப. "யாகங் களில் எஞ்சிநின்ற பொருள்களும் யாக பதியாகிய சிவபிரானுடை யனவே" என்று யசுர்வேதம் கூறும் "கவ்வியத்தானும் சோம அவிசானும் பக்குவ சருவானும் செயப்படும் இருபத்தொரு யாகங்களுக்கும் சிவபிரானே அரசர்" என வேதம் கூறும். அற்றேல் "துவமக்நே" என்னும் மந்திரமும், அதனை அடுத்த மந்திரமும் "உருத்திரனை உடைத்து அக்கினி" என்று கூறுதலின், உடைப் பொருளாகிய சிவபிரானுக்கு அரசு பொருந்தாதாம் பிற எனின்; அற்றன்று. அரசனையுடைத்து இப்பூமி என்ற வழிச் சேதனனாகிய அரசன் உடைப்பொருாளதலும், அசேதனமாகிய பூமி உடை யானாதலும் செல்லாமையின் செல்லும் பொருட்டுப் பூமியுடையான் அரசன் என மாறிக் கொள்ளப்படும் அன்றே; அதுபொல "உருத்திரனை உடைத்து அக்கினி" என்றதூஉம் கோடற் பாற்றாகலின், பொருந்தாமையாண்டையது என்ன ரௌத்திர பசுவியத்தியில் இம்மந்திரங்கள் சிவபிரானையே உணர்த்தலினானும் யாகத்து இறைமை அவர்க்கே உரித்தென்க.

அற்றேல், அக்கினியை உடையான் உருத்திரன் எனச் செவ்வனே கூறாது "உருத்திரனை உடைத்து அக்கினி" எனப் பிறழக் கூறியது என்னை எனின்; ஒரு பயனோக்கிஅங்ஙனம் கூறிற்று என்க. என்னையோ பயனெனின்; உருத்திரனைப்பற்றியே அக்கினி சிறந்தது எனப்பொருட்பேறு எய்துவித்தலே பயன் என்க. தந்தையையுடைய மாணவகன் என்றற் றொடக்கத்தனவாகப் பிறாண்டும் அங்ஙனம் வருமாறு அறிக.

சிவபிரானுக்கு யாகபதித்துவம் உருத்திர சூக்த மந்திரத் தொகுதிக்குச் சிரோரத்தினம் போல அணி செய்வதாய்ச் சிவநாம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிமையுடையத்தாய யசுர்வேதத்தானன்றி "மேதபதி" என இருக்கு வேதத்தானும் கூறப்படும் என்க. "நிலையாத் தேகம் விழுதற்கு முன்னர்ச் சிவபூசை செய்தற்பாற்று" என்ற சிவதரும வசனத்திற்கு மூலமாயதூஉம் இந்த "ஆவோ" என்னும் மந்திரமே என அறிக.

அரசன் கோபமிலனாய் இன்முகமுடையனாயினும் அவன் மாட்டு அச்சம் குடிகளுக்கு நிகழ்தல் இயற்கையே. அதுபோலச் சிவபிரான் இன்னருள் மூர்த்தியாயினும் அனேக சூரியர் ஒரோவழித் தலைப்பட்டு விளங்குதலின் திருவுருத்திரத் துள் "பீமன்" எனப்படுகின்றார். இன்னும் வேதம் சிவபிரானை அஞ்சத்தக்க வச்சிரம் என்றும் கூறும். இங்ஙனம் சிவபிரான் மாட்டு அச்சகாரணத்துவம் உண்மையினன்றே வாயு, பானு, அங்கி, இந்திரன், இயமன் முதலிய தேவர் தத்தம் தொழில்களை அஞ்சி வகித்துய்க்கின்றார் என்க. இப்பய ஏதுவைப் பரம இலக்கணம் என்ப.

"சிவபிரானுக்குக் கோரத்திருமேனி சிவத்திருமேனி என இரண்டு உண்டு" என்று வேதம் கூறுகின்றது. அவற்றுள், முன்னையது தம்மை வழிபடும் அன்பர்களுடைய ஸம்ஸார ரோகம் நீங்கச் சிகிச்சை செய்வது; பின்னையது அருள்நோக்கால் அவர்க்குப் பசுத்துவத்தைக் கெடுத்துச் சிவத்துவாபிவியத்தியை விளைப்பது. சத்திரமிட்டு அறுத்தல் முதலிய கொடுந்தொழில்கள் வைத்தியன் மாட்டுளவேனும் வியாதியாளர் அவனையே சரண் புகுவர். அதுபோல ஸம்ஸாரரோகத்தினால் வருந்தும் உயிர்கள் அதன் நிவிர்த்திப் பொருட்டுச் சிவபிரானது கோத்திரதிரு மேனியை வணங்கித் திருவுருத்திர மந்திரங்களால் சாந்தி வேண்டுப. சிவத்துவாபிவியத்திப்பொருட்டுச் சிவத்திரு மேனியைச் சமக மந்திரங்களால் உவப்பிப்ப. இவ்விரண்டு மந்திரங்களும் சிவபிரானது ஓமத்தின் பொருட்டும் பிரயோகிக் கப்படும். இச்சமக மந்திரங்கள் அரி அயன் இந்திரன் முதலி யோரை அன்னாதிகளுடன் சேரத்து ஈயப்படும் பொருள் களாகக் கூறுகின்றன. சிவபிரான் அவற்றை ஈயுந்தாதா ஆகலின் அவரை அங்ஙனம் கூறிற்றில.

பெரியோர் சந்நிதானத்தில் சிறியோரை ஒப்பச் சம்மானி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாமை உலகில் கண்டாமன்றே; அதுபோலச் சிவபிரானது சந்நிதானத்தில் தேவரை ஒப்பச் சம்மானித்தல் முறையன்மை நோக்கி, யாகத்தின் கண் சிவபிரானைக் குறித்துச் செய்யும் கிரியாந்தத்தில் பரிசேசனம் செய்து, வேறுபாடு தோற்றுவிப்ப. இஃது அறிய மாட்டாது, அஃது அழிவுபற்றிய செயல் என்று கூறும் அறிவிலார் என்கடவர் என்க.

ஆன்மாக்களெல்லாம் பரதந்திரம் உடைமையால் பசுக்கள் எனப்படும். சிவபிரான் சுதந்திரமுடைமையால் அப்பசுக்களுக்குப் பதி எனப்படுவர். சுவேதாச்சுவதரோபநிடதம் முதலியன ஆன்மாக் களுக்கு அநீசத்துவமும், சிவபிரானுக்கு ஈசத்துவமும் கூறும். இனி அவற்றிற்கும், அவருக்கும் அவ்விருதன்மையும் இயற்கையே என்க.

அற்றேல் "சிவபிரான் பசுபதித்துவத்தைத் தேவர்க்கட் பெற்றனர்" என்று வேதம் கூறியது மாறாம் பிற எனின்; அற்றன்று இயல்பாக அதனையுடைய சிவபிரான் வேண்டிப்பெற்றார் என்றல் முழு விரோதமாகலின், அஃது அருத்த வாதம் என்க. அல்லதூஉம் அதனை வாய்மை எனக் கொள்ளின், தக்கன் வேள்வி சிதைத்தல் முதலிய அற்புதச் செயல்களைக் கூறும் வேத வாக்கியங்கள் போலியாய் முடியும். அதனாலும் அஃது அருத்தவாதமே என்பது.

"சிவபிரானுக்கு அழிவில்லாத அநேக திருமேனிகள் உண்டு" என்று இருக்குவேதம் கூறுகின்றது. "சிவபிரானை வழி படும் அடியார்கள் அன்னத்தைப் புசிப்பர்" என்று அதுவே கூறுகின்றது. அஃது அங்ஙனம் கூறுமுகத்தானே "நாடோறும் உணற்கு முன்னர் சிவபூசை செயற்பாற்று" என்னும் விதிக்கு மூலமாதல் அறிக.

சிவபுத்திரர்களாகிய மருத்துக்களைப் பரதசூனுக்கள் என்று வேதம் கூறியது அவருக்குத் திருநடனத் தொழிலுண்மை பற்றி என்க. பாரத்தை வகித்தல் பற்றிப் பரதன் எனப்படுகின்றா ரெனின்; விசேடமாகிய திருநடனத்தொழில் அவர்க்கு உள தாயிருக்க, அது பற்றிக் கூறாது, அங்ஙனம் கூறுதல் எற்றிற்கு என்று கடாவி மறுக்க.

இருக்கு வேதத்தில் சிவபிரானை "வீரன்" என்றது காமன், இயமன், திரிபுரத்தர், தக்கன் முதலியோரைப் பங்கப்படுத்தினமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி என்க.

ஆயிரம் சாகையுடைய சாமவேதத்தில் "ஆன் மாக்கள் எல்லாவற்றிற்கும் அதிபதி சிவபிரான்" என அவர் மகிமை கூறப் பட்டது. அதனகத்துள்ள தேவவிரதம் முதலிய மந்திரங்களில் சிவகணநாதர் மகிமை கூறப்பட்டது.

குணங்களெல்லாவற்றானும் பிதாவாகிய சிவபிரானோடு சமத்துவமுடைய விநாயகக் கடவுள் சுப்பிரமணியகடவுள் என்னும் திருக்குமாரர் இருவரும் சாமவேதத்தால் துதிக்கப் படுகின்றனார்.

அதர்வசிகை, "பிரமன் முதலிய பொருள்கள் எல்லா வற்றையும் கைவிட்டுச் சிவத்துவத்தைச் செய்தருளும் சிவபிரானே புருடர்களால் வீடுபேற்றின் பொருட்டுத் தியானிக்கற்பாலர். வீடு பேற்றிற்கு ஏது வாகும் வார்த்தை இதுவே பிறிதில்லை" என்று கூறி முற்றிற்று.

யசுர்வேதமுடையார் சிவபிரானோடு உடன்தோன்றுதல் பற்றி, அருட்சத்தியாராகிய சிவபிராட்டியாரை அவர்க்குத் தங்கை என்று கூறுப. அதர்வணவேதமுடையார் "பிரமன் முதலியோரை நீக்கிச் சிவபிராட்டியாரோடு சிவபிரான் தியானிக்கற்பாலர்" என்று கூறுப. "வேதங்கள் எல்லாம் ஏகனாகிய சிவபிரானே பதிப் பொருள் என்று கூறினும், யசுர்வேதமுடையார் அவரை அவர் தாதான்மிய சத்தியாரோடு இருபொருளாக விவகரிப்ப. அச்சிவ பிராட்டியாருடைய வாக்குமனத்துக்கு அதீதமான பிரபாவ மனைத்தையும் புகலப் பிரமனும் வல்லுநன் அல்லன்.

ஒருதிருமுகமும், மூன்று திருக்கண்ணும் நான்கு திருத் தோளும், வெண்ணிறமும் பொருந்திய சிவபிரானுடைய அழிவில்லாத் திருமேனி ஒன்றேனும், உபாசிப்பவர் உபாசனை வேறுபாடு பற்றிப் பலவாய் விளங்கும். "கிராத வடிவரும் பிநாகத்தைத் தரித்தவரும் தோலுடையருமாகிய சிவபிரானை, அவருடைய தரும பத்தினியாராகிய சிவபிரானை, அவருடைய தரும பத்தினியாராகிய சிவபிராட்டியாரோடு பர்வகாலத்தில் செய்யப்படும் சாகமேதம் என்னும் கிரியையில் புண்ணிய அவிசுகளால் அநந்நிய பாவனையையுடைய பக்தர் திரியம்பக மந்திரத்தால் பூசிக்க" என்று கற்பசூத்திரத்தில் கூறப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நல்லோர் சகத்தின் உற்பத்தியின் பொருட்டு வீரிய மழையைப் பெய்வதூஉம், அணித்தாகிய மருங்கில் பத்தினியாராகிய சிவ பிராட்டியாரையும் நடுவில் சுப்பிரமணியக் கடவுளையும் உடைய தூஉம், சரா மரண ரகிதமானதூஉம் ஆகிய விக்கிரகத்தை உடைய சிவபிரானையும் அவருடைய துவாரபாலகர்களையும், அவர் பத்தினியாரையும் தேவசேனையாரோடு தேவசேனரையும் க்ஷேத்திரபாலரையும் பூசிக்கின்றனர்" என்று யசுர்வேதத்தில் கூறப்பட்டது. "விரூபாக்கராகிய சிவபிரானைச் சிவபிராட்டி யாரோடும், திருக்குமார்கள் இருவரோடும், கணங்களோடும், பாரிடரோடும், அட்டமிப் பிரதோடத்தில் பூசிப்பவர், தம் பாவத்தினீங்கி, மிருத்துவையும் கடப்பர்" என்று போதாயத்தில் கூறப்பட்டது.

தேவர்களுடைய மந்திரங்கள் சில; அவை அவர்களுடைய வரையறைப்பட்ட பிரபாவங்களையே கூறும். சிவபிரானுடைய திருநாமங்களையும் திருமேனிகளையும் குணங்களையும் வருணிக்கும் மந்திரங்கள் வரையிறந்தன. திருவுருத்திரத்தில் கூறப்பட்ட சிவபிரானுடைய திருநாமங்களும், திருமேனிகளும் குணங்களும் அன்ன.

இனி, வேதநூல் சுயம்புவானாலும் ஆகுக; சிவபிரானால் அருளிச் செய்யப்பட்டதானாலும் ஆகுக; வேத வாக்கியம் முழுதும் பிராமணமே. வேதத்தின் வேறாய நூல்கள், அதனோடு விரோதியாதவழி, ஆக்கியோர் தாரதம்மியத்துக்கு ஏற்பப் பிரமாணமாம். வேதம் போல் திவ்விய சிவாகமமும் பிரமாண மாம். அச்சிவாகமம், சிவத்தியானத்துக்கு உபயோகமாயுள்ள பதி பசு பாசம் மூன்றனையும் விளக்குவதாய், சிவபிரானுக்குத் திருமுகம் முதல் திருவடி ஈறாயுள்ள அங்கங்களாய் இருக்கும். யாகவிதி கற்பசூத்திரத்தால் பெறப்படுதல் போலத் தியா தாவும், தியானமும், தியேயமும் ஆகிய மூன்றும் சிவாகமத்தால் பெறப்படும். கிருகிய சூத்திரத்தில் உபநயன விதியில் கூறப்பட்ட "அத்துவநாம்" என்னும் மந்திரம் அத்துவாவையும், அத்துவ பதியையும், அத்துவாக்களின் தாரதம்மியத்தையும், சிரேட்டாத் துவா எனப்படும் மந்திராத்துவாவின் முடிபாயுள்ள சிவத்தையும் கூறுதலின், சிவாகமத்தில் கூறப்படும் அத்துவாக்கள் வேதத்தினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்க. இருடிகளால் செய்யப்பட்ட கற்பசூத்திரமுதலியன பிரமாணமாகுமாயின், பெரிய இருடியாகிய சிவபிரான் அருளிச் செய்த சிவாகமம் பிரமாணமாம் எனக் கூறல்வேண்டுமோ என்க. தவவலியினான் வேத சமூகத்தினின்று ஒவ்வோர் மந்திரத்தை உணரப்பெற்றானையன்றே இருடி என்பவாகலின் இயல்பாகவே அம்மந்திரங்கள் அனைத்தையும் உணரா நிற்கும் சிவபிரானேப் பெரிய இருடி என்றற்கு ஆசங்கை என்றும் இன்று என்க. சாங்கியர் பாசம் பசு பதி என்னும் மூன்றனையும் முறையே பிரதானம் புருடன் ஈசன் எனப் பெயரிட்டு வழங்குப. அது சிவாகமத்திற்கும் உடன்பாடே என்க.

கிருகிய சூத்திரகாரர் சிவபூசை கூறினரில்லை யாலோ எனின், வேதத்தில் பெறப்பட்டும் புராணங்களில் பிரசித்தமாயும் போதாயன முனிவரால் விஸ்தரிக்கப்பட்டும் இருத்தலின், அதனை முற்றும் உணர்ந்த கிருகிய சூத்திரகாரர் கூறாதொழிந்தார். அதுமட்டோ, அவர் முக்கியமாகிய யஞ்ஞோபவீதத்தையும் கூறாது ஒழிந்தார். கூறாததுகொண்டு சிவபூசைக்குக் குறைவு என்னை? வேதங்களுக்கு உபபிருங்கணங்களாகிய புராணங்களில் சிவபூசை ஆண்டாண்டு முழங்கப்படுகின்றது. அவ்வுபபிருங்கண வாயிலால் வேதத்தை மூலமாகவுடைய மிருதிகள் கூறாமைபற்றிச் சிவபூசை குறையுறாது என்க. அல்ல தூஉம் வேதப்பொருளை நிச்சயித்தற்குப் புராணம் அங்கமாம். அப்புராணங் களால் நிச்சயிக்கப்பட்ட வேதப்பொருளே மிருதிக ளாம். ஆகவே, வேதம் போலப் புராணவசனம் பல முடையன; அவற்றின் முன் மிருதிகள் வலியுடைய ஆகா அல்லதூ உம், அநுபலத்திக்கு விடயமாகும் சுருதியை மூலமாகவுடைமையினானும் அவை பிரபல பிரமாண மாகா. ஆகவே, பிரத்தியக்க வேதத்தினான் விதிக்கப்பட்ட யாகம் மிருதியின் பார்வையை வேண்டாதவாறுபோல, சிவபூசையும் அவற்றின் பார்வையை வேண்டாது என்க.

இனிப் "பூர்வான்னத்தில் செய்யற்பாலனவாகிய நியமங் களை முற்றி நியதசித்தனாய்த் தேவபூசையைச்" செய்க என்று மநுவால் கூறப்பட்டமையானும், சிவபிரான் தேவருள் வைத்து மகாதேவர் எனப்படுதலானும், மிருதியினும் சிவபூசை கூறப் பட்டது என்றே கோடும். அற்றேல் சிவபிரானுக்கு மகாதேவப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயருண்மைக்குப் பிரமாணம் என்னை எனின்; அதர்வ சிரசே பிரமாணம் என்க. அன்றியும் போதயன சூத்திரத்தில் சிவ பிராட்டியாரோடும் இடபதேவரோடும் சிவபிரானுக்கு ஈசானபலி கூறிப் பூசை விதித்ததூஉம் காண்க, புத்திப் பொருட்டுச் செயப் படுவதூஉம் முத்திப் பொருட்டுச் செயப்படுவதூ உம் எனச் சிவ பூசை இருவகைப்படும்; வேள்வியும் அங்கனம் இரு வகைப்படும்.

சிவபிரான் தேவருள் பிராமணராகலின் அவர்க்கு நிவேதித்ததனைப் புசிக்கலாகாதுஎன முனிவர் விலக்குப. அற்றாகலினன்றே "பிராமணர் உச்சிட்டமனைத்தையும் நிலத்தில் புதைக்க அல்லது சலத்தில் எறிக" என்று கற்பசூத்திரத்தில் கூறியதூஉம் என உணர்க. பிராமணர்க்குப் பிராமணராகிய சிவபிரானையே வழிபடுதல் தகுதியாம். ஏனைக் கீழ்வருணத்த ராகிய தேவரை வழிபடுதல் பிராமணர்க்குத் தகுதி அன்று. அற்றேல், சிவபிரான் தேவருள் பிராமணர் என்றற்குப் பிரமாணம் என்னையெனின்; சாமவேதத்திலுள்ள பிரபத மந்திரமே பிரமானம் என்க.

முனிவர் உயர்புடையதனையும் இழிபுடையதனையும் ஒப்ப விலக்குப. தீக்கிதவன்னத்தையும் பதிதவன்னத்தையும் விலக்கினமையானும், "சண்டாளன், சண்டிலன், மசானபாலகன், கள்விற்போன், பசு, பிராமணன், அக்கினி, தீக்கையுடையான், பெண்கள் என்னும் இவரைப் பரிசிக்கற்க" என்றமையானும், அக்கினிபோலும் திக்கிதவன்னத்தை விலக்கியவர்தாமே, ராசபரிக் கிரகம் என்னும் கிரியைசெய்த பின்னர் அதனைப் புசிக்க என்றமையானும், "சங்கத்தின் அத்திபாவனம்" என்றும், "மநுட அத்தி அபாவனம்" என்றும் கூறினமையானும் அதற்குக்காரணம் கூறப் படாது என்க. சிவபிரானை ஒழித்து ஒழிந்த தேவர்களுக்கு நிவேதிக்கப்படும் அன்னம் அப்பிராமணருடைய பசி நிவர்த்திப்பொருட்டு உபயோகப்படுக.

வைசுவதேவம் என்னும் கிரியையில் அத்தேவர் சேடத்தால் அக்கினி முதலிய தேவர்க்குப் பலியிடலாகாது. அற்றேல், தேவர்களுக்கு நிவேதியாத அன்னத்தால் வைசுவதேவ பலியிட்டு, அவர்க்கு நிவேதித்த அன்னத்தைப் புசிக்கலாமெனக் கொள்ளாமோ எனின்; கொள்ளாம் என்னை? "அசனத்துக்கு உரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னக் கூற்றினாற்றானே பலியிட்டு உண்க" என விதிக்கப் பட்டமையின்.

முன்னொருகாலத்தில் "சிவபிரான் பிரமக்கொலைக்காகப் பலியேற்றனர்" என்பதை உணரப்பெறுவார்க்கு அது திருவிளையாடல் மாத்திரையே என்பது இனிது விளங்கும். சிவபிரான் பிரமன் தலையைப் பறித்தமையானன்றே அவன் தீர்க்காயுளுடையனாய்ச் சீவிக்கின்றான் என்க. அது திருவிளை யாட்டன்று, பிராயச்சித்தம் எனின் நாபிமுதல் சாநுபரியந்தம் சாணவத்திரம் தரித்தல், கையில் கபால துண்டம் தரித்தல், கொடிதண்டம் பிணத்தலை தரித்தல், ஏழு வீட்டில் பலியேற்றல் என விதிக்கப்பட்ட பிராயச்சித்தா நுட்டானம் அவர்கண் காணப் படாமையான் அது பொருந்தாது என மறுக்க. அல்லதூஉம், காலபைரவர் செய்த பிரமகத்திக்குச் சிவபிரான் பிராயச்சித்தம் செய்துகோடல் செல்லாது என்க. செல்லுமேல் கற்பங்கடோறும் அவர் செய்யும் பிரமகத்தி விண்டுகத்தி முதலியவற்றிற்கும் சிவபிரான் பிராயச்சித்தம் செய்துகோடல் வேண்டும்; அவ்வாறு செல்லாமையின் அது திருவிளையாடல் மாத்திரையே என்பது.

பரமேசராகிய சிவபிரான் தேவர்கட் பசுபதித்துவம் பெற்றுக்கொண்டருளியதனையும், அவர் பயிக்கம் புகுந்தருளிய தனையும் அறிந்துரைக்கப் பிருகஸ்பதியும் வல்லான் என்க.

இனிச் சிவபிரான் "பிரமன் விண்டுவாயினர்" என்றும், "பிறவெல்லாமாயினர்" என்றும் அறிவிலார் அபேதபாவனை பேணுதற்கு ஏது, பிறிதோராற்றாற் பெறப்படாமையின். அத் தேவர் அடைந்த இழிவை மறைத்தல் ஒன்றோ மோகமடைதல் ஒன்றோ இரண்டனுள் ஒன்று திட்பமுடைத்தாதல்வேண்டும் என்க.

அற்றேல் அஃதாக, வேதத்தில் ஆண்டாண்டுப் பிரமப் பொருளாகிய சிவபிரானுக்கும் உயிர்களுக்கும் அத்துவிதம் கூறியது என்னை எனின் கருடனும் மாந்திரிகனும் தம்முள் வேருதல் வெளிப்படையாயினும், கருடோகம்பாவனை விடத்தை நீக்கல்மாத்திரைக்கே வேண்டப்படும். அதுபோலச் சிவன் சீவன் என்னும் பதார்த்தங்கள் இரண்டும் தம்முள் வேற்றுமையுடையன என்பது தேற்றமாயினும், உயிர்களுக்கு மலநீக்கத்தின்பொருட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதத்தில் அத்துவித சிவோகம் பாவனை கூறப்பட்டது. இங்ஙனம் ஆகலின், அது கொண்டுதானே கிருபசரிதைக்கியம் கூறுதல் சாலாது என்க.

சிவபிரான் பிரமனுடைய ஐந்தாம் சிரசைக் கிள்ளிரன் என்றும், பிரமன் அரி இருவரும் அவருடைய திருமுடியினையும் திருவடியினையும் தேடி உழன்றனர் என்றும் யாம் முழங்குவேம். அது மூடபுத்தியுடை யார் அழுக்கறுத்தற்கு ஏதுவாக.

சோமக்கொடிக்கு விண்டுவின்மாட்டு உற்பத்தி கூறியது கௌனவிருத்திபற்றியாகலின், அது முக்கிய விருத்திபற்றிச் சிவபிரானையே அடையும். சிவபிரானும் விண்டுவும் ஒருவருக் கொருவர் செனகராயின் வரம்புகடந்து நாமும் சிவபிரானாகுவம். சிவபிரானும் நாமாவர்; பொருள்களின் இயல்பை மாற்றுதல் சிவபிரானுடைய ஆணைக்கும் இயலாது என்க. விண்டு முதலிய தேவர்போல் பிறக்கக் கருதுதல் சிவபிரானுக்கும் செயற்கரிய தொன்றாகும். அது அத்திரி பத்தினியால் வேண்டப்பட்டும் அவள் கருவிற்புக்கு உதிக்க மாட்டாமையான் இனிது விளங்கும். விண்டு கருவில் புக்கு உதித்தது சுயேச்சை எனின் கருப்பாசயத்தில் கட்டுண்டு நெடுங்காலம்கிடக்க எவனும் இச்சியானாகலின், முற்பிறவியில் ஈட்டிய வினைக்கீடாகவே அவற்கு இச்சை நிகழ்ந்தது என்று ஒழிக. அற்றேல், பாரதம் முதலியவற்றில் விண்டுவினுடைய அவதாரத்தைச் சுவேச்சை என்றது என்ன எனின்; அது குணவாதம் என்க.

சிலர் பிரமனையும் சிலர் விண்டுவையும் சிலர் ஏனைத் தேவர்களையும் உபாசிப்ப. அவ்வுபாசனைகள் உலகத்தில் பயன் பயப்பன அன்றி வீடுபேற்றினைப் பயக்காவாம். "ஒருவன் ஆகாயத்தை ஆடையாக்கிக் கொள்ளுமாயின், சிவபிரானை உபாசியாது துக்கத்தினீங்கி வீட்டினைத் தலைப்படும்" என்று சுவேதாச்சுவதரச் சுருதி கூறுதலின், வீடுபேற்றின்பொருட்டுச் சிவபிரானையே உபாசிக்க உடைந்த மரக்கலம் பிறிதொரு மரக்கலத்தைக் கரை அடைவிக்கமாட்டாது; அது போலப் பிறந்து இறந்து உழலும் தேவர் அவ்வாறு உழலும் எம்மனோர்க் குச் சரணாகமாட்டார். முயலில் கோடும், ஆகாயத்தில் பூவும், கானலில் நீரும், மலடி மாட்டு மகப்பேறும் உளவாயின் ஏனைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவரை உபாசித்தலான் வீடுபேறும் தலைப்படும் என்க.

தேவருடைய பல பிறப்புக்களே நோக்கும்வழி நமக்குக் கழிபேரச்சம் நிகழாகின்றது. ஆகலின், சிவபிரான் அப்பெற்றிய வாம் பிறப்புக்களைத் திருவிளையாட்டுக்கேனும் மேற்கொள் ளாது ஒழிக. சிவபிரான் மாட்டு யாம் வேண்டிப் பெறும்பேறு இதுவே. சிவபிரானை ஒழித்து ஒழிந்த தேவரைத் துதிக்கும் அறிவிலார் என்கடவர்.

சிவனடியார் திருக்கூட்டத்தையே விரும்புவோம். பிள்ளைமைப் பருவத்தும் சிவனடியார் திருவடிப் பொடி கொண்டே மண்விளையாட்டுச் செய்யப்பெற்றேம். ஆண்டானா கிய சிவபிரானைத் துதிக்க அடியே முக்கு வலியில்லையேனும், அவர் திருவருள்கொண்டே அவரைத் துதித்தேம். அங்ஙனம் துதித்தேமுக்கு, அடியார்க்கு எளிவந்த கருணை வள்ளலாகிய சிவபிரான், உபவீதம்போல் தரித்தருளிய புனித ஆடையினையும், திரிபுண்டரத்தினையும் உடையராய் வெளிநின்றருளித் தம் முடைய அநுசரரைக்கொண்டு பாயசான்னத்தைக் கொடுப்பித் தருளினார். அதனைப் பெற்று உண்டு, சொப்பன சமாதியோ என்று கருதி யோகிகளைப் போலத் தெளிந்தேம்.

இந்நூலைப் படித்து இதன்பொருளை உள்ளவாறு உணரப்பெறுவார்க்குக் கொள்ளற்பாலது பிறிதொன் றில்லை; அறிதற்பாலதும் பிறிதொன்றில்லை; எல்லாப் பேறும் இதனானே உண்டாம்.

இந்நூல் சிவபிரானுக்கு ஓர் ஆரமாக மக்களுக்கு வேத சிவாகமப்பற்றை விளைக்க. பசு நூற்பற்றைக் கெடுக்க சிவபிரான் திருவடிப்பற்றை வளர்க்க.

திருச்சிற்றம்பலம்

சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாரத தாற்பரிய சங்கிரகம்**

பாரத தாற்பரிய சங்கிரகம் என்பது
வடமொழியில் ஸ்ரீமத் அப்ப தீக்ஷிதரால் அருளிச்
செய்யப்பட்ட நூலாகும். இதனை வடகோவை
சபாபதி நாவலர் அவர்கள் தமிழில்
மொழிபெயர்த்து வெளியிட்டார்கள்.
அந்நூலுக்கு உரையும் நூலாசிரியரே
இயற்றியருளினார் என்ப.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

# பாரத தாற்பரிய சங்கிரகம்

தற்சிறப்புப் பாயிரம்

ஆரி யத்துய ரப்பதீக் கிதன்முன மறைந்த
பார தத்தின்றாற் பரியசங் கிரகத்தைப் பாடற்
சீரி யற்றமி ழாலுரை செயவருள் செய்ய
வீர மும்மதக் குஞ்சரப் பிரானடி விழைவாம்.

இது தெய்வ வணக்கமும் செயப்படுபொருளும் உணர்த்துகின்றது.

(இதனது பதப்பொருள்) உயர் அப்ப தீக்கிதன் - சிவாத்துவித ஞான சித்தியினால் உயர்வுடையராகிய அப்பய தீக்கித முனிவர், ஆரியத்து அறைந்த - ஆரிய மொழியிலே அருளிச்செய்த, பாரதத்தின் தாற்பரிய சங்கிரகத்தினை - பாரத தாற்பரிய சங்கிரக மென்னு நூலினை, சீர் இயல் தமிழ்ப்பாடலால் உரை செய - அழகு பொருந்திய இயற்றமிழ்ப்பாவினாற் கூறிட, அருள் செய்ய-திருவருள் பாலிக்கும் பொருட்டு, வீர மும்மதக் குஞ்சரப் பிரான் அடி விழைவாம் - வலிபொருந்திய மூன்று மதங்களையுடைய யானைமுக விநாயகப் பிரானுடைய திருவடிகளை தியானஞ் செய்வாம் என்றவாறு.

அப்பய தீக்கித முனிவர் இயற்றிய வடமொழிப் பாரத தாற்பரிய சங்கிரகத்தினைத் தென்மொழிப் பாவினால் உரைக்கத் திருவருள் வழங்க மூத்தபிள்ளையார் திருவடிகளைத் தியானஞ் செய்வாம் என்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூல்**

உலகளந்த மாயனவ தார மாகி
யுற்பவித்த வியாதமுனி பாண்டு மைந்தர்
பலமுறுகற் கதைதெரிக்கும் வியாச வாற்றாற்
பங்கயக்கண் மாலையதி கரித்துச் செய்த
அலகில்வா னுறுபார தத்தி னாண்டாண்
டவனித்த மருச்சிக்கப் படுதி யென்று
நிலவுவளர் சடைப்பகவ கூறுமுகத் தானீ
நித்தியதத் துவமென்று விளக்கி னானால்.

இது கண்ணபிரான் சிவபிரானைப் பூசித்துய்ந்தமை கூறுகின்றது.

(இ-ள்) நிலவு வளர் சடைப் பகவ-பிறை வளர்தற் கிடமாகிய சடையினையுடைய பகவனே, உலகு அளந்த மாயன் அவதாரம் ஆகி உற்பவித்த வியாதமுனி - உலகத்தினை அளந்த திருமாலின் அவதார விசேடராய்த் தோன்றிய வியாசமுனிவர், பாண்டு மைந்தர் பலம் உறு நல் கதை தெரிக்கும் வியாச ஆற்றால் - பாண்டு புத்திரர்களுடைய பயன் மிக்க நல்ல சரித்திரத்தினை அறிவிக்குங் கபட நெறியினால், பங்கயக்கண் மாலை அதிகரித்துச் செய்த - செந்தாமரை மலர் போலுங் கண்களையுடைய கண்ண பிரானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இயற்றிய, அலகில் வரன் உறு பாரதத்தில் - அளவில்லாத மகிமை பொருந்திய மாபாரத மென்னும் இதிகாசத்தில், ஆண்டு ஆண்டு - அங்கங்கே, அவன் நித்தம் அருச்சிக்கப் படுதியென்று கூறு முகத்தால்- அக்கண்ண பிரான் நித்தியமும் பூசிக்கப்படுகின்றாயென்று சொல்லும் வாயிலால், நீ நித்திய தத்துவம் என்று விளக்கினான் - நீயேநித்தியமாயுள்ள பரதத்துவ மென்று புலப்படுத்தினார். (எ-று)

நித்திய தத்துவம் வடநூன் முடிபு. தேற்றேகாரம் விகாரத்தாற் றொக்கது. ஆல் - அசை.

வியாச முனிவர் பாண்டவர் சரித்திரங் கூறுவார் போன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணபிரான் மகிமை விளங்க இயற்றிய மாபாரத்தில் அக்கண்ண பிரான் சிவபிரானைப் பூசித்த வரலாறு கூறுமுகத்தானே சிவ பிரானே பூசிக்கற் பாலனாகியுள்ள பரதத்துவ மென்பதை வெளியிட்டா ரென்க.

பிரமாதி சகலசக மோகத் தானே
பிணிப்புண் டங் கவமானப் பட்ட தென்றும்
பரமேச பகவநீ தானே யற்றாற்
பட்டிலைமற் றஃதென்று முனிவி யாதன்
தவரீச மங்கணிகன் றனாது காதைச்
சம்பந்தத் தாலினிது விளக்கிக் கூறி
உவமானங் கடந்தபரப் பிரம நீயென்
றுணர்த்திடவு மூர்க்கர்பிணாங் குறுவ ரந்தோ.

இது சிவபிரான் இயல்பாகவே மோக வினையினீங்கி விளங்கும் ஏக முதலாயுள்ள பரப்பிரமப் பொருளென்பது கூறுகின்றது.

(இ-ள்) பரமேச பகவ! - பரமேசனாகிய பகவனே! முனி வியாதன் - வியாச முனிவர், அங்கு - வேள்விக் களத்து, பிரமாதி சகல சகம் மோகத் தானே பிணிப்பு உண்டு அவமானப்பட்டது என்றும்-பிரமனை முதலாகவுடைய தேவர் தொகுதி மயக்கத்திற் றுடக்குற்று அவமதிப்பினை எய்திற்றென்றும், நீ தானே மற்று அஃது பட்டிலை என்றும் - நீ யொருவன் றானே ஆண்டு அம்மோகத்தினை உற்றிலை யென்றும், தவர் ஈச மங்கணிகன் தனாது காதைச் சம்பந்தத்தால் இனிது விளக்கிக் கூறி - தவத்தர்க்குத் தலைவனாகிய மங்கணிகனது சரித்திர இயைபு பற்றி நன்கு தெளித்துச் சொல்லி, உவமானம் கடந்த பரப்பிரமம் நீ என்று உணர்த்திடவும் - ஒப்பில்லாத பரப்பிரமப் பொருள் நீயேயென்று பாரதத்தில் அறிவுறுத்திடவும், அந்தோ மூர்க்கர் பிணங்குறுவர் - அச்சோ! மூர்க்கர் உன் பரத்துவந் தேறமாட்டாது பிறந்திறந்து உழிதர்கிற்கும் தேவரைப் பரமென்று மாறாடுவர். (எ-று).

பிரமாதி - அன்மொழித்தொகை. அது சகலசகம் என்பத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னோடு தொக்கு இருபெயரொட்டாய் நின்றது. அன்மொழித் தொகைப் பொருளாய் நின்ற தேவரென்னும் உயர்திணை தோன்றியொடுங்கி வரும் பொருளென்று கருதப்பட்டமையின் அஃறிணையாயிற்று. சகலசகம் தொகுதியென ஒருமையுணர்த் தலின் பட்டதென ஒன்றறி சொல்லின் வினையான் முடிந்தது. தேற்றேகாரம் விகாரத்தாற் றொக்கது. பாரதத்தில் என்பது அதிகாரத்தான் வந்தது, இது முன்னுங் கொள்க.

அயனை முதலாகவுடைய தேவரெல்லாம் மங்கணிகள் மாயையிற் கட்டுற்றுழலுதலானும் சிவபிரான் அத்துடக்குறாமல் மோக நீக்கி அறிவு அருளுதலானும் அவனே பரப்பிரமப் பொருளாவனென்று வியாச முனிவர் பாரதத்திற் கூறுதல் கேட்டு வைத்தும் உண்மை தேறாது பிணங்கும் நீரரைத் தெருட்டும் வாயில் இல்லை யென்க. (2)

முற்கிளந்த பிரமாதி மோக வாழி
மூழ்கிட நீ யதுமூழ்கா விசேடத் தானே
யுற்பவமே யிருப்பிறப்புற் றார்க ளன்னோ
ருவர்க்குமுதற் காரணமா யுயர்வொப் பில்லாத்
தற்பரவுத் தமமான பொருணீ யென்னுஞ்
சங்கையிறத் துவஞானந் தலைப்பட் டானென்
றற்புதமங் கணிகன்வாக் கதனான் வாத
ராயணன்றெற் றெனவெளியிட் டருளி னானால்.

இதுவுமது.

(இ-ள்) வாதராயணன் - வியாச முனிவர், முன் கிளந்த பிரமாதி மோக ஆழி மூழ்கிட - முன்னர்க்கூறிய பிரமனை முதலாகவுடைய தேவர் மையற்கடலிலே முழுக, நீ அது மூழ்கா விசேடத்தான் - நீ அத்துடக்கெய்யாத மேம்பாட்டினால், அன்னோர் உற்பவம் இருப்பு இறப்பு உற்றார்கள் - அவரெல்லாம் தோற்றம் நிலை இறுதியென்னும் உபாதி மூன்றினையும் உறாநிற்கும் பசுக்களாவர், உவர்க்கு முதற் காரணமாய் உயர்வு ஒப்பு இல்லாத் தற்பர உத்தமம் ஆன பொருள் நீ என்னும் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவர்க்கெல்லாம் பரம காரணனாய் உயர்வொப்பின்றி விளங்கும் பசுபதியாகிய தனி முதற்பொருள் நீயே யென்கின்ற, சங்கையில் தத்துவ ஞானம் தலைப்பட்டான் என்று - ஐயப்பாடில்லாத உண்மையறிவை மங்கணிகன் எய்தினானென்று, மங்கணிகன் அற்புத வாக்கதனால் - அம்மங்கணிகன் ஞானத்துதியினால், தெற்றென வெளியிட்டருளினான் - பாரதத்தில் தெளிவாகப் புலப்படுத்தினார் (எ-று)

பிரமாதி - அன்மொழித்தொகை. தொகையோடு முற்றும்மையும், தேற்றேகாரமும் விகாரத்தாற்றொக்கன. உற்றார்க ளென்பது காலவழுவமைதி. ஏகாரம் முன்னது இசை நிறை , பின்னது எண். ஆல் - அசை.

மையற்கடற் படிதலின் அயன் முதலிய தேவரெல்லாம் பிறந்திறந்து வரும் பசுக்கள்; அஃதெய்தாமையிற் சிவபிரானே பசுபதி என்று மங்கணிகன் மெய்யுணர்ந்தானென்று பாரதத்தில் வியாச முனிவர் தங்கருத்தைத் தெற்றென வெளியிட்டாரென்க. (3)

கண்ணனருச் சுனனிருவர் கயிலை நண்ணிக்
கருத்தனினைத் தரிசித்துப் பிரம பாவ
நண்ணிநிறை சிவானந்த வெள்ள மூழ்கி
நாடுபிற சம்பந்த மின்றி யிற்றென்
றெண்ணரிய பிரமசம் பந்த மாகி
யிலகுதரு மங்களெலா முடைய நின்மாட்
டண்ணறடத் தச்சொருபப் பிரமவிலக் கணாங்க
ளாயிரண்டுங் கூறிற்றை வியாதமுனி யறைந்தான்.

இது கண்ணபிரானும் அருச்சுனனும் திருக்கயிலாயத் தினை அடைந்து சிவபிரானைத் தரிசித்துப் பிரம தியான முற்று உய்ந்தவாறு கூறுகின்றது.

(இ-ள்) அண்ணல் - இறைவனே, வியாதமுனி - வியாச முனிவர், கண்ணன் அருச்சுனன் இருவர் - கண்ணபிரான் அருச்சுன னென்னு மிருவரும், கயிலை நண்ணி - கயிலையையடைந்து, கருத்தன் நினைத் தரிசித்து - பரம காரணனாகிய நின்னைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரிசித்து, பிரம பாவம் கண்ணி - பிரம பாவனையுற்று, நிறை சிவானந்த வெள்ளம் மூழ்கி - தம்முட்டோன்றி நிறைகின்ற சிவானந்த வெள்ளத்திற் படிந்து, நாடு பிற சம்பந்தம் அன்றி - ஆராய்ந்து நீக்கப்படும் பொதுவியல்பிற்கு வேறாய், இற்று என்று எண் அரிய பிரம சம்பந்தம் ஆகி - இன்னவியல்பிற்றென்று சிந்தித்தற்கரிய பிரம சமவாயமாய், இலகு தருமங்கள் எல்லாம் உடைய நின் மாட்டு - விளங்குகின்ற சிறப்பியல்பும் முற்றறிவு முடைய நினக்கு, பிரம தடத்தச் சொரூப இலக்கணங்கள் ஆயிரண்டும் கூறிற்றை - பிரமத்தின் பொதுச் சிறப்பிலக்கணங்க ளிரண்டினையும் அணியாகக் கூறியதனை, அறைந்தான் - பாரதத்தில் உரைத்தார். (எ-று).

உம்மை விகாரத்தாற் றொக்கது. பிறசம்பந்தம் பொது வியல்பு. பிரமமென முன் வருதலின், பிற வெனப்பட்டன. பசு பாசங்களாம். பிற சம்பந்தமுடைய பொது வியல்பினைப் பிறசம்பந்த மென்றது உபசாரம். பிரம சம்பந்தமாகி இலகு தருமம் பிரமதா தான்மிய குணமாகும் சிறப்பியல்பு. அதுதான் முற்றறிவு முதலாகப் பல பெற்றியாய் விளங்கலின், எல்லாமென்று பன்மையாற் கூறப்பட்டது. சம்பந்தம் ஈண்டுச் சமவாய மென்னும் பொருட்டு. எண் முதனிலைத் தொழிற்பெயர். நின் மாட்டெடென்பது வேற்றுமை மயக்கம். செய்யுளாகலின் ஆயிரண்டுமெனச் சுட்டு நீண்டது. இரண்டாவது விகாரத்தாற் றொக்கது. வரையறை யின்மையின் ஈண்டு பகர வுடம்படு மெய்யாயிற்று. கூறிற்று வினைப்பெயர்.

கண்ணபிரானும் அருச்சுனனும் கயிலை எய்திச் சிவபிரான் பிரமமாதல் தெளிந்து சிவானந்த வனுபூதி கூடி இரு வகைப் பிரம இலக்கணங்களும் சிவபிரானுக்குரியனவென்னுந் துதி கூறி உய்ந்தாரென்று வியாசர் பாரதத்தில் உரைத்தாரென்க. (4)

நாரணன்றா னெடுங்கால முபாசித் துன்னை
நல்லருளாற் சிவோகம்பா வனைதலைப் பட்டத்தா
லாரணங்கண் முறையிடுமப் பிரம மாகு
மத்துவித நிலைசெவ்வே யடைந்தா னென்றுங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணங்கற் பனைகடந்த பொருணீ யென்றுங்
கருத்துடைய துதியன்னோன் சொற்றா னென்றும்
பூரணனா யுயிர்க்குயிராய் நிற்குமுழு முதலே
புகன்றிட்டான் வியாதமுனிபா ரதத்திற் றானே.

இது நாராயணமூர்த்தி சிவபிரானை உபாசித்துப் பிரம ஞானம் எய்தினமை கூறுகின்றது.

(இ-ள்) பூரணனாய் உயிர்க்குயிராய் நிற்கும் முழுமுதலே - பரிபூரணப் பொருளாயும் உயிர்களிடத்து அந்தரியாமியாயும் விளங்கும் முழுமுதற் கடவுளே, வியாதமுனி - வியாச முனிவர், நாரணன்தான் உன்னை நெடுங்காலம் உபாசித்து - நாராயண மூர்த்தி உன்னை நீண்டகாலமாக உபாசனை செய்து, நல்லருளால் சிவோகம் பாவனை தலைப்பட்டு - உன்னுடைய நல்ல அனுக் கிரகத் தினாலே சிவோகம் பாவனையைப் பொருந்தி, அத்தால் ஆரணங்கள் முறையிடும் அப்பிரமம் ஆகும் அத்துவித நிலை செவ்வே அடைந்தான் என்றும் - அதனால் வேதங்கள் ஏக்கற்றுரைக்கும் அந்தப் பிரமத்தன்மை கைவருதற்கு ஏதுவாகும் இரண்டற்ற சமாதிநிலையைச் செவ்வையாகப் பெற்றானென்றும், அன்னோன் காரணங் கற்பனை கடந்த பொருள் நீ என்னும் கருத்து உடைய துதி சொற்றான் என்றும் - அந்நாராயண மூர்த்தி தனக் கொரு நிமித்தமும் உபாதியும் இல்லாத பிரமப்பொருள் நீயே யென்னும் தாற்பரியத்தினைக்கொண்ட தோத்திரத்தினை. அக்காலை உரைத்தா னென்றும், பாரதத்தில் புகன்றிட்டான் - மாபாரதத்தில் ஓதினார். (எ-று).

தான் கட்டுரைச் சுவைபட நின்ற அசைநிலை. அதனா லென்புழி அன் சாரியையும், நீயே யென் புழித் தேற்றே காரமும் விகாரத்தாற் றொக்கன. தானும், ஏயும் அசை நிலைகள்.

நாராயண மூர்த்தி பிரமஞானம் பெறல்வேண்டி மைந் நாகத்திற் சிவபிரானைக் குறித்து அருந்தவமிருந்து அச்சிவபிரான் றிருவருளினால் பிரமஞான நிட்டை யெய்தப் பெற்றவாறும், அக்காலையிற் காரணங் கற்பனை கடந்த பிரமப்பொருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபிரானே யென்னுந் துதி சொற்றவாறும், வியாசமுனிவர் பாரதத்தில் உரைத்தாரென்க. (5)

தருமனொரு தாருவாச் சகோதரராம் வீரர்
சாகாதி பிறவுறுப்பாப் பசுநிரைகள் புரந்த
கருநெடுமால் பிரமமே பிராமணர்க ளின்னோர்
காழ்ப்புறுவே ராப்புனைந்து கட்டுரைத்த விடத்தே
அரயரவ ரைவர்க்கு மிடரகற்றி யென்று
மளிக்குமருட் பெருங்கடலே யறிவே நிற்குப்
பிரமபா வம்முண்மை பாரதத்தில் வாற்றாற்
பிரகடனஞ் செய்திட்டான் வியாதமா முனியே.

இது பிரமசத்தம் சிவபிரானுக்குரிய பெயராதல் கூறுகின்றது.

(இ- ள்) அரயர் அவர் ஐவர்க்கும் இடர் அகற்றி என்றும் அளிக்கும் அருட்பெருங் கடலே அறிவே - குருகுல வேந்தராகிய பாண்டவர் ஐவர்க்கும் துன்பங்களை நீக்கி எக்காலமும் அருள் வழங்கும் பெரிய காருண்ணிய சமுத்திரமே ஞான சொரூபியே, வியாதமாமுனி வியாசமாமுனிவர், பாரதத்து - பாரதத்தில், தருமன் ஒரு தாருவா - தருமபுத்திரனே ஒரு மரமாகவும் சகோதரர் ஆம் வீரர் சாகாதி பிற உறுப்பா-சகோதரர்களாகிய வீரர்களைச் சாகை முதலியவற்றை அவயவங்களாகவும், பசு நிரைகள் புரந்த கருநெடுமால் பிரமமே பிராமணர்கள் இன்னோர் காழ்ப்பு உறு வேரா - பசுக்கூட்டத்தினைக் காத்த பெரிய கண்ணபிரானையும் பிரமத்தினையும் பிராமணர்களையும் வயிரம் பொருந்திய மூலமாகவும், புனைந்து கட்டுரைத்த விடத்து - அலக்கரித்து யாத்தெடுத்துக் கூறியவழி, இவ்வாற்றால் பிரம பாவம் நிற்கு உண்மை பிரகடனஞ் செய்திட்டான் - இம்முறையான பிரமசத்தப் பொருளாமுறை உனக்கு உண்மையை வெளியிட்டார். (எ-று).

அவர் பகுதிப் பொருள் விகுதி, ஐ யுருபுகள் விகாரத்தாற் றொக்கன. ஆக வென்னுஞ் செயவெனெச்சம் ஈறு திரிந்து நின்றது. மகரம் சந்தம் நோக்கி வந்தது. ஏகாரம் முதலது எண், இடையது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசை நிறை, இறுதியது அசைநிலை.

வியாசமுனிவர் மாபாரதத்தில் பிரமபதத்தினைச் சிவபரமாக ஓது முகத்தினால் அஃது சிவபிரானை உணர்த்து நாமமாதலை இனிது புலப்படுத்தினாரென்க. (6)

**வேறு**

அயனரி யரனெனுங் கடவுளர்
மூவரு மாக்க லாதி
யுயறருந் தொழில்களுக் குரியரா
குவருவர்க் குவைகண் மூன்று
மயலறீஇ யுயவுன திச்சையான்
மருவல்சூ சித்து வஞ்சக்
கயவருக் கறியொணாப் பிரம நீ
யென்னவுங் கழறி னானால்.

இது சிவபிரான் திரிமூர்த்திகளையுந் தொழிற்படுத்துந் துரிய மூர்த்தியாதல் கூறுகின்றது.

(இ-ள்) அயன் அரி அரன் எனும் கடவுளர் மூவரும் உயல் தரும் ஆக்கல் ஆதி தொழில்களுக்கு உரியர் ஆகுவர் - அயனும் அரியும் அரனு மென்னு மூவரும் உய்தியைப் பயக்கும் ஆக்கல் காத்தல் அழித்தலென்னுந் தொழின் மூன்றிற்கும் முறையே அதிகாரிகளாவர், மயல் அறீஇ உய - அவத்தையின் நீங்கி உய்யும் பொருட்டு, உவர்க்கு உவைகள் மூன்றும் உனது இச்சையால் மருவல் சூசித்து - அம் மூவர்க்கும் அம்முத்தொழிலும் உனது ஆணையால் நிகழுதலை விளங்கத் தெரிக்குமுகத்தால், கயவருக்கு அறியொணாப் பிரமம் நீ என்னவும் கழறினான் - பொறியிலார் தேறற் கரிய பிரமப்பொருள் நீயேயென்றும் பாரதத்திற் கட்டுரைத்தார் வியாசமுனிவர். (எ-று).

தொகையொடு முற்றும்மையும், தேற்றேகாரமும் விகாரத்தாற் றொக்கன. எழுவாய் மேலைச் செய்யுளினின்றும் வருவிக்கப் பட்டது. ஆல் - அசை.

முத்தொழில் செய்து போதரும் அயன் முதலிய மூவர்க்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்முத்தொழில் செய்து மயல் ஒழித்தலால் சிவபிரானே துரிய மூர்த்தியான பிரமப் பொருளா மென்று வியாசமுனிவர் பாரதத்திற் கட்டுரைத்தார் என்க. (7)

**வேறு**

பிரமன்மா லிருவரினுந் தாழ்மையுனக்

குண்டென்று பிதற்றும் புந்தி

யிரியவொரு தலைதுரப்ப பிரமசுதன்

விசாலாக்கன் றாணு வென்றா

அரிகுரோ தத்துதித்த சங்கார

வுருத்திரனென் றறையும் பேர்கள்

கருதரிய நாதவன தமிசஞா

பகக்கன்றே கழறப் பட்ட.

இது அமிசவுருத்திர நாமங்களை வரை செய்துணர்த்தி அவர் செய்தி சிவபிரானை எய்தா வென்கின்றது.

(இ-ள்) கருதரிய நாத - இன்ன வியல்புடைடமையென்று சுட்டி யுணர்தற்கரிய முதல்வனே, பிரமசுதன். விசாலாக்கன் தாணு அரி குரோதத்து உதித்த சங்கரர் உருத்திரன் என்று அறையும் பேர்கள் - பிரமசுதனும் விசாலாக்கனும் தாணுவும் அரியின் வெகுளிக் காலைத் தோன்றிய சங்கார வுருத்திரனு மென்று சொல்லப்படும் நாமங்கள், பிரமன் மால் இருவரினும் உனக்குத் தாழ்மை உண்டென்று பிதற்றும் புந்தி இரிய ஒரு தலை துரப்ப - அயன் அரி இருவரினும் உனக்குக் கீழாந் தன்மை உண்டென்று அறிவில்லார் பிதற்றுதற் கேதுவாகும் மயக்க வுணர்வு ஒழியும்படி அதனை ஒருதலையாகத் துரப்பனவாம், உனது அமிச ஞாபகத் துக்கு அன்றே கழறப்பட்ட அந் நாமங்கள் உன்னுடைய விபூதி உருத்திரர்களை வரை செய்துணர்த்தும் பொருட்டுப் பண்டே பாரதத்திற் கூறப்பட்டனவாம். (எ- று). -

செயப்படு பொருளும் எழுவாயும் வருவித்துரைக்கப் பட்டன. என்றா வென்பது எண்ணிடைச் சொல். ஞாபகத்துக்கு என்பது விகாரம், ஏகாரம் தேற்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமசுதன் விசாலாக்கன் தாணு சங்கார வுருத்திர னென்னும் பெயர்களாற் கூறப்படுவார் விபூதி உருத்திரர்களா தலின் அவர் செயல்கள் பற்றிச் சிவ பிரானுக்கு வரக்கடவதோர் இகழ்ச்சி இல்லையென்க.

அற்றேல், அப்பெயர்களின்றி வரும் குறைவுடைச் செயல்கள் யாவரைச் சார்ப வெனின், அஃதுணர்த்தற்கன்றே வருஞ் செய்யுள் எழுந்த தென்பது. (8)

**வேறு**

யாண்டுனது விபூதியுருத் திரதரும மான
ஞாபகமாம் பொருட்டுரைத்த விசேடபத மின்றோ
ஆண்டிழிபி னவைசொருபத் தலைமைபோ திக்கு
மனேகபிர மாணத்திற் றோடமடை தலினாற்
நீண்டலுறா சருவேச னாகியுயர் நின்னைத்
திசைமுகனு மாறானுந் தெருமரமுன் னொருநாள்
நீண்டதழற் பிழம்பாகி மறைந்து மன்று
ணிமலவறி வினர்க்குவெளி நின்ற பெருஞ் சோதீ.

இது விமலராகிய சிவபிரானைக் குற்றச் செய்தி சாரமாட்டா வென்று நிரூபிக்கின்றது.

(இ-ள்) திசை முகனும் மால்தானும் தெருமர முன் ஒருநாள் நீண்ட தழற் பிழம்பாகி மறைந்தும் - சதுர் முகனும் திருமாலும் மயங்கப் பண்டொரு ஞான்று உயர்ந்த தோர் அங்கி வடிவாய் ஒளித்தும், நிமல அறிவினர்க்கு வெளிநின்ற பெருஞ்சோதீ - குற்ற நீங்கிய மெய்யறிவுடைய பக்குவர் பொருட்டுச் சிற்சபையிலே தாண்டவத் திருமேனிகொண்டு திரோதான நீங்க நின்றருளும் அருட்பெருஞ் சோதியே, யாண்டு உனது விபூதி உருத்திர தருமமான ஞாபகம் ஆம் பொருட்டு உரைத்த விசேடபதம் இன்றோ - எவ்விடத்தில் உன்னுடைய அமிச உருத்திரர் தருமங்களானவை ஞாபகமாகும் பொருட்டு உரைத்தன வென்று மேற்கூறப்பட்ட நாமங்கள் பிரயோகிக்கப்பட்டிலவோ, ஆண்டு - அவ்விடத்து, இழிபினவை - குற்றச் செய்திகள், சொருபத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமை போதிக்கும் அனேக பிரமாணத்தில் தோடம் அடைதலினால் - உனது சொரூப முதன்மையை அறிவிக்கும் எண்ணிறந்த சுருதிப் பிரமாணங்களில் குற்ற முண்டாகலின், சருவேசனாகி உயர் நின்னைத் தீண்டல் உறா - அனைத்தையும் ஆளு நாயகனாய் மேம்பட்டு விளங்கும் பரமசிவனாகியவுன்னைச் சார மாட்டா, உன்னுடைய விபூதி உருத்திரர் தம்மையே சாருவனவாம். (எ-று).

உன்னுடைய விபூதி உருத்திரர் தம்மையே சாரு வனவா மென்பது குறிப்பெச்சம், ஆயின வென்பதில் காலவெழுத்து முதல் குறைந்து நின்றது. ஓகாரந் தெரிநிலை.

இயல்பாகவே குற்றத்தினீங்கி விளங்கும் பரம் பொரு ளென்று வேதாகமங்கள் கூறும் சிவபிரானைக் குற்றச் செய்தி சாருமென்றல் அமையாமையின், அன்ன வினையுழப்புக்கள் முன் சொன்ன விபூதி உருத்திரர் தம்மையே சார்வனவா மென்க.

அற்றேல், பாரதத்துட் போந்த கீதையில் கண்ணபிரான் தனக்குப் பரத்துவ சித்தி மிகுத்தெடுத்தோதிய தென்னை யெனின்- அவ்வாசங்கையை ஒழித்தற் கன்றே எழுந்தன வருஞ் செய்யுட்க ளென்பது. (9)

**வேறு**

கீதையி லுனக்குப் பரத்துவம் வெளியா
னன்றிநற் கீதத்திற் பிரிய
நாதனே கூட நெறியினாற் கண்ண
னவின்றிடப் பட்டதாங் கதன்றே
மேதையின் வலியோன் பார்த்தன்றான்
றெளிய விளங்குறாக் கீதையி னருத்த
மாதர வதனான் மறுவலுங் கண்ண
னுகீதையாகவே யறைந்தான்.

இது பாரதத்துட் போந்த கீதையில் சிவபரத்துவம் உள்ளுறையாக உரைக்கப்பட்டவாறு கூறுகின்றது.

(இ-ள்) கீதத்தில் பிரிய நாதனே - கீதப்பிரிய ராகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரானே, கீதையில்-பாரதத்துட் போந்த கீதையின் கண்ணே, உனக்குப் பரத்துவம் வெளியானன்றிக் கூட நெறியினால் கண்ணன் நவின்றிடப்பட்டது - உனது பரத்துவமானது வெளிப்படை யானன்றி உள்ளுறை யானே கண்ணபிரானாற் சொல்லப்பட்டது, அதன்றே - அதனாலன்றே, மேதையின் வலியோன் பார்த்தன் தான் தெளிய - அறிவினாற்றலையுடையனாகிய பார்த்தன் தெளியும் பொருட்டு, விளங்கு உறாக் கீதையின் அருத்தம் - அவற்குத் தெளிவுக்காட்சியாகாத அதன் பொருளை வாங்கி, கண்ணன் ஆதரவதனான் மறுவலும் அனுகீதையாக அறைந்தான் - அக்கண்ணபிரான் அருச்சுனன் மாட்டுத் தனககுளதாய பேரன் பினால் மறித்தும் அனுகீதையாகப் புனைந்து ஓதுவானாயிற்று. (எ-று).

உனக்குப் பரத்துவம் கூடநெறியினால் உரைக்கப்பட்ட தென்பதனை யானைக்குக் கோடு கூரிதென்பது போலக் கொள்க. இது, "இதனினிற்றிது வென்னுங் கிளவியும்" என்னுஞ் சூத்திர விதி. ஆங்க வென்னுங் கட்டுரை அசைநிலை ஈறு திரிந்துநின்றது. அதனாலன்றே என்னும் அன் சாரியையும் மூன்றாவதும் விகாரத்தாற்றொக்கன. அன்றீற் றேகாரம் ஈண்டுத் தெளிவு. பொருட்டாய் நின்றது. தெளிய வென்னுஞ் செயவெனெச்சங் காரியப் பொருளில் வந்தது. பின் வந்த கீதை கட்டுப்பொருட்டு. வாங்கி யென்பது சொல்லெச்சம் அது பகுதிப் பொருள் விகுதி. ஏகாரம் அசைநிநிலை ஆக்கம் விரித்துரைக்கப் பட்டது.

கண்ணபிரான் கீதையிற் சிவபரத்துவம் உள்ளுறுத்து ஓதுதலின், அருச்சுனன் உண்மை காண மாட்டாமல், ஐயுற்றுக் கடாவினனாக, கண்ணபிரான் அவனுக்குத் தெளிவு போதர அதன் பொருளை வாங்கி அனுகீதையாக மறுவலும் புனைந்து உரைத்து மலைவு தீர்த்தானென்க (10)

ஆதியாம் புருடன் றனைச்சரணாக
வடைகின்றேன் யானெனக் கண்ணன்
ஓதிய தானு மொளாநிய மிக்கு
முவமையில் பரம்பொருளாகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதனா மீசன் றனைப்பர முத்திப்

பெரும்பயன் றலைப்பட நனிநீ

காதலா வடைதி யெனவருச் சுனற்குக்

கட்டுரைத் திடுதலினாலும்.

வீறுசா லறிவிற் பார்த்தற்குத் தன்போன்

மீடலி லானந்த முத்திப்

பேறுறக் கண்ணன் றனக்குபா சிக்கத்

தகும்பிறனொருபதி யுண்மை

தேறுணர் வாயிற் றாண்டுமற் றியானா

ருள்ளத்துஞ் சிவனுவ லென்று

கூறலிற் கண்ணன் கவர்த்தொரா சங்கை

குறுகிய தனையனுக் கம்மா.

இவை இரண்டும் ஒரு தொடர்.

இவை கீதார்த்தத்தில் அருச்சுனனுக்கு ஐயவுணர்வு யாங்ஙனம் நிகழ்ந்த தென்னுங் கடாவை யாசங்கித்து இறை கூறுகின்றன.

(இ-ள்) கண்ணன் யான் ஆதி ஆம் புருடன்தனைச் சரணாக அடைகின்றேன் என ஓதியதானும் - கண்ணபிரான் நான் பரமுத்திப் பெரும்பயனை அடையும் பொருட்டு ஆதியாயுள்ள புருடனைச் சரணாக அடைகின்றேன் என்று கூறியது பற்றியும், நீ பரமுத்திப் பெரும் பயன் நனி தலைப்பட எல்லாம் நியமிக்கும் உவமை இல் பரம்பொருள் ஆகும் நாதன் ஆம் ஈசன் தனைக் காதலால் அடைதி என அருச்சுனற்குக் கட்டுரைத்திடுதலினானும் - நீயும் பரமுத்திப் பெரும் பயனை மிக வெய்தற் பொருட்டு எல்லாவற்றையும் நியமிக்கும் ஒப்பில்லாத பரம்பொருளாகியும் பசுபதியாகியும் உள்ள ஈசனை அன்பினாற் சரணாக அடைக வென்று அருச்சுனனுக்கு யாப்புறுத் தோதல் பற்றியும், வீறுசால் அறிவிற் பார்த்தற்கு - பெருமை சான்ற அறிவினையுடைய அப்பார்த்தனுக்கு, தன்போல் - தன்னைப்போல, மீள்தல் இல் ஆனந்த முத்திப்பேறு உற - மீண்டு வராத வீட்டின்பமாகிய பேற்றினை யெய்தும் பொருட்டு, கண்ணன் தனக்கு உபாசிக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகும் பிறன் ஒரு பதி உண்மை - கண்ண பிரானா லுபாசிக்கத் தக்க மற்றொரு தலைவன் உளனாதல், தேறு உணர்வு ஆயிற்று - தெளிவு காட்சியாயிற்று, மற்று ஆண்டு - பின் அவ்வுபதேசவுரையில், கண்ணன் யான் யார் உள்ளத்தும் சிவணுவல் என்று கூறலின் - அக் கண்ணபிரான் யானே யாவருள்ளத்தும் பொருந்தியுறைவன் என்று சொல்லுதலின், அனையனுக்குக் கவர்த்து ஒரு ஆசங்கை குறுகியது - அவ்வருச்சுனனுக்கு இருதலைப் பட்டு ஒரு ஐயவுணர்வு உளதாயிற்று. (எ-று)

பரமுத்திப் பெரும்பயன் தலைப்பட வென்பது மேலுஞ் சென்றியையும், பெற்றத்தாற் பெற்ற பயன் என் புழிப் போல ஓதியதானு மென்புழி அன்சாரியையும் நீ யென் புழி எச்சவும்மை யும் விகாரத்தாற் றொக்கன, கண்ணன் றன்னால் உபாசிக்கத் தகும் என்னும் மூன்றாவது கண்ணன் றனக்குபாசிக்கத் தகுமென நான்காவதனாற் றோன்றியது, "அதனாற் செயற்படற்கொத்த கிளவியும் நான்க னுருபிற் றொன்னெறி மரபின தோன்றலாறே." என்னும் விதி. மற்று வினைமாற்றின் கண் வந்தது. தேற்றேகாரம் விகாரத்தாற் றொக்கது, எஞ்சாப் பொருட்டாகும் யாவர் என்னும் பெயர் ஆரென மரீஇயிற்று. கேட்பிக்கும் அம்ம வென்னு மிடைச்சொல் ஈறு திரிந்து நின்றது.

கண்ணபிரான் மேலை வீட்டின்பம் எய்தற்பொருட்டு ஆதியான பரமபுருடனை யான் சரண் அடைகின்றேன், அருச்சுனனே நீயும் அவ் வீட்டின்பம் எய்தற் பொருட்டு அவ் வீசனைச் சரணடைக என்று ஓதிப், பின்னர் நானே எல்லா ருளத்திலும் கலந்துறையும் பரம்பொருளென்று மாறுறக் கூறுதலின், அருச்சுனனுக்குக் கீதையில் ஐயப்பாடு நிகழ்தற்கு இடனுளதாயிற் றென்க. (11, 12).

**வேறு**

இவ்வாற்றான் மருளிவன்கட் டோன்றியதங்
கையத்தா னெனினு மாக
அவ்வாறன் றேற்றிரிபா லாயினுமா
குகவின்னு மதனை வாங்கிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வாற்றா லியானுரைப்ப தெவன்கொளன்மற்
றிவனென்று செப்பு முண்மை
தெவ்வாற்றா தொழிந்தமையக் கண்ணனே
யுரைத்தமையாற் றெளிக நன்றே.

இது மேலதனை வலியுறுத்துகின்றது.

(இ-ள்) அங்கு இவ்வாற்றால் இவன்கண் மருள் தோன்றியது கீதார்த்தவுபதேசத்தில் இந்நெறியால் இவ்வருச்சுனனுக்கு மயக்க வுணர்வு தோன்றிற்று. ஐயத்தா னெனினும் ஆக - அம்மயக்க வுணர்வு, ஐயவுணர்ச்சியினால் ஆயதெனினும் ஆகுக, அவ்வாறு அன்றேல் திரிபால் ஆயினும் ஆகுக - அங்ஙனமன்றி விபரீத வுணர்ச்சியினால் ஆய தெனினும் ஆகுக, இவன் - இப்பெற்றியனாகிய அருச்சுனன், இன்னும் செவ்வாற்றால் யான் உரைப்பது கொளல் எவன் என்று - மேலும் செந்நெறியால் யான் உபதேசிக்கும் அப்பொருளைக் கொள்கிற்பது எங்ஙனமென்று, கண்ணனே உரைத்தமையால் - கண்ணபிரான் அனுகீதாரம்பத்திற் கூறியது கொண்டே, செப்பும் உண்மை தெவ்வு ஆற்றாது ஒழிந்தமை - அவன் கீதையுட் கூறிப்போந்த வுண்மையை அருச்சுனன் கொள்ளாது விட்டானென்பது, நன்கு தெளிவு ஆம் - பெரிது தேற்றமாம். (எ-று).

அம்மயக்க வுணர்வென்பது அவாய் நிலையான் வருவிக்கப்பட்டது. தான், மற்று அசைநிலை. எவன் வினா வினைக் குறிப்பு முற்று, தெவு தெவ்வென ஈறு திரிந்து நின்றது. அது கொள்ளுதற் பொருட்டாதல் "தெவுக் கொளற்பொருட்டே" என்னுஞ் சூத்திரத் தானறிக. "நன்று பெரிதாகும்" ஏகாரம் ஈற்றசை, தேற்றேகாரம் பிரித்துக்கூட்டி யுரைக்கப்பட்டது.

யான் கீதையில் அறிவுறுத்திய தத்துவத்தினை இரட்டுறக் கொண்டாகத் திரிபுறக் கொண்டாக அருச்சுனன் மெய்யுணர்ந் திலன். இப் பெற்றியான் யான் அதனை மீட்டும் கொளுத்த லுறினும் மனம் பற்றிக் கோடல் யாங்ஙன மென்று, கண்ணபிரான் அனுகீதாரம் பத்திற் புலந்து உசாவுற்றுரைத்துக் கொண்டே, ஆண்டு ஐயப்பாடு அவற்கு அங்ஙனம் உளதாய தென்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெற்றெனத் துணியப்படுமென்க. (13)

யோகத்தி லேறியமெய்ச் சிந்தையினிற்

கருச்சுனமுன்னுரைத்தேன் வாய்மை

மோகத்தை யடைந்துவெளிக் காட்சியிப்போழ்

துடையன்யான் மோக நிற்குப்

போகத்தேர்ந் துண்மைநிலை புகலும்வலி

யிலனென்று புகன்று கண்ணன்

ஏகச்சந் தேகத்தோடே திரிபா

யுரையினவற் றெருட்டி யிட்டான்.

இது கண்ணபிரான் அருச்சுனனுக்கு அனுகீதை கூறியவாறு இது வென்கின்றது.

(இ-ள்) அருச்சுன - அருச்சுனா முன் யான் யோகத்தில் ஏறிய மெய்ச்சிந்தையின் நிற்கு வாய்மை உரைத்தேன் - நான் அக்காலத்துச் சோகம் பாவனையி னெய்திய மெய்யுணர்வினால் உனக்கு உண்மை கண்டு கூறினேன், இப்போழ்து மோகத்தை அடைந்து வெளிக் காட்சி உடையன் - இக்காலத்து அம் மெய்யுணர்வு நீங்கிப் புறவிந்திரியக் காட்சியுடைய னாயினேன், நிற்கு மோகம் போக - ஆகலின் உனக்கு ஐயம் நீங்கித் தெளிவுண்டாக, உண்மைநிலை தேர்ந்து புகலும் வலியிலன் என்று கண்ணன் புகன்று - பொருளின் உண்மை நிலை தெளிந்து உரைக்கும் வன்மையுடைய னல்லே னென்று கண்ணபிரான் கூறி, சந்தேகத்தோடு திரிபு ஏக - ஐய வுணர்வோடு விபரீத வுணர்வு நீங்க, ஆய் உரையின் அவற் றெருட்டி யிட்டான் - நுட்ப வுரையினால் அவ்வருச்சுனனைத் தெளிவித்தான். (எ-று).

சிந்தை ஆகுபெயர். கண்டு சொல்லெச்சம். மோகம் ஈண்டு ஐய வுணர்வின் மேற்று, ஆய் - நுட்பம். அது "ஒய்த லாய்த னிழத்தல் சாஅ, வாவயி னான்கு முள்ளத னுணுக்கம்" என்னுஞ் சூத்திரத்தானறிக, தெருட்டியிட்டான் ஒரு சொன்னீர்மைத்து.

கண்ணபிரான், அருச்சுனா! உனக்கு நான் அன்று மெய்யுணர்வால் நன்று உபதேசித்த தத்துவத்தினை இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யுணர்வினால் நன்றுரைப்ப தெங்ஙனம் என்று கூறி, உரைத் திறத்தினால் அவனுக்கு அதன் கண் ஐயம் ஒழித்தா னென்க. (14)

தனஞ்சயன்மாட் டுளநண்பு கருதிக் கண்ணன்
சந்தேக விபரீத முழுது நீங்கி
மனங்கொளவன் னோன்வாய்மை யுறுகவென்று
மதித்துமனம் வாக்கிறந்த மாண்பிற் றாகிச்
சினங்கடிந்து சாந்தியுறு விக்குமது தன்னைச்
செல்காலத் தொருசித்தன் காசிபனுக் குரைத்த
முனம்படுநற் கதையினினி தெளிதுரைத்தன் னவற்கு
மோகமற முதன்ஞானம் பெருக்கி னானே.

இது கண்ணபிரான் அனுகீதையில் அருச்சுனற்கு அறிவு கொளுத்தியவாறு கூறுகின்றது.

(இ-ள்) கண்ணன் - கண்ணபிரான், தனஞ்சயன் மாட்டு உள நண்பு கருதி - தனஞ்சயனிடத்துத் தனக் குளதாகிய நட்பினை யெண்ணி, அன்னோன் - அவன், சந்தேக விபரீதம் முழுதும் நீங்கி - ஐயந் திரிபு முற்றவகன்று, மனங்கொள வாய்மையுறுக வென்று மதித்துமனம்பற்றி மெய்யுணர்வு தலைப்படுக வென்று எண்ணி, மனம் வாக்கு இறந்த மாண்பிற்று ஆகி - மனவாசகங் கடந்த மாட்சியினையுடையதாய், சினம் கடிந்து சாந்தி யுறுவிக்கும் அது தன்னை - வெகுளியை வீட்டிச் சாந்தியை மிகுவிக்கின்ற அவ்வுபதேசத்தினை, செல் காலத்து ஒரு சித்தன் காசிபனுக்கு உரைத்த முனம்கொள் கதையால் - சென்ற காலத்தில் சித்தன் ஒருவன் காசிப முனிவனுக்குக் கூறிய குறிப்புப் பொருளைப் பொருந்திய சரித்திரத்தினால் அன்னவற்கு இனிது உரைத்து - அவனுக்கு இனிது சொல்லி, மோகம் அற முதல் ஞானம் பெருக்கினான் - சந்தேக விபரீதம் நீங்க முதன் ஞானத்தைப் பெருகச்செய்தான் (எ-று).

கண்ணன் கருதி உறுகவென்று மதித்து அது தன்னைக் கதையால் உரைத்து முதன் ஞானம் பெருக்கினான் எனக் கூட்டுக.

முன்னம் - குறிப்பு; அது முனம் என விகாரம் ஆயிற்று. முதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம் எனினும் அடி ஞானம் எனினும் ஒக்கும். ஏகாரம் ஈற்றசை.

கண்ணபிரான் அருச்சுனன் மாட்டுளதாய நண்பு காரண மாகக் கீதையில் அவன் ஐயுற்ற பொருளைத் தான் கேட்ட கதை யொன்றினால் விளங்க உரைத்துத் தெளிவித்தான் என்க. *(15)*

**வேறு**

அருச்சுனற்கு மனவுறுதி யெய்தவோ
ரிதிகாச மதனைக் கண்ணன்
கருத்ததனிற் புந்திமனந் தமைப்பனவ
தம்பதிபோற் கற்பித் தேநற்
குருத்தனக்குஞ் சீடனுக்கு நிகழ்வதோர்
சம்வாதக் கொள்கை யாலே
விரித்துவெளிப் படுத்துரைத்தா னதனையருட்
பெருங்கடலே விமல மூர்த்தீ.

இது கண்ணபிரான் அருச்சுனனுக்கு அனுகீதார்த்தம் உபதேசித்தவாறு தொகுத்துக் கூறுகின்றது.

(இ-ள்) அருட் பெருங் கடலே விமல மூர்த்தி - அருட் பெருங் கடலே தூய திருமேனி யோய்! கண்ணன் - கண்ணபிரான், அருச்சுனற்கு மன உறுதி எய்த - அருச்சுனனுக்குக் கீதார்த்தத்தில் நிச்சய உணர்வு பிறக்கும் பொருட்டு, ஓர் இதிகாசம் அதனை - தான் ஓர்ந்த இதிகாசப்பொருளை. கருத்ததனின் - தன் மனத்திற் கருதி, புந்தி மனம் தமை - தன் புத்தி மனங்களை, பனவ தம்பதிபோற் கற்பித்து - பிராமண தம்பதியாகப் புனைந்து, நல் குரு தனக்கும் சீடனுக்கும் நிகழ்வது ஓர் சம்வாதக் கொள்கையால்-சற்குருவுக்கு மாணாக்கனுக்கும் நிகழ்வதொரு சம்வாத முறையினால் அதனை - தான் கீதையிற் கூறிய உண்மை ஞானத் தினை விரித்துப் வெளிப்படுத்து புலப்படுத்து உரைத்தான்.(எ-று).

ஓர் இதிகாசம் - வினைத் தொகை. கருதி என்பது ஆற்றலாற் கொள்ளப்பட்டது. அது பகுதிப் பொருள் விகுதி. ஏகாரம் இரண்டும் அசைநிலை. தகரம் சந்தம் நோக்கி வந்தது. கருத்ததனின் என வேண்டாது கூறியது; கண்ணபிரானுக்குச் சிவோகம் என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை ஞானம் இயல்பானன்றிச் சாதகச் செய்தியால் விளங்கியது என்பது அறிவித்தற்கு.

கண்ணபிரான் அருச்சுனன் உறுதி கடைப்பிடித்து உய்யத் தான் கேட்டு உணர்ந்த இதிகாசப் பொருளை மனத்து எண்ணித் தன் புந்தி மனங்களைத் தம்பதிகளாகக் கற்பித்துச் சம்வாத நெறியினால் அக் கீதார்த்த உண்மையை அவற்கு இனிது புலப்படுத்தினான் என்க. (16)

பூதங்க ளெவையாணீ யார்பரந்தா
னெதுவெற்குப் புகறி யென்ற
ஏதந்தீர் சீடனுக்குக் குரவனறி
வுறுத்தவுண்மைப் பிரம ஞான
வாதந்தீர் முத்திவர லாற்றைப்பார்த்தன்
மனங்கொள்ள வெடுத்துநன்கு வகுத்துச்சீடன்
போதஞ்சேர் குருயாரென் றவற்குநான்
குருசீடன் புந்தி யென்றான்.

இதுவுமது

(இ-ள்) பூதங்கள் எவை-பூதங்கள் யாவை? யான் நீ யார் - யான் ஆர் நீ யார், பரம் தான் எது - பரம் பொருள் தான் யாது, எற்கு புகறி என்ற-எனக்கு எடுத்துரை என்று வினவிய, ஏதம் தீர் சீடனுக்கு - குற்றம் நீங்கிய மாணாக்கனுக்கு, குரவன் அறிவுறுத்த வாதம் தீர் உண்மைப் பிரமஞான முத்தி வரலாற்றை - குரவன் செவியறிவுறுத் தருளிய விவாத மற்ற பிரமதத்துவ ஞானோபதேச மாகிய முத்தி வரலாற்றினை, பார்த்தன் மனம் கொள்ள எடுத்து நன்கு வகுத்து - அருச்சுனன் மனம் பற்றி உணர எடுத்து நன்கு கண்ணபிரான் கூறி, போதம் சேர் குரு (யார்) சீடன் யார் என்றவற்கு-ஞானியாகிய குரவன் யாவன் சீடன் யாவன் என்று வினவியவனுக்கு, நான் குரு புந்தி சீடன் என்றான் - அருச்சுன ! நானே அக் குரவன் என் சித்தமே அச் சீடன் என்று அறிக என்று அவன் கூறினான். (எ-று)

யார் என்னும் வினாவினைக் குறிப்பு முற்று யான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதனோடும் சீடன் என்பதனோடும் கூட்டியுரைக்கப்பட்டது. உண்மைப் பிரமஞானம் வாதந்தீர் பிரமஞானம் என்க. வினை முதல் அவாய் நிலையான் வந்தது. வகுத்து - வகுக்க.

பொருளியல்பு தெரியவேண்டி மாணாக்கன் நிகழ்த்திய வினாக்களுக்கு ஆசிரியன் இறுத்த பிரமஞான வீட்டு நெறியினைக் கண்ணபிரான் அருச்சுனனுக்கு அறிவுறுத்தினானாக, அவண் ஆண்டு ஆசிரியன் மாணாக்கன் என்னப் பட்டார் யாவர் என்ன, நானும் மனமும் ஆசிரியனும் மாணாக்கனும் ஆவேம் என்று அறிக என்றான் என்க. *(17)*

**வேறு**

தன்னுடைய நன்னெஞ்சின் நிறுத்தியிட்ட பிரம
சத்தியினா லிருதயத்திற் சார்ந்த கட்டுப்
பின்னமுறீஇ வீடெய்தப் பெற்றதுநன் குணர்ந்து
பிறங்காதி புருடனைத்தான் சரணமாகத்
துன்னுகின்றே னென்றதுமற் றதுவிளக்கற் பொருட்டாஞ்
சோகம்பா வனையால்யா னுயிர்க டோறும்
மன்னுவனென் றதுகீதை யருத்த மிந்த
மரபினருச் சுனன்றெளிய வகுத்தான் கண்ணன்.

இது முடிந்தது முடித்தலாய் எழுந்து அனுகீதைக்குப் பயப்பாடு கூறுகின்றது.

(இ-ள்) கண்ணன் - கண்ணபிரான், தன் உடை நல் நெஞ்சில் நிறுத்தியிட்ட பிரமசத்தியினால் - தன்னுடைய தூய மனத்தின் கண்ணே நிறுத்திய பிரம பாவனையில் விளைந்த ஞானத்தினால், இருதயத்திற் சார்ந்த கட்டு - இருதயத்திற் பொருந்திய கிரந்தி, பின்னம் உறீஇ வீடு எய்தப் பெற்றது நன்கு உணர்ந்து - வேறுபட்டு வீடுறப் பெற்றதனை நன்கு தெளிந்து, பிறங்கு ஆதி புருடனைத் தான் சரணாக அடைகின்றேன் என்றது - விளங்குகின்ற ஆதிபுருடனைத் தான் சரணாக அடைகின்றேன் என்றது, அது விளக்கற் பொருட்டு ஆம் - அப்பேற்றினை அருச்சுனனுக்குப் புலப்படுத்தற் பொருட்டேயாகும், யான் உயிர்கள் தோறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னுவன் என்றது - யான் உயிர்கள் தோறும் பொருந்தியுறைவன் என்றது, சோகம் பாவனையால் - சோகம் பாவனா சித்திகொண்டே என்று, கீதை அருத்தம் - கீதையினது யதார்த்தத்தினை, இந்த மரபின் - இம் முறையானே, அருச்சுனன் தெளிய வகுத்தான் - அருச்சுனன் தெளியுமாறு அனுகீதையினால் வகுத்துக் கூறினான். (எ-று)

சத்தி - ஞானம். மற்று - அசை. பொருட்டாம் என் புழியும், பாவனையால் என்புழியும் தேற்றேகாரம் விகாரத்தால் தொக்கன.

சோகம் பாவனையின் எய்திய உண்மை ஞானத்தினானே இருதய பந்தம் விடப் பெற்றுச் சீவன் முத்தன் ஆனதைத் தெளிவிக்க வேண்டியே ஆதிபுருடனைச் சரணடைகின்றேன் என்றும், சோகம் பாவனை கொண்டே உயிர்கள் தோறும் பொருந்தி உறைகுவன் என்றும், கீதையில் உனக்குக் கூறினேன் என்று அருச்சுனனுக்கு அனுகீதையினால் கண்ணபிரான் மலைவறுத் தான் என்க.

அற்றேல், மாபாரதத்தில் கண்ணன் நான் ஒரு தெய்வத் தினையும் உபாசித்தல் செய்கின்றிலன் என்றும், நீலகண்டனை ஞானியர் சேவியார் என்றும் கூறியது என்னையோ? எனின், அவ் ஆசங்கை ஒழித்தற் கன்றே வருஞ் செய்யுள் எழுந்தது என்பது.

**வேறு**

நானொரு தேவை யுபாசிப்ப தின்றா
லெனக்கண்ணன் நவின்றவா சகத்திற்
கானதாற் பரிய முதிட்டிரற் கன்பு
தன்னிடத் தாக்குமத் தனையே
ஈனமி லறிஞர் தேவனா நீல
கண்டனைச் சேவியா ரென்றல்
தானவ னாகும் ஞானியர் விடய
மல்வழிச் சுருதிபஃ றவறாம்.

இது மேலனவற்றிற்குத் தாற்பரியங் கூறிச் சிவ பரத்துவம் வலியுறுத்துகின்றது.

(இ-ள்) கண்ணன் - கண்ணபிரான், நான் ஒரு தேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபாசிப்பது இன்று என நவின்ற வாசகத்திற்கு -யான் ஒரு தெய்வத்தினையும் உபாசித்தல் செய்கிலன் என்று தருமபுத்திரனுக்குக் கூறிய வசனத்திற்கு, ஆன தாற்பரியம் -பொருத்தமுடைத்தான கருத்து, உதிட்டிரற்குத் தன்னிடத்து அன்பு ஆக்கும் அத்தனையே - உதிட்டிரனுக்குத் தன் கட் பத்திவளரச் செய்யும் அத்தனையே யாம், ஈனம் இல் அறிஞர் தேவனாம் நீலகண்டனை சேவியார் என்றல் - குற்றம் நீங்கிய ஞானிகள் மகா தேவனாகிய நீல கண்டனைச் சேவை செய்யார் என்றது, தான் அவனாகும் ஞானியர் விடயம் - சிவனுள் அடங்கி ஏகனாகப் பெற்ற ஞானிகள் விடயமாம், அல் வழிச் சுருதி பல் தவறாம் - இவ்வாறு கொள்ளாத வழி அதர்வசிகை முதலிய சுருதிகள் எல்லாம் வீண் சொல்லாய் இழுக்குறும். (எ- று).

முற்றும்மை விகாரத்தால் தொக்கது. உபாசிப்பதென்பது அத்தொழின்மேல் நின்றது. ஆல்-அசை.

உதிட்டிரனுக்குத் தன்கட் பத்தி மிகுவித்தல் வேண்டியும், சிவமேயாய சீவன் முத்தர்க்கு வேறாய் நின்று செயக்கடவ சேவையில்லாமை பற்றியும் அங்ஙனம் கூறப்பட்டன. ஆகலின், அவை கொண்டு பரர் கருத்து நிரம்புமாறு இல்லை என்க. (19)

**வேறு**

சம்புவினுக் குரியமகத் துவத்தினையிவ் வாறு
தலைப்பெய்வோ னாகியருந் தொனிமார்க் கத்தில்
அம்புவியி னடக்குமவர் தாங்கள் சிகா மணியாய்
அரியினவ தாரனா யாரியனாய்ச் சிறந்த
உம்பர்புகழ் பாரதமா மிதிகாச மொழிந்த
சௌரியாம்வி யாதனையு முவனுயிர்ச்சான் றாகும்
செம்பவளச் சடைக்காட்டி லம்புலிவைத் தோம்புஞ்
சிவபெருமான்றனையுமியாஞ் சிரசின்வணங் குதுமே.

இது மாபாரதம் ஓதிய வியாச முனிவருக்கும் அவருக்கு அறிவு விளக்கஞ் செய்யும் சிவபிரானுக்கும் வணக்கம் கூறு கின்றது.

(இ-ள்) சம்புவினுக்குரிய மகத்துவத்தினை இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பெய்வோனாகி - சம்புவாகிய சிவபிரானுடைய மகிமையை இங்ஙனம் சுருதியில் முகந்து நன்கு பெய்பவராகி, அருந் தொனிமார்க்கத்தில் அம்புவில் நடக்கும்வர் தங்கள் சிகாமணியாய் - அரிய தொனிப் பொருள் நடையில் அழகிய புடவியிலே நடக்கும் புலவர் சிகாமணியாகி, அரியின் அவதாரனாய் - அரியின் அவதார விசேடராய், ஆரியனாய்-பூசிக்கப்படுபவராகி, சிறந்த உம்பர் புகழ் பாரதம் ஆம் இதிகாசம் மொழிந்த சௌரியாம் வியாதனையும் - சிறந்த உம்பரும் புகழப்படும் மாபாரதமாகிய இதிகாசத்தினைக் கூடிய சதுரப் பாடுடையராகிய வியாச முனிவரையும், உவன் உயிர்ச் சான்று ஆகும் - உவர் உயிர்ச்சான் றெனப்படும் அந்தர் யாமியாய் விளங்கும், செம்பவளச் சடைக்காட்டில் - செம்ப வளம் போலும் சடையாகிய அடவியில், அம்புலி வைத்து ஓம்பும் - அம்புலியை இருத்திப் புரக்கும், சிவபிரான் தனையும் - சிவ பிரானையும், யாம் சிரசின் வணங்குதும்- யாம் தலையினால் வணங்குவோம். (எ-று).

தலைப் பெய்வோன் - ஒரு சொன்னீர்மைத்து. உம்பரும் என்னும் சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது

சிவபரத்துவம் வெளிப்பட நமக்கு உறுதிதரும் மாபாரதம் ஓதிய வியாச முனிவரையும், அவர் அது செய்யுமாறு பிரேரித்து நின்ற அந்தரியாமியாகிய சிவ பிரானையும் வணங்குவாம் என்க.

பாரத தாற்பரிய சங்கிரகம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

# சிவகர்ணாமிர்தம்

உ

கணபதி துணை

## சிறப்புப் பாயிரம்

திருவாவடுதுறையாதீனத்து
ஸ்ரீ.இராமலிங்கசுவாமிகள்
இயற்றியது.

ஏர்பூத்த புவி மடந்தையந்தரத்தின் மேலுலக மெவையுமோர்காற், பார்பூத்தநந்தலை மேல்விழினும் விழுமென்ற றஞ்சிப்பலகை நீட்டி, வார்பூத்த வவ்வுலகமெவற்றினையுந் தாங்குதல் போல்வா னளாவிச், சீர்பூத்த பலதெங்கந்தருக்கண் மேலோங்கும் வளச்செ ன்னி நாட்டில். (1)

கருது பலவிளந்தெங்கின்வண் குருத்தின் மேலிவர்ந்துகால்க ணீட்டி, மருவுபலகருமந்தியுறைதல் கௌணியர் பெருமான்வா திற்றோற்ற, பெருகுகருஞ்சமணர் பலகழுவின் மேலிவர்ந்தமரும் பெற்றிபோலுந், திருவளர்பூம்மொழில் சூழ்ந்த பெருஞ்செல் வப்பனசை யெனுஞ் செழுந்தலத்தில். (2)

வலமலியும் புகழ்க்காசியகிலே சன்றிருவுள்ள மகிழ்ச்சிபூப்ப, நலமலியுங்குமர குருபரமுனிவர் பெருமான் சீர் நண்ணிமேலாம், புலமலியுந் திருமரபுமேன் மேலுந்தழைத்திந்தப் புவிமேலோங் கப், பலமலியும் புலவரெலாமுன் செய்பெரும் புண்ணியத்தின் பயனேயாகி. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியேன் போல்வார் பலரும் வேண்டுவன பெற்றுய்யவமர்ந்
துவாழ்வோ, னொடியாத பெருஞ்செல்வம் பெருங்கல்வியிவ்வி
ரண்டுமொருங்கு பெற்றேன், படியாவுமையா நீ பல்லாண்டுவாழ்
கவெனப் பலர்க்குமீவோன், முடியாவிடின் சொல்வாய்மை
பொறை கருணை முதனலங்கண் முழுதும் வாய்ந்தோன். (4)

துய்யபுகழ்க்காசி முதற்சே துவரையுந் தருமந் துலங்கச்செய்
வோன், வெய்யமறப்பகையினருமொரு பிழையுஞ் சொலமுடி
யாமேன்மையாளன், வையமொளிர் புகழ்க்குமாரசாமி முனிவர
ர்கோமான் மன்றவாணன், செய்யதனிப்பரத்து வநன்குணர்த்
துமிந்நூன்மொழி பெயர்ப்பாயென்று செப்ப. (5)

தாங்கு புகழையா நின் றிருவருளிவ் வாறாயிற்றடை யென்னே
சீர், தேங்குமிது செயமுன்னா ளென்னபெருந்தவமுயன்று
செய்தேன்கொல்லோ, பாங்குறமன்யானெடுத்த பலபிறப்பு
ளிப்பிறப்பேபயன் மேவிற்றென், றோங்கு முளத்தடங்காது
மகிழ்ச்சிமேன் மேலும் வளர்வுற்றுவிம்ம. (6)

வாய்ந்த புகழ்த் திருக்கோணமாமலை முற்பல தலமுமாண்புற்
றோங்கி. யேந்த பெருஞ்செல்வமும் வான்கல்வியுமேன் மேலும்
வளரீழநாட்டி, வாய்ந்த பலவளங்களுஞ் சால்வட கோவைப்
பொன்னகரிலளவில் சீர்த்தி, தோய்ந்த நான்மறைச் சைவசமய
மெங்குந் தழைத்தோங்கத் தோன்றி வாழ்வோன். (7)

எங்களாவடுதுறைச் சுப்பிரமணிய தேசிகன் பாலெய்தித் தீக்
கை, துங்கமுறமூன்றும் பெற்றவனடியானெனப் பலருஞ்சொல்லப்
பெற்றேன், பங்கமறவழிவழியேயுயர் சைவக் குடியினி
லுற்பவித்து மேன்மைப், புங்கவரும்புகழ் நீறுங்கண் மணியுமஞ்
செழுத்தும் பொருளாக் கொண்டோன். (8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவஞான மகற்றுபுகழ்த் தென்கலையும் வடகலையும் படிமே
லோங்கத், தவஞானவருண மச்சிவாயகுரு பரன் மரபுதழைந்து
மல்க, வவஞான மொழித்தருளுமகத்தியமா முனிவரத் தாலவ
தரித்த, சிவஞானயோகி யிருதிருவடி யேசிந்திக்குந் தியானச்
சீரான். (9)

சுவைபெருகவுரை யெழுதந்திறனு நாற்கவி பாடுந் துணிவுங்
கற்றோ, ரவைபுகழப் பிரசங்கஞ் செயும் வலியுஞ் சொற்போரில
ளவை நூலா, னவையறக்கற்றோரவை முன்வாதிகள் கைவாய்
புதைத்து நடுநடுங்கிக், கவன்மருவியோட் டெடுப்ப வென்றுசுவ
மதநிறுத்துங் கணக்கின் மாண்பும். (10)

நேயமிலாரும் வேட் பநெறிப்படச் சொற்றெடுத்துரைக்கும்
வலியுநேரில், பாயதமிழ்க்கட னிலை கண்டுணர்ந்து வட நூல்பயி
னுண்ணறிவும் பன்னு, லாயசிறி துணர்ந்தாருமெளி துணரவரு
நூல் சொல்லறிவுமான்ற, மேயபுகழ் மண்ணினுறை புலவரெலாந்
துதியெடுத்து வியப்பப் பெற்றோன். (11)

பன்னியவின் சொல்பொறுமையடக்க முடன்வாய்மைகொ
டை பண்பொழுக்க, முன்னியநன்னடுவு நிலைகண் ணோட்டஞ்
சான்றாண்மை முதிருமன்பு, துன்னியவொப்புரவு முதற்பலந
லமுமொருங்குடைய தூயசீலன், மன்னியநட் பென்பாலும்
வைத்த புகழ்ச் சபாபதி நாவலன்றான் மன்னோ. (12)

பூமேவு நான்மறையுஞ் சிவாகமமுந்தழைத் தோங்கப் புலவர்
சாற்றும், பாமேவுசிவபெருமான் பரத்துவந் தானுலகமெலாம்
புரவிமல்கத், தாமேவுநீடூழி காலம்வரையுஞ் சைவசமயமோங்க,
மாமேவு சிவனடியார் திருவுள்ளத் தடங்கா தமகிழ்ச்சிபூப்ப
(13)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரசிவனே பரமபதிமான் முதலாந் தேவர்கடாம் பசுக்களென்னு, முரமலியுமுண்மையைச் சிற்றறிவுடையேன் போல்வா ருமுணர்வுற்றுய்ய, வரமலியும் புகழ்ச்சாம வேதியர்முன் செய்த பெருமாதவத்தாற், றரமலியுமாயிரநாவுடைய பணிவேந்தனெ னுந்தகைமையோனே. (14)

உளம்பரவுமிவ்வடிவங் கொண்டானென் றெவ்வெவருமொ ருங்குவாழ்த்தக், களம்பரவும் பரசமய விருண் முழுது முளநடுங் கிக்கலங்கியோட, வளம்பரவும் புவியுதித்த ஞானசூரியனுயர்கண் மணியுநீறும். விளம்பரியவஞ்செழுத்து மெய்ப்பொருளென் றுணர் சைவ வித்தாயுள்ளான். (15)

முண்டகமாமலரோனும் வியந்தெடுத்து வாழ்த்த வடமொழி யினிற்சீ, கண்டமதப் பிரதிட்டாசாரியனாமப்ப தீக்கிதனற்காட்சி, கொண்டளவில் பொருட்சுவையுஞ் சொற்சுவையும் பிறசு வையுங்குடி கொண்டோங்க. விண்டபெரும் புகழமைந்த சிவக ர்ணாமிருத மெனும் வியனூறன்னை. (16)

வலம்பரவு புலவரெலா மகிழ்ந்து பல்காற் சிரந் துளக்கவளமை மேவி, நலம்பரவு முரைத்தமிழிற் சுவையமுத மூற்றிருந்துபெ ருகநாளுந், தலம்பரவுமாரியத்தினின்று மொழிபெயர்த்தியற் றித்தகுதிமேவப், புலம்பரவுதன் பாலைந் திலக்கண முமிலக்கிய மும் பொருந்தத்தேர்ந்தே. (17)

புண்ணியவின் சொல்வாய்மையடக்க மொழுக்கங் கருணை பொறைமுன்னாய, தண்ணியபன்னல முடையசிவப்பிரகாச கச்செம்மறன்னைக் கொண்டு, மண்ணினிடை யெங்கெங்கும்பர வுற்றுநெடுங்காலம் வயங்குமாறு, கண்ணியநன் கமையச் சிற்பதிப் பித்துப் பலர்க்குமு பகரித்தான் மன்னே. (18)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாவடுதுறையாதீனத்து
## ஸ்ரீ ஆறுமுக சுவாமிகள்
## இயற்றியது.

மதிசடை வைத்தடைந்தவர் தம்பிழைமதியாம் விரைந்தருள் வாம்வம்மினென்று, கதியருளெம்பரமதயாநிதியாங்கண்ணுதற் பரமன் கருணை முற்றுந், துதியமையந்தணர்குலத்துச் சாமவே தியர்மரபிற்றுவன்றுநன்மை. விதியமையும் பாரத்துவாச கோத் திரஞ்செய்த விழுப்பந்தன்னால். (1)

வந்துபாற்கடற் சிந்தாமணியே போலவதரித்து மறைநூன்முன்னா, நந்துபலகலை முழுதுமொருங்குணர்ந்து சிவனடியினலக் குமன்பு, முந்துதவமப்பய தீக்கிதர்மறையின் மந்தண மாமுடிவு பல்ல,தந்து பரம தங்கடிந்து சைவநிலை நிறுத்திய நூறாம னேகம்.(2)

அன்ன நூல்களிற் சிறந்த சிவகர்ணாமிருத மெனுமதனையாரும், பன்னவுயர்சோணாட்டிற் பனசைநகரெழுந்தருளிப் பற்ப னூல்கள், சொன்ன துறவொழுக்கமிவனிடை நோக்கியெனவு லகந்து திப்பநின்றோ, னென்னகலை யுலகினுளவவை முழுது மொருங்குணர்ந்த வெழிலார்கோமான். (3)

உலகிலறிவுடையவ ரெல்லாமுடைய ரெனுமுரைக்கோருறு தியாக. வலகில்பெரும் பொருட்செல்வமுடனருட் செல்வமும் வாய்ந்தவறிஞன் சாந்தம், விலகின்மணிப்பூணீ றுகண்டி கையாக் கொண்டறவர் மேற்கொள்ளான்ற, வலகிலருளுடைக்குமரசா மிமுனிவரர் பெருமானாணை கொண்டே. (4)

நடனவிலெம்பிராற் கடியன்வட கோவை விளங்கவந்தோன யமுன்னான, மடனிகுபல்கலையு நிலைகண்டுணர்ந்தோன் கட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரையின் வலிமிக்குள்ளோ, னிடன்மருவுதுறைசையிற் சுப்பிர
மணியகுரவனடியிறைஞ் சிஞானத், திடன்மருவுகலைபலவும்
பொதுச்சிறப்பிற் சங்கையறத் தெளிந்து கொண்டோன். (5)

சதுர்வேத தாற்பரிய சங்கிரக மொழிபெயர்த்தோன் சங்கமெச்சப்,
புதுவதாம் யேசுமத சங்கற்ப நிராகரணம் புகன்றோனின்
னும், விதுவணியுஞ்சடைப் பெருமான் மகிமை விளங்கிடப் பல
நூல்வியப்பச் செய்தோன், மதிமலிதன் புகழெங்குமருவவமர்
சபாபதி நாவலன்றான் மன்னோ. (6)

தென்மொழியிற் சிறக்க மொழி பெயர்த்தொருதன் பாற்றென்
னூறிருந்தக்கற்றுப், பன்மொழியின் முட்டறுத்துக்கட்டுரைச்
செந்தமிழ்க் கவிதை பாடவல்ல, கொன்மொழியார் சிவப்பிர
காசத்தோன்றறனைக் கொண்டுகுறித்து நோக்கி, நன்மொழியார்
தரவெழுதா வெழுத்தினியைத் தெங்கெங்கு நடத்தினானே. (7)

## திருவாவடுதுறையாதீனத்து
## ஸ்ரீ.பழனிக்குமாரசுவாமிகள்
## இயற்றியது.

குலந்தருமேற்குலத்து தித்துப்பலகலையுமெளி துணர்ந்தரு
ணத்தான் மேலோன், புலந்தருதொன்னூல் கொண்டுபுறமத
பேய்களையாத்துப் புறத்தே போக்கும், வலந்தருமுன்னருமறை
யோனப் பதீக்கிதனென வான்வணங்கும்பேரோ, னலந்தருமெய்ச்
சைவத் திற்காணியெனப் பலநூல் கணவிற்றினானால். (1)

அவனவின்ற நூல்களினுட் சிவகருணாமிருதத் தினதிகமோதி
னவனவின் றதன்னுரையுஞ் சிவகருணாமிருதமென நவிலக்க
றோன். றுவனவின் றகுமரகுருபரனுடைய விருமரபுந்தழைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவந்தோன், பவனவின்ற வாசனையாலி,
தமலது செயத்துணிவரன் பகைக்குமாதோ. (2)

அரனுடைய புத்திரர்க்கு மபிமான புத்திரர்க்கு மமைந்தவூரோன்,
றுரனுடைய சேய்ஞ்ஞலூர்ப் பணியியற்றியறி ஞருளமுவக்
கப்பெற்றோன், றரனுடைய நற்குமரசாமி முனிவரனெனவே
சாற்றற்கேற்ப, வரனுடையன் முனிவர்கட்கு மெளிலவன் சீர்
யார் சொல்லவல்லர்மாதோ. (3)

அன்னவனோ கல்வியினுஞ் செல்வத்து மமோகனென வறியாத
யாரம், முன்னவன் சொற்றிடவுவந் துசிவகர்ணாமிருதமெனமுந்
து நூலை, நன்னவமாங் கோவை நகர்ச்சபாபதியென்றி யற்பெ
யர்கொணாவலோனந், தென்னவனுண் மகிழ்தமிழ்ச் செய்தச்சி
டுவித்துப் பெரிது சிறந்தரனம்மா. (4)

## கும்பகோணக் காலீஜ் தமிழ்ப்பண்டிதர்
## ஸ்ரீ.சாமிநாதையரவர்கள்
## இயற்றியது.

புகழ்பூத்தமறைநான்கும் பொது நூலன்றெனச்சைவர்புகல
வென்று, நிகழ்பூத்தசீகண்டமதநிலைப்பபப்புறமதங்கணிலையா
தோட, வகழ்பூத்தம திலடையப்பலனடையப் பலனருளாலவ
தரித்துத், திகழ்பூத்தவப்பய தீக்கிதராசயோகி முனஞ்செய்பன்
னூலுள். (1)

விளங்கு நலசிவகருணா மிரதத்தைத்தென் மொழியில்விளம்
புகென்ன, வளங்குலவுதவச் செல்வக்குமரகுருபர முனிவன்
மரபிற்றோன்றி, யுளங்குலவுமவன் போற்சுப்பிரமணியகுரும
ணியாலுயர்ச்சிமேவித், தளங்குலவுபொழிற்காசித் தருமபரிபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லனஞ் செய்தகைமை வாய்ந்தோன். (2)

சிந்தைநெகிழ்ந் துருகவிழியருவி பொழிந்திடவுடலஞ் சிலிர்ப் பமுக்க, ணெந்தைபிரானடி மலரைக்கடி மலர்கொண்டருச் சிக்குமியல்புமேயோன், நிந்தையிறன் பெயர்க்கேற்பச் சேய்ஞ் லூரரன் பணி செய்ந்நியமம் பூண்டோன், முந்தைவளப்பனகை நகர்க்குமாரசாமிப் பெயர் கொண் முனிவர் கோமான். (3)

மனமகிழ்வுற்றுரைப்பவட நூல் வல்லார் வாழ்த்தெடுப்பமாண் பார்தென்சொற். பனுவறெரிபுலவரெலாம் பாராட்டத்தென் மொழியிற் பகர்ந்திட்டானா, லனைவளருமிடப்பாகத்தமலனரு ளாகமநூலாய் வினோதன், வனைபுகழ்சேர் யாழ்ப்பாண வடகோ வைச்சபாபதி நாவலன் றான் மன்னோ. (4)

சேற்றூர்ச் சமஸ்தானவித்வான்
ம-ள-ள- ஸ்ரீ
சுப்பிரமணிய கவிராசர்
இயற்றியது.

மருவிய நாற்சங்கத்துளுயர் பாஞ்சசன்னியத்தின் வருமுத்தம் போற், றிருவுறுநாற்குலத்துண் மேற்குலத்தில் வருமப்பயதீக் கிதனாமேலோன், பெருகியபல்லுடுமதிகண்மழுங்கிய விண்ணத் தலரி பிறங்குமாபோ,லிருநிலத்திற் புறமதங்கண் மறைந்திடச் சைவந் துலங்கியெழில் குலாவ. (1)

வடமொழியிற் பன்னூல் செய்தனன் சிவமாமேல் வீடுமருவு வோர்க்குத் திடமுறவோர் நூல்வழியே செலலமையுமெனக்க விஞர் செப்புங் கீர்த்தி, யுடன்மருவப்பன் னூலுட்சிவகர்ணாமி ருதமெனுமொருநூலைத்தென், கடல்வலயத்துயர் காசிமடால யத்திற் கதிபதியாங்கருணைக் கோமான். (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனையநகர்ப்பாதி முன்னரடுத்துரைப் போர்தமையஃதே யாக்குவோன்மெய், வனைகலையாயுமவர் மனக்கலையுருக்கி மதிக்க லைபோல் வளரச் செய்வோன், நினையினேராரு நேராருமிலையெ னுந்தகையினெடியோ னென்றுந். தனைநிகர்தானெனும்பதி போற்றனை நிகர்தானென வெவருஞ் சாற்றப் பெற்றோன். (3)

தவநிலையாம்வல்லிபடர்தரு குமரசாமி மாதவன்றான் சாற்று நவமுறுகட்டுரை கொண்டென்றனைப் போல் வாருளத்தாய்ந்து நன்குதேறிச், சிவமுறத்தென் மொழியாற்செய்தச் சியற்றினான் கோவை சிறக்கவாழ்வோன், பவமறத்தொன்னூலுணர்நாவலர் புகழ்நாவலன் சபாபதிவல்லோனே. (4)

திருவாவடுதுறை

ம-ள-ள-ஸ்ரீ

பொன்னுச்சாமிப்பிள்ளை

இயற்றியது.

நலமலியும் பனையேட்டில் வரைநூனாட் செலிற்புதுக்குநன் மைபோலப், புலமலியுஞ்சாமவேதியர்மரபின் மேன்மைதனைப் புதுக்கவந்த, பலமலியுமப்பயதீக்கிதர் செய்பலகலைப் பெரு மைபகர்வதோவக். குலமலியும் பன்னூலிற் சிவகர்ணாமிருதமு மக்கொள்கைத்தாமால். (1)

அனையநயசிவகர்ணாமிருத மதைப்பலகாற் கேட்டன் புமிக் குத், தனையில்பெருந்தவச் செல்வங்கல்வியெனு முயர் செல்வந் தயங்கல்போல, நினைவரிய பொருட்செல்வ நிறைந்தொளிரும் பனசையில் வாழ்நிபுணனியாரும், வனையுமெழினற்குமரசாமி முனிவரர் பெருமான் வாய்மை மிக்கோன். (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்மொழியின் மொழிபெயர்த்தச்சிடுவிக்கவென் றெடுத்துச்செப்பவீது, நன்மைதருமென வியற்றிப்புகழ் படைத்தானி யாவனெனினவில் யாழ்ப்பாணத், தின்மருவுவட கோவைப்ப தியினன் கல்வியில் வாணியெனவே சான்றோர், சொன்மலிசீர் நாவலன் சபாபதி யாமெழிற் பெயர் கொடூய்மையோனே. (3)

சிறப்புப் பாயிர முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்

## சிவகர்ணாமிர்தம்

### தற்சிறப்புப் பாயிரம்

வாகைமா நடற்றொழு துமா தவச் சிவஞான
யோகிசுப்பிரமணியதேசிகனையுண்ணிறீஇத்தே
மீகொளப்ப தீக்கி தனதருள் சிவகர்ணாமிர்தத்தை
யூகமார் தமிழ்ப்பெயர்த்து நாவலர் பொருட்டுரைப்பாம்.

### நடராச வணக்கம்

ஞாலத்து நரர்க்குறுதி தன்னடிக் காட்சியிற்றானேயமையுநன்கு, சாலப்பற்பல வேறுசெயல் வேண்டாவென்றுணர்த்தன்மா னத்தன்கைத், கோலத்திற்குயிற்ற பயமுத்திரையொடி ரும்பி றவிதனக்குங்கோளில், சீலத்தர்புரக்குமொருபகையாய்மன்றி லங்கொளியைச் சரணஞ் சேர்வாம்.

இச்சகத்தின் றேற்ற நிலையிறுதியெதன் விளையாட்டம்யா தின்மாடே, துச்சிலுறை பல்லுயிர்க்கும் பிறப்பறுத்தல் சுதந்திர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தோன்றும்வேத, னச்சுதன் பூசிக்குமடிக்கமல முடைத்தா யுலகுக்கப்பாலாமப், பொச்சமலமில்லுமையொடொன்றுசதா சிவப்பிரமப் பொருளுட் காண்பாம்.

## நூல் வரலாறு

அம்பிகையோடு கூடும்வடிவுடை நித்தரான
வெம்பெருஞ் சதாசிவப் பேரிறைவரே பிரமமென்றுந்
தம்பெரும் விபூதிலேச மேயிந்தச்சகமாமென்று
மிம்பர்மற்றெடுத் துரைப்பவைதிக ரென்பமன்னோ.

பாஞ்சராத்திரத்திற் சாலப் பதிந்த புந்தியர்களானோர்
தாஞ்சிவபிரானுயர்ச்சி தன்னின் மிக்கழுக்கா றுற்றுத்
தீஞ்சுவை கொழிக்குஞ்சந்தத் திருமறைகளுக்கு மிக்கு
வாஞ்சை விண்டுயர்ச்சி மேலும் வகுப்பர் தாற்பரிய மன்னோ.

அத்திறமறுக்கு வண்ணமளப்பில் சீர்ச்சிவச் சொன்முற்கொ
டத்துவவிவேக நூலிற் சாற்றினம்விரித்திட்டந்தச்
சுத்தநூற் பொருளையெல்லாஞ் சுருக்கியீண்டுரைக் கலுற்றாம்
வித்தையின் மெலியர் தாமுஞ்சிவபிரான் மேன்மை தேற.

## நூல்
# பூர்வ பக்கம்

அவர் தாங் கூறுமாறிது :-

"இப்பூதங்கள் எதன் பானின்று தோன்றும் தோற்றமுற்றன எதனாலுயிர்ப்புடைத்தாம் எதன்பாலொடுங்கிச் சூக்கும மாயுறை யும் அதனையறிக அதுவே பிரமம்" எனவும், "வானத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புடவியையுந் தோற்றுவிக்குங் கடவுள் ஏகன்" எனவும், "இச்சகத் தோற்ற முதலிய தொழிறாமெதன் கணுண்டாம துபிரமம்மே" யெனவுஞ், சுருதிகளானும் வேதாந்த சூத்திரத்தானு மினிது துணியப்படுஞ் சகத்தின் றோற்ற முதலியவற்றிற்குக் காரண மாகுதல் முடியபிடேகஞ் செய்யப்பட்ட மன்னவற்கு வெண் கொற்றக் குடை சிறப்பிலக்கணமாதல் போலப் பரப்பிரமப் பொருட்குச் சிறப்பிலக்கணமாம். மந்திரத்தும் அருத்தவாதத்தும் ஏனைவைபவங்களைக் கூறுதன் மந்திரி முதலியோர்க்கு மன்னவற் குங் கரிதுரகவரபூடண முதலியன பொதுவிலக்கணமாதல் போல ஏனைக் கடவுளர்க்கும் பரப்பிரமப் பொருட்கும் பொது விலக்கணமாம். அங்ஙனமன்றோ, "இரணியகருப்பன் முதற்கணிருந்தனன்" "இந்திர உன்னின்மிக்கானில்லை" "இந்திரன் உலகினுயர்ந்தோன்" "இறந்ததற்கும் நிகழ்வதற்கும் இந்திரன் வேந்தன்" "அங்கிகடவுளர்க்கு முகமுந் தலைவனுமாம்" "அங்கி கடவுளர்க்கு முற்செல்வானு முதல்வனுமாம்" "அங்கி சோம னென்னுமிவ்விருவருங் கடவுளர்க்கரசர்" "எல்லாக் கடவுளரும் அங்கியே" "இறந்ததும் நிகழ்வதுமான சகத்துக்குச் சூரியன் ஆன்மா" என்றற்றொடக்கத்துச் சுருதிகள் காணப்படுதல் பற்றி யென்பது.

இனி மந்திரங்களினும் அருத்தவாதங்களினும் ஆண்டாண்டுச் சிவனுக்கு ஏனைவைபவங்கள் கூறப்படும். ஆங்ஙனமாயினும், "நாராயணனொருவனேயிருந்தான் பிரமனிருந்திலன் ஈசானனிருந்திலன் அக்கினி சோமர்களிருந்திலர் இவ்வானமும் வையமுமிருந்தில" என்றற் றொடக்கத்து மகோபநிடத வசனத் தொகுதியானும், "புருடனான நாராயணன் பிரசைகளைச் சிருட்டிப்பலென்று காமுற்றான்" "நாராயணன் பானின்றும் பிரமன் பிறக்கும் நாராயணன் பானின்றும் உருத்திரன் பிறக்கும்" என்றற் றொடக்கத்து நாராயணோபநிடதவசனத் தொகுதியானும், "ஈண்டுமுதற்கணொன்று மிருந்திலது மூலமின்றி யும் ஆதாரமின்றியும் பிரசைகளுதிக்கும் திவ்வியதேவனான நாராயணனொருவனேயிருந்தான்." என்றற்றொடக்கத்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுபாலோப"நிடத வசனத் தொகுதியானும், ஏனைக்கடவுளர் மாட்டுஞ் சென்று பொதுவாதற்குடன்படாத நாராயணசத்த வாச்சியனான புருடோத்தமனே சகத்தினுற்பத்தி முதலிய வற்றிற்குக் காரண னென்றோதப்படுதலின், அவனே பரப்பிரமப் பொருளாமென்று துணியப்படும்.

"சௌமிய சத்தேமுதற்கணிருந்தது" இஃது பிரமமாகவே முதற்கணிருந்தது. "இஃதோரான்மாவாய் முதற்கணிருந்தது. ஏன்றற்றொடக்கத்தனவாக ஏனைச்சுருதிகளிற் போந்த காரண வாக்கியங்களிற் கேட்கப்படுங் காரணத்தையுணர்த்துஞ் "சத்து" "பிரமம்" "ஆன்மா" வென்னும் பொதுச் சொற்கள் "அங்கிசோமர் பொருட்டுப் பசுவை யாலம்பனஞ் செய்க" என்று விதிவாக்கியத் திற் படிக்கப்பட்டதூஉங் கோமுதலியவற்றிக்கெல்லாம் பொதுவானதூ மாகிய "பசு" வென்னுஞ் சத்தஞ் "சாகவபையது" என்னு மந்திரத்திலோதப்பட்ட சாகத்தின் கண்முடிதல் போலச் "சாகந்தானேமந்திரவெழுத்தான்" என மீமாஞ்சையாறா மத்தியாயத்திற் கூறப்படுமிறுதியதிகரண நியாயத்தினானே புருடோத்தமன் கண்முடி பெய்து மென்பது.

அற்றேல், அதர்வசிரசில் "நானொருவனே முதற்கணிருந் தேன்" என்றற்றொடக்கத்தனவாகக் கடவுளரை நோக்கிச் சிவனோதிய வசனத்தானும், எப்பொழுது இருளிருந்தது அப்பொழுது பகலில்லை இரவில்லைச் சத்தில்லை அசத்தில்லைச் சிவனொருவனேயிருந்தான் அஃது அக்கரம் அஃது சூரியனினும் பெரிது அதன்பானின்றும் அறிவு முன்னர் உதித்தது." என்னுஞ் சுவேதாச்சுவதரோபநிடத மந்திரத்தானும், இருண்மாத்திரமிருந்த சிருட்டியின் முதற்பொழுதிற் சிவன் முழுமுதலாய் நிலைபெறுதல் கூறப்படும். "விச்சுவாதிகனாயும் பேரிருடியாயுமுள்ள எவ்வுருத் திரன் கடவுளர்க்கு முதல்வனான இரணிய கருப்பனைஅவன் றோன்றும் பொழுது நோக்கினன். அக்கடவுள் எம்மை நல்லறிவுடையமாகச் செய்க" என்னும் தைத்திரிய மந்திரத்தான் அனைத்திற்கு முதல்வனான இரணிய கருப்பனையுஞ் சிருட் டிக்குங் கருத்தாவாக ஓதப்படுதலின், சிவன் முழுமுதல்வனாதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரைக்கப்படும். அதர்வசிகையினும் "இப்பிரமன் விண்டு உருத்திர னிந்திரனென்பார் பிறக்கின்றனர்" எனப்பிரமன் முதலியோர்க்குக் காரியத்தன்மை கூறிக் காரணன்றான் றியானிக்கற்பாலன் ஐசுவரியமனைத்தினையுமுடையனும் அனைத்திற்குமீசனுமான சம்பு ஆகாயநடுவிற்றியானிக்கப்படும்" என்னும் வாக்கியத் தினாற் சிவன் முழுமுதலா தன் நேராகவே கூறப்படும். ஆகலின், காரணவாக்கியங்களெல்லாஞ் சாகபசுநியாயத்தானே புருடோத்த மன் கண்முடிபெய்துதல் யாங்ஙனந் துணியப்படுமெனனின் ; கூறுதும் : "கடவுளர் சுவர்க்க லோகத்தை யடைந்தனர்; அவர் நீர் யாரென்று ருத்திரனை வினாயினார்; அவனிறுப்பானாயினன்: நாடுனாருவன் முதற்கணிருந்தனன் இருக்கின்றனன் இருப்பல் என்னின் வேறானாடுனாருவனுமில்லை என்று; அவனந்தரத்தி னந்தரத்தைத் தலைக்கூடினான்; திக்கினந்தரத்தையுந் தலைக் கூடினான்; அப்பெற்றியனான நான் நித்தியன்; அநித்தியன்; நான் பிரமனாகேன்; நான் பிரமனாவேன்; நான் கீழ்த்திசையிலுள்ளேன்; நான் மேற்றிசையிலுள்ளேன்" என்றற்றொடக்கத்தனவாக விங்ஙனமன்றே அதர்வசிரசிற் கேட்கப்படும். ஈண்டு உருத்திரன் "முழுமுதலாகவும் எல்லாமாகவும் இருந்தே"னென்றிறுத்தது தன்னைக் குறித்தன்று. பின்னர்க் குறித்த தியாதினையோவெனின் ;- "நான் மனுவானேன் சூரியனானேன்" என வாமதேவ முனிவன் றனக்கந்தரியாமியாய் நிற்கும் பரமான்மாவைக் குறித்துக் கூறிய வெல்லாமாந்தன்மை போலத் தனக்கந்தரியாமியாய் நிற்கும் பரமான்மாவைக் குறித்தேயென்க. அற்றாகலினன்றே பரமான்மாவுக்கன்றோ காரணத்தன்மை முதலியன வுண்மை வெளிப்படையாம் ; "நான் முதற்கணிருந்தனன்" என்றற் றொடக்கத்துரைகள் உனக்கியாங்ஙனம் பொருந்துமென்னு மாசங்கையை யொழித்தற்பொருட்டு, "அவனந்தரத்தினந் தரத்தைத்தலைக் கூடினான் திக்கினந்தரத்தையுந் தலைக் கூடினான்" என்றிவ்வுருத்திரவசனமெழுந்ததென்பது.

புத்தியையுறையிடனாகக் கோடலொன்றோ, அந்தரி யாமிப்பிராமணத்திற்கூறியாங்கு அனைத்தினு நிறைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமான்மாவுக்குத் தேவர்மக்களையுணர்த்தும் பதங்களுக்குப் போலப், பதங்களனைத்திற்கும் பொருளாதலும் ஒப்பப்படுதலின், முன் வாக்கியத்திலுள்ள "நான்" என்னும் பதம் தன்னகத்துள்ள பரமான்மாவையுணர்த்திப் பிரகிருதமாதலொன்றோ, இரண்டனு ளொன்றானே, "அவன்" எனப்பரமான் மாத்தற்பதத்தாலுபசரிக்கப் படும். அதனானே, அவன்-பரமான்மா,-அந்தரத்தின்-பிராணன் முதலியவற்றினும், -அந்தரம்-உள்ளானதன்னான்மாவையும்,-திக்கின்-திக்கனைத்தினுமுளவான பொருட்டொகுதியையுற்ற,-அந்தரம்-உயிர்த்தொகுதியையும் அந்தரியாமித் தன்மை யாற்றலைக் கூடினானென்பது, அதன் பொருளாம். ஆகவே, அக்கருத்துப்பற்றியே முழுமுதற்றண்மை முதலியவற்றை எனக்குக் கூறினேனென்பது கருத்து. இந்த வாக்கியம் உருத்திரனனைத்திற்கு மந்தரியாமியா தலைக்கூறும்; முன்வாக்கியமும் அவனுக்கே முழுமுதற்றன்மை முதலியவற்றையோதும், என்னாமோவெனின்; என்னாம்; என்னை? அங்ஙனங்கூறின் , இஃதுதுருத்திர வாக்கியமாகலின் "நான்றலைக் கூடினேன்" எனப்பிரயோகிக் கற்பாலதாமாகலானென்பது.

"என்னின் வேறாயினானொருவனுமில்லை" என்பதன் பின்னர் "என்று" என்னும் பதம் வருதலானே உருத்திரவாக்கிய முற்றுதலின், "அவனந்தரத்தினந்தரத்தைத் தலைக்கூடினான்" என்றற்றொடக்கத்தன சுருதிவாக்கியமென்றே சொல்லற்பாற் றெனின் ;அற்றன்று, "தலைக்கூடினான்" என்பதற்குப் பின்னும், "அப்பெற்றியனான நான் நித்தியன் அநித்தியன்" என்றற்றொடக் கத்துச் சுருதிவாக்கியானுவிர்த்தியானே அதற்கு முடிபெய்தாமை யின், அங்ஙனங்கொள்ளாதவழி உருத்திரவசனம் இடையே சுருதி வாக்கியத்தாற் பிளவுபட்டு மறித்தும் "அவனிறுப்பானாயினன்" என வேண்டப்பட்டத்தியாகாரப்பிரசங்கம் வருதலினென்க.

"என்று" என்னும் பிரயோகந்தானும், அவனந்தரத்தி னென்பதை முதலாகவுடைய வாக்கியத்தோடன்னுவயமுற்றுப் பரமான்மாவுட் புகுந்தானென்னுமேதுவானே "நானொருவன் முதற்கணிருந்தேன்" என்றற்றொடக்கத்தனவாக வெடுத்தோதிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றென்று, ஏதுப் பொருட்டாய்ப் பொருத்தமுடைத்தாம். முடிவு பொருளாங்கால், உருத்திரவாக்கியமனைத்திற்கு மிறுதியில தற்கன்னுவயமுண்டாகறபாற்று, அத்தியாகாரத்தினுந் தூரான்னு வயஞ் சிறப்புடைத்தாகலின்.

இங்ஙனமிவ்வுபநிடதத்து முழுமுதன்மை, அனைத்து மாந்தன்மை, வீட்டினை விரும்புவோரானுபாசிக்கப்படுந்தன்மை முதலியவற்றை யுடையவனாகச் சொல்லப்படும் பரம்பொருள், உருத்திரத்திராந்தரியாமியாகிய நாராயணனேயாம்; "இவன் பூதங்களனைத்திற்கு முள்ளுயிரானோன் பாவத்தையொழித்தோன் திவ்வியதேவன் ஏகன் நாராயணன்" எனச் சுபாலோபநிடதத்தில் அவனனைத்திற்கு மந்தரியாமியாதல் ஓதப்படுதலானும், "அளவில் பேரொளிப்பகவனாஞ்சிவனுக்கச்சுதனான்மாவாம்" என்று பாரதத்திற் கர்ண பருவத்தில் அவன் உருத்திராந்தரியா மியாதலைச் சிறந்தெடுத்தோதுலானுமென்க.

"எப்பொழுதிருளிருந்தது" என்றெழுந்த சுவேதாச்சுவதர மந்திரந்தானுங் குறித்தவோர் பொழுதையிருளின் அனுவாத மாகலின், அது தன்னை யறிவுறுத்தும் "அவ்வியத்தம் அக்கரத்தினி லொடுங்கும் அக்கரம் இருளிலொடுங்கும் இருள்பரதேவன் பாலொடுங்கியொன்றாம்" எனவருஞ்சுபாலோபநிடத வாக்கி யத்தையவாய் நிற்கும், அனுவாதம் புரோவாதத்தைய வாய் நிற்றலியல்பாகலின். இம்மந்திரந்தானுந்தன்னால வாயப்பட்ட புரோவாதத்தோடுமாறுபடாமைப் பொருட்டு, ஆண்டிருளை யதிட்டிப் போனெனக் கூறப்பட்ட நாராயணன் பாற்றானே முடிபெய்தும். அஃதேல், "இருளொன்றே யாதிக்க ணிருந்தது அது பரமனாலேவப்பட்டு விகாரமெய்திற்று" என்றெழுந்த மைத்திராயணச் சுருதிவாக்கியம் ஈண்டுப்புரோவாத மாதற்கு இயை புடைத்தாகுகவெனின்; -அற்றன்று, பொது வாற்றானெழுந்த வஃதுஞ் சாகபசுநியாயத்தானே சுபாலோப நிடதத்தோதிய சிறப்புப் பொருளின்கண்முடிபுற்றுச் சமானமாக வினென்க. இங்ஙனமாகலின், "சிவனொருவனே" யெனவரும் வாக்கியத்தின் கணுள்ள "சிவ" சத்தம், மற்றொரு கடவுளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்த்துஞ் சொல்லாயினும், சுபகரனெனக் காரணக் குறியாற்றான், இடுகுறியாற்றான், ஆகுபெயரானே நாராயணன் கட்டானே நிலையுறுத்தற்பாற்று. "இப்பூதங்களெல்லாம் பிராணன் பாலன்றே யொடுங்கும் பிராணன் பாலன்றே தோன்றும் இப்பூதங்களெல்லாம் ஆகாயத்தின் கண்ணன்றே யொடுங்கும் ஆகாயத்தின் கண்ணன்றே தோன்றும்" என்றற்றொடக்கத்து வாக்கியங்களிலுள்ள தேற்றப்பொருட்டான "அன்றே" என்னுஞ் சொல்யாப்புப் பற்றிக் காரணத் தன்மையின் அனுவதிப்புப் புரோவாதத்திற்கேற்றவாற்றானே நாராயண விடயமாதல் கொண்டு, ஆண்டுள்ள பிராணன் ஆகாய முதலிய அசேதனப் பொருள்களை யுணர்த்தும் பதங்களுக்கும் இடர்ப்பட்டு நாராயணன் பால் உரையொப்பிக்கோடும்; மற்றொரு கடவுளைக் குறிக்குமேனும், அணித்தாயிருக்குஞ் "சிவ" சத்தத்திற்கு அவன் பாலுரையொப்பிக் கோடற்கட் பாரமென்னை? இனி "இவ்வாறன்றி", "ஸர்வன் சர்வன் சிவன் றாணு" வென விண்டுவுக் குரிய ஆயிரநாமத்துப் படிக்கப்படுதலின், "சிவ" சத்த நாராயணனன் பெயராமெனக் கொண்டு அதற்கு அவன்பால் உரைகூறலுமாம்.

"உருத்திரன் ஒருவனே இரண்டானோனில்லை; பேரிருடியானவுருத்திர னுலகின் மேம்பட்டோன்;" "மாயை யுடைய மகேச்சுரனை" "ஈசுரர்க்கெல்லாமுதல்வனான மகேச்சுரனை என்றற்றொடக்கத்தனவாக முன்னும் பின்னும் வரு மந்திரங்களையாராயும் வழிச்சுவேதாச்சுவதரோபநிடதமுழுதுஞ் சிவபரமாதல் வெளிப்படுதலின், அதனிடைப்பட்ட "எப்பொழுதிருள்" என்னுமிம்மந்திர நாராயணவிடயமாமென்றல் பொருந்தாதாலோவெனின் :-அற்றன்று, "நான்மகானான விந்நப் புருடனையறிவேன்" என்றற்றொடக்கத்துப் புருடசூத்தமந்திரங் கள் பல இவ்வுபநிடதத்திற்படிக்கப்படுதலின், அதனானுணர்த்தப் படும் பொருளான நாராயணனுக்கு இதன்கண் ஞாபகமுண்டா தலின், அவனேயிதற்கும்பொருளாமென்று துணியப்படுதலின், இரண்டுபநிடதங்ளானுங்கூறப்படும் பரம்பொருள்கள் தம்முள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறாமெனக்கொள்ளின் இரண்டினும் "வீட்டிற்கு வேறு நெறியில்லை."யெனக் கூறுதல் வழுவாதலின் இரண்டும் ஒன்றை யொன்று விலக்கல்பற்றி வீட்டினைத்தலைக்கூடுமு பாயத்தைத் துணிதல் கூடாமையினென்க.

இவ்வுபநிடத மந்திரப்பிரததியபிஞ்ஞை பற்றிப் புருட சூத்தமே சிவபரமாகற் பாற்றெனின்;- அற்றன்று, "ஆயிரந்தலை களையுடையான் புருடன்" என்று பக்திகிரமத்திற்றானே "புரு வெனுஞ் சரீரத்திடைக்கிடத்தலினாற் புருடன் மற்றரிமுப் பானொற்றுத், திரிவின் முப்பானொன்றொற்றதாய் வழங்குந் திகழுமிப்பகவச் சொன்மான, வுரை பெறும்புருட சத்தமும் பழையோனாய்நனியொளிர்வாசுதேவப், பெரியவன்றனக்கிங் கியற்கையான் வழங்கும் பெருவழக்குடைத்தென்பவான்றோர்." என்றற் றொடக்கத்துப் புராணவசனங்களாற்பெறப்படு நாரா யணனையுணர்த்தும் புருடசத்தங்கூறப்படுதலானும், புருட சூத்தத்திலோதப்படுமாபுருடனையறிவித்தல்பற்றி அதனோ டொருவாக்கியத்தன்மையடைந்த "அப்புக்களிலிருந்து தோன் றினன்" எனவருமடுத்தவனுவாகத்தினிறுதியில் "சிறீயும் இலக்குமி யும் பத்தினிமார்" என்று இலக்குமிக்குப் பதியாந் தன்மையைக்குறிக்குமிலிங்கக்கூறப்படுதலானும், சந்தோகப் பிராமணத்தில் "இதுலிண்டு" "விருக்கத்துக்கும் இந்திரனுக்கும்" "சுக்கிரனையொப்பக்காவியஞ்சொல்வோன்" எனவருவனவும் இறுதிக்கண்ணுள்ளவராகசூத்தமும் புருடவிரதங்களும் இவ் வைணவ சங்கிதையாம் இதனையோதுவோன் விண்டு வையுவப்பிக்கும்" என்று வைணவ சங்கிதையிற் சேர்த்தோதப் படுதலானும், அதர்வண வேதத்திற் பதினெண் வகை மாசாந்திப் பிரகரணத்தில் அவ்வக்கடவுளர்க்குரிய சாந்திகளில் அவ்வக் கடவுளர் மந்திரங்களைப் பிரயோகிக்கும்வழி "விண்டு சம்பந்தத்திற் புருடசூத்தம்" என விண்டுவுக்குரிய சாந்தியிற் பிரயோகிககப்படுதலானும்,சௌனகபோதாயன முதலிய மிருதி களில் நாராயணனாராதனையிற் பலவாறு விநியோகிக்கப்படு தலானும்,விண்டுபுராண முதலியவற்றிற் புருடசூத்தத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளைத்தழுவி நாராயணன் றுதிவரக்காண்டலானும், "நாராயணமெனப்படும் புருடசூத்தத்தானே எசமானன்வழிபடும்" எனவும் மேல் "இருவகை நாராயணங்களால் வழிபடுக" எனவும்வருங் கற்பசூத்திரங்களில் நாராயணநாமத்தானே விவகரித்தலானும், புருடசூத்த நாராயண பரமாதறுணியப் படுதலின், அனேகபிரமாணங்களை இடர்ப்படுத்துதல் செல்லாமையின், அம்மந்திரப்பிரத்தியபிஞ்ஞைபற்றி இவ்வுப நிடதமே நாராயண பரமாதல் பெறப்படுதலானென்க.

அற்றேல், இவ்வுபநிடதத்தில் "இந்த மகானாகிய புருடனையானறிவன்" "எவனினு மேலானதுங் கீழானதுஞ் சிறிதுமில்லை" யெனவருமிரண்டுமந்திரங்களையுங்கூறியபின், "அதனினெது சிறந்தது அஃதுருவமில்லது நோயில்லது எவரிதை அறிகுநர் அவர் வீட்டினைத்தலைப்படுவர் அல்லாதார் துன்புறு வர் யாங்கணுமுகங்களுங் தலைகளுங் கழுத்துக்களுமுடையானும் அனைத்துயிர்களி னிருதயகுகைகளிலுறைவோனும் யாண்டு நிறைந்தோனும் பகவனுமாயிருத்தலிற்சிவன் சர்வகதன்" என்னு மந்திரங்கூறுதலானே புருடசூத்தத்திற் பெறப்படு நாராயண னினுஞ் சிறந்தானாகச் சிவனுக்கு மேம்பாடு கூறுதலேயிவ்வுப நிடதத்தின் றாற்பரியமாகத்துணியற்பாற்றெனின்:- அற்றன்று, முதற்கண் "நானறிவன்" என்னுமந்திரத்தானே நாராயணனை யறிதலே வீட்டிற்கேதுவெனவும் "எதனினுஞ் சிறந்ததில்லை" என்னுமடுத்த மந்திரந்தானே"அவனினுஞ் சிறந்ததில்லை" யெனவுங் கூறுதலான், அதற்கடுத்த மந்திரத்திற்கு அதனோடமாறு படத்தாற்பரியங்கோடல் பொருந்ாதமையின் உபக்கிரமோப சங்காரங்களுக்கு விரோதம் வருங்கால் விரோதிக்கு முற்படு முபக்கிரமம் வலியுடைத்த தென்பது "வேதந்தானே மிகுவர விற்றான்" எனப்பூர்வதந் திரத்திலோ துதலாற் போதருதலின், இறுதிக்கணோதிய "அதனினுமெது சிறந்தது" என்றற்றொடக் கத்து மந்திரங்களுக்கு முதற்கட் கூறியதனைத்தழுவியே பொருள் கூறற்பாற்றாகலினென்க. ஆகவே, ஆண்டுள்ளவடுத்த மந்திரமு நாராயணபரமேயாம். "ஆதலிற்சிவன் சர்வகதன்" என்னு மந்திரத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்குப்பின்னும் "ஆயிரந்தலைகளுடையன் புருடன்" எனப்புருட சூத்த மந்திரங்கூறப்படுதலானும், "இவன் சத்துவகுணத்தைத் தொழிற் படுத்தும்" எனச்சத்துவ குணவுபாதியென்னு மிலிங்கங் கூறப்படுதலானுமென்க.

ஆண்டு "அதனின்" என்னுஞ்சொல்லானே "அந்தப் புருடனாலிந்தச் சகமெல்லாம் வியாபிக்கப்பட்டன" என வருமுன்னை மந்திரவிறுதிக்கண் எழுவாய் வேற்றுமை யாணுணர்த்தப்படும் விசுவத்தைவாங்கி, அதனினுஞ் சிறப்புறுதல் இயைபுடைய நாராயணனுக்குக்கூறப்படும். அல்லதூஉம், "அதனின்" என்பது ஏதுப்பொருட்கண் வந்ததெனக்கொண்டு, எக்காரணத் தானேஅவனால் எல்லாம் வியாபிக்கப்பட்டன, அக்காரணத்தால் எதுமிகவுயர்ந்ததென்று, மந்திரத் தொடர்ச்சி பொருந்துமெனினுமாம். ஆண்டை மந்திரங்கடோறும் வரும் "உருத்திரன்" முதலிய பதங்களும் இங்ஙனஞ் "சிவ" சத்தத்திற்குக் கூறிய நியாயத்தானே நாராயணனையுணர்த்துவனவேயாம்.

இவ்வாறு இவ்நிபடதத்திலுள்ள மந்திரமெல்லா நாராயண பரமாகவே, "காரணாதிபர்க்கெல்லாமதிபதி யாகியவனே காரணன்" என்னுமற்றைமந்திரந்தான் சிவனுக்குக் காரணத்தன்மையைப் பெறுவிக்குமேயோவென்னு மாசங்கைக்கு இடமின்மையுணர்க.

"எவன்றேவர்க்கெல்லாமுதல்வனான விரணியகருப் பனை" யெனவருந்தைத்ரீய மந்திரமு நாராயணபரமேயாம், ஆண்டுள்ள "எது" பபந்தத்தாலனுவதிக்கப்படு மிரணிய கருப்பனுக்குக் காரணமாந் தன்மை "நாராயணன்பானின்றும் பிரமன்றோன்றும்" என்றற்றொடக்கத்துப்புரோவாதத்திற்கேற்ப அவன்விடயமாதல் பெறப்படுதலின்.

அஃதேல், "அணுவுக்கணு" வென்றுபநிடதத்து பக்கிர மத்திலெழுந்த மந்திரத்தில் "தாதுப்பிரசாதத்தாற் பிரமமாகவுமீ சனாசவுமறிக" வென "ஈச" சத்தங்கேட்கப்படுதலானும், "எது வேதத்தின் றொடக்கத்திலுள்ளது. எனவரும் அதனிறுதிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுள்ளமந்திரத்தில்"மகேசுர" சத்தங் கேட்கப்படுதலானும், உபக்கிரமவுபசங்காரங்கள் பற்றி அனுவாகமே சிவபரமாத றுணியப்படுதலின், இடைப்பட்ட விவ்வொருமந்திரமாத்திரம் விண்டுவிடயமாதல்யாங்ஙனமெனின்:- கூறுதும் :-"ஈச" சத்தம் ஐசுவரியகுணவியைபானே யாவர்மாட்டும் பிரயோகிக்கப் படுதலின் ஓரிடத்துநிலைபேறின்றாம். "எது வேதத்தின் றொடக்கத்திலுள்ளது" எனவருமந்திரமும் பொருட்பெற்றியானே நாராயணபரமாம். அதன்பொருள் முன்னர்க்கூறுதும். "மறை பிரணவத்திற்றோன்றியொடுங்குமற்றதன்பான்மாண்ட, வறி வுடைமுனிவ" என்னுமிருதிவசனத்தானே வேதங்களின்றோற்ற வொடுக்கங்களுக்கிடமாய் அதன் எழுவாயினுமிறுவாயினு நிலைபெறு முயிராயுள்ளது பிரணவம். "அகாரமன்றே வாக்கு களனைத்தும்" என அகாரத்துக்கு வாக்கனைத்திற்கும் பிரகிருதியாதல் ஓதப்படுதலின், பிரகிருதியான அகாரத்தி லொடுங்கி அதன்மயமாம் பிரணவத்திற்கு, எவன் பரன்- "இதம்பரம்" "தற்பரம்" என்றற்றொடக்கத்துப் பிரயோகங்களிற் "பர" சத்தம்பொருளையுணர்த்துதலின்) எவன் பொருளா கின்றான்,-அவன் மகேசுரனாம்-வாக்கனைத்தின்சாரமாயும் எல்லாவேதங்களின்றோற்றவொடுக்கங்களுக் கிடனாயுமுள்ள பிரணவத்திற்குக்காரணமாதல் பற்றிச் சத்தங்களனைத்திற்கு மேலான அகாரத்தின் பொருளாயுள்ளான் உலகிற்கெல்லாம் பெரிய ஈசரனாமென்பது துணிபாம். சொற்களனைத்திற்கு மேலாய்ச் சிறக்கும் அகாரப்பொருளாதற்குரியானுக்குப் பொருள் களனைத்திற்கு மேலாய்ச்சிறந்தானாதல் வேண்டு மென்னு நியாயத்தானே, அகாரப்பொருட்குப் பேராண்டகைமையைக் கூறுமிம்மந்திர நாராயணன்பாற்றானே முடிபெய்தும்.

"அகாரம் விண்டுவை யறிவுறுத்திடும்" என்னுமிருதி வசன முண்மையின், இந்த அனுவாகமுழுது நாராயணபரமேயாம். அற்றாகலினன்றே இதனகத்துள்ள "அதனுள்ளே எதுவுறையும் அஃதுபாசிக்கத்தக்கது" எனத்தகவுபாசனைநாராயணனைத் தெய்வமாகவுடைத்தாயதூஉம், அதுபற்றி அடுத்தனுவாகத்திற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"றாமரைமொட்டுப்போல்" என்றற்றொடக்கத்து வசனங்களானே தகரபுண்டரீகவியல்பையுணர்த்தும்வழி "ஆயிரந்தலைகளை யுடையான்" என்றெடுத்து நாராயணன் மகிமை விரித்ததூஉ மென்க.

"காரணன்றான் றியானிக்கற்பாலன்" என்னுமதர்வசிகா வாக்கியம் தான் ஒன்றன் காரணத்தன்மையை விதிக்க வெழுந்ததன்று; மற்றெதென்பொருட்டெழுந்ததெனின்;- "எவன்றி யானிக்கப்படும்" என்றுபநிடதத்தின் றொடக்கத்தி லெழுந்த கடாவிற்குவிடையாகத்தியானத்தை விதித்தற் பொருட் டெழுந்த தென்க. அவ்வாறு சுபாலோபநிடதமுதலிய பிறசுருதிகளில் நாராயணனுக்குக் காரணத்தன்மை துணியப் படுதலின், "காரண சத்தத்திற்கு அவன் இன்றியமையாப்பொரு ளாம்; பொருளாகவே, அதனோடொருபொருள்படப் பிரயோகிக் கப்பட்ட "சம்பு" முதலிய சத்தங்களும் அவன்றன்னையே யுணர்த்துவனவாம். "பிரமன் விண்டு வுருத்திரனிந்திரனென்பார் பிறக்கின்றனர்" என்புழி, "விண்டு" வென்னுஞ்சத்தம் பத்தர்க் கெளிதாம்பொருட்டுக் கொள்ளப்பட்டதோ ரவதாரவிசேடப் பொருட்டாய்ப் பொருத்த முடைத்தாம்.

இவ்வாறு சுருதிகளில் நாராயணனை யொழித்தொழிந்த கடவுளர்க்குக் காரணத்தன்மைபேசப்படாமையானும், நாரா யணனுக்குச் சுபாலோபநிடதமுதலியவற்றிற் சிருட்டிப் பிரளய ரூபநிரூபணப்பிரகரணங்களிலேபெருவழக்குடைய "நாராயண" சத்தத் தாற் காரணத்தன்மை பேசப்படுதலானும், காரண வாக்கியங்க ளெல்லாம் அவன்கட்டானேநுடிபெய்துமென மேற்கூறியது இயைபுடைத்தாமாறுகாண்க.

அற்றேல், சைவ இலிங்கமுதலியபுராணங்களுள் ஓதப்படுஞ்சிருட்டிப்பிரகரணங்களிலே சிவன் சகத்திற்குக் காரணனாதலை மிகுத்தெடுத்துரைக்கக் காண்டுமெனின்;- அஃதுண்மையாயினுங் கொள்ளற்பாற்றன்றாம்; என்னை? தாமதபுராணங்களிற் கூறப்படுதலின். புராணங்களையியற்றினான் நான்முகனன்றே; அவன் சில கற்பத்துச் சத்துவகுண மிகுதிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டையுஞ் சிலகற்பத்து ராசதகுணமிகுதிப்பாட்டையுஞ் சிலகற்பத்துத் தாமதகுண மிகுதிப்பாட்டையுமுடையனா கின்றான். தன்னையுற்ற குணமிகுதிப்பாட்டாற் சாத்துவிகம் இராசதந் தாமதமெனப் பெயர்பெற்றுத் தனக்கொவ்வோர் பகலான அக்கற்பங்களில் வைணவ புராணங்களையும் பிரம புராணங்களையும் சைவபுராணங்களையுமியற்றினன். ஆகலின், புராணங்களும் அவ்வியற்றியான்குணத்திற்கியையச் சாத்துவிகம் இராசதந் தாமதமெனக் குறியீடு பெற்றன. இங்ஙனந்த மோகுணத் தாற்றிரிவுற்ற இருதயமுடையோனாற் கூறப் படுஞ்சிவபுராணத் தோதப்பட்டன, சாத்துவிக புராணத்தோடு மாறுபடும் வழிச், கொள்ளப்படாவாம். இவையெல்லாம், "சங்கீரணஞ்சாத்துவிகம் இராசதந் தாமதம்" எனக் கற்பங்களை நான்காக வகுத்தெடுத்துக் கொண்டு, "எப்புராணமற்றெக்கற்பத்தேயயன், செப்ப நின்றது பண்டதன் சீரிதாத், தப்பறப்புகலப்படும்" என்று நிறுத்தி, "வயங்கு மங்கிசிவன் பெருமான்மிய, மியம்பு தாமதத்தெய்திடு நான்முகத், தயன்றன் மேன்மையிராசதத்தாகிடு, நயங்கொள் வாணி பிதிர் புகழ் நாடினே; விளக்கமெய்துஞ் சங்கீரணமிக்குநன், களக்கரும் மரிமான்மியமாக்கமாங், களக்கநீங்குமச்சாத்து விகத்துவீ, டுளக்கண் யோகசித்தீசருறுவரே." என்றிங்ஙனம் வருமற்ச புராணவசனங்களினுட் கோளாக வோர்ந்து கொள்ளற்பாலவாம்.

"எப்புராணமற்றெக்கற்பத்து" என்ற வசனத்தானே பிரமனால் அவ்வக்கற்பங்களிற் கூறப்பட்ட புராணங்களுக்கு அவ்வக்கற்ப விடயத்தன்மை போதருதல் பற்றி ஒரு கற்ப விடயத் தன்மையெய்திய புராணங்களுக்கு மற்றொரு கற்பத்திலோதப் படுதலுண்டென்னுஞ் சங்கையையொழித்து "வயங்குமங்கிசிவன் பெருமான்மிய" மென்றறொடக்கத்து வசனங்களானே சைவ முதலிய புராணங்களுக்குத் தாமத முதலிய கற்ப விடயத் தன்மைபோ தருவித்தலின், அவைதாம் பிரமனாற்றா மத முதலிய கற்பங்களிற்றாமே யோதப்பட்டன வென்பது பெறப்பட்டது. பேறப்படவே, புராணங்களுக்குச் சொல்லியான் குணத்திற்கேற்ப வன்மைமென்மை வேறுபாடு உளதாதல் தானே போதரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்றேல், புராணங்கள் தாமத முதலிய கற்பங்களில் ஓதப்பட்டனவென்பது கொண்டு, ஓதியானுக்குக் குணவேறுபாடு பெறப்படுதல் யாங்ஙனம் போதரும்? கற்பங்கள் தாமத முதலிய வாக வேறுபடுதல் பற்றிப் பிரமன் அவ்வக்குணத்தனாய் மாறுபடுதல் எடுத்துக்காட்டிய சுலோகங்களிற் பெறப்படாமை யினெனின் ; அற்றன்று. "சங்கீதணஞ் சாத்துவிகம்" என்பதை முதலாகவுடைய கற்பவேறுபாடு கூறுஞ்சுலோகத்திற்கு முந்தே கற்பங்களிற் பிரமனுக்கு அவ்வக்குணமிகுதல் கருத்தாகலானும், அங்ஙனம் வேறுபட்ட வவ்வக் கற்பங்களில் அவனாலோதப் பட்டனவாயும் ஒருவரோடொருவர் மாறாடுங் கடவுளரினு யர்ச்சியைக் கூறுவனவாயுமுள்ள புராணங்கள் ஒருங்கு பிராமண மாதல் செல்லாதென்றாசங்கை நிகழ்வுழி, அவற்றுட் கொள்ளற் பாலன இவை தள்ளற்பாலன இவையென்பதுணரும் பொருட்டு ஓதியான் குணத்திற்கேற்ப வன்மை மென்மைகளைக் குறித்தல் பற்றிப் பயப்பாடுண்டாகலானும் சிவன் முதலியோர் மகிமை களைக் கூறுதலையே பொருளாகக் கொண்டபுராணங்களுக்குத் தாமத முதலிய கற்பங்களிற் பிராமாலோதப்படுதலைக் கூறி முடிந்த அடுத்த வசனத்தானே மேற்கூறிய பயப்பாடு வலி யுறுத்தப்படுதலானும், சாத்துவிக முதலியவாக வேறுபடுத்த தற்குப் பயன் வேறோராற்றாற் பெறப்படாமையானும், பிற்கூற் றோடு இயைபுடாமையானுமென்க. இதனானே, எடுத்தோதிய மற்சபுராண வசன வாராய்ச்சியாற் சிவபுராணங்கள் தமோகுணத் தான் மறைக்கப்பட்ட தத்துவ ஞானத்தையுடைய பிரமனா லோதப்படுதல் பற்றிப் போற்றிக் கோடற்பாலனவல்ல வாயின மையின், அவற்றின் வலியானுஞ் சிவனுக்குச் சகத்திற்குக் காரண மாந்தன்மை பெறப்படுமெனக்கருதல் கடைபோகு மாறில்லை. சாத்துவிகங்களான வைண புராணங்களில் "மாயிரு ஞாலம் விண்டுவயினுதித்தவன்றன்மாடே, மேயிருந்திதியுற் றோங்கும் விளம்புமத்திதியினோடே, யேயுமவ்விறுதி தன்னை யிச்சகக்க வனே செய்யும், பாயிருஞ்சகமன்னோற்கு வேறெனப் பக ரொணாதால்" என்றற்றொடக்கத்தனவாய் வரும் வசனங் களானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாராயணனே சகத்துக்குக் காரணனென்பது நாட்டப் படும்.

தருமசாத்திரங்களைச் செய்தவர்க்கெல்லாந் தலைவனான மனு, தருமநூற் றொடக்கத்தில், "இந்தச்சகம் இருளாயும் உணரப்படாததாயும் இலக்கணமில்லதாயும் அனுமானிக்கப் படாததாயுந் தெரித்துணரப்படாததாயும் உறங்குவதாயு மிருந்தது" என்றெடுத்தோதி, "தத" வென்றெடுத்துக்கொண்டு, "சுயம்புவும் விளங்காதவனு மாபூதங்களாய் வேறுபடும் வீரியத்தையுடையனுந் தமோனுதனுமான பகவன் அவ்விருளைக் கடிந்து கொண்டு புறப்பட்டனன்; அவன் தன் சரீரத்தினின்றும் பலவேறு வகை யுயிர்களைத் தோற்றுவிக்கக் கருதி, அப்புவைச் சிருட்டித்து அதன்கண் வீரியத்தை விடுத்தனன்; அது ஞாயிற்றினை யொக்கு மொளியுடைய பொன்மயமான வோரண்ட மாயது; அதன்பானின்றும் உலகங்களனைத்திற்கு மூதாதையான பிரமன்றானேயுதித்தனன்" என்று கூறி, "அப்புத்தா நாரமென்றிங்கறைந்திடப்படுமற்றந்த, வப்புத்தாநரன்பானின்றுந் தோன்றினவவை தாமாய்ந்து, செப்பிற்பே சிவற்கு முன்னைத் தானமாய்ச் சிறத்தலானே" செப்புற்றானிவன்றானாராயணனெனத் தெரித்து மன்னோ" என்னுஞ் சுலோகத்தானே பிதாமகனையுஞ் சிருட்டித்த சகத்திற்குக் காரணனான புருடன் மாட்டு "நாராயண" நாமத்திற்குறுதி கூறுதலின், நாராயணனுக்கேசகத்திற்குக் காரணமாந்தன்மையுண்மையை வெளியிட்டனன்.

"சகத்தின்றோற்ற முதலியவற்றிற்குக் காரணமாகுகை பரப் பிரமப் பொருட்கு இலக்கண" மெனச் சூத்திரஞ் செய்த பிரம மீமாஞ்சையாக்கியோனும் பகவனுமானவாதராயணனும், மாபாரதத்துத் தான் கொண்ட பரப்பிரமப் பொருளைப் புலப்படுத்தும் பொருட்டுப், "பூதங்களனைத்தும் யுகத்தின் றொடக்கத்திற்றன் பானின்றுந் தோன்றித் தன்மாட்டொடுங்க நின்றவப் பிரபுவான நாராயணன் முதற்கண் நீரினைத் தோற்றுவித்தனன் பகவனான அவன் அதன்பின்பு அந்நீரினின்றும் பிரமனைத்தானே யுதிப்பித்தனன்" என்றற்றொடக்கத்தனவாகப் பல விடங்களினு நாராயணனுக்கே சகத்திற்குக் காரணனாந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மையுண்மையை நிலையுறுத்தினன். ஆகலின், இலக்கணத் தானியைந்த நாராயணனே பரப்பிரமப் பொருளாம். இது பற்றியன்றே தைத்திரியச் சுருதி "நாராயணபரப்பிரமம்" என்றெழுந்ததூஉமென்க.

*இனிப் பாசுபதர் "நாராயணனினும் பரப்பிரமமே லானது" என்றுரைத்தது பொருந்தாது; மகோபநிடதத்திற் சமானப்பிரகரணத்து "நாராயணன் பரப்பிரமம்" என்று பதம் பிரித்துப் படிக்கக் காண்டலானும், ஈண்டும் அதனோ டொற்றுமைப் பொருள்போ தருமாறு பின்னபதமான "நாரா யண" சத்தத்திற்கு "வேற்றுமையுருகள் வேண்டுழித் தொகுமே" என்னும் வியாகரணசூத்திரம் பற்றிச் "சு"த்தொக்க தென்று உய்த்துணரற்பாற்றாகலானும், தொகைச் சொல்லா யினும் நிடாதத்தபதிநியாயம் பற்றிச் சமானாதிகரண தற்புருட சமாசனென்றே கோடற்பாற்றாகலானும். நிடாதத்தபதியதி கரணத்து வியதிகரணதற்புருடனுக்குப் போலச் சமானாதிகரண தற்புருடனுக்கு வேற்றுமைப் பொருளில் இலக்கணை கற்பிக்குமிகையில்லாச்சிறப்புண்மையானும், இலிங்கபுராணத்து "நானே பரப்பிரமம்பரதத்துவந்நானே, நானே பரஞ்சோதி விதிபரமான்மாநானே" என்று பிதாமகனை நோக்கிப் பகவன் ஓதியது பற்றி நாராயணனுக்குப் பரப்பிரமத்தன்மையைக் கூறுதற் கண் இம்மந்திரத்திற்கு உபபிருங்கணமிருத்தல் கொண்டு வியதிகரண தற்புருடகற்பனை செல்லாமையானுமென்க. ஆகலின், நாராயணனே பரப்பிரமப் பொருளாமென்றும், அது பற்றி அவனே கடவுளரெல்லாரினு மேம்பட்டோனென்றுமாம். அற்றாகலினன்றே பகுவிருசப் பிராமணத்தில் "அங்கி கடவுளர்க்க வமன் விண்டுபரமன் அவரொழிந்த மற்றைத் தேவரெல்லாம் இடையானோர்" என்று கூறியதூஉமென்க.

இவ்வாற்றானே பிரமன் சிவன் இருவரும் பகவனாற் சிருட்டிக்கப்படுதலானும், அவனானியமிக்கப்படுதலானும், இந்திரன் முதலியோர் போற் பரதந்திரரேயாவர்; "அதன் பின்பு அத்தகுதியுடைய நாராயணன்மறித்து மற்றொன்றிற் கருத்துடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யனாய் மனத்தாற்றியான முற்றான்; தியானமுற்றவனது நெற்றியிலிருந்து வேர்வை வீழ்ந்தது; அது இவ்வப்புக்களாம்; அவற்றின்கண் ஒளி பொருந்திய பொன் மயமான ஓரண்ட முண்டாயிற்று;

ஆண்டுச் சதுர்முகப் பிரமனுதித்தான்; அதன்பின்பு அந்நாராயணன் மற்றொன்றிற் கருத்துடையனாய் மனத் தாற்றியானமுற்றான்; தியானமுற்றவனது நெற்றியிலிருந்து மூன்று கண்களுடைய சூலபாணியானவொருபுருடன்றோற்றினன்" என்று மகோபநிடதத்தும் "நாராயணன் பானின்றும் பிரமன் பிறக்கும் நாராயணன் பானின்றும் உருத்திரன் பிறக்கும்" என்று நாராயணோபநிடதத்தும் அவ்விருவருஞ் சிருட்டிக்கப்படுதல் கேட்கப்படுதலானும், மாபாரதத்துப் "பிரமன், றாணு, மனுத், தக்கன், பிருகு, தருமன், தபன், தமனென்றற்றொடக்கத்து இருபத்தொருவர் பிறந்தனர்; அவர்தாம் பிரசாபதிகளென்று கருதப்படுவர்; அக்கடவுளின் புராண மரியாதையைப் பூசிக் கின்றனர்" என்று அவ்விருவருக்குந் தக்கன் மனு முதலியோர்க்குப் போலப் பகவனாலியற்றப்படுமாணையைக் கைக்கொண் டொழுகுதல் கூறப்படுதலானுமென்க.

இனி அவ்விருவருள்ளும் பிரமனே யுயர்ந்தோனாம்; என்னை? எடுத்துக்காட்டிய சுருதிகளானே பிரமற்கு முற்றோற்றங் கேட்கப்படுதலானும், "இவ்விரு விபுதத்தலைவரும் என்னருள் வெகுளியிற்றோன்றி என்னாணை வழிநின்று தோற்ற மொடுக்கமென்னுந் தொழில்களைச் செய்கின்றனர்; இப்பிரமன் சகத்தினைத் தோற்றுவித்துப் பிரபுவாய் உலககுருவாய் உறையும்; இவன் உமக்குத் தாயுந் தந்தையுமூதாதையுமாம்; நெற்றியி லிருந்துதித்த மற்றையுருத்திரன் இவனுக்கனுசன்; என்னாணை யால் உயிர்களனைத்திற்கும் வரத்தினைக் கொடுப்பவனாம்" என்று மாபாரதத்திற்றானே பிரமனுக்குச் சிவனனுசனாதல் கூறப்படுத லானும், விண்டுபுராணமுதலியவற்றில் இச்சிவன் அப்பிரமன்பாலுதித்தல் இயம்பப்படுதலானுமென்க.

ஆதலின், நாராயணனுக்குமுழுமுதன்மையோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்திற்கு மேலாந்தன்மையுமுண்மைபொருந்துதலானும், பிரமன்சிவன் முதலிய கடவுளர்க்குப் பரதந்திரத்தன்மை யுண்மை யினானும், அவனே நிலைபெற்ற உறுதிப் பொருளை விரும்புவோ ரால் உபாசிக்கற்பாலனுஞ் சரணடையற்பாலனுமாம்; "காரணன் றான்றியானிக்கற்பாலன்" என்னுமதர்வணிகச்சுருதியானும், "எவன் முதற்கட்பிரமனைச்சிருட்டித்தனன், எவன் அவற்கு வேதங் களைச் செவியுறுத்தனன், ஆன்மாவினறிவைச் செலுத்துங்கடவுள் அவனாம், அவனை வீட்டினைக்காதலிக்கு நான் சரணடை கின்றனன்" என்னுஞ் சுவேதாச்சுவதரமந்திரத்தானுமென்க.

மூர்க்க தாந்திரிகரானோர் முதுக்குறைவிலாமையானே
பார்க்கணேபிதற்றியேற்றும்பயனிலாவுரைகணீக்கித்
தீர்க்கவாராய்ச் சியானே மறுப்புரை செயற்காஞ்சாரம்
யார்க்கு நன்றா விளங்கச் சுருக்கியீண்டிசைத்தாமன்றே.

பூர்வ பக்கமுற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்தாந்தம்

### ஈண்டுக்கூறலுறுவாம்

வரமிக்கசகத்திலுக்குக்காரணமாகைமன்ற
பிரமத்துக்கியலாமென்றல்வாய்மைமற்றதுபிடித்தே
திருமிக்கசம்புவானசிவபிரான்றன்னையாமவ்
வருமிக்கபிரமமென்றிங்களந்துமன்றுணிதுமன்றே

அஃதாமாறு:-அதர்வசிரசில் "நானொருவன் முதற் கணிருந்தனன்" என்றெழுந்தசிவபிரான்வசனஞ் "சௌமிய சத்தே முதற்கணிருந்தது" என்றற் றொடக்கத்துச் சுருதிகளானோதப் படுஞ்சிருட்டியின் முற்பொழுதிற் சிவபிரான் முழு முதன்மை யோடு பொருந்தியிருத்தலைக் கூறுவதாம்; இஃது மற்றொரு வனைக் குறித்ததன்றாம் ; "நீர் யாவர்" என்று தன் சிறப்பியலை யறியலுறவேண்டி நிகழ்த்திய வினாவிற்கு இறையாயெழுந்த சிவபிரான்வசன மற்றொருவன் விடயமாகும்வழி வினாவிடைகள் தம்முண் மாறுபட்டு வழுவாமாகலின். "அவத்தரத்திலும்" எனவரும் அடுத்தவாக்கியத் தொடர்ச்சிக்கேற்ப வினா வாக்கியத்திற்கு மற்றொருவன்விடயத்தன்மையைக் கற்பித்தல் அமைவுடைத்தாமென்றல் சங்கையன்று விரோதிக்கு முற்படு முபக்கிரமம் வலியுடைத்தாகலின் அதற்கேற்குமாறே அடுத்த வாக்கியத்திற்கும் பொருள்கூறற்பாற்றாகவாலும் "நீர் யாவர்" என்புழி, "நீர்" என்னுஞ்சொல்லானே அவனுடைய வந்தரி யாமியைவினவுங் கடவுளர், சொற்களனைத்தும் அந்தரியாமியின் முடிதலைப் பரர்கற்பித்தவாறு அறிந்தாராயின், பின்வாக்கி யத்திலுள்ள "நான்" என்னுஞ்சொல்லும் அவ்வந்தரியாமியின் முடிதலைத் தெற்றெனவறிந்தாரேயாவராதல் பற்றி ஆண்டு அவர்க்கு அறிவுறுத்தற்பாலதின்மையின், கூறியபொருளை வலியுறுத்துதற்கண்ணே பரர்கூறுமாறு "அவனந்தரத்தின்" என்றற்றொடக்கத்துவாக்கியங்களுக்குத் தந்நிலையில் அன்னு வயஞ்சம்பலிக்காமையின், அங்ஙனங் கற்பித்தும் அவ்வியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்மை அவ்வண்ணமேநிலையுதலானுமென்பது.

"அவனந்தரதரத்தினு" மென்றற்றொடக்கத்து வாக்கியங்களுக்குப்பரர் கூறியவாறு பொருள்கோடறானும் பொருத்தமின்று. "அதனானே தோய்ந்ததிராகத்தின்" என்றற்றொடக்கத்தனவற்றில் மற்றொன்றனோடு தொடர்பின்றிவரும் அவ்வென்னுஞ் சுட்டுச்சொற்குப் பிறசொல்லாலுணர்த்தப்படாத பலபொருள்களை அறிவிக்குந்தன்மையுண்டெனினும், ஈண்டுத் துணியப்பட்டவொரு பொருளையறிவுறுக்கும் அவ்வென்னுஞ் சுட்டுச்சொற்கு மற்றொன்றானுணர்த்தப்படாத பலபொருள்களையறிவுறுத்தல் கூடாமையின். முன்வாக்கியத்திலுள்ள "நான்" என்னுஞ் சொற்கு அந்தரியாமியின்கண் முடிவுண்டாகலின், இந்த "அ" வ்வென்னுஞ் சுட்டுச்சொற்கு பிறிதொரு சொல்லானுணர்த்தப்படும்பொருளையறிவுறுக்குந்தன்மை உண்டென்றலும் பொருந்தாது; கடவுளரானே அம்முடிவு முன்னறியப்படாமைபற்றி அவர்க்கு அந்த "அ" வ்வென்னுஞ் சுட்டு அப்பொருளைத்தருதல் செல்லாமையானும், சிவபிரானேயனைத்திற்கு மந்தரியாமியென்பது சிவதத்துவவிவேகத்தில் எம்மாலினிது நாட்டப்பட்டமையின் அவனின்வேறாக அந்தரியாமி இல்லாமையானும், "விண்டுஆன்மா" என்புழி "ஆன்மா" என்னும்பதத்திற்கு "ஆதலினெனக்கான்மாவாமுருத்திரன் றன்னையானாக், காதலினருச்சிக்கின்றேன்முன்னர்யான்" என்று மோக்கதருமத்துக் கண்ணன் கூறிய வசனத்தின்கண்ணுள்ள "ஆன்மா" வென்னும் பதத்திற்கு முக்கியத்தினாற்றான் உபசரிதத்தினாற்றான் அபேதப் பொருள் போதரலானுமென்க. ஆதலின், "அவனந்தரத்தின்" என்றற் றொடக்கதன நின்றாங்கு நின்றன்னு வயித்தல் செல்லாமையின், "வாய்மையைவாய்மையா" லென்றற் றொடக்கத்துச் சிவபிரான்வசனமனைத்தும் இறுதிக்கண் அன்னுவயமாம்; அதன் பின்பு, "பின்னர்க்கடவுளர் உருத்திரனைப்பார்திதிலர்" என்றற்றொடக்கத்துச் சுருதிவாக்கியங் காணப்படுதலின் சிவபிரான் வசன முடிந்ததென்னும் பொருளைபயக்கும் "என்று" என்னும்பதமுஞ் "சிவபிரான் மறைந்தனன்" என்னுஞ் சுருதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசனமும் அவாப்படுதலானும், "அவனந்தரத்தினும்" என்றெழுந்த வாக்கியத்திற்குக் கடவுளர்க்குப் புலப்பட்ட தூலத் திருவுருவை ஒழித்து அதனினுஞ் சிறந்ததூம் அனைத்தினுள்ளும் புகுந்ததூஉம் அனைத்தினுங் கரந்ததூஉம் பரிபூரணமானதூஉமாகிய சொரூபத்தைத் தலைக்கூடினானென்று அவனது மறைதலைக் கூறுதற்கண் பொருட்காற்றலுண்மையானுமென்க. இவ்வாறு றுரைக்கிற் றூரான்னுவயக்குற்றம் ஒரு சிறிதுமணுகு மாறின்று; அவாய்நிலை அண்மையினும் வலியுடைத்தாக லானும், "எதனுடனெதற்குப் பொருட்டொடர்புண்டா மியம்பு மற்றஃது சேய்த்தான, வதனுடன் றொடருமானந்தரியந்தான் பொருடராத வாய்நிலையின்றேல்" என்றுமீமாஞ்சை வார்த்தி கத்துட் கூறுதலானும், "கோப்புறினுஞ் சொற்பொருளியை பின்றேல்-யாப்பின்றாகுமென்மனார் புலவர்" என்னும் விசுவசித்ததிகரண சூத்திரத்தானுமென்பது.

அற்றேல், ஒருவாக்கியத்துட்பட்டபதங்களுக்குத் தூரான்னுவயமுளதாயினும் ஒருவன்வசனத்திடைப்பட்டதற்கு அவன் வசனத்தன்மையை விலக்கி அதற்கு புறம்பே அன்னுவயஞ் செய்தல் பொருந்தாது, அங்ஙனம் வழக்கின்கண்வரக் கண்டது மில்லையாலோவெனின்;- அற்றன்று, வழக்கின்கண் ஒருவன் கூற்றிற்கிடையே மற்றொருவன் கூற்றைவைத்தல் ஆலங்காரிகர் கூறுங் கற்பித்தமையென்னுங் குற்றமாய்ப் பொருந்தாதேனும், வேதவழக்கில் அதுகுற்றமாதலின்றாகலின். இதுமுன் இதுபின் இதுவாக்கியத்திற்படுமென்னு நியதி வேதத்திற்கின்று; "பொருட் பொருத்தத்திற்கேற்பச்சொற்கள்பொருந்து" மென்று உபதேசக் கிரிகையிற்கூறுமாறு உலகவாக்கியநெறி வேதவாக்கிய நெறியைக்கடக்குமியல்பிற்றாகலானும், சந்தோகச்சுருதியில் "இவனை நான் பாடினன் அதனானே நீயெனக்கொரும தலையாயினை என்று கௌசீதகி புத்திரற்குசசொற்றான் கிரணங்களை நீ வழிபடுக உனக்குப்பலதனயருதிப்பர்" என்று சுருதியில்யாத்த ஒருவன் வசனத்திடைப்பட்ட "என்று கௌசீதகி புத்திரற்குச் சொற்றான்" என்பது அதன்புறத்தே சுருதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கியமாய் அன்னுவயமுற்றொழுகக்காண்டலானுமென்க. இனிஇவ்வாறன்றி, "என்னின் வேறானானொருவனுமில்லை" யென்பதை விளக்கும்பொருட்டு, அனைத்துயிரியல்பாகவேனும் அனைத்திற்குமுள்ளுயிராகவேனும் பொருள்விரித்துச், சிவபிரான் எப்பொருளினுள்ளும் புகுந்தனனெனக்கொண்டு, "அவனந் தரத்தின்" என்றெழுந்தவாக்கியந் தன்னிலையிலன்னுவயம் பெறுமெனினுமாம். இங்ஙனம் பொருள் கொள்ளும்வழி, "நான்றலைக்கூடினன்" என்றெடுத்தோதாமை குற்றமாய் முடியாது, யாவனொருவனுக்கு யாண்டு உபசரிதமில்லாத "நான்" என்னும் பதம்வழங்கக்காண்டும், ஆண்டு அவனை "அவ" னென்னும் பதத்தாற் சுட்டுதல் வழக்கின்கணிலாமையின், தன்னைபோற் றன்னந்தரியாமிநிலையையுமப்பதத்தாற் சுட்டுதல், பொருந்தாமையின், இஃது பரமதத்தினுந்துல்லியமாகலினென்க.

இனித்தனதந்தரியாமியென்னுஞ் சிறப்புப்பொருளில் "நான்" என்னும் பதத்தைப் பிரயோகிப்பினும், அந்தரியாமிப் பொதுமைபற்றி "அவன்" என்னும் பதத்தாற் சுடுதல் சாலு மெனின்;- அங்ஙனந் தன்றன்மையைக்குறித்து "நான்" என்னும் பதத்தைப் பிரயோகிப்பினும் ஆன்மப் பொதுமை முதலிய வேற்றியல் புகுறித்துத் தன்னை "அவன்" என்னும் பதத்தாற் சுட்டுதல் சாலுமென்று துல்லியமாதல் காண்க. "என் மாட்டுப் பதிந்த மனத்தினையுடையையாய்த் தான் எனக்கன்புடையை யாய்த்தான்" என்றெழுந்த வசனத்தில் "என்" என்னுந் தன்மைச் சொல்லானுணர்த்தப்பட்ட வாசுதேவனுடைய ஆன்மாவின்கண், "அவனையே சரணடைக" என்றற்றொடக்கத்தவன் கூற்றாக வெழுந்த வசனத்திடைப்பட்ட படர்க்கை வசனங்கட்கு முடி பினைக் பரருங் கீதையிலொப்பிக்கொண்டாரென்க. ஆகலின், "அவனந்தரத்தினும்" என்றெழுந்த வசனத்திற்குயாங் கூறிய பொருளே எவ்வாற்றானுமியைபு பட்டொழுகுதலின், "நானொருவன் முதற்கணிருந்தனன்" என்றற் றொடக்கத்ததர் வசிரசு வாக்கியஞ் சிவபிரானுக்கு முழுமுதன்மையை யுரைக்கு மென்பது பொருந்துமென்க. இவ்வாறு அதர்வ சிரோபநிடத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுதுஞ் சிவபரமாகவே, ஆண்டுக்கூறிய "எங்கணும்விழிகளும் எங்கணு முகங்களும் எங்கணுங் கைகளும் எங்கணுமடிகளு முடையனாய் நாலுங் கரங்களாலனைத்தையுமடக்கி ஆகாயம் புடவியிரண்டையுந் தோற்றுவித்த கடவுளேகன்" என்றற்றொடக் கத்துரைகளுஞ் சிவபிரான் சகத்திற்குக்காரணனாதலைக் கூறுமென்பது தானே போதரும்.

"எப்பொழுதிருளிருந்தது" என்றெழுந்த சுவேதாச்சுவதர மந்திரமும் இருண்மாத்திரையானே வரைசெய்யப்பட்ட சிருட்டி யின் முற்பொழுதிருத்தல்பற்றிச் சிவபிரானுக்கு முழுமுதன்மையை அவ்வாறெடுத்து மீக்கூறும். இனி "எப்பொழுதிருளிருந்தது" என்பதனுவாதமாகலின், புரோவாதத்திற்கியையுமாறு ஆண்டைச் "சிவ" பதத்திற்கு நாராயணன் பொருளாமென்று பரராற் கற்பிக்கப்பட்டது. ஆண்டு அனுவாதமென்றதுண்மையேனும், சௌபாலவாக்கியமொன்றே அதன் புரோவாதமாமென்ற தமையாது, "இவ்விருளொன்றே யிருந்தது" "அப்பொழுது சத்தில்லை யசத்தில்லை" "இருளிருந்தது" "பிரசாபதி யொருவனே யிருந்தனன்பகலில்லையிரவில்லை அவனிவ்வடர்ந்த விருளில் உலாப்போதரா நின்றான்" என்றற்றொடக்கத்தவனாய் வழி மொழிந்துகொண்ட பொருளையுணர்தும் பிறவாக்கியங்களுங் கேட்கப்படுதலின். "எப்பொழுது இருளிருந்தது" என்னுங் கூறு போல "அப்பொழுது பகலில்லை" யென்றற்றொடக்கத்துக் கூறு முழுதும் அனுவாதமன்று, "அப்பொழுது" என்னும் பிரயோகத் தானே யாதானுமொன்று விதிக்கற்பாலதாகத் தோன்றுதலின். விதிக்கற்பாலது பகலிரவுகளின் விபாகாபாவமுமன்று, சத சத்தியல்பான பிரபஞ்சாபாவமுமன்று, எடுத்துக்காட்டிய புரோ வாதவசனத் தொகுதியாற்றானே யவ்விரண்டும் பெறப்படுதலின். ஒன்றை யனுவதித்து மற்றொன்றை விதிக்க வெழுந்த வாக்கியம் அனுவாதத்திற்கு இன்றியமையாது வேண்டப்படும் புரோவாத் தாற் பெறப்படாத பொருட்கண் முடிவு பெறாதவழிப்பயன்படா தாகலின், ஆண்டுப் "பகலில்லை" என்றெழுந்ததூஉம் அனுவாத மாம். இங்ஙனமாகலின், "சிவ" சத்தம் இயற்கையாயுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமேசுவரப் பொருளைவிட்டுப் புரோவாத மொன்றானே பெறப் படு நாராயணன் கட்டானே முடிவுபெறின், ஆண்டு "எப்பொழு திருள் அப்பொழுது" என்றெடுத்துக்கொண்டு ஒன்றனை விதிப் பானெழுந்து பாதிவழிவந்தவாக்கியம், யாதினை விதித்து இளைப்பொழிந்ததென்க.

இனிச் "சிவ" பதம் நாராயணனையுணர்த்துமாயிற் புரோவாதத்தாற் பெறப்படாத பொருளொன்றேனுங் கண்டிலமாக லின், பரமதத்தில் இவ்வாக்கியமுழுவதும் வாளாகூற்றாயொழியும்; ஒழியவே, சிருட்டிக்கு முற்பொழுதை இருளைச்சுட்டிக்கூறும் வாக்கியங்களுள் அவ்விருளையதிட்டிப்பானை ஒரோவழி "நாராயண" பதத்தானும் ஒரோவழிப் "பிரசாபதி" பதத்தானும் ஒரோவழிப் "பரமான்மா" முதலிய பொதுச்சொற்களானுங் கூறுமென்று மாறு பட்ட சிறப்புப்பொருள்கள் கேட்கப்பட்டு ஒன்றன்கண்ணு முடிவு துணியப்படாமையின், விரோத வெழுச்சிக்கண் அவற்றிற்கு ஒற்றுமையை யுணர்த்தும் பொருட்டு, இம்மந்திரம் அவை தம்மானுணர்த்தப்படுஞ் சிருட்டிக்கு முற்பொழுதை யிருளை அனுவதித்துச் "சிவ" பதத்தால் அதனை யதிட்டிப்போனுக்கு அவற்றாற் பெறப்படாத பரமேசுரத் தன்மையை விதிக்குமென்று அதற்குப்பயப்பாடு கூறற்பாற்றா கலின், அதுபற்றி "நாராயண" பதத்திற்கே சிவபிரானிடத்துப் பொருண்மதுகை கூறற்பாற்றென்றல் பொருத்தமாம். ஒரு வாக்கியத்திற்கு பயப் பாடின்மையைக் கூறதலினும் ஒருபத்திற்கு இலக்கணை கூறுதல் சிறப்புடைத்தாம்; அவதானஞ் செய்தற்குரிய பசுவினவயவங்கள் பதினொன்றாம் அவற்றை யிருமுறை யவதானஞ்செய்க" வென்று பசுவேள்விக்கட்போந்த சோதகத்தாற்பெறப்படு மவதான விரட்டையை மறித்தும் விதிக்கவெழுந்த வாக்கியத்தின் பயன் பாட்டின் இன்மையை யொழித்தற்பொருட்டு "நான்கவதானத்திற் குரிய எசமானன் றானும் வபையை ஐந்துமுறையவதானஞ்செய்க" வென்னும் வாக்கியத்தின் கண் "வபை"யென்னும் பதத்திற்குப் பொது வகையானே பசுவின் சம்பந்தமுடைய இருதய முதலிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவயவங்களனைத்தினும் இலக்கணை போதரும். அங்ஙனம் போதருமாயினும், இருதயமுதலிய அவயவங்களினும் ஐந்தவ தானம் போதரும்பொருட்டு உபத்தரண அபிகாரக் கிரியைகள் நிகழ்வுழி இருதயமுதலிய அவிசுகளில் மூன்றவதான நேர்ந்துழி, அவிசை இருமுறையே அவதானஞ்செக உபத்தரண அபிகாரங் களுள் ஒன்றின் இரட்டிப்பினால் எண்ணிறைவு பெறுகவென்னு நியமத்தானே அவ்வாக்கியம் பயப்பாடுடைத் தாம்" என்றிவ்வாறுபூருவதந்திரத்தினும்போந்தமைகாண்க.

இங்ஙனங் கூறியவற்றால் "எப்பொழுது இருளிருந்தது" என்னு மந்திரத்தின் முற்பாதி இருளொன்றேயிருந்தது என்றற்றொடக்கத்தொருசில காரண வாக்கியங்களுக்குச் சிவபிரானிடத்து முடிவுகூறும். அப்பாற்பிற்பாதியுட்பட்ட "அது அக்கர" மென்னுங்கூறு "சௌமியனே ஓங்கியெரியுமங்கியின் கண் ஒத்தவுருவுடைய பொறிகள் ஆயிரமாயிரமாக உதித்தல்போல அக்கரத்தினின்றும் "பல்வேறு வகைப்படும் பொருள்களுதித்து அதன்கண்ணே யொடுங்கும்" என்றற்றொடக்கத்து முண்டக முதலிய சுருதிகளுக்கும், "அது சூரியனினுஞ் சிறந்தது" என்னுங் கூறு சூரியமண்டலத்திலுறையும் பரமபுருடன்கண் சகத்திற்குக் காரணமாந்தன்மையிற் பிரியாத அனைத்திற்கு மந்திரியாமியாமி லிங்கத்தை "எம்மறிவை எவன் பிரேரிக்கும்" என்று கூறுங் காயத்திரி மந்திரத்திற்கும், "அதன்பானின்று முன்னரறிவுமங் குரித்தது" என்னுங் கூறு "நான் அநேகமாவல் தோற்றுவலென்று அது பார்த்தது" "உலகங்களைச் சிருட்டிப்பலென்று அவன் பார்த்தனன்" "அவன் அநேகமாவன் தோற்றுவன் என்று காமுற்றான்" பிரமந் தவத்தாற் பெரிதாம் அதன்பானின்று மன்னந் தோன்றும்" என்று முதற் சிருட்டிக்குமுற் சிருட்டித்தற்குரிய பொருட்டொகுதியைக் குறித்த சிருட்டிகர்த்தாவின் சங்கற் பத்தைப் "பார்த்தன்" முதலிய பதங்களாற் கூறுஞ் சாந்தோக்கிய முதலிய சுருதிகளினுட்பட்ட காரண வாக்கியங்களுக்குஞ், சிவ பிரான் கண்முடிவு கூறுமென்பது கொண்டு, இம்மந்திரங் காரண வாக்கியங்களனைத்திற்குஞ் சிவவிடயத் தன்மையை நாட்டிச்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபிரானுக்கு முழுமுதன்மையைச் சாலவும் விளக்கு மென்க.

இனிப்புருட சூத்தமந்திரப் பிரத்திய பிஞ்ஞைபற்றிச் சுவேதாச்சுவதரோபநிடத நாராயண பரமாமென்று கூறியது பொருந்தாது, "உருத்திரரே ! யாதுமக்கு மங்கள தனுவாம் கிரியிற்றங்கி உயிர்க்குச் சுகத்தைச் செய்பவரே ! நீர் எந்த வேவினைக்கைக் கொள்கின்றீர் என் புத்திரனையும் அவன் புத்திரனையும் வருத்தற்க எம்மாயுளைக் குறைக்காதொழிக" என்றற்றொடக்கத்துத் திருவுருத்திரத்திற் படிக்கப்படுமநேக மந்திரப் பிரத்திய பிஞ்ஞையும் இம்மந்திரத்திருத்தலின்" ஆண்டுச் சிறப்பாக ஒருபாற்கோடுதற்கு மூலமின்மையினென்க.

"வேறு வழியில்லை"யென்னும் புருடசூத்தமந்திரஞாபகம் அனன்னியதாசித்தமென்று கூறுதலும் பொருந்தாது; கைவல்லியோபநிடதத்து "உமைக்குக் கொழுநனும் பரமேசுரனும் பிரபுவு முக்கண்ணனும் பொறையாளனுமான நீலகண்டனை" என்று கிளந்தெடுத்தோதி " அவனை அறிந்து மிருத்தியுவைக் கடப்பான் வீட்டிற்குவேறு நெறியில்லை" யெனவருதல் கேட்கப் படுதலின், வீட்டினைக்கூடு முபாயத்துணிபு புருடசூத்தத்திற் கூறப்படு நாராயணன் பானிலையுதல் பெறப்படாமையினென்க.

இனி உண்மையானோக்கும் வழிப் புருடசூத்தந்தானு நாராயணபரமன்றாம், "அமிர்தத்திற் கீசானனன்றோ" வென்புழி "ஈசானன்" என வருமபிதானச் சுருதி பற்றிஅ து சிவபரமாகலின். ஐசுவரியயோகம் பற்றி "யீசான" பதம் பொதுவாம் பிறவெனின் ;- அறியாது கூறினாய்; அது யோகம் பற்றிப் பொதுவாதல் உண்மையாயினும், யோகரூடிபற்றி ஈசுவரனுக்குச் சிறப்பாம்; "ஈசுவரன் சர்வன் ஈசானன் சங்கரன் சந்திரசேகரன்" எனவும் "ஈசானன் பசுபதி சசிசேகரன் சூலிசிவன் சங்கரன்" எனவும் வருமபிதான கோசமிருதி பரம்பரை பற்றிச் சிறப்பு வகையானே அதற்கு ஆண்டுயோகரூடி போதரலானும், தனித்தயோகத்தினுஞ் சத்தியிரண்டனுகூலப்பேறுடைய யோகரூடிவலியுடைத் தாகலானும், பிரமமீமாஞ்சையில் "சத்தத்தானேயளந்தறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாம்" என்னுமதிகரணத்து "அங்குட்டமாத்திரனான புருடன் புகையில்லாத வனலைப்போலும் இறப்பினு மெதிர்வினு முள்ளதற்கீசானன் அவனே இன்றுமுளன் நாளையுமுளனாம்" எனவுரங் கடவல்லி மந்திரத்திற்கு "அங்குட்டமாத்திரன்" என்ற பரிமாண லிங்கத்தானே சீவபரமாதல் போந்தவழி "ஈசானன்" என்னுமபிதானச்சுருதி வடிவான பதத்தினாற் பரமான்ம பரமென்று துணியப்படுதல் பற்றி அதற்குச் சிறப்புண்மை வெளிப்படுதலானு மென்க. இனி அதற்குக் கேவலயௌகிகத் தன்மையுளதாயின் பரமான்மாவைக் குறிக்குஞ் சிறப்புச் சொல்லில்லாமையின், "இறப்பெதிர்வினுள்ளதற்கு ஈசுரனாதலை யுணர்த்து மிலிங்கத் தாற்றுணியற்பாற்றெனப்பட்டுச் "சத்தத் தானேயளந்தறி பொருளா" மென்னுஞ் சூத்திரம் பொருந்தாதாய் முடியுமென்க. பரருக்கும், "அங்குட்ட அளவையானறியப் படுபவன் பர மான்மா இறப்பினுமெதிர்வினுமுள்ளதற் கீசானன்" என்று பரமான்மாவையுணர்த்துஞ் சொல்லுண்மையின், "சத்த" பதத் தானேயீசானசத்தமே குறிக்கொள்ளப்படுதலின், ஈசுர சம்பந்தமான இலிங்கத்தாற்றுணிதல் கருத்தன்றாம்; மற்றியாது கருத்தெனின்;- ஈசுரனையுணர்த்துஞ் சத்தத்தானேயென்பது ஏகாரத்திற்குக் கருத்தாம்" என்றற்றொடக்கத்துத் தம்பாடியகாரர் முதலியோர் வசனமாறுபடுமென்க. இதனானே, "முத்திக்கு ஈசானன்" என்று புருட சூத்தத்தில் முத்தியாகிய ஐசுவரியங் கூறப்படுதலின், அவயவவாற்றலொன்றே கொண்டு பிரயோகிக் கப்பட்ட "ஈசான" பதம் எவர்க்கும் ரூடியாகுமாறில்லை யென்னு மாசங்கை யொழிக்கப்பட்டது. "இறப்பெதிர்வு களினுள்ள தற்கீசானன்" எனப் பிரதியோகிவரினும், ஈசானபதத்திற்குச் சமுதாய சத்தி பற்றி அபிதானச் சுருதித்தன்மை யொப்பப்படு தலானும், அவயவசத்திப் பொருட்டொடர்புடைய தொன்றற்கு மற்றொரு பதத்தாற் சுட்டுதலில்லாதவழியே சமுதாய சத்தி வெளிப்படுமென்பதற் கோத்தில்லாமையானுமென்க.

அற்றேல், "ஈசானன் பிராணனைக்கொடுப்போன் பிராணன்" என விண்டுவினாயிரநாமத்திடையே வைத்தெண்ணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யதே "ஈசான" சத்தத்திற்கு விண்டு பொருளாதல் பெறப்படும். வேதத்தின் உபபிருங்கணப் பொருட்டாயெழுந்த மாபாரத்தில் அவ்வாறே படிக்கப்படுதலின் வேதப் பொருளைத் துணியும் வழி அபிதான கோசங்களினும் அது முக்கியமாமென்று கொண்டு ஈசான பதத்திற்கு விண்டு பரத்துவங் கூறலே பொருத்தமாம். அற்றாகலினன்றே அங்குட்டவாக்கியத்திற்குச் தாமேற்கொண்ட பரமான்மாமபரத்துவந் தம்மானும் ஈசானச்சுருதி பற்றியுரைக்கப் படும் பிறவெனின்; அற்றன்று, "ஆயிரநாமங்களாற்றுதித்து" என்னுமுபக்கிரமத்திற்கேற்ப வனைத்தையுந் தானெனக்கருதித் துதித்த "விசுவம்விண்டு" வென்றற்றொடக்கத்தாயிர நாமத்துள் எல்லாந்தானாந்தன்மை குறித்து ஏனைக் கடவுளர்க்குரிய நாமங்கள் பலவற்றையுந் தலைப்பெய்தோதக்காண்டலின், அது பற்றி அவற்றிற்காற்றல் செல்லாமையினெனக. அல்லதூஉம், மகாபாரதம் இலைங்கம் ஆதித்தபுராணமுதலியவற்றி லெடுத் தோதப்பட்ட சிவபிரானுக்குரிய வாயிர நாமங்களுளடங்காத விண்டு நாமமில்லாமையின், அரிவம்மிசத்திற்கைலாய யாத்திரையில் "உன்பெயர்தாமுமுலகினிற் சிறப்புற்றோங்கிடும் பிறபெயர்தாமு, மென்பெயராகும் விசாரமற்றிதன்கணில்லை கோவிந்த" என்று கண்ணனை நோக்கிச் சிவபிரானருளிச் செய்தவ சனத்தானே விண்டு நாமங்களுக்கும் உலகத்தில் வழங்கு மேனைச் சிறந்த நாமங்களுக்குஞ் சிவநாமத்தன்மை பெறப்படுதலின், அபிதானச்சுருதி பற்றி விண்டுபரத்துவந் துணிதல் ஒரு சிறிது மேலாதெனக. ஆகலின், துதிப்பொருட்டாவதோர் மணமு மில்லாததூஉம் உலகத்திற்கும் வேதத்திற்கும் பொதுவான நாமங் களைத் தொகுத்துரைத்தலைக் தொழிலாகக் கொண்டதுமாகிய அபிதானகோசமிருதியே பெயர்த்தன்மைக்கட் பிரபலமுடைய தெனப்பட்டு, "ஈசான" பதத்திற்குச் சிவபிரான் பொருளென்பது நாட்டப்படுதலின், அதுபற்றிப் புருடசூத்தஞ் சிவபரமென்று துணிதல் பொருத்தமாம்.

அற்றேலஃதங்ஙனமாக, புருடச் சுருதி முதலிய அநேக பிரமாணங்கள் பற்றி அதற்கு நாராயண பரத்துவங் கூறத்தகுமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லோவெனின்;- புருடசத்தநாராயண வாசகமாகுமாறில்லை; "ஆன்மாவுமானவனும் புருடர்" என்னுமபிதான கோசமிருதி யானும், உலகவழக்கினும் வேத வழக்கினும் பயின்று வருத லானும், அதற்கு ஆன்மப் பொதுமையிற் சத்தியுண்மை இன்றியமையாமையின், அதுபற்றியே "புருடனன்றோ நாரா யணன்" என்றற்றொடக்கத்து நாராயணனை விடயமாகவுடைய பிரயோகங்களியைபுபட்டொழுகுதலின், "பர்கிராச்சிய" முதலிய சத்தங்களுக்கு ஒரு சிறிது வழக்குண்டேனும், திருணகிருத முதலியவற்றிற்சாதிமாத்திரையிற் சத்தி பெறப்படுதலின், அது கொண்டே சுத்தி செய்யப்பட்ட திருணகிருத முதலியவற்றின் கண்ணதான ஆன்றோர் வழக்கும் பொருந்துதலின், சுத்தி செய்யப் பட்டுச் சிறந்தனவற்றிற்குச் சிறப்பாகவேறாற்றல் கற்பித்தல் வேண்டாவென்னும் பாகிராச்சிய வதிகரணநியாயம் பற்றிஅ ச்சொற்கு நாராயணன்கட் சிறப்பாகப் பிறிதோராற்றல் கற்பிக்க வேண்டாமையினென்க.

அற்றேலஃதங்ஙனமாகுக, புருடசத்ததிற்கு நாராயண நாமமாகு தற்கண் ணதாகுந் துணிபுரை நியாயப்பற்றுக் கோடின்றியும் ஆண்டுச் சிறப்பாற்றலைக் கற்பிக்கவெனின்; அற்றன்று, சாமானியசத்தியுடைய புருட சத்தமும் ஒரு புடையியைபு பற்றி நாராயணன் கண்முடிவுடைத்தாமென்னு மிந்த ஞாபகத்தாற் பயன்படும் பொருளையுடைய அருத்தவாதங் கள் பலவற்றைக் கொண்ட புராணத் துணிபுரை, அபிதான கோசமிருதி போல அந்நியதாசித்தப்பிரயோக விடயத்தில் ஆற்றலைத் தாராதாகலின், சித்திராதிகரணத்திற்றுதியொன்றன் பெயராக வழங்கும் "பிரட்ட" பதத்திற்கு "ஒரோ வழிப் பிரட்டங்களாற் றுதிக்கின்றான்" என்பது முதலியவற்றிற் றுதிக்குச் சாதனமாய ரதந்தர முதலியவற்றில் இலக்கணை பற்றி வழங்கற்பாடுண்டென்பதை யறிவுறுத்தலாற் பயப்பாடுடைத் தாகிய "அப்புக்களிருதுவாயின அவற்றின் பிரட்டத்தில் வாயுப் புகுந்தான்" என்று றொடக்கத்தின் ரதந்தர முதலியவற்றினும் "பிரட்ட" பதம் வழங்கு நிமித்தத்தைக் கூறும் அருத்தவாதத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிபுரைக்கு ஆண்டுச் சிறப்பாகவேதாந்தக் கற்பித்தல் வேண்டா" வென்று மீமாஞ்சகரா லொப்பப்படுதலினென்க. புருடசத்தத்திற்கு நாராயணன் சிறந்த பொருளாமென்ற வசனம் பற்றி அவனே யதற்குப் பொருளாவனென்னும் வாயாட்டும் பொருந்தாது; யாண்டும் பயின்று வரும் வழக்குடைய அபிதான கோசமிருதியாற் பெறப்பட்ட சாமானிய சக்திக்கு மாறாக அவன் கட்சிறப் பாற்றலை நிகழ்த்தும் வசனம் "கோ அசுவங்களின் வேறாயின பசுக்களல்ல கோ அசுவங்கள் பசுக்களாம்" என்னுஞ் சுருதியினுந் தந்திரவார்த்திகத்தினும் யாது கூறியவாறே பசுத்தன்மைச்சாதி கோ அசுவங்களுக்குச் சிறப்" பென்று கூறும் வசனம் உபகார மிகுதிப்பாடு பற்றிப்புகழ்ச்சிப்பொருட்டாதல் போலச் சுவாதந்திரிய முதலிய புருடலிலக்கண மிகுதிப்பாடு பற்றி நாராயணன்கட் புகழ்ச்சிப் பொருட்டாமென்றே தாற்பரியங் கூறல் நியாயமாகலானும், "பிரகிருதிப் பற்றில்லாமையானுஞ் சுவாதந்திரியத்தானு மகிமையானும் அப்பெற்றியனான விந்த வாசுதேவனே அறிவுடையோராற்புருட னென்றுரைக்கப் படும் பிரமன் முதலிய சகமெல்லா மதடூஉவோடொக்கும் அந்நீர்மை யுடைய விந்தவாசுதேவனே நேரே புருடனென்றுரைக்கப் படும்" என்னு நாரசிங்கபுராணவசனத்தானே அவ்வாறு கருதப்படு தலானுமென்க.

"மகாபுருட" சத்தந்தானு நாராயண பரமன்று, மேலுரைத்தவாறு சாமானிய சத்தி கொண்டே பிரயோகம் வழிப் படுதலின் ஈண்டு மகாபுருடக் கேள்வியுமின்று, "புரடன்மகான்" எனப்பின்ன பதங்களாக வைத்துப்படிக்கப்படுதலின், இரண்டு பதங்களுக் கொருசமுதாய சக்தி யொரேவிடத்து மில்லாமையின் "இலக்குமிக்குப் பதியாந் தன்மை யென்னுமிலிங்கமும் ஈசானச் சுருதிக்கேற்ற "கிறி" சத்த வடிவான கிறில்லேகைக்குப் பொருளாங்கெளரிக்குப் பதியாந் தன்மைத்தா மிலிங்கானுகுணத் தன்மையினையே பற்றும். வாசசநேயத்திற் "சீயுமிலக்குமியு முன்பத்தினிமார்" எனப்படிக்கப்படுமாலோவெனின்;- அது கொண்டவர் கருத்து நிரம்புமாறில்லை, "சீ" யென்னுஞ் சத்தஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமானப் பிரகரணத்தினோதிய "கிறில்லேகை"யின் பொருளிற் றானே முடிதலின். இஃததன்கண் முடியுமெனமாறிற்படுமிழுக் கென்னையென்பதாசங்கையன்று, "கிறீ" சத்தங்கமலையிடத்தில் வழங்கக் காணாமையானும், "சீ" சத்தஞ் "சீயை இலக்குமியை ஔபலையை அம்பிகையைக் கோவைச் சட்டியைச் சயையை இந்திரசேனையென்று சொற்றார்" என்று ஆயுசிய சூத்தத்திற் கௌரி பால் வழங்கக் காண்டலானும், "கிறீயும்" என்று வருமந்திரத்திற்குக் கிரக வெச்சத்திற்சோமறகதி தெய்வமான கௌரிபூசையிவ் விநியோகம் மிருதியர்ணவ முதலியவற்றிற் கூறப்படுதல் கொண்டு "கிறீ" சத்தத்திற்குக் கௌரிபரத்துவம் இன்றியமையாமையானுமென்க. ஆகலான், முதற்சுருதிக்கேற்ற வாற்றானே "அவனதங்கமண்டலத்திலிருக்கு மகேசுவரியாகிய பராசக்தி சாமளை யாவர்மனத்தையும் வசஞ் செய்பவள் மாலக் குமியென்றெடுத்துத் துதிக்கப்படுவள்" என்று சிவபுராணத்திற் கூறப்படுஞ் சிவபிரான் தங்கமண்டலத்திலுறையும் அம்பிகையின் வடிவுகளுளொன்றன் கூறாகிய விலக்குமிக்குப் பதியாந் தன்மைமயென்னுமிலிங்க மீசுரபரமேயாம். ஆற்றாகலினன்றே மறித்தும் "பகலுமிரவும் பக்கங்களாம்" என்று பெருவழக்கான அர்த்தநாரீசுவர வடிவஞ் சிவபிரானுக்கே யருளிச் செய்யப் பட்டதூஉமென்க.

இனிப்புருடசூத்தத்திற்கு "நாராயணம்" என்னும் பெயரும் அவனிடிருடியாதல் பற்றியல்லது பொருளாதல் பற்றிப் போந்ததன்று. "நாராயணனாற் காணப்பட்ட புருடசூத்தத்தா லபிமந்திரிக்கப்படுஞ் சிதியை வழிபட்டு இப்பிறப்பிற் புருடனாகும்" எனவாதூல சூத்திரத்தில் இருடி தெய்வமிரண்டு நாராயண புருடசத்தங்களிரண்டானும் வேறாகக் கூறப்படுதலி னென்க. நாராயணனாராதனத்தில் விநியோகித்தறானும் அபிதானச்சுருதியாற் போந்த விதனதுசிவபரத்துவத்தைக் கெடுக்கவற்றன்று, அபிதானச் சுருதிவலியானே அங்கி முதலிய கடவுளரையே பொருளாகவுடைய "அங்கி சுவர்க்கத்திற்குத் தலைவன்" என்றற்றொடக்கத்துக்கு மந்திரங்களுக்குக் கிரக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெச்சத்தில் அவ்வக்கிரவாராதனையில் அவ்வக்கடவுளர்க்குரிய மந்திரங்களை விநியோகிக்கும் வழி அங்காரகன் முதலியோர் பூசையில் விநியோகித்தலும் அக்கடவுளரைப் பலவாறாகப் பிரீதிப்படுத்துஞ் செபமுதலியவற்றில் விநியோகித்தலும் ஒப்பப் படுதலினென்க. இங்ஙனங் கொள்ளாக்கால், "விசுவரூபனாகிய தனதனைப் பருடசூத்தத்தால் வேட்க அதன்பின்பு நாராயணங் களிரண்டானும் வழிபடுக" என்றற் றொடக்கத் தேனை விநியோகம் பற்றி மற்றொரு கடவுள் பரமாதலுஞ் செல்லுமென்க.

இச்சூத்தத்திற்கு அபிதானச் சுருதி முதலியவற்றிற்கேற்ற விநியோகமுண்டு. அது போதாயன சூத்திரத்திற்றிருவுருத்திரவங்க நியாசங்களிற் சிவசங்கற்ப முதலியவற்றோடு விநியோகித்தலும் இலிங்கபுராணத்திற் சிவபூசாவிதியிற் "சேட்ட சாமாக்கண் மூன்றானும் தேவ விரதங்களானும் புண்ணியமான ரதந்திரத் தானும் புருடசூத்தத்தானும்" என்றெடுத்துச் சிவபிரானபிடேகத் திற் றேவவிரத முதலியவற்றோடு விநியோகித்தலுமாம்.

விண்டுபுராண முதலியவற்றிற் காணப்பட்ட உபபிருங் கணமும் விநியோகிக்கப்பட்ட மந்திரப்பொருளை விரித்துரைப்ப தொன்றாகலின், கேட்கப்பட்ட விநியோகத்தைப் பாதுகாத்தற் பொருட்டாய் அன்னியதாசித்தமாய்ச் சுருதியாற் போந்த சிவ பரத்துவத்தை நீக்கவற்றன்று. அங்ஙனமன்றோ, ஒரு கடவுட்குரிய மந்திரங்கட்கு விதிவலியானே மற்றொரு கடவுளின் வேள்விக் கண்ணும் விநியோகமுண்டு. அதுதானும் அம்மந்திரங்களுக்கு வேட்கப்படுங் கடவுளை விளக்கற்பயத்தவாமாற்றாற் பாது காக்கப்படும். மந்திராதிகரணத்தில் "மந்திரவிநியோகத்திற்கு வாக்கியப் பொருட்கூற்று வாயிலாயிருத்தலின் மற்றொரு கடவுளைச் சுட்டு மந்திரத்திற்கு "எடுத்தோத்தாற்பிற பொருளுடைத்தைந்திரி" என்னும் ஐந்திரிய கரண நியாயத்தானே இலக்கணை முதலிய விருத்தி கூறற்பாற்று. அதனோடு கூடிய விசேடண பதங்களுக்கோவெனின்;- "பச்சைத்தருப்பைகளாற் பரப்புக" வென்னு மந்திரத்திற் றருப்பையிற் "பச்சை" யென்னும் பதம் இயையுமாறு போல வதன்கட் பொருந்தும் பொருளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுடைய விசேடண பதங்களுக்கு அதனடையான குண முதலிய வற்றைப் புலப்படுத்துமுகத்தானே ஆண்டு முடிவு கூறற்பாற்று. "சோமஞ்சுத்தியாகின்றது மதிகட்குத்தந்தை" என்னுமந்திரத்திற் சோமக் கொடியின்கண் அக்கினி முதலியவற்றிற்குத் தாதைத் தன்மை கூறுமாறுபோல ஆண்டுப் பொருந்தாப் பொருளை யுணர்த்தும் பதங்களுக்குப் புண்ணியத்தின் பொருட்டு இல்குண முதலியவற்றை வெளிப்படுத்துமுகத்தான் ஆண்டுமுடிபு கூறத் தகும். பொருந்தாவிசேடணத்தையும் பொருந்தும் விசேடணம் போற் பொருளுரைத்தல், மந்திரத்திற் கேட்கப்படும் விசேடணத் தோடியைந்த பொருளைப் புலப்படுத்தல், புண்ணியத்தைப் பயக்கும் என்னு நியமத்தானே அதிட்டத்தின் பொருட்டாம்." என்னுமிப்பொருள், "எடுத்தோத்தானேயவைமற்றொன்றன்-பொருட்டுப் பிரயோகமுடைத்தாமென்ப" என ஒன்பதாமதி கரணத்திருத்தலின் இங்ஙனங் கூறியவாற்றால் அபிதானச்சுருதி, அதற்கேற்றவிலிங்க முதலியவற்றானே நியமிக்கப்பட்ட சிவ பிரானையே செம்பொருளாகக் கொண்ட புருடசூத்தம், கேட்கப்பட்ட வேளை விநியோகத்தைப் பாதுகாக்கும் பொருட்டு நாராயணனை விளக்குமாறுதானும் தனதன் முதலியாரை விளக்குமாறு போல ஒரோ வழிப்புருட புத்தியாற் கற்பிக்க தக்கதென்னுமத்தனையே, அவனதாராதனையையும் அதனங் கத்தையும் அதன் பயன்முதலியவற்றையுங் கிளந்தெடுத்து விரிக்கும் புராணா கமவசனங்களினியமிக்கப்பட்ட தென்று. உபபிருங்கணங்கள் அன்னியதாசித்தமாயினமை காண்க. பிறாண்டும் பொருந்தாப் பொருளை விசேடணமாகக் கொண்ட மந்திரங்களுக்குப் புராணங்களில் அங்ஙனம் உபபிருங்கணம் வரக்காண்டும். அது வாயவ்விய சங்கிதையில் சோமத்தை வேள்வியின் பொருட்டுச் சிருட்டித்தனர் சோமத்தினின்றுஞ் சுவர்க்கமும் புடவியும் அங்கியுஞ் சூரியனுஞ் சீமானும் விண்டுவுமான நாராயணனும் உதித்தனர். சுகமனைத்துஞ் சோமமயமாம்" என வருவனவும் பிறவுமாம்.

புருடசூத்தஞ் சிவபரமாதலை யெடுத்துரைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபபிருங்கணங்களுமுண்டு. அது இலிங்க புராணத்தில் "வியாபியான அவனுக்கு மேலுலகந்தலை அப்பரமேட்டிக்கு ஆகாயம் நாபி அப்பெரியானுக்குச் சோமசூரியாக்கினிகள் விழிகள் திக்குகள் செவிகள் மகான்மாவான அவன் முகாம் புயத்தினின்றும் வியாபியும் பகவனுமான பிரமனும் பிராமணரும் பிறந்தனர். புயங்களினின்றும் இந்திரனும் விண்டுவுஞ் சத்திரியரும் பிறந்தனர். அப்பினாகியின்றொடைகளினின்றும் வைசியர் பிறந்தனர். பாதத்தினின்றுஞ் சூத்திரர் பிறந்தனர்" என்றற்றொடக்கத்தனவாம். இங்ஙனமெடுத்துக்காட்டற்பாலன பிறவுமுள. இங்ஙனமாகனலின், மேற்கூறியவாறு அன்னிய தாசித்தமாய் மாறுபட்டு வரும் விநியோகத்தானும், உபபிருங் கணத்தானும் தொலையாவலியுடைய வபிதானச் சுருதியானும், அதற்கேற்ற இலிங்கத்தானும், விநியோகத்தானும், உபபிருங் கணங்களானும், புருடசூத்தஞ் சிவபரமாதல் பெறப்படுதலின், அதன்கண்ணதான பிரத்தியபிஞ்ஞை பற்றிச் சுவேதாச்சுவதர மந்திரங்களுக்கு நாராயண பரத்துவ சங்கை வருதல் யாண்டைய தென்க. "அரன் சிவன் உருத்திரன் மகேசுரன்" முதலியவனேக சுருதிகளாற் பெறப்பட்ட விதனது சிவபரத்துவத்தை விரோதப் பிரத்தியபிஞ்ஞையுள் வழியுங் கெடுக்கவற்றன்று. இரண்டு தலங்களுடைய வாராய்ச்சியை அவாவிப் பிற்பொழுதிற் றோன்றுதல் பற்றிப் பாடக்கிரமத்தினு முக்கியக்கிரமந் துர்ப்பலமுடைத்தாதல் போல, அபிதானச் சுருதியினும் பிரத்திய பிஞ்ஞை துர்ப்பலமுடைத்தாகலின். "அரன் சிவன் உருத்திரன் மகேசுரன்" முதலிய சத்தங்கள் சிறப்பாற்றாற் சிவபிரானுக்கு அபிதானச்சுருதியாதல் ஈசான சத்தம் போல் வைத்துணரற்பாற்று.

இவ்வாறு இவ்வுபநிடத முழுதுங் சிவபரமாயிருத்தலின், "பெரியோனான வீசன் மறித்தும் அவ்வாறு பதிகளைச் சிருட்டித்து முழுநாயகத்தன்மையைப் புரியும் அவன் காரணன் காரணாதிபர்க்கு மதிபன் இவனுக்கொரு தாதையுந் தலைவனு மில்லை சந்தசுகளையும் எச்சங்களையுங் கிருதுக்களையும் விரதங்களையுங் கழிந்ததையும் எதிர்வதையும் வேதங்கூறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைத்தையும் இவ்வுலகத்தினையும் மாயையையுடைப் பொருளாகவுடைய இவன் அதுகொண்டு சிருட்டிப்பன் இவன் மாட்டு ஏனோர் மாயையாற் கட்டுண்டார்" என்றற் றொடக்கத் தேனை மந்திரங்களுஞ் சிவபிரானுக்குக் காரணத் தன்மையை யுரைப்பனவென்றறிக. இம்மந்திரோபநிடதம், மந்திரங்களனைத் தானும் ஆண்டாண்டு "அரன்" "சிவன்" "உருத்திரன்" "மகேசுரன்" முதலிய பதங்களாலுணர்த்தப்பட்ட சிவபிரானுக்கே முழுமுதன்மையையும் அனைத்தையு மதிட்டிப் போனாந் தன்மையையும் எழுவாய் தொடங்கி யிறுவாய்காறும் எடுத்துரைப்பக் காண்டும்.

இவ்வுபநிடத்தி னுபக்கிரமத்திற் "காரணப்பிரமம் யாது? எதன்பாற் றோன்றினோம்,? எதனால் உயிர்வாழ்கின்றோம்? யாண்டு நிலையுற்றோம், சுகதுக்கங்களை எவனாலனுபவிக் கின்றோம்? பிரமவித்துக்காள் யாங்கூடியாய்ந்து துணிதும்" என்னுமந்திரத்தாற் பிரமஞ் சகத்தினுற்பத்தி முதலியவற்றிற்குக் காரணம் அனைத்தையுமதிட்டிப்பதென்று தெளிந்தாராயினும், அப்பிரமப்பொருள் எத்தேவ வடிவிற்றென்று சிறப்பாக அறிய மாட்டாராகிய (சகமனைத்தின் றோற்றநிலையிறுதிகளுக்குக் காரணமானதூஉம் அனைத்தையு மதிட்டிப்பதூஉமானவப் பிரமப் பொருள் எத்தேவ வடிவிற்றெனவெழுந்த) பிரமவாதி களான விருடிகளுடைய இவ்வையப்பாட்டினைக் "காரணப் பிரமம் யாது?" என்றற் றொடக்கத்து வினாக்கூற்றுக்களாற் பொது வாகவுஞ் சிறப்பாகவுந் தெரித்துக் காலஞ் சுபாவம் நியதி மாபூதம் பிரதானம் புருடன் இவற்றது சமுதாய மென்பனவற்றுள் ஒன்றைச் சகங்காரணமாக வுடைத்தாதல் உண்டென்றாக யதிரிச்சையால் உண்டாயதென்று காரணமில்லையென்றாகப் பொருத்த முண்டாயப் பிரமங் காரண மென்பதே பெறப்படா தென்று ஐயப்பாடு நிகழ்தற்குப் பற்றுக் கோடில்லையாலோ வென்னுஞ் சங்கை நிகழாவண்ணம் ஐயப்பாடு நிகழ்தற்கு இடனுண்டென்றுணர்த்தும் பொருட்டு அவர் தாமே காலமுதலியன காரணமாதலை மறுத்தோதியவாற்றினைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காலஞ் சபாவம் நியதி யதிரிச்சை பூதங்கள் பிரகிருதி புருடன் காரண மென்பது எண்ணமாத்திரையேயாம். இவற்றது சமுதாயமுங் காரணமாகாது. இவற்றை நுகர்தற்கு ஆன்மா இவற்றின் வேறாக வுண்மையின், ஆன்மாவுங் காரணனாகான், இன்பத் துன்பங்களுக்கு வசியனாதலின்," என்னு மந்திரத்தால் அறிவுறுத்தித் தாமே துணியமாட்டாராய்ப், "பிரமஞானத்தை வழங்குதலையே தொழிலாகக் கொண்டருளிய அம்பிகையான பராசக்தியின் திருவருளினால் இப்பொருடுணியற்பாற்று" என்று அப்பரா சக்தியைத் தியானிக்கலுற்றார்க்குப், பராசக்தி வெளிப் பட்ட ருளியதைத் "தன்குணங்களானிரம்பிய அத்தேவ சொரூபசிற் சத்தியைத் தரிசித்தனர்" என்னு மந்திரத்தால் அறிவுறுத்தி அதன்பின்பு "காலம் ஆன்மா முதலிய காரணமனைத்தையும் எவன திட்டிக்கும்" என்றெடுத்து "அவனைத் தரிசித்தனர்" என்னும் வினை முற்றோடு கூடிய மந்திரத்தானே அப்பராசக்தியின் றிருவருளாற் போந்த கால முதலிய துணைக்காரணத் தொகுதியை அதிட்டிக்கு முழுமுதலான பரப்பிரமப் பொருளைச் சிறப்பாக அவர் துணிந்ததனை யுணர்த்திப் பின்னர்ப் "பிரதான மழிவுடைத்து அமிர்தன் அழிவிழி சரத்தையுமான்மாவையு மொருமுதல திட்டிக்கும்" என்றற் றொடக்கத்தனவற்றாற் சிவபிரானுக்கு முழுமுதன்மையும் அனைத்தையு மதிட்டிப் போனாந்தன்மையும் உபநிடதத்தான் விரித்துக் கூறுதலின் "ஒரு பாக்கியான யாப்பினானே "எதன்பால்" என்றற்றொடக்கத்துச் சுருதிகளிற் போந்த காரணப்பிரமஞ் சிவபிரானேயென்பது சிறப்பான் முடித்துக் காட்டப்பட்டது.

அற்றேல் "காரணப்பிரமம் யாது" என்றற்றொடக்கத்து ஐயவுரைகளிற் காரணப்பிரமஞ் சிவபிரானையோ மற்றொரு கடவுளேயோ என்னுமையவடிவு எடுத்தோதப்படவில்லை; துணிபுரையினுங் காரணப்பிரமஞ் சிவபிரானென்று எடுத்துக் காட்டப்படவில்லை. ஐயவுரையுந் துணிபுரையும் பொது வாற்றானே போதராநிற்ப, இப்புபாக்கியானங்காரணத் தன்மைக்கும் அதிட்டிக்குந் தன்மைக்குஞ் சிறப்பால் ஓர் கடவுளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் முடிபுரைக்குமென்பது யாங்ஙனமெனின்;- கூறுதும்;- காரணம் பிரமமெனத் துணியப்பட்ட வழி அதன் சிறப்பியலை அறியலுற வேண்டி ஐயப்பாடெழுந்ததெனின், அஃது பொருந்து மாற்றானும், பிறிதாறில்லாமையானும், கிளந்து ஒரு பொருளைச் சுட்டியெழுந்ததாதல் வேண்டும். முழு உபநிடதத்தானும் முழு முதன்மையும் அனைத்தையுமதிட்டிக்குந் தன்மையுஞ் சிவ பிரானுக்கே கூறப்படுதலின், துணிபுரையுஞ் சிவபிரானை யுணர்த்துவதாய்ப் பொருத்தமுடைத்தாம். தான் கூறற்கமைந்த பொருளின் கட்கேட்பார்க்கு அறிவினி துதித்தற் பொருட்டன்றே வேதத்தில் உபாக்கியானங் கூறப்படும். "பாரிப்பிலவப் பொருட்டெனினமையா- தியைபாற்கிளந்தெடுத் திசைத்தலான" என்னு முத்தரமீமாஞ்சையதிகரணத்தில் உபாக்கியானங்கட் கவ்வாறு பயனுரைக்கப்படுதலின். கூர்மபுராணத்தினும் இவ்வு பாக்கியானத்திற்குச் சிவபிரானுடைய காரணத்தன்மை முதலிய வற்றைத் துணிதற்கண்ணே தாற்பரியஞ் சுருக்கிக் காட்டப் பட்டது.;- பெரியோரும் பிரமவாதிகளுமான முனிவர் தலைக் கூடி ஆன்மவிஞ்ஞானத்தைப் பற்றிப் பலவாதங்களைச் செய்தனர். இந்தச் சகத்துக்கு மூலம் யாது? நமக்கான்மாவானான் யாவன்? பூதங்களனைத்திற்கு மேதுவானோனு மதிட்டிப்போனா னோனும் யாவன்? என்றிங்ஙனமுசாவுற்றுத் தியானத் தொழிலைப் பற்றி நின்றார்க்கு, மலையரசன் மகளுங் கௌரியுமானதேவி வெளிப்பட்டருளினள்" என்று தொடங்கி "அவர் பரமேசபத்தினி யாற்றிருக்கண் சாத்தப்பட்டு அவ்வழி அனைத்திற்குமே துவா னோனும் அதிட்டிப்பானுங் கவியும் பரிபூரணனும் புராண புரடனும் உருத்திரனுஞ் சம்பவுமான தேவனைக் கண்ணுற்றனர்" என . இவ்வாறு இவ்வுபநிடதத்திற் காரணமான பிரமப் பொருள் சிவபெருமானேயென்று உபாக்கி யானவியாசத்தாற்றானே நாட்டுதலானும், "எப்பொழுதிருளிருந்தது" என்னுமந்திரத்திலே காரணவாக்கியங்கள் அனைத்திற்குங் சிவபரத்துவ மெடுத்தோதப் படுதலானும், மற்றொரு கடவுட்கண் முடிவு போதருமாறு சாகபசு நியாயத்தை உபந்தியாசஞ் செய்த பரரது சம்பிரமம் வாளா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போயிற்று.

"எவன் கடவுளர்க்கு என்னு மந்திரமுங் கடவுளரெவர்க்கு முதல்வனான இரணியகருப்பனைத் தோற்றுவித்தல் பற்றிச் சிவ பிரானுக்கு முழுமுதன்மையை எடுத்தோதும். இது "நாராயணன் பானின்றும் பிரமன்றோன்றும்" என்பதற்கனுவாதமாகாது "பசுபதி இரணியகருப்பனைத் தோற்றுவிக்கும்" என்னுமிவ்வுப நிடதப் பொருள் அந்நாராயணோபநிடதத்தாற் பெறப் படாமையின். பெறப்படாததாகவே, "யத்" சத்தமாயிரங் கூடினும் அனுவாதங் கற்பித்தல் செல்லாது. "யாது அங்கியைத் தெய்வமாகக் கொண்ட அட்டாகபாலம்" என்றற்றொடக்கத்து மந்திரங்கள் "யத்" சத்தத்தோடியைந்தும் அப்பொருள்பயக்கு முரையளவையில்லாமை பற்றித் தாமே விதியுரையாயொழி தலின். அஃதேல், "உருத்திர" பதம் நாராயணனை இலக்கணையா னுணர்ந்துமெனக் கொள்ளின் நாராயணன் பானின்றும் பிரமன் றோன்றும்" என்னுமந்திரத்தாற் பேறெய்துமெனின்;- அற்றன்று, "யாது அங்கியைத் தெய்வமாகவுடைய வென்றற்றொடக்கத்தன வற்றில் அங்கி முதலிய பதங்களும் ஒரு கடவுளை இலக்கணையா னுணர்த்துமெனக் கொண்டு அப்பேறு பயக்கும் உரையளவை யுண்டெனப்பட்டு அவை தாமும் அனுவாதங்களாய் முடிந்து மீமாஞ்சை நூன் முழுதும் இடர்ப் பாடுடைத்தாமாகலானும், "உருத்திர" பதத்திற்கு நாராயணன் கண் இலக்கணை பெறப்பட்ட வழிப் பேற்றினைப் பயக்கும் பிரமாணம் போதருதலின் இஃதனு வாதமாம் அனுவாதந் துணியப்பட்ட வழிப் புரோவாதத்திற் கேற்ப உருத்திர பதத்திற்கு இலக்கணை கற்பிக்கற்பாற்று என ஒன்றனை யொன்று பற்றுதலென்னுங் குற்றம் வருதலானுமென்க.

இனி இருவரும் இரணியகருப்பனுக்குக் காரணராகுதல் பெறப்படாதவழி வேறு சுருதிகளிற் கேட்கப்படும் "உருத்திர நாராயண பதங்களுளொன்றற்கு இலக்கணை கூறல் இன்றியமை யாமையின், "யத்" சத்தவியைபானே உருத்திர பதத்துக்கே நாராயணன்கண் இலக்கணை கற்பிக்கற்பாற்றென்று ஆசங்கித்தல் செல்லும்; அண்டம் பதுமமென்பனவற்றிற்குக் கற்பபேதத்தாற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணத்தன்மை பெறப்படுதல் போல இருவருக்குங் காரணத் தன்மை பெறப்படுவதாகவும், அங்ஙனமிலக்கணை கற்பித்தல் செல்லுமா றியாங்ஙன மென்பது. இனி அவைதிகர் இந்த மந்திரஞ் சிவபரமாமென்றொப்பியும், "பெரிய விருடியான வுருத்திரன்- பெரிய பார்ப்பானானவுருத்திரனென்றவாறு; யோகவலியானே முக்கால நிகழ்ச்சிகளையும் பார்க்கவல்லவுருத்திரன் றானுதிக்கு முற்றானே யோகவலியால் நாராயணன் பானின்றுந் தோன்றும் இரணியகருப்பனைத் தோன்றுமவத்தையனாகவே கண்டனன்" என்று பொருளுரைப்பர். அதுவுஞ் துச்சமாம், சுவேதாச் சுவதரத்தில் "இரணிய கருப்பனை முன்னர்த்தோற்றுவித்தனன்" என்னுமிம்மந்திரம் படிக்கப்படுதலின் அதற்கேற்குமாறு ஈண்டுத்தன்பானின்றுந் தோன்று மிரணியகருப்பனை உலகினைப் படைக்கும் பொருட்டு ஆணை நோக்கினாற் பார்த்தருளினா னென்னும்பொருளே யொப்பிக்கோடற்பாலதாகலானும், "பரமகாரணனும் விச்சுவாதிகனும் இருடியும் பிரபுவுந் தாணுவு மான சிவபிரான் அவ்வியத்தத்தினீங்கிச் சற்காரியகாரணங் களோடு வெளிகின்றருளினன் முகத்தினின்றுந் தோன்றிக் கடவுளர்க் கெல்லா முதல்வனாகிய பிரமக்கடவுளை முதற் கண்ணோக்கி ஆணை தந்தருளினன் அத்தேவநாதன் உருத்திரன் றிருநோக்குற்றுச் சகமனைத்தையும் படைத்தனன்" என்று இலிங்க புராணத்து அங்ஙனம் வந்த உபபிருங்கணத்தானு மென்க. இனி" வேதத்தின் றொடக்கத்தில்" என்னு மந்திரத்திற்கு நாராயணபரத்துவங்கூறியது பிரகரணத்தோடும் இயையாதாம், "தாதுப்பிரசாத்தான் மகத்தான பிரமமாகவும் ஈசனாகவும்" என்று பிறரிடத்துஞ்சென்று பொதுவாதற்குடன்படாத யோகரூடியான "ஈச" சத்தத்தாற றொடங்குதலானும், "விச்சுவாதிகனும் பெரியவிருடியுமானவுருத்திரன்" என்று இடையே சுட்டுதலானும், பிரகரணஞ் சிவபரமென்றுதுணியப்படுதலின். இம்மந்திரவிதேயத்தோடும் இயையுமாறில்லை, "எவன் பரன் அவன் மகேசுரன்" என்புழி மேற்கூறியாங்குச் சிவபிரானுக்கே சிறப்பான "மகேசுர: பதத்தானே "எவன்பரன்" என்றெடுத்தனு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதித்தபரனுக்குச் சிவரூபத்தை விதித்தற்கட்டாற்பரியந் துணியப்படுமாகலின். அனுவதிக்கப்படுங்கூற்றொடும் பொருந் தாது; பரர் கூறுமாறு கொள்ளினும் பிரணவதின் பகுதிப்பொரு ளென்று கோடற்பாலதாம்; பிரணவத்திற்குப் பகுதி அகாரமன்று, "வாக்கெல்லாம் அகாரமாம்" என்னுஞ் சுருதி "ஓங்காரத்தால் வாக்கெல்லாம் வியாபிக்கப்படும்" என்னுஞ் சுருதிபோலத் துதியாகலின், மற்றென்னையோவதற்குப் பொருளெனின்; "மாத்திரையை மாத்திரையை மற்றொரு மாத்திரையாகச் செய்து" என்று தாப நீயோபநிடதத்திற்பின்பின் மாத்திரைகளுக்கு முன்முன் மாத்திரைகளில் ஒடுங்கிடக் கூறுதலானும், பாகவதத்திற் "பிராமணசமாதியுற்றபரமேட்டியான பிரமனுடைய விருதயவா காயத்தினின்று நாதந் தோன்றிற்று" எனக் கூறுதலானும், "முக்கூற்றோங்காரந் தோன்றிற்று" எனக்கூறுதலானும், "எதுஇதன் இறுவாயில் நான்காவதான அரை மாத்திரை" என்று அதனது அரைமாத்திரையெனப்பட்டுப் பிரணவத்தின் சூக்கும வவத்தைவடிவாய் வழங்கு நாதமே பிரணவத்தின் பகுதியாம். நாராயணன் அதற்குப் பொருளாகமாட்டான். "இங்ஙன மூன்று மாத்திரைகளானே இதுதான் முத்தொகைப் பொருள்களனைத் தையு முணர்த்திச் சிவபரமான்மாவை அரை மாத்திரையானே யறிவுறுத்தும்" என்றற் றொடக்கத்துப் புராண வசனங்களால் அது சிவபரமாதறுணியப்படுதலானும், அனுவாதக் கூற்றிற்கும் அதுவே பொருளென்னும் யாப்புறவின்று. வேறாற்றானுஞ் சிவபரத்துவம் இனிது புலப்படுமாறு இதற்குப் பலவாறு பொருள் கூறலாமென்பதூஉஞ் சிவதத்துவவி வேகத்தில் விரித்துரைத்தாம். ஆகலின் இம்மந்திரம் பிரகரணத்தானும் விதியநுவாதங்களதியை பானுஞ் சிவபரமேயாம். ஆகவே, அவ்வனுவாகத்திடையே விதிக்கப் பட்ட தகரவுபாசனையும் மற்றொரு விடயத்தைப் பற்றாது . இனி நாராயணனை அடுத்த அனுவாகத் திற்றுதித்தது அவனை உபாசகர் கோடியுள் அடக்குதற் பொருட்டென்று சதுர் வேததாற் பரி சங்கிரகத்திற் சுதரிசனாசாரியசரணர் நாட்டி யருளினர். பூர்வாசாரியர் விரித்ததனை ஈண்டுமறித்து முரையாம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரியுமாகலின்.

அதர்வசிகையும் அவ்வாறே சிவபிரானது முழு முதன்மையைப் புகழ்ந்தெடுத்தோதும். "ஆண்டுப் பகவனே முதற் கட்டியானமாகவுந் தியானிக்கபடுவதாகவும் பிரயோகிக்கப் பட்டது யாது? தியானந்தான் யாது? தியானிப்பான்றான் யாவன்? தியானிக்கப்படுபவன்றான் யாவன்? என்று உபக்கிரமத்திலெழுந்த நான்கு வினாக்களுக்கு முறையே "ஓங்காரவெழுத்தே தியானமாக வுந் தியானிக்கப்படுவதாகவும் ஆதிக்கட் பிரயோககிக்கப் பட்டது" என்பதெழுவாயாகத் "தியானிப்போனுருத்திரன்" என்பதிறுவாயாக மூன்று வினாக்களுக்கும் விடைகூறிய பின், தியானிக்கப்படுவோனைத் துணியும் பொருட்டுப். "பிராணனை மனத்திற் காரணங்களோடு நாதாந்தத்திற் பரமான்மாவினிடத்துச் செவ்வே பிரதிட்டை செய்து மிகவுந் தியானிக்கத்தக்க ஈசசானனைத் தியானிக்க" இவையனைத்தம் பிறக்கின்றன இப்பிரமன் விண்டு உருத்திரன் இந்திரனென்னுமவரெல்லாம் பிறக்கின்றனர் பூதங்களோடு இந்திரியங்களெல்லாம் பிறக்கின்றன காரணங்களைத் தோற்றுவிப்பானுந்தியாதாவுமான காரணன் றான் பிறப்பானல்லன் காரணப் பொருளும் ஐசுவரியமனைத்தையு முடையானும் அனைத்திற்குமீசுரனுமான சம்பு ஆகாயநடுவிற் றியானிக்கப்படும்" என்றற் றொடக்கத்தன வாக இங்ஙன மோதப்பட்டது. ஆண்டு "ஈசானனைத் தியானிக்க" வென்று சிவபிரானுக்குத் தியானிக்கப்படுந் தன்மையை ஒருதலைப் படுத்தோதி, அவனையொழித்தொழிந்த கடவுளரெல்லாரையு நீக்கி, அவனுக்குத் தியானிக்கப்படுந் தன்மையை நாட்டி வலியுறுத்தும் பொருட்டு, "இச்சகமனைத்தும் பிறக்கின்றன" "இப்பிரமன்விண்டு உருத்திரன் இந்திரன்" என்று கடவுளருள் வைத்துப் பிரமன் விண்டு உருத்திரனிந்திரனென்பாரைக்கிளந்து முற்கொண்டுரைத்து "அவரெல்லாம் பிறக்கின்றனர்" என்றற் றொடக்கத்தனவற்றால் அவர்தமக்கும் பூதமிந்திரிய முதலியவற் றோடொப்பப் பரமேசுரன் பாற்றோற்றங் கூறுதலானும், "காரணன்றோற்றுவானல்லன்" காரணங்களைத் தோற்றுவிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பான்" என்று அவர்க்கெல்லாங் காரணனான சிவபிரானுக்குத் தோற்றரவின் மையையுரைத்தலானும், கடவுளரெல்லாரினுஞ் சிவபிரான் சிறந்தானாதலை யறிவுறுத்தி ஏதுக்களானே அவனது தியானிக்கப்படுந் தன்மையைக் "காரணன்றான் றியானிக்கற் பாலன்" என்றற்றொடக்கத்து மந்திரத்தான் மறித்தும் முடித்துக் கூறிற்று. "பிறப்ப"வெனப் பிரமாதியர்க்கும் பூதேத்திரியங்கட்குந் தோற்றமாத்திரையே கூறப்பட்டது சிவபிரான்பாற்றோன்றுதல் கூறிற்றில்லையாலோ வெனின், அஃதொக்குமன்னாயினும் பிரதியோகியைய வாய்நிற்கும் பொருள் சொல்லாற் கூறப்படாத வழி அண்மைப்பொருள் பிரதியோகியாக இயைத்துக் கூறற் பாலதாம், ஒன்று கொடுக்கத் தக்கது பன்னிரண்டு கொடுக்கத் தக்கன இருபத்து நான்கு கொடுக்கத்தக்கன ஆயிரங் கொடுக்கத் தக்கன அளவிறந்தன கொடுக்கத்தக்கன" என்றற்றொடக்கத்து ஆதானதக்கிணையை விதிக்குங் கற்பவேறுபாட்டுச் சுருதியிற் பிரதியோகியை அவாவிப் பன்மைப் பொதுப் பொருளை யுணர்த்தும் "அளவிறந்த" வென்னுஞ் சொல் அணித்தான ஆயிரத்தின்மிக்க பன்மையின் முடியுமென்பது, "மிகுதிப் பொருளாம்பன்மைநுதலுதலிற்-பிறவற்றோடேயண்மைநிலை பெறினே" என்று பூர்வ தந்திரத்திற் றுணியப்படுதலின், அண்மையுண்மையின் ஈசானபதமே காரணமாக அன்னுவயிக் கற்பாலதாம். அற்றாகலினன்றே "காரணங்களைத் தோற்றுவிப் பானுந் தியானிப்பானுமான காரணன் பிறப்பானல்லன்" எனவும் "காரணன்றான்றியானிக்கற்பாலன்" எனவும் அடுத்த வாக்கியங் களிரண்டினும் அச்சிவபிரானுக்குக் காரணத்தன்மையைக் கிளந்தெடுத்தோதியதூஉமென்க. இதனானே "காரணன்றான்றி யானிக்கற்பாலன்" என்புழிக் காரணபதம் சுபாலோபநிடத முதலியவற்றால் அறியப்படுங் காரணத்தை அனுவதிக்குமென்று கற்பித்தகற்பனை ஒழிக்கப்பட்டது. முன்வாக்கியத்திற்றான் கூறிய காரணம் அனுவதிக்கப்படுவதாய் நிலைபெற அதனையொழித்து மற்றொரு சுருதியின் முகத்தை நோக்குதல் செல்லாமையானும், ஈண்டைக் "காரண" பதம் அபரிமிதாதிகரண நியாயத்தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையிற் கிளந்த காரியத் தன்மையையுடைய "பிரமன் விண்டு உருத்திர"னென்னும் பதங்களினிது விளக்குங் குணமூர்த்திகளான மூவருக்குங் காரணமானபொருளை உணர்த்துதலின் அப்பெற்றித் தான காரணஞ் சுபாலோபநிடத முதலியவற்றானே நாராய ணனுக்குப் பெறப்படாமையானும், "ஈசானனைத் தியானிக்க" என்னுமுன்வாக்கியத்திற்றானே தியானிக்கப்படும் பொருளைத் துணிந்தமையின் அதனை முடித்தலையே பொருளாகக் கொண்டெழுந்தவாக்கியத்திற்கு மற்றொரு பொருளுரைத்தல் பொருந்தாமையானுமென்க. ஆகலின், அதர்வசிகைதானுஞ் சிவபிரானுடைய முழுமுதன்மையைப் புகழ்ந்தெடுத்தோது மென்றது பொருத்தமாதலறிக.

"இப்பிரபஞ்சம் முதற்கண் யாவனொருவனாணை யானிலையிற்று, புவனத்தைத் தலையளிக்குங் கடவுளர் எவன் பானின்றுந் தோன்றினர் இப்புவனம் பிரளயத்தில் எவன்பா லொடுங்கும்" என்றற்றொடக்கத்து ஆயுசிய மந்திரமுதலியனவும் பகவனான பரமேசுரன் சகத்தினுற்பத்தி முதலியவற்றிற்குக் காரணனென்றற்கட் பிரமாணமாம். அவ்வாறே சிவபுராண முதலியவற்றினும் "எவன்பானின்றும் பிரமன் விண்டு உருத்திரன் இந்திரன் முதலிய இவரெல்லாம் பூதேத்திரிய மனைத்தோடும் முதற்கட்டோன்றினர் அந்த மாதேவனான தேவன் மகேசுரனென்ற றியப்படும் அவனுக்கு மேலாக ஒருபதமுடைன்பது அறியப்பட வில்லை விசித்திரத்தொழிலையுடைய இவனானே முதற்கட் சகந்தோற்றுவிக்கப்பட்டது அஃதிறுகிக்காலை அவன்பான் மறித்துமொடுங்கும்" என்றற்றொடக்கத்து வசனத்தொகுதி பரமசிவன் சகத்தின் றோற்ற முதலியவற்றிற்குக் காரணனாதலை விரித்துக்கூறும்.

இனி ஈண்டுப் பரரானே சிவபுராணங்கள் தாமதத்தன்மை பற்றிப் பிரமாணவலி பெரிதுடையனவல்ல வென்றற்கண் மற்சபுராணவசனத் தொகுதி எடுத்துரைக்கப்பட்டது. அது பிரமன் விண்டு முதலியோர் ஒருவரினொருவர் உயர்ந்தாராதலைக் கூறும் புராணங்கள் வெவ்வேறு கற்பங்களிலுள்ள அவ்வவருயர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைப் பொருளாகக் கோடல்பற்றிப் பிரமாணங்களாமென்று கூறுதற்கெழுந்தது. வைதிகவழிப்பகைஞர் பிதற்றுமாறு சிவ புராணங்களுக்கு அப்பிரமாணத்தன்மையைக் கூறுதற்கெழுந்தது. வைதிக வழிப்பகைஞர் பிதற்றுமாறு சிவபுராணங்களுக்கு அப்பிரமாணத் தன்மையைக் கூறுதற்கெழுந்ததன்று. "வயங்கு மங்கிசிவன் பெருமான்மியம்" என்றற் றொடக்கத்ததனவற்றில் அவ்வக்கடவுளருயர்ச்சி அவ்வக்கற்பங்களிலுள்ளனவென்று கூறுதலின், அதனை விடயமாகவுடைமை பற்றிப் புராணங் களுக்கு மாறுபாடின்மைதெற்றெனப் புலப்படுதலின். அஃதேல் அவ்வாறாயிற் கற்பங்களுக்குத் தாமத முதலிய வேறுபாடு கூறுதல் பயப்பாடின்றாம். அவ்வக் கடவுளருயர்ச்சி கற்பவேறு பாட்டி லுள்ளனவென்று கூறுதன் மாத்திரையானே புராணங்களுக்கு மாறுபாடின்மை பெறப்படுதலினெனின்;- அற்றன்று. ஒவ்வோரி ருதுவிற் பனிமுதலியன மிக்குநிகழுமாறு போல ஒவ்வோர் கற்பத்திற் றமோகுணஞ் சத்துவகுண முதலிய மிக்கு நிக ழுதலிற்றாமத முதலிய வேறுபாடு அவ்வக்குண மிகுதிப்பாட்டை உரிமையாகக் கோடலின் உபாதியினுயர்வானே உபாதியை யுற்றபொருட்கு உயர்ச்சி பொருந்து மென்னும் பொருத்தவலியாற் றாமத முதலியகற்பங்களிற் சங்காரவுருத்திரன் முதலியோர்க்கு உயர்ச்சி பொருந்து மெனப்பட்டு அவ்வேறுபாட்டிற்குப் பயனுண்டாகலானும், "தியானந் தவம் ஞானமென்பனவற்றை யோகிகள் அக்காலங் களிற்றானே எய்தப்பெற்று என்னையுங் கிரீசனையும் ஆராதித்து அப்பரமபதத்தினையெய்துகின்றனர்" என்று சாத்துவிக கற்பங்களைப் புகழ்ந்தெடுத்தோதுங் கூர்ம புராண வசனத்தானும், "அக்காலங்களிலே யோகசித்தியுடையார் பரகதியினைத்தலைக் கூடுகின்றார்" என்னும் ஈண்டை விசேட வசனத்தானும், சாத்துவிக கற்பங்கள் தவச் செயன்முதலிய வற்றிற்கு உயர்பொழுது உயர்வில் பொழுதுகளை ஓதுதல் பற்றிப் பயன்படுதலானுமென்க.

அற்றேலஃதவ்வாறாக; "எப்புராண மற்றெக்கற்பத்தே" என்றெழுந்த சுலோகம் பயப்பாடின்றாம், அஃதின்றியேயுஞ் சைவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிய புராணங்கள் தாமத முதலிய கற்ப விடயமாதல் போதருதல் கொண்டு மாறுபாடின்மை பெறப்படுதலினெனின்;- அற்றன்று, "வயக்குமங்கிசிவன் பெருமான்மியம்" என்றற் றொடக்கத்து வசனங்களானே தாமத முதலிய கற்பங்களிற் சிவன் முதலியோர்க்கு மகிமைகளை மிகுத்துரைக்கின்றாரென்றன் மாத்திரையே கூறத்தகும், அது பற்றிப் புராணங்கள் வெவ்வேறு கற்ப விடயமாதல் பெறப்படாதெனப்பட்டு அவற்றிற்கு நிகழுமோர் கற்ப விடயமாகுகை வருமென்னுஞ் சங்கை பற்றி மாறுகோளுணர்வு அவ்வாறே நிலைபெற, அதனையொழித்தற் பொருட்டு "எப்புராணமற்றெக்கற்பத்தே" என்பதாதியாகவருஞ் சுலோகத்தானே அவை வெவ்வேறு கற்பவிடயமாதல் கூறற் பாற்றாகலினென்க. அங்ஙனங்கொள்ளினும் "புராணங்கள் அவ்வக்கற்பங்களிற் பிரமனாலோததப்பட்ட" தென்னும் பாதம் நின்றுவற்றும். அவைதம்மையே அனுவதித்து அவைதாம் வெவ்வேறு கற்ப விடயமாதலைக் கூறுதன் மாத்திரையானே ஓதிய பயன் நிரம்பும் பிறவெனின்;- அற்றன்று "எப்புராணமற் றெக்கற்பத்தேயயன் செப்ப நின்றது" என்புழிச் "செப்பநின்றது" என்னும் பதம் அவ்வக்கற்பங்களிற் சொல்லப்படுதலைக் கூறிற்றன்று; மற்றென்னையோ கூறிற்றெனின்;- "அவனாற் சொல்லப்பட்டது" என்னும் பாணினிசூத்திரத்திற் போந்த "சொல்லப்பட்டது" என்னும் பதம் போல வெளிப்படுத்தன் மாத்திரையே கூறிற்றென்க. மற்சத்திற்றானே "சாத்திரங்களனைத் திற்கு முன்னாகப் புராணங்கள் பிரமனாற் சிந்திக்கப்பட்டன. அதன்பின்பு அவன்முகங்களினின்றும் வேதங்கள் வெளிப்பட்டன புராணம் நூறு கோடி கிரந்தங்களுடைத்தாய் ஒன்றாயிருந்தது" என்பதெழுவாயாக "அதன்பொருள் ஈண்டு நான்கிலக்கங்கிரந்தங் களாகச் சுருக்கி வைக்கப்பட்டது" என்பதிறுவாயாகவிரித்து, "ஆதிசிருட்டியிற்படுங்கிருதயுகத்தில் வேதங்களை வெளிப்படுத் துஞ் சமயத்திற் பிரமம் பதும முதலியவாக வழங்கும் வேறு பாடின்றி நூறுகோடி. கிரந்தப்பரப்புடையதாக வொருங்கே பிரமனாற்றெரிக்கப்பட்டது. அதுவே திரேதாயுகத்தில் மறித்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமன் முதலிய இருடிகள் பதினெண்மரால் பதினெட்டாகப் பிரித்துக் கோடிகிரந்தங்களாகச் சுருக்கப்பட்டது அதுவே துவா பரயுகமுடிவின் மறித்தும் வேதவியாதனால் நான்கிலக்கங் கிரந்தங்களாகச் சுருக்கப்பட்டது" என்று ஓதுதலானும், தரும சங்கிதையினும் "ஆதிகிருதயுகத்திற் சுருதியோடொற்றுமை யுடைய பிரமபுராணமொன்றேயிருந்தது அது பதினெட்டுப் பகுப்பாற் கோடி கிரந்தங்களாகச் செய்யப்பட்டது" என்றற் றொடக்கத்தனவற்றால் அவ்வாறே கூறுதலானுமென்க.

இங்ஙனங் கூறியவாற்றாற் பிரமனாற் சில கற்பங்களிற் சில புராணங்கள் "அதிகமாக வெளிப்படுத்தப்பட்டன" வென்னும் பாதமும், அவ்வக்கற்பத்திற் சிறக்குந் தேவர்களின் மகிமையைக் கூறும் புராணங்களை அவ்வக்கற்பங்களில் வெளிப்படுத்து தலியையுமென்று பொருந்துமாற்றானே ஓர் கற்பத்திலொரு கடவுளினுயர்ச்சியை வலியுறுத்திப் பயன்படுவதேயாம். இதனானே வசனங்களெல்லாமொன்றுபடுதலின், எடுத்துக் காட்டியமற்சவசனம் புராணங்களனைத்து மாறுபாடின்றிப் பிரமாணமாதலை நாட்டவெழுந்ததென்று கூறியது பொருத்த மாம். இப்பொருள் சிவபுராணத்துத் தெளிவாகக் கூறப்பட்டது; "இயங்குவனவு நிற்பனவுமான விவ்வுலகத்தின் றோற்றநிலை யிறுதிகளுக்கேதுவாகியகாரணன்மாக்கண் மூவரும் மகேசுரன் பானின்று நேராகவுதித்தார் பிரமன் படைப்பிலும் அரி அளிப்பிலும் உருத்திரன்றுடைப்பிலுமாக மூவரு முத்தொழிலி லுந் தாதையான் முதற்கணியமிக்கப்பட்டார். அங்ஙன நியமிக்கப் படினும் ஒருவரோடொருவரழுக்கறுத்துத் தம்முண்மேம்படக் கருதினார். உருத்திரன் றாதையான பரமேசுரனைத் தவத்தாலுவப் பித்து ஓர் கற்பத்தில் முன்னர்ப் பிரமன்நாராயணனிருவரையும் படைத்தனன் பின்பு சகவடிவனாகிய பிரமன் மற்றோர் கற்பத்தில் நாராயணன் உருத்திரன் என்னுமிருவரையும் படைத்தனன் பின்பு பகவனான விண்டு உருத்திரனையும் பிரமனையும் படைத்தனன் இங்ஙனங் கற்பந்தோறும் பிரமன் விண்டு மகேசுரனென்பார் ஒருவரை மற்றொருவர் வெல்லக்கருதி ஒருவர் பாலொருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறக்கின்றார். பெரியவிருடிகள் அவ்வக் கற்ப சரித்திரங்களை வாங்கி அவ்வப் புராணங்களைச் செய்தனர் அறிவுடையான் அவை பற்றி மோகமெய்தமாட்டான்" என. ஆகலின், எடுத்துக்காட்டிய வசனங்களானே பிரமன் நாராயணன் சங்காரவுருத்திரனென்றிவர் கள் ஒவ்வோர்கற்பங்களிற் சிருட்டித்தல் சிருட்டிக்கப்படுதன் முதலிய வுடைமையான் ஒருவரினொருவர் உயர்ச்சி முதலிய வுடையராதல் பெறப்படாதேனும், அவர்கட்குக்காரணனுந் துரியனுமான பரமசிவனது கற்பந்தோறு மொருதன்மைத் தானதூஉம் புராண முதலியவற்றில் விரித்துக் கூறப்பட்டதூஉ மாகிய முழுமுதன்மையின் வரம்பு அலையுநீரதன்றாகலின், அதர்வசிகை முதலிய சுருதிகளினையபானே சாங்கியமிருதிகளினும் மனுமிருதி முதலியவற்றிற்குப் பெருவலியுண்டாதல் போலப் பிரபலமுடைய சிவபுராண முதலியவற்றிலுள்ள வசனங்களானே அச்சிவபிரானுடைய முழுமுதன்மை அலையுநீரதின்றி நிலை பேறுடைத்தாம். பரமசிவனுக்குஞ் சங்காரவுருத்திரவுருத்திரற்குந் தம்முள் வேற்றுமை சிவதத்துவ விவேகத்தில் விளங்கக் காட்டினாம்.

இனிமனுவசனத் தொகை யெடுத்துக் காட்டப்பட்டது. அது, "பின்பு சுயம்பவும் பகவனும்" என்றற்றொடக்கத்தானே பிதாமகனையுந் தோற்றுவிப்பானெனப்பட்ட நாராயணன் "தமோநுதன்"- இருளைப் பிரேரிப்பான் பானின்றும்: (மாயையை யதிட்டிக்கும் பரமசிவன் பானின்றும் என்றவாறு) "தோன்றினன்" ("பின்பு" என்னுஞ் சொல்லால் ஓதப்படும் பிரளயத்திற்குப் பிற்பட்ட காலத்தே )முன்னுதித்தனன்- என்று கூறுதலின் பரமசிவனுக்கே முழுமுதன்மையைப் புலப்படுத்தும் "தமோநுத:" என்பது "க்விப்" என்னும் பெயர்விகுதி புணர்ந்து கெட்டு முதனிலை மாத்திரையாய் நின்ற ஐந்தாம் வேற்றுமையீற்றுப் பெயராம், "தோன்றினான்" என்ற துணையானே எவன்பானின் றெனவெழும் அவாய்நிலையோடு இயைபுபட்டொழுக வேண்டுதலின், இ உ முதலிய வெழுத்துக்களை ஈற்றயலாகவுடை யதாதுவின் மேல் "கவ்" என்னும் பெயர்விகுதிபுணர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றுவானுக்கடையாய் முதல்வேற்றுமையிறுதிப் பெயராய் நின்றதன்று: பிற்றோன்றுவானுக்கு முன்னுள்ளவிருளைய திட்டித்தல் செல்லாமையானும், மானவதருமசாத்திரத்திறுதியில் "அனைத்தையுமாளுவோனும் அணுக்கணுவும் பொன்னொளி யுடையனுஞ் சொப்பனபுத்தியானறியப்படுபவனுமாயுள்ளானைப் பரமபுருடனாக அறிதல் வேண்டும்" என்று பரமபுருடனைத் துணிந்து "இவன் பூதங்களனைத்தையும் ஐவகை மூர்த்திகளான டக்கிப் பிறப்பு நிலையிறுப்பென்பனவற்றாற் சக்கரம்போல நித்தியஸம்ஸாரம் உறுவிக்கின்றனன்" என்று "உலகனைத்துஞ் சரண்புகுதற்குரிய பரமான்மாவான சிவபிரானுக்கு விளக்கமுற்ற பஞ்சப்பிரமங்களெனப் பெயரிய பரமூர்த்திகளுண்டு" என்றற் றொடக்கத்தப் புராண வசனங்களாற் பெறப்படுஞ் சத்தியோசாத முதலிய ஐவகை மூர்த்திகளாற்றான் அட்டமூர்த்திகளுக்குட்பட்ட பிருதுவி முதலிய ஐவகை மூர்த்திகளாற்றான் உயிர்த் தொகை யனைத்தையும் வியாபித்து நிற்குமிலிங்கம் ஆண்டுக்கூறுதவலின் சிவபிரானே பரனென்பது மனுவிற்குத்தாற்பரியமென்று துணியப் படுதலானுமென்க. தருமசாத்திரஞ் செய்த யோகீசுவரரால் யோகயாஞ்ஞியவல்கியத்தில் "லகாரத்தோடு கூடிய வாயுவைப் பிருதிவித்தானத்திற்சேர்த்து நான்கு கரங்களோடு பொருந்திய வடிவினையுடைய பரமேட்டியான பிரமனைத் தியானித்து நான்குகடிகை தரிக்கக்கடவன் அத்தாரணத்தாற் சித்தியெய்தும்; வகாரத்தோடு கூடியவாயுவை வருணத்தானத்திற் சேர்த்துச் சுத்தப் படிகம் போல விளங்கும் பீதாம்பரவுடையையுடைய அச்சுதனை ஐந்துகடிகை தாரணஞ் செய்யக்கடவன் எல்லாப் பாவங்களு நீங்கும்; ரேபத்தோடு கூடியவாயுவை அக்கினித்தானத்திற் சேர்த்து இளஞாயிற்றை யொத்தவனும் முக்கண்ணனும் வரத்தைக் கொடுப்பவனுமானவுருத்திரனை" என்பதெழுவாயாக "ஹகாரத் தொடு கூடிய வாயுவை ஆகாயத்திற் சேர்த்து விந்துரூபனு மாதேவனும் வியோமவடிவனுஞ் சுத்தப்படிகம் போலு மொளியையுடையவனும் இளம்பிறை முடியனும் ஐந்து திருமுகங் களையுடையவனும் சௌமியனும் பத்துத் திருக்கரங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுடையுவனும் மூன்று திருக்கண்களையுடையவனும் படைக ளெல்லாவற்றையுங் கைக்கொண்டவனும் அணிகளனைத்தானு மலங்கரிக்கப்பட்டவனும் உமையைப் பாதித்திருமேனியாகக் கொண்டவனும் வரத்தைக் கொடுப்பவனும் காரணங்களனைத் திற்குங் காரணனுமான சதாசிவனைச் சித்தத்தில் வைத்து ஒரு முகூர்த்தத் தாரணஞ் செய்யக்கடவன் அவனே விதிவழிப்பட்ட தாந்திரிகர்களாலும் முத்தனென்று சொல்லப்படும்" என்பதிறு வாயாகவரும் வசனத் தொகுதியாற் பிரமன் முதலாகப் பரமசிவன் காறு முறையானே தாரணங்களைக் கூறிப் "பிரமஞானிகளுட் சிறந்தகார்க்கீ பிரமன் முதலிய காரியப் பொருள்களைத் தத்தங் காரணங்களிலொடுக்கிக் கலங்காமனத்தினையுடையையாய் ஆன்மாவைப் பரமேசுவரனிடத்து யோசிக்க" வென்று முடிபெய்தும் பொருளைக் காட்டுதலின் பரமசிவனுக்கு முழு முதன்மை ஓதப்பட்டமை காண்க.

பகவனான வாதநாராயணனன் மாபாரதத்திற் சபா பருவத்தும் வீட்டுமபருவத்தும் "உலகங்களனைத்தையும் படைத்த பழையோனும் சூரியகாந்தியையுடையனுமானபூதபதி பல்லாயிரம் பூதகணங்களாற் சூழப்பட்டு யாண்டு உபாசிக்கப் படும்" என்றற்றொடக்கத்து மைநாகப்புனைந்துரை வசனங் களானும், "ஈசுவரனும் சேதனனும் கர்த்தாவும் புருடனுங் காரணப்பொருளுமான சிவபிரான் விண்டு பிரமன் சந்திரன் சூரியன் இந்திரன் குலக்கடவுளரென்பாரைப் படைக்கின்றனர் அழிக்கின்றனர் இவ்வுலகெல்லாம் இருண்மயமாயறியப்படாது ஒடுங்கிய பின்னர் மகேசுவரனொருவனே யிருந்தான்" என்றற் றொடக்கத்துச் சாந்திபருவவசனங்களானும், "அப்பகவனான வீசனே தத்துவங்களனைத்திற்கு முதல்வனும் அழிவிலியும் ஈசுவரனுந் தத்துவங்களனைத்தையும் படைக்கும் அறிவுடை யனும் பிரதான புருடர்க்கீசனுமாம் அவன் உலகினைப்படைக்கும் பிரமனை வலப்பாலினின்றுந் தோற்றுவித்தான் அவ்வீசுவரன் உலகினைத் தலையளிக்கும் பொருட்டு விண்டுவை இடப்பாலினின்றும் அவ்வாறு தோற்றுவித்தான் அப்பிரவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் ஊழிபெயர்ந்துழி உருத்திரனைத் தோற்றுவித்தனன்" என்றற்றொடக்கத்து ஆனுசாசனிகவசனங்களானும், "நானும் பிரமனுங் கபிலனும் அநந்தனுமான வெல்லேமும் பிரமத்தினதிவீரபத்திரராவேம்தேவதேவனே உன்பானின் றுமனைத்துந்தோற்றின இங்ஙன மனைத்திற்குமீசனுங் காரணனுமான நீ துதிக்கற்பாலாய்" என்றற் றொடக்கத்துக் கண்ணன் கூற்றுகிடைக்கப்பட்ட அரிவம்சவசனங்களானும், அச்சிவபிரான் முழுமுதல்வனென்று வெளியிட்டனன். ஆதலின், பரமசிவனே பரமகாரணனாம்.

இனிச்சுருதியினும் புராணத்து பாரதத்து நாராயணனைப் பரமகாரணனென்று ஓதியனவெல்லாம் உண்மையானாகப் பாவனைப் பயத்தினானாக அவன்மாட்டு விளக்குஞ் சிவா பேதத்தைக் கருதி யெழுந்தன வென்றறிக. கண்ணன் முதலிய வவதாரங்கள் விண்டுவின் கூறாதல் போலப் பிரமன் விண்டு உருத்திரனென்பார் பரமசிவனுடைய கூறாவர். அவர் பரமசிவனின் வேறாகாரெனக் கொள்ளின், கண்ணன் முதலிய வவதாரங்களில் நாராயண குணங்களையுஞ் சரித்திரங்களையும் புனைந்துரையாற் கூறுங்கருத்துப் போல நாராயணன்கட் பரமசிவகுணங்களைப் புனைந்துரைத்தற் கருத்தாலோதிற்றென்று கொண்டியைக்க. அவர் பரமசிவனின் வேறாவரெனக் கொள்ளினும், "பரமேசுவர மாந்திரிகன் கருட பாவனையானே கருடனாதல்போல இப்பதுமநாபன் உன்பாவனையிலழுந்தி உன்னோடனன்னியனாதல் பற்றிப் "பரப்பிரமம்" என்றும் "பரஞ்சோதி" என்றும் "பரதத்துவம்" என்றும் ஓதப்படும்" என்று சுதரிசனாசாரியருபதேசித்தருளியவாறு ஆண்டு அப்புனைந்துரை இயைபுடைத்தாம். ஈண்டு மாற்றியுரைக்கலாமென்றல் சங்கையன்று. சகத்திற்குக் காரணமான பிரமப்பொருட்கு ஒன்றற்கொன்று மாறான விசேடங்கள் கேட்கப்படின் எந்தச் சுருதி அதனைத் துணிதலையே தொழிலாகக் கொண்டு எழுந்தது அந்தச் சுருதிக்கேற்பச் சிறந்ததோர் பொருளைத் துணிதல் பொருத்த மாகலின், மற்றொன்றனைப் பொருளாகக் கொள்ளாத அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலியுடைத்தாகலின். அற்றாகலினன்றே "பூரணைக்கட் செய்யப்படும் ஆக்கினேயம் அக்கினி சோமியமென்னும் வேள்விகளிரண்டிற்கும் முறையானே யனுட்டானத்தையவாவுஞ் சுருதி வரிசையில் அனுட்டிக்கத்தக்க பொருளை உணர்த்த லொன்றையே பயனாகக் கொண்ட மந்திர பாடக்கிரமமே நியாமகத்தைச் செய்யும் அதனின் வேறான விதியாற் பயன்பட்ட பிராமண பாடக்கிரமம் நியாமகத்தைச் செய்யமாட்டாது என்று" மந்திரி நியமிக்குமாறு படுபொருளின்" என்னு "மைந்தாமத் தியாயவதிகரணத்தில் நாட்டியதூஉமென்க. அதனானுஞ் சிருட்டிப்பானது உண்மையுஞ் சிருட்டிக்கப்படும் பொருட் டொகுதியும் அவற்றின் முறையுமென்னு மிவற்றைக் கூறிப் பயன்பட்ட சுபாலோபநிடத முதலியவற்றிலுள்ள சிருட்டிப் பிரகரணங்களில் அபிதானச் சுருதி வலியான் மற்றொரு கடவுட்குக் காரணத்தன்மை தோற்றினும் ஏனைச்சுருதிகளிற் கூறப் பட்ட சிருட்டி கர்த்தாவினது உண்மை முதலியவற்றைத் துணிந்த பொருளாக்கிச் சிருட்டிக்கும் பிரமப் பொருட்கு ஓர் தெய்வ வடிவைத் தெரிக்கும் பொருட்டெழுந்த விந்தமந்திரோபநிடதத்து "அரன்" "சிவன்" முதலிய சத்தங்களாலோதப்படும் பரமசிவன் சகத்தின்றோற்ற முதலியவற்றிற்குக் காரணனாமென்றுரைத்தல் வலியுடைத்தாகலின் அக்காரணத்தன்மை அவன்பாற்றானே நிலைபெறுமென்க. இதனானே, சிருட்டிப் பிரகரணத்திலுள்ள "நாராயண" சத்தப்பிரயோகம் வலியுடைத்தென்ற பரர்கொள்கை கழுத்திற்கையிட்டுத் தள்ளியொழிக்கப்பட்டது. ஆண்டு நாராயணபதம் பெருவரவிற்றாதல் பற்றி வலியுடைத்தென்று பரர்கோடறானும் பொருந்தாது. ஆண்டு அஃது பெருவரவிற்றாயி னும் அப்பொருட்கண்வரும் "பிராணன் ஆகாயம் அக்கர முதலிய பதங்கள் வலியிலவாதல் போல அன்னியதாசித்தமாய் அநன்னிய பரமான சுருதியொடுமாறுபட்டு வலியிலதாப் ஒழிதலின். இன்னும், அதர்வசிகையில் "இப்பிரமன்விண்டு உருத்திரன் இந்திர னென்னுமவரெல்லாம் பிறக்கின்றனர்" என்றற்றொடக்கத்துரை யாற் பிரமன் முதலியோரையுஞ் சிவபிரானையும் முறையானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரிய காரணத் தன்மை பற்றிக் கிளந்து கூறியதூஉம், மாற்றியுரைக் கலாமென்றாசங்கித்தலைக் தடுத்தொழிக்கவற்றாமென்க. நாராயணனையுங் காரிய கோடியுளடக்கிச் சிவபிரானுக்குக் காரணத்தன்மையைக் கூறுவதனை நாராயண விடயமெனக் கொண்டியைத்தல் செல்லாதென்க. அல்லதூஉம், "பிரமன்" "உருத்திரன்" என்னுஞ் சொற்களுக்கிடையேவைத்தோதப்பட்ட "நாராயண" பதத்தை அவனதோர் அவதார விசேடப் பொருட்டாக்கி யுரைத்தல் பிரமாணமுடைத்தாகாதென்க. "எப்பொழுதிருளிருந்தது" என்னு மந்திரங் காரணவாக்கிய மனைத்திற்குஞ் சிவபிரான் பொருளாதலை நேராக நிரூபித்துச் சபால முதலியவற்றில் "நாராயணனன் காரண"னெனக் கூறிய தனையுஞ் சிவபிரான் விடயமாகத் தெள்ளிதிற் புலப்படுத்தும். கூர்ம புராணத்திற் பார்த்தனை நோக்கித் "திவ்வியமும் நித்தியமுமான ஈசுவரவியையுடைய ஞானத்தை நீ உண்மையாக அறிந்தாய் உன்பதிக்குப் போக போக சோகமெய்தற்க சரணாதற்குரிய சிவபிரானைப் பரபத்தியாற் சரணடைக" என்று இருடிகேசன்றானே சொற்றனனென்பது கொண்டு அக்கீதையை ஈசுவரஞானமென்னும் வியாசவசனமும், ஆண்டே ஈசுவர கீதையினிறுதியில் "அரியும் பகவனுந் தேவகிபுத்திரனுமான நாராயணன்றானே இந்த உத்தமஞான நூலினை அருச்சுனற்கு நேராக அளித்தனன்" என்று ஈசுவர கீதையின் பொருளை யாத்துக் கொண்டெழுந்த வியாசவசனமும், கண்ணனுக்கு முழு முதன்மை முதலியவற்றைப் பெரும்பான்மை பற்றி எடுத்துக் கூறும் பகவத்கீதை தானுஞ் சிவபரமாதலை வெளிப்படுத்தும். "சத்தியமுதலியவற்றை இலக்கணமாகவுடைய அம்பிகையோடு கூடிய ஈசானன் முழுமுதல்வன் விண்டு விரிஞ்சன் உருத்திரன் ஏனைப்புமான் முதலியோர் முழுமுதல்வராகார் சத்தமனே சுருதிகளும் புராணங்களும் பாரத முதலியவைகளும் அம்பிகையோடு கூடிய சிவபிரானை உட்பொருளாகக் கொண்டுரைக்கும்" என்றற்றொடக்கத்துப் பராசர முதலிய புராண வசனங்கள் சுருதியினும்ள மிருதியினும் புராணத்துமுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசனங்களிற் காணப்பட்ட ஏனைக் கடவுளரைக் குறிக்குங் காரணவாதங்களெல்லாஞ் சிவபரமாதலைத் தெள்ளிதிற் கூறும். ஆகலின், ஏனைக்கடவுளர்க்குக் காரணத்தன்மையைக் கூறும் வசனங்களே பரமசிவன் பான்வந்து முடிபெய்தும். அப்பரமசிவனுக்குக் காரணத்தன்மையைக் கூறும் வசனங்கள் ஏனைக் கடவுளர்பாற் சென்று முடிபெய்தாவாமென்க.

இனி "நாராயணனொருவனே யிருந்தனன்" என்றற் றொடக்கத்தனவாக அவனுக்குப் பிரபஞ்சப் படைப்பைக் கிளந்துரைத்தவசனம் ஒரு கற்ப முதலிற் பரமசிவன் பானின்னு முதற்கட்டோன்றிய நாராயணனன் தன்னையொழித்தொழிந்த பிரபஞ்சத்தினைப் படைப்பானெனக் கொண்டு பொருளியைபு செய்யற் பாற்றாகலின், அஃதெவ்வாற்றானும் பரமசிவனுடைய முழுமுதன்மையோடு முரணுமாறில்லை. மகோபநிடதத்தில் "நாராயணனொருவனேயிருந்தனன்" என்பதற்குத் "தமோநுதனினின்றும் பிறந்தனன்" என்றற்றொடக்கத்து உபபிருங் கணத்திற்கேற்பச் சிருட்டியின் றொடக்கத்தில் பிரமன் உருத்திரன் முதலியோருதித்தற்கு முன்னர்த் துணையிலியாய் நாராயணன் பிறந்தானெனப் பொருள்படுதலானும், மகோபநிடதத்திற் பெறப்படும் பூதேந்திரிய முதலியவற்றின் சிருட்டி வரிசையில் அப்புவினிடையே படைத்த ஒரு பிரமாண்டத்து "நாராயணன் நான்முகனைப் படைத்தனன்" என்னும் பொருட்டொகுதி மனு வசனத் தொகுதிகளிலும் "மாபூதமுதலியவாக வேறுபடும் வீரியத்தையுடையான் பிறந்தனன்" என்றற் றொடக்கத்தனவாக அவ்வாறே கூறப்படுதலின் அவை அதனை மூலமாகக் கொண்டு அவ்வுபநிடதத்திற்கு உபபிருங்கணமாதல் தெளியப்படுதலானு மென்க. இங்ஙனஞ் சுருதிபுராண முதலியவனைத்தோடு முரணாத வாறு பரமசிவன் சகத்திற்குக் காரணனாதல் நாட்டப்படுதலின், அவனே பரப்பிரமப் பொருளாம். அற்றாகலினன்றே மந்திரம் "இருதம் சத்தியம் பரப்பிரமம்" என்றதூஉமென்க. "விரூபாக்கன்" என்னுமபிதானச் சுருதியானும், கூர்மபுராணத்தில் "இருதஞ்சத்தியமென்னுமந்திரத்தான்மா தேவனான ஈசானனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிறைஞ்சுக" வென்று சிவவணக்கத்தில் விநியோகிக்கப்படுதலானும், போதாயன சூத்திரத்தின் மாதேவனது பாதோதக விதியைக் கூறுதுமென்றெடுத்து "இருதஞ்சத்தியமென்னுமந்திரத் தாலாசமிக்க" வென்று சிவபாதோதக விதியில் விநியோகிக்கப் படுதலானும், யோகயாஞ்ஞியவற்கியத்தில் "அன்றியுங் கார்க்கீபிரமபுரமாகிய தகரபுண்டரீகத்தினடுவே பரமான்மாவும் பரமானந்த வடிவினுங் குருவருளாலறியற்பாலனும் புருடனு நீலலோகிதனுமாயுள்ள பிரமப்பொருளை யோகப் பயிற்சி யினானே நல்லோர் பார்க்கின்றனர் நீயும் அவ்வண்ணஞ் செய்க" வென்று முன்னையனுவாகத்தால் விதிக்கப்பட்ட தகர வித்தை யால் உபாசிக்கப்படுந் திருவுருவைக் காட்டி அதனோ டொரு வாக்கியப்படுத்திப் புலப்படுத்தலானும், இம்மந்திரஞ் சிவபர மாதல் வெளிப்படையாம்.

இனி "நாராயண பரப்பிரமம்" என்றதூஉம் நாராயணற்கு ச்சிவபிரானோடு வேறுபாடின்மையைக் கொள்ளுங்கால் எவ்வாற்றானு முரணாது. வேறுபாடு கொள்ளுங்கால் நாராயணன் பரப்பிரமப் பொருளைப் பாவித்து அதுவாயினனென்றொற்றுமை செய்க, ஒரு வித்தையில் உபாசிக்கப்படுபவன் உபாசிப்பவனாதல் கொண்டு சுதந்திரனாகவும் பரதந்திரனாகவுங் கூறப்பட்ட விருவருக்கு உள்ளவாற்றாற் பரப்பிரமத்தன்மை செல்லாமை நேர்ந்துழி அங்ககுணவிரோதாதிகரண நியாயம் பற்றிப் பரதந்திரன் பால் அவனாந்தன்மையைக் கூறுதலையே முக்கியப் பொருளாகக் கோடலின்: "அங்ககுண விரோதத் தங்கமே கொள்க -வதன் பொருட்டுக்குணமடுத்தலான" வென்னுமதிகரணத்தில் ஓர்பகன் முதலாகத் தீக்கை செய்து கொள்ளுமிடங்களில் தீக்கிணீயை சோமயாகமென்னுமிரண்டற்கும் விதிவாக்கியத்திற் பெறப்படும் பர்வகாலஞ்சம்பவிக் கமாட்டாமை யின் இரண்டனுளொன்றைத் தள்ளுதல் இன்றியமையா விடத்துப் பிரதானத்தைக் கொள்ளுதல் பொருத்தமாதல் பற்றிக் குணமான தீக்கிணீயையினையே தள்ளல் வேண்டுமென்று துணியப்பட்டது.

"நாராயணனினும் பரப்பிரமஞ் சிறந்தது" என்னும் சுபத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாக்கியானத்தினுங் குற்றங்காண்கின்றிலம், பிரதானத் திற்கேற்ப ஈண்டிவ்வாறு பொருடுணியப்பட்டுழி "நாராயணன் பரப்பிரமம்" என்னுமற்றைச் சருதிக்கே "வேற்றுமையுருபுகள் சுட்பெறுந் தொகுமே" என்னுஞ் சூத்திரம் பற்றி ஐந்தாவதற்குச் சுவ்வென்னு மாதேசங் கற்பித்தல் பொருத்தமாகலின். இலிங்கபுராணத்து மாலிங்கோற்பத்திக்கு முன்னர் பிரம நாராயணர் தம்முண்முரணி "நானேயனைத்திற்கு மேலானேன்" என்று விவாதஞ் செய்யலுற்றுழி "நானே பரப்பிரம" மென்றெடுத்த நாராயண வசனம், "மாதேவனான என்னை நோக்குக பயந்தவிர்க பேராற்றல் படைத்தநீயிர் என் வடிவிற் பண்டுத் தோன்றினீர் விண்சூடு பிரமன்விண்டு சிவனென்னுங் குறிகளானும் தோற்ற நிலையிறுதியென்னுந் தொழில்களானும் அகளனும் பரமேசுரனுமானயானே மூவராக வேறுபட்டேன் விண்டூஉ மோகந்தவிர்க" என்றற்றொடக்கத்து (அவர் விவாதத்தை யொழித் தருளும் பொருட்டு மாலிங்க நடுவில் வெளி நின்ற) பசுபதியின் றத்துவவுபதேசத்தானே பிரமன் றன்னுயர்ச்சி கூறிய வசனத் தொகுதி போல ஒழிக்கப்படுதலின், அவனுக்குப் பரப்பிரமத் தன்மையை நாட்டுதல் செல்லாதென்க. இவ்வாறு சுருதியிற் பெறப்படுஞ் சிவபிரானது பரப்பிரமவியலினைச் சர்வஞ்ஞசி காமணியும் பகவனுமான வாதநாராயணணாசாரி யனும் பிரமமீமாஞ்சையில் "அங்குட்ட" வாக்கியஞ் சிவநாமமான ஈசானசத்தமுடைமை பற்றிப் பிரமபரமென்று துணிதலானும், மாபாரதத்தில் "மூத்திடுந் தருமனென்பானறப் பெருந்தாரு முன்னிற்- பார்த்தனத்தாருவுக்கோ ரடிப் பெரும்பணையாம் வீமன்- சீர்த்திடுங்கிளையாம் பூவுங்கனிகளுஞ் சீர்த்தி சான்ற- மாத்திரை மைந்தர்கண்ணன் விப்பிரர்பிரமமாத்தூர்" "தேவர் கடமக்குத் தெய்வம் விண்டுவிப் பிரர்க்குத் தெய்வம்- பாவகன் றானுமேலாம்பிரமமும்பணைத் தோண்மின்னார்க்-காவதோர் தெய்வங்காந்தனாழி சூழுலகுக்கெல்லா- மேவருந்தெய்வ மாவாரந்தணரென்ப மேலோர்" என்றற்றொடக்கத் திடங்களிற் பிறிதொருபதத்தோடு சார்த்தாமற் பிரமசத்தத்தைச் சிவபிரான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டுப் பிரயோகித்தலானுந், தன்கருத்தைத் தெற்றென வெளியிட்டான். "மூத்திடுந்தருமனென்பானறப் பெறுந்தாரு" வென்னுஞ் சுலோகத்திற் கண்ணன் றுணைவலியினாலும் பிராமணரா சீர்வாதத்தினாலும் பாண்டவர்க்கு வென்றி யெய்திற் றென்பது வெளிப்படுதலின் அவரது வென்றிக்குக் காரணமான கண்ணற்கும் பிராமணர்க்குமிடையே அவர்தம் மோடொப்பவே ராகவுருவகஞ் செய்யப்பட்ட பிரமசத்தப் பொருடானும் அவ்வியல்பிற்றாகவே கோடற்பாற்று. அப்பொருடான் யாவனெனின்; பாரிசேடவளவையானும் பொருந்துமாற்றானும் அப்பொருள் சிவபிரானேயென்பது ஒரு தலையானுணரப்படும்; மோக்க தருமத்தில் "பண்டவன்றன்னான் முனிந் திடப்பட்ட பகைஞரைச் சவட்டினை மற்றவ்-வண்டர்நாயகனை யளப்பரும் பெருமையாதியை யழிவிலாவரனைக் கெண்டையந் தடங்கணுமைப் பெருமாட்டி கேள்வனைத் தேவர் சுடேவை-மண்டு மாதரவானியதியினென்றுமேத்துதிபார்த்தனீமன்னோ" என்று பார்த்தனை நோக்கிக் கண்ணன் கூறிய வசனத்தானும், அசுவமேதப் பிரகரணத்திற் "குருகுலத்தவர்க்கோர் மதலை யாயுதித்த கொற்றவேல் வேந்தனீகேண்மொ-வொருவுறாக் கேண்மை யுடைய நாமெல்லாமுவன்றிருவடிக்கன்பராவேம். பெரிது மற்றவன்றானருள் சுரந்தளிக்கு நமக்கெலாம் பெருமை சேரவன்ற-னருளினாலவனிமுழுதுமோர் குடைக்கீழாளுயிவ்வ ரசியா மடைந்தேம்" என்றெடுத்துக் "காதுதல்வல்லவன் வில்லாண் டகைத்துரோணன்கன்ன-னாதியர் தங்களாலேபரந்திடப் பட்டவப்பேர்-மாதிறற்சேனை தன்னை வல்லவில்லாளும்பல்வே-றோ துருவுடை மகேசனொருவன் மற்றன்றிமாதோ-மற்றெவன் மனத்தினேனுந் தடுத்தெதிரேறு மாற்றல்-பெற்றவனுரைத் தியந்தப்பிறைமதி முடித்தசோதிக்-கற்றையச்சடை மாதேவன் கருணையாற்றானேயுன்றன்-பற்றலர்படுத்துவாகை புனைந்தனை பாராள்வேந்தே" என்று உதிட்டிரனை நோக்கி வீமசேனன் கூறிய வசனத்தானும், பத்மபுராணத்தில் "மாயமிக்கயர் தரவல்லனாய் விண்டுகூறாயவக்கண்ணனாண்ட மருமற்றன்னவன்- மேய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மாணையான் மேவியும் வயினுமக்-கேயபல்லுறுதியும் மறிவுறுத்திடுமரோ" என்று வேட்டுருவிடுத்த சிவபிரான் பார்த்தனை நோக்கி யருளிச் செய்த வசனத்தானும், சிவபிரானது திருவருளானே பாண்டவர்க்கு வென்றியெய்திற்றென்னுமிப் பொருள் தெள்ளிதிற் பெறப்படுதலானும், "யாண்டறமுண்டு ஆண்டு வென்றியுளதா" மென அறம் வென்றிக்கு மூலமாதல் ஒரு தலையான் எல்லாரானுமறியப்பட்ட தொன்றாகலின் அதனை அறிவுறுத்துமுகத்தானே வென்றிக்கு பாயமாம்வேதம் பிரமசத்தப் பொருளாதற்கு இடனுளதாயினும் ஈண்டுச் சேதனவுறுப்புக் கடம் மானே சாவயவவுருவகஞ் செய்தலின் ஈண்டைப்பிரம சத்தத் திற்குச் சேதனப் பொருள் இன்றியமையாததாகலின் சத்தரூபமான வேதம் பொருளாதல் செல்லாமையானுமென்க. "தேவர்கட மக்குத் தெய்வம் விண்டு" என்றெழுந்த சுலோகத்தின் கணுள்ள பிரமசத்தப் பொருளுஞ் சிவபிரானேயென்பது இவ்வாறே துணியப்படும்; "வானவர்க்கொருநீபி ராமணனாவை மானவர்க்கி யான்மன் பிராமணனாவேன்-பிராமணனையன்றே பிராமணன் வழிபடும்" என்றற் றொடக்கத்துச் சாந்தோக்கியோப நிடதத்தும் "நிருபர் தெய்வமாநேமியிந்திரனுரியவிப்பிரர் தெய்வமோங் கெரி கிரணமாயிரங்கெழுமு சூரியன் - பிரமனோடுயர் பினாகதாரியே ஆதலான் மிகுமூக்கத்தன்புட-னோதுமீசமா யுகத்தை யுற்றரோ-வாதிருத்திரவந்தணாளனா மேதிலீசனைச் சரண மெய்துக" என்றற்றொடக்கத்தனவாக வருங்கூர்மபுராண முதலிய வற்றின் கணுள்ள வசனங்களினுஞ் சிவபிரான் பிராமணத் தெய்வ மாதலோதப்படுதலின். இவ்வாறு சிவபிரான் பிரமப்பொருளாத றுணியப்படுதலின், பரர்சிவபிரானினுமேம் பாடுடையனெனப் பிறனொரு கடவுட்குயர்ச்சி கற்பித்ததூஉம் அக்கடவுளாற் சிவபிரானுக்குச் சிருட்டிக்கப்படுதல் நியமிக்கப் படுதல்களைக் கற்பித்ததூஉமாயவெல்லாங் கருவற்றொழிந்தமை காண்க.

"அங்கிகடவுளர்க்கவமன் விண்டுபரமன்" என்றற்றொடக் கத்துத் தீக்கிணீயையினைக் குறிக்கும் அருத்தவாதமும் "மாறுபாடு றினே குணவாதமாகும்" என்னு நியாயத்தானே புனைந்துரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகவேனும் பிறிதொன்றாகவேனும் பொருத்துதற்பாலதாம். அற்றேல், அங்கியின் அவமத்தன்மையும் விண்டுவின் பரமத் தன்மையும் அவரொழிந்த ஏனைக்கடவுளரினிடையாந் தன்மையும் வாய்மையாகாதவழி "அங்கிகடவுளர்க்கவமன் விண்டு பரமன்" என்று இருமருங்குள் வைத்துக் கடவுளரையெடுத்துத் தீக்கை புரிகவென்றோதுந் தீக்கிணீயைக்குச் சோமத்தில் வேட்கப்படுங் கடவுளரெல்லாரையுங் கொள்ளுந்தன்மை பெறப் படாது; பெறப்படாதாகவே, "கோடற்பொருட்டாதானம் வேண்டா-முன்னையிட்டிய தன் பொருட்டாகலின்" என்னுமதி கரணத்திற் சோமவேள்வியில் வேட்கப்படுங் கடவுளரைக் கொள்ளுதற் பொருட்டெழுந்த தீக்கிணீயை யென்னும் வேள்வி யாற்றானே பிரசங்கம் பற்றி அங்க வேள்விகளிலுங் கடவுளரைக் கொள்ளுதல் பெறப்படுதலின் சோமாங்க வேள்வியிற் கடவுளரைக் கொள்ளுதற் பொருட்டு மறித்தும் அங்கியாதானஞ் செயற்பாற்றன்று" எனப் போந்ததுணி புரைக்குஞ் சங்கிர கணகாண்டத்திற்றீக்கிணீயை வேள்வியை நிரூபித்து "அதன் றுப்பியைபினேனைக் கடவுளர்க்-கைக் கொள்ளு த றான்கேட்கப் படுமே" என்னுமதிகரணத்தில் "தீக்கிணீயையிற் கொள்ளப்பட்ட கடவுளர்க்கு ஆரோபிதஸம்ஸ்காரஸம் யோகமுண்மையின் சோம வேள்வியிற் றீக்கிணீயையிலாதானஞ் செய்யப்பட்ட வங்கி சோமப்பொருட்டோம்பப்படும் கருமந் தோறுமாதானம் வேண்டற்பாற்றன்று" எனப் போந்ததுணி புரைக்கும் வாதை யுண்டாம் பிறவெனின்;- அற்றன்று, "அங்கிகடவுளர்க்கவமன் விண்டு பரமன்" என்புழி வலியுடை யவனே சுருதிகளின் விரோதம் வருதலானும், உபசரிதப்பொருள் கொள்ளுமிடத்துந் தீக்கிணீயை வேள்விக்குக் கடவுளரைக் கொள்ளுதல் பயனாமென்னும் பொருட்கு விரோதமின்மை பற்றித் தன்பொருட்கட் பிரமாண மாதலொப்பப்படுதலானு மென்க. அஃதேல், அங்கிக்கும் விண்டுக்குந் தாழ்ச்சி உயர்ச்சி இல்வழி இருமருங்குளடக்கிக் கொள்ளுதல் பெறப்படாமையின் கடவுளரெல்லாரையுங் கொள்ளுதல் செல்லாதாலோவெனின்;- அற்றன்று, அவ்விருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்ச்சியுயர்ச்சி வரம்பு பற்றி அவர் தம்மைக்கொள்ளுதல் பெறப்படினும் அப்பேறின்மை அவ்வண்ணமே நிலையுதலின். தாழ்ச்சியுயர்ச்சியுடைய விரு கடவுளர் வேள்விபற்றி அவரிடைப் பட்ட ஏனைக் கடவுளரைக் கொள்ளுதல் பெறப்படாமையி னென்க. இனி வசன வலியானே இருபாலாரைக் கொள்ளுதல் பற்றி எல்லாக் கடவுளரையுங் கொள்ளுதல் பெறப்படுமெனின் ;- அங்ஙனமாயின் வசனவலியானே அங்கி விண்டுவென்பார் வேள்விகள் பற்றிக் கடவுளரெல்லாரையுங் கொள்ளுதல் பெறப் படுமென்றாம். "சூர்ப்பத்தானே யோமித்திடுக-வதனானன்றே யன்னமடப்படும்" என்புழிச் சூர்ப்பத்தின் கண் அன்னகரணத் தன்மை துதிபற்றியன்றி அஃதோம சாதனமானவன்னத்திற் குபயோகமாதல் பற்றியன்று; அது போல அங்கிக்கும் விண்டுக்கும் அவமத்தன்மை பரமத் தன்மை கூறியதூஉந் துதிபற்றியன்றி ஏனைக்கடவுளரைக் கொள்ளுதற்குபயோகமாதல் பற்றியன்றென்று கொண்டு, விரோதம் என்னுமின்றென்க. இனி உண்மையாக நோக்கும் வழி ஈண்டை "அவம" "பரம" சத்தங்கள் தாழ்ச்சி உயர்ச்சிகளை உணர்த்தவந்தனவல்ல. மற்றென்னையோ வுணர்த்தவந்தன வெனின்;- முடிவுமுதலுமுணர்த்த வந்தன வென்க; "அங்கி கடவுளர் தொகுதிக்கு முன்னைப்பிரதமன் விண்டு உத்தமன்" என்று தீக்கிணீயைக்குக் கடவுளரைக் கொள்ளுதலைப் பயனென்றுணர்த்தற் கேயெழுந்த மந்திரத்தின் கணுள்ள "பிரதமன்" "உத்தமன்" என்னும் பதங்களான் அவ்வாறு வெளிப்படுதலின், ஆண்டை யுத்தமபதத்திற்குப் "பிரதம விருக்கினை மும்முறை கூறுக" வென்புழிப்போலப் பிரதமபதத் தொடர்ச்சிபற்றி அதற்கு மறுதலையான கடைமைப் பொருள் போதலானும், "கடவுளர்க்குப் பிரதமனான அங்கி வருக" "கடவுளரின் முகமுமுதல்வனுமான வங்கி" "அங்கியை முகமாகவுடைய கடவுளர்" என்றற்றொடக்கத் தனேகமந்திரப் பிராமணங்களில் அங்கிக்கு முதன்மை கூறப்படுதலின் "அவம" பதத்திற்கு யாங்கூறிய பொருளேயின்றியமையாமையானுமென்க.

இனி "அவனதுநெற்றியின்று முக்கண்ணனுஞ் சூல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாணியுமான புருடன் றோன்றினான்" "இவ்விருவிபுதத்தலை வரும் என்னருள் வெகுளிகளாற் பிறந்தோர்" என்றற்றொடக்கத்துச் சுருதிமிருதிகளில் உருத்திரன் நாராயணனாற் சிருட்டிக்கப்படு தலைக் கூறியனவெல்லாம் ஓர் கற்பத்துச் சங்காரவுருத்திர வடிவானே அவன்பால் வெளிப்பட்டருளியதைப் பொருளாகக் கொண்டனவாம். "யானும் ஓர் கற்பத்திறுதியில் கோரவடிவோடு சூலபாணியாய் வெகுளிக்காலை உன்முகத்தின்கண்வெளிப்பட்டு உனக்குப் புத்திரன் போலாவேன்" என்று கூர்மபுராணத்தில் உருத்திரன் நாராயணனுக்கு வரமளித்தலைக் கூறும் வசனத்தானே அப்பொருள் புலப்படுதலின். "அந்தப்பிரபுவின் அங்கத்தில் நீலலோகிதகுமாரன் றோன்றினன்" என்றற்றொடக்கத்து வசனங்களில் உருத்திரனுக்குப் பிரமன்பாற்றோற்றம் கூறியதூஉம் அவ்வாறு பிரமனுக்கு உலகசிருட்டி விருத்தியெய்தற்கேற்றதோர் உபாயங்காட்டி, அருள்வழங்க அவன்கண் வெளிப்பட்டருளி யதைப் பொருளாகக் கொண்டதாம், "பரமேசுரனாலேவப்பட்டுப் பிரமனுக்கனுசனான நீலலோகிதமகேசன் அவனுக்குப் புத்திரனாய் அருள் பாலிக்கின்றான்" என வாயவ்விய சங்கிதையிற் கூறுதலானும், "எழுவாயிறுவாயில்லானு ஞானமுதலியவற்றை யுடையனுந் தாரக முதலிய ஞானங்களை ஏவுவோனும் அணிமா முதலிய இயற்கை ஐசுவரியங்களையுடையனும் பிரபுவும் வியாபகனுமானதேவன் சிருட்டியின் பொருட்டுப் பிரம னெற்றியின்கண் வெளிப்பட்டருளினான்" என்று பாரதத்திற் கூறுதலானுமென்க. "இவ்விருவிபுதத்தலைவரும்" "பிரமன்றாணு மனுத்தக்கன்" என்றற்றொடக்கத்தனவாக உருத்திரனுக்குப் பிறனானியமிக்கப்படுதலைக் கூறும் வசனங்களும், "அரியின் வெகுளியிற்றோன்றினன்" என்னும் விசேடணத்தானும், "தாணு" முதலிய பதங்களானும், பிரமநாராயணர்பாற்றோன்றிய அமிச விசேட விடயமாகத் துணியப்படும். "தாணு" சத்தம் நான்முகன் பாற்றோன்றிய உருத்திராவதார விசேட நாமமாம். ஆதித்த புராணத்து அவனையே சுட்டி "அன்று தொட்டு விசுவான் மாவானவன் நல்லமக்களைப் பிறப்பித்திலன் தாணுவைப் போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவற்றிருத்தல் பற்றித் தாணுவெனப்பட்டனன்" என்று ஆண்டுத்தாணுவென்னும் பெயர்க்கு நிர்வசனங் கூறுதலானும், மாபாரதத்தில் "எவ்வழிப்பூதநாதன் சிருட்டித்து" என்னுஞ் சுலோகத்தானே மைநாகத்து பாசிக்கப்படுஞ் சிவபிரானுடைய சந்நிதியைக் கூறி "நானு நாராயணனும் பிரமனும் யமனும் தாணுவுமென்னுமைவரும் பல்லாயிரம் யுகங்கள் செல்லப் பரமான்மாவையு பாசிக்கின்றாம்" என வருமடுத்த சுலோகத்தில் அத்தாணுவினை உபாசிப்பவர் கோடியுட்சேர்த்தோதலானும், இராசதருமத்தில் "சூலத்தைப் படையாகக் கொண்ட அப்பகவன் மறித்தும் எண்ணமுற்று ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொருவனை நாயகனாக்கினன்" என்றோதி "அப்பிரபு மகான்மாவும் நித்தனு மாதேவனும் ஈசானனுமானவிசாலாக்கனை உருத்திரக் கடவுளரைப் புரக்கச் செய்தனன்" என்று சிவபிரான் பிரயோச்சிகருட்சேர்த்தலானும். "தாணு" "விசாலாக்கன்" முதலிய பதங்களாற் கூறப்படும் உருத்திரனுக்குப் பரமசிவனின் வேறான ஓரவதார மூர்த்தித்தன்மை வெளிப்படுதலானுமென்க.

"விசாலாக்க" பதத்தானுந் தாணுவே கூறப்படும், பிரமனாலியற்றப்பட்ட நீதி சாத்திரத்தையெடுத்துச் சுட்டிப் "பகவனுஞ் சங்கரனும் பல்வேறுருவனுஞ் சிவனுந் தாணுவும் உமாபதியுமான விசாலாக்கன் அந்த நீதியை முன்னர்க்கைக் கொண்டனன்" என்று அவன்பால் அப்பதத்தைப் பிரயோகித்த லானும், அதன்பின்பு "எண்ணிலாயிரமுருத்திரர் தோன்றுதற் கிடமாய்ப் -பண்ணவர்க்கொருதலைவனாய்ப் பகவனாய் நித்த-மண்ணு நாசமில்லானுமாய்யுயிர்க்குயிராங்-கண்ணு தற் சிவன் யுகந்தொறுங்கட்டியவாயுள்-வரமதின்றியே குறை தலைத்திருவுள மதித்துப்-பிரமனோதிய பெரும் பொருளுடைய வந்நூலை-யொரு சருக்கமாவோதலினது விசாலாக்கப்-பெரிய பேர்படைத் திட்டதிந்திரனதைப் பெற்றான்" என்று இராசதருமத் திற்றானே அவனாற் சுருக்கப்பட்ட நீதி சாத்திரத்திற்கு "வைசாலாக்க"மெனப் பெயர் தந்தோதுதலானு மென்க. இனிப்புராண முதலியவற்றில் ஒரே விடயங்களில் "உருத்திரன் நாராயணனானியமிக்கப்படும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறும் வசனங்களில் அவதார வேறுபாட்டைக் குறிக்கும் பதமேனும் இலிங்கமேனும் இல்வழி ஆண்டுப் பரமசிவன் அவனானிய மிக்கப்படுதல் பொருந்தாமையானும், "அரிபுராணத் துளோது மத்தாழ்வுாந்-தெரியிலிந்தப் பரசிவதேவனின் -வரும் விபூதிவுருத் திரவக் கணர்க்-குரியவாகுமொருதலையாகவே" என்று வியாச புராணத்திற் கூறுதலானும். அமிசபேத விடயமாதல் வச்சிரலேபமாக நாட்டப்படும். ஆகலின், முழுமுதன்மை அனைத்தையும் திட்டிக்குந் தன்மை பிறனானியமிக்கப்படாமை முதலிய குணங்களையுடைய பரப்பிரமப் பொருள் பரமசிவனே யென்றற் கட் சுருதிமிருதி புராண முதலியவெல்லாந் தம்முண் முரணாமையின், அப்பரனே மேலான உறுதிப்பொருளைக் காதலிப் போரால் உபாசிக்கற்பாலனுஞ் சரணடையற் பாலனுமாம்; "காரணன் றான்றியானிக்கற்பாலன்" "எவன் பிரமனை" என்றற்றொடக்கத்து வசனங்களும் அவனையே உணர்த்துவனவாகலானும், "எவன்பிரமனை" என வருங் சுவேதாச்சுவதரமந்திரமும் "மாதேவ னான ஈசுவரனை இரு தஞ்சத்திய முதவலிய மந்திரத்தாலி றைஞ்சுக" "எவன் பிரமனை" என வரு மந்திரத்தாலீசுரனிடத்தான் மாவையர்ப்பணஞ் செய்க" என்று கூர்மபுராணத்துச் சிவபூசையில் விநியோகிக்கப்படுதல் பற்றிஅ ச்சிவபிரானை விடயமாகவுடத்தாதல் வெளிப்படையாத லானும், அதர்வசிகை முடிவில் "ஏனைய வற்றையெல்லாங்கை விட்டுச்சுபத்தைச் செய்யுஞ் சிவபிரானொரு வனே தியானிக்கற் பாலன் அதர்வசிகை முற்றிற்று" என மற்றையன வெல்லாவற்றையு மொழித்துச் சங்கரனான சிவபிரானுக்குத் தியானிக்கப்படுந் தன்மையை விதித்து இனி உபதேசிக்கத்தக்க தில்லை என்று துணியும் பொருட்டு அப்பொருட்கட்டான் முடிவுறுதலைத் தானே கூறிநிலையுறு தலானு மென்பது.

வேதமென்னு மகோததி மேவநன்
நீதிமத்து நிறீஇத்திரித்துக் கடைந்
தாதரத்திற் சிவகர்ணவாரமிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீதெடுத்தன மிவ்வுலகுண்ணவே.

**வேறு**

திரத்திணீண்டெடுத்தியம்பிய நியாயமாஞ்சிலையி
னுரைப்பினின் மலமாகிய வொப்பில்வேதாந்தப்
பருத்தமாமணித் தீபமிப்பாருளோர்காண
வரத்தினோங்குபூ தேசனை விளக்குக மாதோ.

ஆருமுற்றவவித் தினுள்ளங்குரித் தெழுந்த
வாரருட்சிவபத்தியாங்கற் பவல்லியினைத்
தீரர்சைவகர்ணாமிர்தத்தீஞ் சொணீருகுத்துக்
கூருந்துன் மதிக்கோடையை முருக்கியோம்புகவே.

**வேறு**

நாமகள்கொழுநன்பரித்திடவவன்றனாவிடையமர்வதூஉ நாளப்
பூமகள் கொழுநன்றுரீ இப்பெரிதெய்தப் பொலிவதூஉம்
பொருவிலாத்தவள, மாமதிமுடித்தசிவபிரானாடற்காடியின்வ
திவதூஉமான, தூமதிவிளக்காஞ் சொற்பிரமத்தைத் தோமறத்
துதித்திறைஞ்சுதுமே.

சித்தாந்த முற்றிற்று
சிவகர்ணாமிர்தமுற்றிற்று
திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபாபதி நாவலர் அவர்கள் ஆக்கிய நூல்களிலிருந்து ஆங்காங்கே கிடைத்த சில பகுதிகள்

### சிதம்பர சபாநாத புராணம்

காப்பு

ஞானமிக வளரினஃ றிணையவுயர் திணையாகு நவிலஞ்ஞான
வீனமிக வளரினுயர் திணையலஃ றிணையாகு மென்று தேற்றன்
மானவஃ றிணைமேலு மாண்டவுயர் திணைகீழும் வடிவிற்காட்டித்
தேனமரும் பொழிற்றில்லைச் சிகரிவாழ் கற்பகத்தை வணக்கஞ்செய்வாம்.

சபாநாயகர்

பொன்பூத்த மணிமன்று ளானந்த நடங்காணப்
புகுவோர்க் கிந்தக்
கொன்பூத்த குஞ்சிதமென் பாததரி சனத்தினே
கூடு முத்தி
மென்பூத்த பிறமுயற்சி வேண்டலெனுங் குறிவாதா
பயத்தின் மேவ
மன்பூத்து நடங்குனிக்கும் பெருவாழ்வைப் பணிந்தேத்தி
வாழ்வா மன்னோ.

சிவகாமியம்மை

நிறைந்திடும் பரனைந் தொழின்முறை குயிற்ற
நிகரிலாச் சிவமுதலாக
வறைந்திடு மேழு பேதமாய் மன்னி
யடைதாற் கேற்றிடத்தானு
முறைந்திடு சத்தி முன்னெழு வகையா
யுயிரொடெப் புவனமுமளித்துச்
சிறந்தசிற் சபையி னிருந்த சான்றாகித்
திகழ்சிவகாமியைப் பணிவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தில்லைவாழந்தனர்

எல்லைக்காண்டற்கரிய தியாகேசப் பிரான்சுருதி
யியம்பும் வாயால்
தில்லைவாழந்தணர்த மடியாற்கு மடியேனென்
றெடுத்த சீரார்
நல்லவே தாகமங்கள் கரைகண்டோர் நாமிவரி
லொருவ ரென்று
சொல்லமா நடராசற் பெறுமூவா யிரமுனிவர்த்
தொழுது வாழ்வாம்.

அவையடக்கத்துள் வரும் செய்யுள்களில் முதற்செய்யுள்:

"அருள்பெருக்கு மேமசபா நாதமான் மியமதனை
யாய்ந்து நீநற்
பொருள்பெருக்கு முயர்தமிழாற் புராணமுறை கூறுகெனப்
புலமை சான்ற
தெருள்பெருக்கு நடராசன் றிருவடிக்கன் புடைமறையோர்
செப்பு மாற்றா
லொருவழிப்பட் டெழுமாசை நனிதூண்டத் தமியேனீ
துரைக்க லுற்றேன்"

## திருநாட்டுப் படலத்துள் முதற்செய்யுள்.

கொன்றை யந்தொடை மிலைச்சிய சடைமுடிக்கூத்த
ரொன்று பேரருட் பிராட்டியொ டுலகெலாமுய்ய
நின்றவம்பலத் தில்லையை யகந்தழீஇ நீடி
மன்றவோங்குறு பொன்னிநாட் டணிநலம் வகுப்பாம்.

புண்ணியப் புனனாட்டுள்ள பொருவிலாக் குறிஞ்சி முன்னு
வெண்ணிடு நிலங்கள்யாவு மிவ்வகை குறும் பெறிந்து
திண்ணிதி னடிப்படுத்துத் திருந்துறச் செங்கோ லோச்சித்
தண்ணளி மிகுந்தெஞ்ஞான்று சராசர மோம்பும் பொன்னி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநகரப்படலத்தின் முதற்செய்யுள்

திருவாளர் பிரமாண்டத்துச் செறிந்தபல் புவனம்யாவு
முருவளர் பலவுறுப்பா யொளிர்தர வுயருந்தில்லை
பெரியவவ் வுறுப்பியாவுந் தொழிற்படப் பிரேரகஞ்செய்
யிருதயகமலமாமே லதன்புக ழெண்ணற் பாற்றோ

## தில்லையின் பெருமை கூறும் செய்யுட்களிலொன்று:

திருவினற் கவினாற் றேசாற் றிருத்தத்தாற் சிறப்பு வாய்ந்த
வுருவினா லுயர்வான் மாண்பா லொழுக்கத்தா லோத வொண்ணா
வருமையாற் புகழா னன்கா வாக்கத்தா னறிவா னான்ற
பெருமையாற் றனக்குத் தானே யுவமையாம் பிறங்கு தில்லை.

## தருமபரிபாலனஞ் செய்வோர் இடங்களின் பெருமை கூறுவன

அனாதி சைவனாஞ் சிவபிரான் முகமைந்தி லடைந்து
பினாதி மாறின்றி யாகம மறைநெறி பேணி
மனாதி மூன்றினுஞ் சிவனருட் பணிபுரி மாண்பா
ரினாவ கன்றநல் வேதிய ரிருக்கைக ளீண்டும்.

அரிக ஞானிக டிருமட மொருபுடை யணவும்
பெரிய யோகியர் திருமட னொருபுடை பிறழுங்
கிரியை பேணுநர் திருமட மொருபுடை கெழுமுஞ்
சரியை யாளர்க டிருமட மொருபுடை தழுவும்.

அன்னசாலைக ளொருபுடை யரியமா முனிவர்
பன்னசாலைக ளொருபுடை பலகலை விதங்க
ணன்னர் நான்மறை யாகம முறைப்பட நாடும்
பொன்னின் மாமுடிப் பட்டிமண் டபமொரு புடையே.

கீதமேம்படு நான்மறை யோதுபல் கிடையு
நாதமேம்படு நால்வர்செந் தமிழ்பயில் களனும்
போதமேம்படு தொண்டர்தம் புராணமு நடேசன்
வேதமான்மிய மைந்துமோ திடங்களு மிகுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்டபங்களின் சிறப்பு

நவந்தரு மைந்தொழி னடத்த நாதனார்
நவந்தரு பேதமாய் நண்ணிடச் சபை
நவந்தரச் சபைந்தெனச் சிகரி நான்குமொண்
ணவந்தரு கூடங்க ணண்ணி யோங்குமே.

## ஆயிரங்கால்மண்டபம்

அண்ணலார் திருவபி டேக மாடுசீர்
வண்ணவா யிரமணிக் கால்செய்ம் மண்டபம்
புண்ணிய முனிவருஞ் சுரரும் பூதரும்
மண்ணகத் தடியரு நெருங்கு மாட்சித்தால்.

## கல்யாணமண்டபம்

நீற்றொளி திகழ்தரு மேனி நின்மலன்
மாற்றரு மறைநெறி யுயிர்ம ணந்திட
வேற்றசீர்ப் பரைதனை ஞான மாமண
மாற்றுபொன் மண்டபங் கவினுமாங் கொர்பால்.

## சிவகங்கை சூழ்மண்டபம்

புங்கவ ரமிர்தினைப் பொதிந்த பெட்டியி
னங்கண னருள்வடி வாய்ம லப்பிணி
சிங்கிடத் துமிக்குமொர் தீர்த்த மாஞ்சிவ
கங்கைசூழ் மண்டபங் கவினு மாங்கொர்பால்.

## குமரவேள்கோட்டம்

அமரர்வாழ் வுறத்திரு வுளங்கொண் டன்றொரு
சமரம்வேட் டயிற்படை தாங்கு செங்கைநங்
குமரவேள் சின்மயக் கோட்ட மன்பர்தந்
திமிரவெவ் வினைகெடத் திகழு மாங்கொர்பால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் கோயில்

அநாமய னைங்கர னாகு வாகனன்
விநாயக னெம்பிரான் விமலக் கோயினன்
மனாதியின் வழிபடு மடியர் வாழ்வுற
வினாதுரந் தருள்கொழித் திலங்கு மாங்கொர்பால்.

## சிவகாமியம்மையார் கோயில்

அம்பிகை பரைசிவ காமி யன்னையா
ரிம்பர்வா ழடியரை யாத்திட் டின்னல்செய்
வெம்புறு பிறவிநோய் வீட்டி மேவுசீர்ப்
பைம்பொனா லயமொளி பரப்பு மாங்கொர்பால்.

## திருமூலட்டானம்

பரசிவன் கருணையாலே பல்லுயிர்க் கருள்வழங்க
வருவுரு வாயஞான மேனிகொண் டளப்பில்சாகைச்
சுருதியொர் வடிவாயோங்குந் தூயவா னீழன்மேவு
மொருதிரு மூலட்டான முரையிறந் தொளிருமோர்பால்.

## பேரம்பலம்

மாதவன் விரிஞ்சனாதி வானவர் முனிவரேனோ
ராதரம் பெருகவேத்த வளப்பிலா ஞானானந்த
நாதனோ லக்கமேவு நலங்கிளர் தேவமன்றென்
றோதுபே ரம்பலம்வா னுற்றெளி விரிக்குமோர்பால்.

## நிருத்தமண்டபம்

கார்த்திரு மேனிமாயோன் முதலியோர் கலங்கியோட
வார்த்தெழு மாலங்கண்டத் தடைத்தருள் சுரந்தவண்ண
லூர்த்துவ நடங்குயிற்று மொருபெரு நிருத்தமன்றம்
வார்த்தைகட் கதீதமான திருவினால் வயங்குமோர்பால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தம்பக்கொடி

வேற்றப்புன் சமயத்தெய்வம் யாவையும் வினையுட்படுத்
தோற்றுத்தன் னாணைதாங்கத் தொலைவின்றி நிலவலாலே
நிற்றுச்செஞ் சடைப்பிரானே பதியென நிறுவுந்தம்ப
மேற்றுச்சீர்க் கொடிவான் போகப் பொதுவின்முன் னெழுந்திலங்கும்.

## தெய்வச்சபை

கவினெலா மொருவழிப்படத் திரண்டரோ காமர்
நவமணிக் குவைகுயின்று சித்திர முயிர்நண்ணச்
சிவணியோர் பசும்பொற்சபைக் கெதிருறீஇத் திகழு
மவதிதீர் பெருந்தெய்வமா மண்டப மதுவே.

## பொன்னம்பலம்

காதனந்தியம் பெருந்தகை காவல்வீற் றிருப்பாய்
வேதமோதினர் தில்லைவா ழந்தணர் மிடைந்தே
போதொராறினு நிருத்தர் பூசனைபுரி யிடனாய்ச்
சோதிமேவு பொன்னம்பல மலவிரு டுரக்கும்.

## தம்பங்கள்

சுத்தமாயை முன்னை தத்துவம்பல சூழ்போம்
பித்தியாதிபல் லுறுப்புமாய்ப் பிறங்கிடப் பெரிய
சத்தியொன்பதுங் தூபிக ளாகிமேற் றயங்க
வித்தையாவுமைம் பீடத்துந் தம்பமாய் மிளிர.

ஏற்றமாகுமைஞ் செழுத்துமைம் படிகளா யிலங்க
சாற்றொணாமனு ரகசியஞ் சதாசிவ பீட
மேற்றிகழ்ந் திடமகேச னைங்கரன் சூலிவிசாக
னாற்றனந்திசண் டேசுர னகன்புடை யடுப்ப.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிற்சபை

ஆடகப்பெருங் கிரிமிசை யணவுதென் சிகர
மாடொர்சிற்சபை விளங்குமற் றதன்பெரு மகிமை
நாடியிற்றென வுரைப்பரி தெவர்க்குமெய்ந் நடன
மாடுமப்பொது நியதமா வளப்பருஞ் சிவமே.

## திருநகரப்படலத்தின் இறுதிச் செய்யுள்

மோனஞானிக டேறிடு முடிவில்சீர்த் தில்லை
மாநகர்ச்சிறப் பெனதுசிற் றறிவிற்கு வசமோ
வானவாதரத் தொருசில வறைந்தன னணிப்பொன்
ஞானமன்றுடை நாதன் மான்மியமினி நவில்வேன்.

## நைமிசப் படலத்துள் முதற் செய்யுள்

பூமகட்கொரு நிலயமாய்ப் போர்க்கறு சீர்த்தி
நாமகட்கணி யரங்கமாய் நவிலுமெண் ணான்காஞ்
சேமநல்லறக் குயிரதாய்ச் சிறப்புறுந் தகைத்தான்
மாமலர்த்திருப் படப்பைசூழ் நைமிச வனமே.

## மற்றொரு செய்யுள்:

தேவபாடையின் மாதவச் சிறுவர்களோதும்
பாவுமூவறு வித்தையும் பலமுறைகேட்டுக்
காவின்மேவுறு பூவையுங் கிள்ளையுங்கனிவா
னாவினோதிடக் கிளர்வுறு நைமிசாரணியம்.

## புராண வரலாற்றுப் படலத்துள் சில செய்யுட்கள்

அரியபல் கலையு மங்கமோ ராறு
மரிறப வுணர்ந்தனை ஞானம்
பெரிதுநன் கடைந்தே வுரைசெய வல்ல
பெரியருட் சிறந்தனை பிறங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருவகை யாகிப் பரவுறு காண்டத்
திய லும்வே தாகம புராணம்
வரன்முறை தெரிந்து மேம்படு புலமை
மன்னினை மாதவ ரேறே.

ஆதலிற் பெரிது மேம்படு பொருளா
யனைத்தினு முயர்ந்தா யாய்ந்திட்
டோதுதற் கரிதா நுண்ணிய பொருளொன்
றுன்வயிற் கேட்டினி துணருங்
காதன்மிக் கடைந்தே மாயினம் வார்த்தைக்
கதீதமாய்க் கதித்துயர்ந் தோங்கு
மேதகு தெய்வத் தலங்களுட் கலியை
வென்றுமேம் படுமுயர் தலத்தே.

மறைமுடி புணர்ந்த ஞானிக ளறிந்து
வழ்படுந் தரத்ததா யாண்டு
முறைதரு மெல்லாப் பொருளினு மடங்கா
துயர்ந்ததாய்த் தனதிய லுணர்ந்து
முறையுளி வழிபடா டாற்றுநர் வேட்ட
வேட்டவா றுடன்முழு தருளுங்
குறைவிலா னந்தம் வழங்கருண் மூர்த்தி
யாதுநீ கூறெமக் கென்றார்

அவ்வுரை கேட்டு வசிட்டனா மேலோ
னகமகிழ்ந் தாரிடர் வதனஞ்
செய்விதி னோக்கு முனிவிர்நீர் கேட்ட
சிவரக சியமுரைக் கின்றா
மிவ்வக லிடத்துப் புண்ணியம் பயக்கு
மெழிற்சிவ தலங்களுள் வீடுந்
திவ்விய போகந்தானு நன்களிக்குந் திருக்
கோயில் சிதம்பர மாமால்.

அத்தகு தலத்தி னோங்குசீர்த் தேவர்க்
கரியமெய்ஞ் ஞானவா காய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கித்திய மன்றிப் சிவபிரா னியத
வானந்த நிருத்தநன் கியற்றுஞ்
சித்தநற் கமலத் தேமறை பொருளாய்ச்
சிறந்தசா ரணமதாய் வேதாந்
தத்தினாற் றெரிக்குஞ் சோதிபுண் டரீக
புரத்திடைத் தரிசிக்கப் படுமால்.

## யேசுமத சங்கற்ப நிராகரணம்

சைவமாகிய தாமரைத் தடமொளி தழைப்பப்
பொய்வரும் விவிலிய கயிரவம் பொலிவிழப்ப
மெய்வரும் புலவோ ரளிகூட்டுண விவனூல்
தெய்வஞா யிறொன் றெழுந்தெனத் திகழ்ந்ததையன்றே.

## இராமாயண தாற்பரிய சங்கிரகம்

எங்குமொரு தானாகி நிறைகைலைச் சிவக்களிறன்
றிமையச் சாரற்
றுங்கவருட் பிடிதழீ யளித்தவொரு கயமுனிதா
டொழுது போற்றிப்
பொங்குபுகழ் வடமொழியிற் பூசரர்கோ னப்பதீக்கி
தன் முன் செய்த
சங்கையிலி ராமாயணத்தின் றாற்பரிய சங்கிரகந்
தமிழாற் செய்வாம்

## திருச்சிற்றம்பல யமகவந்தாதி
## இதன் சிறப்புப்பாயிரம்

சீரார் தென்னீழ வடகோவையான் சிவன் சேவடிக்கீழ்
நாரரார் சுயம்புமன் பெற்ற சபாபதி நல்லறிஞ
னேரார்சிற் றம்பல வந்தாதி மாலை இசைத்தணிந்தான்
காரார் பொழிற்புலி யூர்மன்ற வாணன் கழலிணைக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நூலிலுள்ள சில அருஞ்செய்யுட்கள்

திருத்துங்க வந்த ரோம்புநல் வேள்வித் திருமறைய
திருத்துங்க மானசிற் றம்பலம் பாடத் தமியனுளந்
திருத்துங் கருணைக் கடலே யடைக்கலங் கங்கைசிரத்
திருத்துங்கண் மூன்றுடைத் தேவே கையிலைப் பருப்பதனே.

மாணிக்க வாசகமார் வயிற்றில்லைச் சிற்றம்பலவ
மாணிக்க வாசகர்காணநின்றோய் மறைத் தாதையைக்கொன்
மாணிக்க வாசகலச் செய்த சங்கர வாக்கிற்பிர
மாணிக்க வாசகப் பொய்யர்க்குப் போல மறையலெற்கே.

சித்தாந் தலைவற் புலியூர்ச்சிற் றம்பலஞ் சென்றுதரி
சித்தாந் தலைவைத்த தேவசதாசிவ வென்றுபழிச்
சித்தாந் தமையவன் றன்னடி ஞானத்திற் சேர்த்தொன்றுசெய்
சித்தாந்த சைவரன் றோபிற வாமுத்திச் செல்வர்களே.

சிற்றம்பலம் விளைக்கும் பொருளீந்து சிறுமியரெச்
சிற்றம்பலம் பகரப் பெறுவார் கொல்சிச் சீயினருட்
சிற்றம்பலம் மைசிவ காமியோடு சிவனடஞ்செய்
சிற்றம்பலப் பணிசெய்திடிற் சேரும்பே ரம்பலமே.

பேரம்பலத் தில்லைச் சிற்றம்பலவன் பிறங்கறிவுப்
பேரம்பலத் தைப்பெற வருள்செய்யும் பெருந் தகைத்துப்
பேரம்பலத்த னிளவலிற் கொண்டவன் வேணிக் கங்கைப்
பேரம்பலத்தைத் துரக்கும் பிறையொ டணிந்தவனே.

சபாபதியாகம வேதந்தரும்பதி சார்பவநா
சபாபதியாகுந் திலைப்பதி சிற்றம் பலத்திவஞ்
சபாபதியானங் கெடுத்தடியேன் மனந்தன்னிலின்னே
சபாபதியாதியாவுனைப் பாடத்திருவரு டந்தருளே.

சத்துச்சித் தானந்த மாகிமுப் பத்தறு தத்துவவா
சத்துச்சித் தானந்த லின்றி விளங்குஞ் சதாசிவநே
சத்துச்சித் தானந் தவறா திடவரு டாவிடமே
சத்துச்சித் தானந்த னர்க்கருள் சிற்றம் பலத்த வெற்கே.

**யோகேஸ்வரி சிவப்பிரகாசம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்டல மண்டருய நஞ்சமுண்ட கண்டனிவை
விண்டல மண்டரு நெற்குவை யென்ன விரிதில்லையான்
விண்டல மண்ட வுயருஞ்சிற் றம்பல மேவினர்க்கு
விண்டல மண்டலம் வாழ்த்திட நல்கு மிளிர்திருவே.

## திருவிடைமருதூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி
## காப்புச் செய்யுளொன்று

மதிவளரு மணிமாட வரிசை திகழ் தருமருத
பதிவளர்மா லிங்கேசர் பதமலரி னணிபாக்குத்
துதிவளரும் பதிற்றுப் பந்தாதி தொடுக்கமத
நதிவளருங் கரடகய முகப்பெருமா னடிநயப்பாம்.

## மற்றொரு செய்யுள்

தேவார வானந்தத் தெள்ளமுத மடுத்ததிருச்
செவிக்கா கெட்டே
னாவாரப் புழுத்தபுலை நாயினேன் பிதற்றுமிந்த
நலமில் புன்சொற்
பாவாரப் படுங்கொலோ வெம்பெருமான் பரமேட்டி
பரம முத்தக்
கோவாரக் களபமுலைக் கோமாட்டிக் கொருகொழுந
மருத வாழ்வே.

## சிவஞான யோகிகள் குருபூசை மகோற்சவம்

"குறியமுனி யருளியமெய் வரத்தினா லவதரித்துக்
கோதின் ஞானத்
துறைசைநமச் சிவாயகுரு வருட்கடலும் வடமொழிதென்
மொழிப்பேர்த் தூய
நிறைகடலு முண்டுபுனி தாத்துவித சித்தாந்த
நிலவப் பூமேன்
மறைமொழிமெய்ச் சிவஞான பாடியந்தென் மொழிவகுத்த
யோகி வாழி."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏடு எடுக்கும்போது ஓரஞ் சொறிகிறது. கட்டு அவிழ்க்கும்போது இதழ் முறிகிறது. ஒற்றை புரட்டும்போது துண்டுதுண்டாய்ப் பறக்கிறது. இனி எழுத்துக்களோவென்றால், வாலுந் தலையுமின்றி நாலு புறமும் பாறைக் கலப்பை மறுத்து மறுத்து உழுது கிடக்கின்றது. ...எத்தனையோ திவ்ய மதுர கிரந்தங்கள் காலாந்திரத்தில் ஒன்றன் பின் ஒன்றாய் அழிகின்றன. சீமான்களே இவ்வாறு இறந்தொழியும் நூல்களில் உங்களுக்குச் சற்றாவது கிருபை பிறக்கவில்லையா, ஆச்சரியம்! ஆச்சரியம்!! அயலான் அழியச் சாண்கிலும் மனம் தளம்புகின்றதே! தமிழ் மாதும் தாயல்லவா? இவள் அழிய, நமக்கென்னென்று வாளா இருக்கின்றீர்களா? தேசாபிமானம், மதாபிமானம், பாஷாபிமானமென்று இவை இல்லாதார் பெருமை யும் பெருமையாமா? இதனைத் தயை கூர்ந்து சிந்திப்பீர்களா!

– சி. வை. தாமோதரம்பிள்ளை

(1887 – கலித்தொகையின் பதிப்புரையில்)



அச்சிட்ட நூல்களுக்குக்கூட இன்றும் இதே கதிதான். அத்துடன் போரும், பழம் பெரும் பொக்கிஷங்களாக நாம் காத்து வைத்திருந்த நூல்களைத் தின்றுவிட தேடியலைந்தாலும் கிடைக்காத நிலையும் ஏற்பட்டு விட்டதே தயவு செய்து சிந்தியுங்கள்

– யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

ISBN 955467647-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org